# புரட்சி வீரர் மூவர்

(ஜெம்புலிங்கம் - காசி - துரைவாப்பா)

வாழ்க்கை வரலாற்று நாடகம்

Book supplied by the Madurai University
Central Co-op. Stores, Madurai-2.

ஆசிரியர்:

என். ஏ. வேலாயுதம்

MADURAI UNIVERSITY LIBRARY
25 MAY 1971
MADURAI.

வெளியீடு:

அன்பு நிலையம்
அலெக்சந்திராரோடு
நாகர்கோவில்

1966

[illegible] புத்தக நிலையம்
48 மேல மாசிவீதி
மதுரை-1.

முதற் பதிப்பு: டிசம்பர் 1957
இரண்டாம் பதிப்பு: செப்டம்பர் 1966
(திருத்தியமைக்கப்பெற்றது)

விலை: ரூ. 2-75

இந்நாடகம் நடிப்பதற்கு ஆசிரியரின்
அனுமதி பெற்றிருக்கவேண்டும்.

அச்சிட்டோர்:

பிரஸ் டாஸ் ஸன், டாஸ் பேப்பர்ஸ் பில்டிங்ஸ், நாகர்கோவில்.

# முகவுரை

***

உண்மையை அப்படியே சொல்வது சரித்திரத்தின் கடமை; உண்மை நிகழ்ச்சியின் அடிப்படையில் கதை சொல்வது கற்பனையின் கடமை. கற்பனை உச்சம் பெறும்போது ஆங்கே கலையழகு நடம் புரியும். எனவே, கலை என்ற நிலைக்கு கற்பனை உயர்வு பெறும்போதுதான் ரசிகர்களின் மனதில் உணர்ச்சியும், மகிழ்ச்சியும் கலந்து உறவாடுகின்றன. ஆக, உண்மைச் சம்பவங்கள் கதையாகி, பின்பு உயர் கலையான நாடகமாகி, **'புரட்சி வீரர் மூவர்'** என்ற தலைப்பில் உங்கள் அன்புக் கரங்களில் இடம் பெற்றுள்ளது. நாடகமானதால் வேண்டுமளவு கற்பனை கலந்தே மிளிரும்; அவ்வாறுமிளிர்வதுதான் நாடகம் எனும்உண்மையை எடுத்துக் கூறவேண்டிய அவசியம் இல்லை.

**ஜெம்புலிங்கம் - துரைவாப்பா - காசி** என்ற பெயர்கள் நம் தமிழகமெங்கணும் பரவலாக ஒலித்துக்கொண்டிருக்கின்றன. என்றாலும் மூவரின் வாழ்வு பற்றி, அவர்கள் வாழ்ந்த முறை பற்றி திட்டமான- உண்மையான -ஒருமுகமான கருத்து இல்லை. பலர், பல விதமாக மூவரின் கதையைப் பற்றியும் சொல்லிக்கொள்கிறார்கள்.

இம்மூவரும் கள்ளர்கள் என்ற பெயரை -ஏழைகளின் வாழ்வுக்காக - சுதந்திர தாகத்துடன் ஏற்றுக்கொண்ட நல்லவர்கள்! மூவரில், ஜெம்புலிங்கமும் காசியும் ஏகாதிபத்திய - அந்நிய ஆங்கில ஆட்சிக்கு இரையானார்கள். தமிழக மாவீரர்களையே ஒழித்துக் கட்டிய குள்ள நரிகளான வெள்ளையர்களுக்கு ஜெம்புலிங்கமும் காசியும் ஒரு பொருட்டல்ல! என்றாலும், பெரும் துயரங்களை

அனுபவித்தே இரு வீரர்களையும் அழித்தது ஆங்கில ஆட்சி! இன்று வாழ்வது மூவரில் ஒருவரான துரைவாப்பா மட்டுமே.

1957-ல் (இந்நூலின் முதற் பதிப்பு வெளிவருவதற்குச் சிலமாதங்களுக்குமுன்) திரு. துரைவாப்பா அவர்கள் என்னைச் சந்தித்து, "எங்கள் சரித்திரத்தை நாடகமாக எழுதித் தரவேண்டும்" என்று கூறினார்கள். "முடிந்த அளவு முயற்சிக்கிறேன்" என்று ஒப்புக்கொண்டேன். அந்த ஒப்புதலின் விளைவுதான் இந்நாடகம். கற்பனையாக ஒரு கதை எழுதி, நாடகமாக உருவாக்குவதை விட, இப்படியான உண்மைச் சம்பவங்களைக் கோர்த்து நாடகமாக்குவது சிறிது சிரமமே என்பது எனது எண்ணம்.

இந்நூல் முதற்பதிப்பாக வெளிவந்தபோதே தமிழகமெங்கணுமிருந்து அன்பர்கள் பலருடைய வரவேற்பும், பாராட்டுக் கடிதங்களும் ஏராளமாக வந்தன; தமிழகப் பத்திரிகைகளெல்லாம் மதிப்புரையில் எனது முயற்சியைப் பாராட்டின; மதிப்புரையில் சில இந்நூலில் இடம் பெற்றுள்ளன. அன்பர்களுக்கும், நடுநிலையில் மதிப்புரை எழுதி ஊக்குவித்த பத்திரிகைகளுக்கும் எனது இதய பூர்வமான நன்றியைத் தெரிவிக்கிறேன்.

முதற் பதிப்பில் அச்சுப் பிழைகளும், ஒரு சில காட்சிகள் என் மனதிற்குத் திருப்தியளிக்காத முறையிலும் இருந்தன. அத்தகு குறைபாடுகளை அறவே நீக்கி, நன்முறையில் இப்பதிப்பு வெளிவருகிறது. 'புரட்சி வீரர் மூவர்' இப்பதிப்பில் முழுமை பெற்றிருக்கிறது என்பது எனது முடிவு.

நாகர்கோவில்,
15 - 9 - 1966.

அன்பன்,
**என். ஏ. வேலாயுதம்.**

# அணிந்துரை

***

**தமிழக அன்பர்களே!**

**த**மிழகத்தில் புரட்சி செய்து, பண பலத்தையும் ஆங்கில ஏகாதிபத்தியத்தையும் எதிர்த்து, ஏழைகளுக்கு வாழ்வளித்து ஏழைகளாகவே வாழ்ந்தோம்.

என் ஆருயிர்த் தோழர்கள் **ஜம்புலிங்கமும், காசியும்** ஆங்கில அரசாங்கத்தின் துப்பாக்கிக்குப் பலியானார்கள்; அது நமது துர்ப்பாக்கியம்தான்.

பலர் எங்களை அறிந்து வாழ்த்தினாலும், சிலர் எங்களை 'வெறும் கொள்ளைக்காரர்கள்தான்' என்று — தெரியாமல் — தூற்றுவதை மாற்ற, 'உண்மையை உலகறியச் செய்யவேண்டும்' என்பது என் நெடுநாளைய ஆசை. அந்த ஆசையின் விளைவு, நாடக உருவில் முழுமை பெற்றுள்ளது.

நான் கொடுத்த உண்மைச் சம்பவங்களை மட்டும் வைத்து, அதைக் கதையாக்கி, கலையாக்கி, கருத்தும் உணர்ச்சியும் நிறைந்த வசனத்துடன் நாடகமாகத் திறம்பட எழுதியிருக்கும் திரு. என். ஏ. **வேலாயுதம்** அவர்களை நான் மனமாரப் பாராட்டுகிறேன்; வாசகர்களும் பாராட்டவேண்டியதே!

இவண்,

தூத்துக்குடி,
15 - 11 - 1957.

ஏ. எம். **துரைவாப்பா.**

# பத்திரிகைகளின் மதிப்புரைகள்

***

## * "செங்கோல்"

புரட்சி வீரர் மூவரை, திரு. வேலாயுதம் நல்ல முறையில் வகுத்து, வசனமெழுதியிருக்கிருர். அவர் கற்பனை நாடகங்களை உருவாக்குவதில் மேலும் முனைவாராளுல் நல்ல நாடகங்கள் தமிழில் இடம் பெறும் என்று உறுதி கூறலாம்.

## ** "தாமரை"

தமிழகத்தில் ஆங்கில ஏகாதிபத்தியத்தையும், பண பலத்தையும் எதிர்த்து அஞ்சா நெஞ்சோடு போராடிய வர்கள் ஜெம்புலிங்கம், காசி, துரைவாப்பா ஆகியோர் என்பதைத் தமிழகம் நன்கு அறியும். ஏழைகளின் நண் பர்களாக வாழ்ந்த இந்த மூவரிலே ஜெம்புலிங்கமும், காசி யும் ஆங்கில ஆட்சியாளரால் கொல்லப்பட்டுவிட்டார்கள்; துரைவாப்பா மட்டும் இப்போது உயிரோடிருக்கிருர்.

அவர் கொடுத்த உண்மைச் சம்பவங்களை அடிப் படையாக வைத்தே திரு. என். ஏ. வேலாயுதம் இந்த நாடகத்தை எழுதியுள்ளார். இந்த மூவரும் கொள்ளைக் காரர்கள் என்று சிலர் தூற்றுவதற்கு இந்த நாடகம் ஆணித்தரமாக மறுப்பளித்திருக்கிறது; வசனம் உணர்ச்சி யூட்டுவதாக இருக்கிறது.

## *** "தினமணி கதிர்"

இந்த நாடகத்தில் வரும் (ஜெம்புலிங்கம், காசி, துரைவாப்பா) மூவரில் துரைவாப்பா என்ற வீரர் மட்டும் உயிருடனிருந்து, சுதந்திர பாரதத்தைக் கண்டு களிக்கும்

வாய்ப்பைப் பெற்றிருக்கிறார். அவரது உயிர் நண்பர்களான ஜெம்புலிங்கமும் காசியும் அந்நியர்க்கு அஞ்சாத வீரர்களாய், ஏழைப் பங்காளர்களாய் வாழ்ந்து, கடைசியில் குண்டுகளுக்குப் பலியானார்கள். ஜெம்புலிங்கத்தின் மனைவி சுந்தரி, சீனியம்மாள், பொன்னி போன்ற வீரத் தாய்மார்களையும் நாடகத்தில் காண்கிறோம்.

ஆசிரியர், சுவையான சம்பவங்களைக் கவர்ச்சிகரமாகத் தீட்டியிருக்கிறார்; படிக்க விறுவிறுப்பாக இருக்கிறது.

****"தினமலர்"

ஜெம்புலிங்கம், காசி, துரைவாப்பா ஆகிய மூவருடைய வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டும், துரைவாப்பா கூறியவற்றை ஆதாரமாகக் கொண்டும் நாடகமாக எழுதப்பட்டுள்ள இந்த நூல் படிக்க உணர்ச்சியூட்டுவதாய் அமைந்துள்ளது. மூவரில் ஒருவரான துரைவாப்பா கூறிய செய்திகளை ஆசிரியர் உயர்ந்த முறையில் பயன்படுத்தி மக்களின் மனதில் உள்ள தவறான கருத்தைப் போக்க எடுத்துக்கொண்ட முயற்சி பாராட்டப்படக் கூடியதுடன், இந்த முயற்சியில் வெற்றி கண்டுவிட்டார் என்றே சொல்லவேண்டும்.

அபலைப் பெண்ணைக் காமப் பேயிடமிருந்து காப்பாற்ற முன்வந்த ஜெம்புலிங்கத்தை, அந்த நாள் முதல் அயோக்கியன் எனக் கருதப்படும்படிப் பலர் செய்துவிட்டார்கள். சந்தர்ப்பங்களும், சூழ்நிலையும், சட்டத்தின் தவறான பிரயோகமும் ஜெம்புலிங்கத்தையும், அவருடைய உயிர்த் தோழர்களான காசி, துரைவாப்பா ஆகிய இருவரையும் சேர்த்து, சமூகத்தில் புறக்கணிக்கப்பட்டவர்களாகக் கருதும்படிச் செய்துவிட்டன.

உலக முழுவதிலும், ஒரு பெரிய உண்மை — சட்டத்தையும், தண்டனையும், குற்றம் புரிபவனையும் பற்றி — ஒரே மாதிரியாகத்தான் காணப்படுகிறது.

ஒரு முறை அறிந்தோ, அல்லது அறியாமலோ குற்றம் செய்தவன் கூட, தன் வாழ்நாள் முழுவதும் பெருங் குற்றம் புரிந்தவனுகவே கருதப்படும்படியோ அல்லது அடுத்தடுத்துக் குற்றம் செய்யும்படியோ, சட்டத்தின் மூலம் அளிக்கப்பட்ட தண்டனையை அனுபவிக்கும் காலத்திலேயே ஏற்பட்டுவிடுகிறது. நேர்மையை நிலைநாட்ட முன்வந்த ஜெம்புலிங்கம், தன் வாழ்நாள் முழுவதும் மறைந்தே வாழும்படியான துர்ப்பாக்கிய நிலைக்குக் கொண்டு வந்தது எது என்பதை இந்நூலைப் படிக்கும் வாசகர்கள் உணர்ந்துகொள்ளமுடியும்.

ஜெம்புலிங்கத்தைப் பற்றி ஆங்கிலத்தில் ஒரு நூல் வந்திருப்பதாகத் தெரிகிறது. இந்த நூலும் அதேபோல் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டால், தமிழ் அறியாதவர்கள் தமிழர்களின் வீரம் கலந்த வாழ்வைத் தெரிந்துகொள்ள முடியும். புரட்சி வீரர்கள் மூவரும் நேர்மையானவர்களா- இல்லையா? என்ற சரித்திர ஆராய்ச்சியை விட்டுவிட்டு மனித உணர்ச்சியுடன் இந்நூலைப் பார்த்தால், மூவரின் தன்மையையும் நன்கு புரிந்துகொள்ளமுடியும்.

தன்னுடைய அருமை மனைவி இறந்துபோனதைக் கேட்டு ஜெம்புலிங்கம் அனுபவிக்கும் துன்ப வேதனைக்கும், அவள் பிணத்தைக் கூடப் பார்க்கமுடியாமல் அவன் இருந்த சூழ்நிலைக்கும் யார் பொறுப்பாளி என்பதை வாசகர்கள்தான் முடிவுகட்டவேண்டும். பொதுவாக, இந்த நூல் இந்த மூவரைப் பற்றிய விபரத்தை மக்கள் அறிந்து கொள்ளும்படிச் செய்துவிட்டது.

# ஆரம்ப அறிமுகம்

***

MADURAI UNIVERSITY LIBRARY
MADURAI.

( திரை மறைவில் )

*ரசிகப் பெருமக்களே!*

*வணக்கம்.*

“புரட்சி வீரர் மூவர்” என்னும் நாடகம் ஜெம்பு லிங்கம், துரைவாப்பா, காசி என்ற மூவரின் வரலாற்றைத் தழுவியது! என்பதை நீங்கள் அறிவீர்கள். என்றாலும் நாடகத்தின் தொடக்கத்தில் நாடகத்தைப்பற்றிய—அதன் தொடக்கம் பற்றிய - சிறுகுறிப்பு ஒன்றை உங்கள் மனதில் பதிய வைக்கவே இந்த அறிமுகம்!

வளம் நிறைக் கிராமமாம் வடலிவிளை என்னும் ஊரில் வீர வாலிபனாக, உழைப்பின் சின்னமாக வாழ்ந்து வருகிறான் மாவீரன் ஜெம்புலிங்கம்!

நம்பியாறு என்ற வற்றாத ஜீவநதி ஓடும் வளம் நிறை கிராமமாம் ஏர்வாடியில் பிறந்தவன் துரைவாப்பா. இளமையிலேயே துடுக்குத்தனம் மிளிர்ந்த துரைவாப்பாவைத் தூக்கிக்கொண்டு வடலிவிளை வந்த அவன் பாட்டி, பார்வதி என்ற பெண்ணிடம் பாலகனை ஒப்புவித்து மறைந்தாள்!

செம்புலிங்கத்தின் உறவினன் காசி, நிழலாக செம்பு லிங்கத்தை சுற்றிவந்தான். இருவருக்கும் துரைவாப்பாவின் நட்புக் கிடைத்தது!

காலப்போக்கில் மூவரின் நட்பும் வளர்ந்தது. பருவமும் மாறியது. கன்றுகள் காளையர் ஆயினர். கண்ணகியின் வாரிசு சுந்தரி என்னும் பெயராள் ஜெம்புலிங்கத்தின் மனைவியாகிருள்.

வியாபார நிமித்தம் காசி கடல் கடந்து இலங்கை செல்கிருன்.

தியாகக் கொடி ஒன்று துரைவாப்பாவைச் சுற்றியது. அக்கன்னியே நாடகத்தில் வரும் பொன்னி!

சூழ்ச்சியால், சுயநலக்காரர்களால் கள்ளனுக்கப்படுகிருன் ஜெம்புலிங்கம். நண்பன் துரைவாப்பாவையும் அந்தப் 'பட்டம்' பற்றுகிறது. பிறந்து வளர்ந்த தாய்த்திரு நாட்டில் வாழமுடியாத நிலை ஏற்படுகிறது!

முடிவில், போலீசை ஏமாற்றி மாறுவேடத்துடன் இலங்கைக்குச் செல்கிருர்கள். கூடவே இராமசாமி என்ற நண்பனும் செல்கிருன்! இந்தச் செய்தி, போலீஸ் நிலையத்திற்குக் கிடைக்க, இன்ஸ்பெக்டர் ஏமாற்றத்தின் எதிரொலியாகக் கோபமும் பரபரப்புமடைகிருர்.

இந்நிகழ்ச்சியிலிருந்தே நாடகம் தொடங்குகிறது! இதுவே முதற்காட்சியாய் அமைந்துள்ளது......



# புரட்சி வீரர் மூவர்

★★★

## காட்சி 1

காலை நேரம்; வள்ளியூர் போலீஸ் ஸ்டேஷன்; இன்ஸ்பெக்டர், போலீஸ் 103, சி. ஐ. டி. அப்பாவு. (இராமலிங்கம் பிறகு வருதல்)

(இன்ஸ்பெக்டர் ஏதோ எழுதிக்கொண்டிருக்க, துப்பறிவாளர் (சி. ஐ. டி.) அப்பாவு வருதல்)

*அப்பாவு:* (வரும்போதே) வணக்கம்......வணக்கம் வருது சார்.

*இன்ஸ்பெக்டர்:* (நிமிர்ந்து பார்த்து புன்முறுவலுடன்) வணக்கம் வருதா? ........ அதை அப்படியே உங்களுக்கு திருப்பி அனுப்புகிறேன். (சற்று கோபம் கொள்ளுவது போல்) எடுத்துப் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளுங்கள். வணக்கமாம் வணக்கம். நம் வாழ்வுக்கு வணக்கம் ஒரு கேடா?

*அப்:* என்ன சார்......! நமக்கு என்ன குறைவு...?

*இன்:* ஒருகுறைவும் இல்லை, திறமையைத் தவிர! (அப்பாவு கேள்விக் குறியோடு பார்க்க) என்னய்யா பார்வை? ஊர் முழுவதும் போலீஸ்! காணாததற்கு உங்களைப் போல் சி. ஐ. டி.-கள் பலர். நான் ஒரு இன்ஸ்பெக்டர். (சலிப்புடன்) ஹும் இத்தனை செல்வம் இருந்தும் அந்த ஜெம்புலிங்கத்தைப் பிடிக்கமுடியவில்லையே!

*அப்:* ஓகோ............பிடித்து விடலாம்.

*இன்:* ஆகா! எவ்வளவு சாவதானமா சொல்லிவிட்டீர்கள். (கடுமையாக) இன்னும் ஒரு வாரத்திற்குள் கண்டிப்பாகப் பிடித்தே ஆகவேண்டும்'னு உத்தரவு வந்திருக்குது ஐயா-உத்தரவு! சிறிதாவது உங்களுக்குக் கவலையிருக்

கிறதா? எப்போதாவது இந்தப் பக்கம் வந்து எட்டிப் பார்க்கிறது, எதையாவது சொல்லிவிட்டு நழுவிவிடுகிறது.

அப்: (சோர்வுடன்)......உம், நீங்கள் சொல்வதும் நியாயம் தான். என்றாலும் நமக்குள் வருந்தி என்னபயன்?

இன்: பின்ன......ஊரார் அத்தனைபேருமாச் சேர்ந்து ஒப்பாரி வைப்போமா?

அப்: என்னிடம் கோபம் கொண்டால்.........?

இன்: ஒரு பயனும் விளையப்போவதில்லை என்று எனக்குத் தெரியும்.

(போலீஸ்காரர் ஒருவர் வந்து ஆங்கில பாணியில் வணக்கம் செலுத்தி நிற்றல்)

இன்: (போலீஸ் பக்கம் திரும்பி) என்னப்பா, ஏதாவது விஷயத்தோடு வந்தாயா? அல்ல............

போலீஸ்: (மிகவும் அக்கரையோடு) யார் விஷயமுங்க!

இன்: (கோபத்தோடு) ஆங்! உங்க தாத்தா விஷயம்!

போலீ: அதுவா? அவர் செத்துப் போயிட்டாருங்க.

இன்: (அதிக கோபத்தோடு) அட, சட்! நீயும் கூடவே சாகிதுறதானே!... (தலையில் அடித்தபடி) என் விதி!

அப்: .........என்னுங்க இது......நமக்குள் சலித்து சண்டையிட்டு என்ன பயன்?......... இப்பொழுது என்ன செய்யமுடியும்? நானும்தான் எவ்வளவோ முயன்று பார்க்கிறேன்.

இன்: என்னய்யா, நீங்களும் ரொம்ப தளர்ந்து பேசுறீங்க.........உங்களுக்கு சர்க்கார் அளிக்கிற சலுகை கொஞ்சமா? கேட்டகைக்குப் பணம்; கண்ணைக்காட்டினால் போலீஸ் லாறியே உங்கள் பக்கம் சரணகதி!.........

அப்: என்ன இருந்து என்ன பயன் சார்............ வெண்ணெய் திரண்டு வரும்பொழுது பானை உடைந்த மாதிரி அவனைச் சுற்றிவளைத்துப் பிடிக்கக்கூடிய தருணத்தில் கம்பி நீட்டிவிட்டானே சார்.........

இன்: (வியப்பும், திகைப்பும் மேலிட எழுந்து நின்று) ஆ! ......என்ன......என்ன சொன்னீர்கள்? யார் கம்பி நீட்டியது?.........உளறு கிறீர்களா?

அப்: உளறல் இல்லை; உண்மைதான். செம்பு லிங்கம் மட்டுமல்ல, துரைவாப்பாவும், ராமசாமியும் கூடவே போயிட்டாங்க......மூன்று மணி நேரத்திற்குள் முகமூடி போட்டு கடந்திட்டாங்க சார் மூன்று பேரும்......

இன்: போதும்! (ஆத்திரத்துடன்) நம்பிக்கைத் துரோகம். (அருகில்நிற்கும் போலீஸ்காரரைப் பார்த்தவாறு) உங்களை நம்பின நான்தான் முட்டாள்.

அப்: ஆமாம் சார்!

இன்: (பெருங் கோபத்துடன்) மிஸ்டர் அப்பாவு!

அப்: .........அது........இல்லை'ங்க (போலீஸ்காரரைச் சுட்டி) இவங்களை நம்பித்தான் நானும் முட்டாளாயிட்டேன்னு......

இன்: போதும்! உங்களால் மேலிடத்திற்கு நான் பதில் கூறவேண்டியது வந்துவிட்டது.........பெருத்த அவமானம். இந்த அவமானத்தில் உங்களுக்கும்.........

அப்: பங்கு உண்டு. அதனால், எங்கு சென்றாலும் நான் அவர்களை விடப்போவதில்லை! வருகிறேன். (அப்பாவு போதல்)

(இன்ஸ்பெக்டர் தலை மீது கை வைத்தபடி இருக்க, வெளியில் இராமலிங்கம் போவதை போலீஸ்காரர் காண்கிறார்)

போலீ: (தாழ்மையாக) ஐயா,.........இராமலிங்கம் போகிறான்)

இன்: (தலை நிமிர்ந்து) நீயும் அவன் பின்னால் போ'ய்யா! (போலீஸ் போக) ஏய் 103! கூப்பிடய்யா அந்த இராமலிங்கத்தை!

(போலீஸ் கூப்பிட, இராமலிங்கம் வருதல்.)

இராமலிங்கம்: ஐயா கூப்பிட்டீங்களாமே........

இன்: (எரிச்சலுடன்) ஆமே!.........உட்காரய்யா! ......உங்க துப்பு எதுவரைக்கும் போயிருக்கு?

இரா: இலங்கை வரைக்கும் போயிருக்கு சார்.

இன்: கர்மம்! செம்புலிங்கம் விஷயம் கேட்கிறேன் ஐயா!.........

இரா: (நிதானமாக) தெரியுது சார். தெரிந்துதானே சொல்கிறேன். இதுகூட புரியமுடியாதவனு நான்! செம்புலிங்கமும், அவன் தோழர்களும் இலங்கைக்குப் போயிட்டாங்கன்னு!.........

இன்: (இடைமறித்து) சொல்ல வந்துட்டீங்க! அப்படித்தானே? ஏன் ஐயா சர்க்காரிலிருந்து இதுக்குத்தான் உங்களுக்குப் பணம் கொடுக்கிருங்களா?

இரா: பின்னர் எதுக்குங்க? துப்பு அறிந்து சொல்வதற்குத்தானே!

இன்: என்ன'ய்யா விளையாடுகிறீங்களா? வெள்ளைக்காரன் சர்க்கார'ய்யா! நினைவிருக்கட்டும். சுட்டுத்தள்ளிப்பிடுவான்! அவங்க போகுமுன் சொல்லுவதற்குத்தான் உங்களுக்குப் பணம் கொடுக்கிருங்களே தவிர போனபின் உளற அல்ல! புரியுதா?

இரா: அதுசரி'ங்க, போகுமுன் தெரியாதே! எப்படி சொல்கிறது? நீங்க என்னிடம் கோபப்பட்டா, எனக்கு இந்த வேலையே வேண்டாமுங்க. ஊரிலே பெரிய மனுஷன் நான். இந்த வேலை எனக்கு எதுக்கு? நானுக சர்க்காரிலே வேலைக்குசேர்ந்தா பணம் வாங்குகிறேன்? நீங்களாக வலியக் கொடுத்து இந்த ஜம்புலிங்கம் விஷயத்தை மட்டும் கவனிக்கச் சொன்னீங்க......... ...

இன்: (பொறுமையடைந்து, இதமாக) அப்படியெல்லாம் கோபப்படாதேங்க.........உட்காருங்க. அதாவது சி.ஐ.டி.'ங்க இருந்தாங்களே எப்படிப் போயிட்டாங்கன்னு தான் ஆச்சரியமா இருக்கு.

*இரா-* அவர்கள்...அசல்களாகப் போகவில்லே'ங்க... மாறுவேடம் போட்டு நம்மவர் மதியை மழுங்கவைத்து மறைந்து விட்டார்கள்.

*இன்-* (சூழ்ச்சியோடு) இத்தனை விஷயம் உங்களுக்குத் தெரிந்திருக்கிறது.

*இரா-* தெரியும்; ஆனல் இப்பொழுதுதான் தெரியும் (தன்னிடமிருந்த கடிதத்தை எடுத்து இன்ஸ்பெக்டரிடம் நீட்டியவாறு) துறைமுகத்தில் வேலை செய்யும் என் நண்பன் இக்கடிதம் வழி தெரிவித்தான்.

*இன்-* (கடிதத்தைப் படித்தவாறு) உம்......மாறு வேடமா? (இலேசாகச் சிரித்து) கொள்ளைக்காரர்களைப் பிடித்துக் கொடுத்தால் வெள்ளைக்காரத் துரையிடம் பாராட்டுதல்களைப் பெற்றுப் பதவி உயரலாம், உமக்கும் வேண்டிய உதவி செய்யலாம் என்று எண்ணினேன், கலைத்து விட்டனர் என் கனவை! சரி, நீங்கள் போய்வாருங்கள். பிறகு சந்திக்கலாம்.

*இரா-* வணக்கம்........வருகிறேன்.

(இராமலிங்கம் போதல்)

[ திரை ]

***

## காட்சி 2
### (இலங்கை)

மாலை நேரம்; இராமசாமி, ஜெம்புலிங்கம், துரைவாப்பா, காசி, ஒரு சிங்களவன், ஒரு தமிழன்.

*ஜெம்புலிங்கம்-* (பாதையில் ஒரு சிங்களவரிடம்) ஐயா, காசி'ன்னு ஒருவர் இந்தத் தெருவிலே இருக்கிருர்... அவர் வீடு எதுவென்று தெரியுமா?

*சிங்களவர்-* (ஆங்கிலத்திலும் தமிழிலுமாக) வாட், காசி? இங்கே ஏது மேன் காசி......? திஸ் ஈஸ் சிலோன்! காசி...... (யோசித்து) ஆ! அது இந்தியாவிலே போகுது!

*துரைவாப்பா*- (சிரித்து) ஆகா! அது இந்தியாவிலே போகல்லே அப்பா, இந்தியாவிலே இருந்து இங்கே வந்திருக்கு. நீ உன் வேலையைப் பார்த்துப் போ!

(தமிழர் ஒருவர் வருதல்)

*ஜெம்பு*- (தமிழரை அணுகி) வணக்கம், ஐயா!

*தமிழர்*- (மகிழ்ச்சியோடு) வணக்கம்! உங்களுக்கு என்ன வேண்டும்?

*ஜெம்பு*- ஆகா, என்ன அன்பு......! ஐயா, இங்கு காசி என்ற பெயரில் ஒருவர் இருக்கிறாராம். வீட்டு எண் தெரியவில்லே. அவர் எந்த வீட்டில் இருக்கிறார்?

*தமி*- ஓகோ, காசிதானே? (ஒரு வீட்டைச் சுட்டி) அதோ அந்த வீடுதான். காசி கூட உள்ளே இருக்கிறாரு! நீங்க எங்கிருந்து......?

*ஜெம்பு*- நாங்க இந்தியாவிலிருந்து வருகிறோம்.

*தமி*- தமிழ் நாட்டிலிருந்துதானே! (ஆவலோடு) எப்படிங்க, நம்ம நாடு எப்படி இருக்குது?

*துரை*- பொறுமைக்காரங்க அதிகமா இருந்தாலும்

*ஜெம்பு*- நாடு நல்லா செழிப்பா இருக்குதுங்க.. ... என்ன இருந்தாலும் அடிமை வாழ்வுதானே! புலமையும் புதுமையும் எப்படி வரும்? .........நாங்க அவசரமா காசியைப் பார்க்கணும். பிறகு பேசலாம்......

*தமி*- அது சரிங்க. நான் இங்கேதானே இருக்கிறேன். சாவதானமாப் பேசுவோம்! வரட்டுமா? (போதல்)

(மூவரும் காசியின் வீட்டிற்கு வர, காசி மகிழ்ச்சியுடன் எதிர் வந்து அழைத்தல்)

*காசி*- (வியப்பும் மகிழ்வும் மிளிர) வாருங்கள், வாருங்கள்...... ஏது திடீர் வரவு? ஒரு கடிதமாவது போட்டிருக்கக்கூடாதா? .. ...உட்காருங்கள்!

*ஜெம்பு*: எங்களைக் கண்டதும் உனக்குத்தான் எத்தனை மகிழ்ச்சி?

(காசி காப்பி கொண்டு வர நால்வரும் சாப்பிடுதல்)

*காசி-* (மூவரையும் பார்த்து) என்ன விசேடம்? மும்மூர்த்திகளும் முன்னறிவிப்பின்றி வந்திருக்கிறதைப் பார்த்தால்...... எனக்கு ஒன்றுமே ஓடவில்லை. மூளையே குழம்பிவிட்டது.

*ஜெம்பு-* குழம்பிவிட்டது என்று கூருதே காசி.

*துரை-* குளிர்ந்துவிட்டது என்று கூறு.

*இராம-* அதிகக் குளிர்ச்சியும் குழப்பம்தானே!

*காசி-* உண்மைதான்... நம் நாடு எப்படி இருக்கிறது? மழையெல்லாம் ஒழுங்காகப் பெய்கிறதா? செழிப்பு உண்டுமா?

*ஜெம்பு-* வந்ததும் வீட்டைப்பற்றியும், குடும்பத்தைப் பற்றியும் கேட்காமல், நாட்டைப்பற்றிக் கேட்கிருயே! நாட்டின் மீது உனக்கு எவ்வளவு பக்தி!

*துரை-* நாடு வாழ்ந்தால் வீடு வாழுமே!

*ஜெம்பு:* உண்மைதான். (காசியைப் பார்த்து) இங்கு உன் நிலை எப்படி இருக்கிறது? நலமாக இருக்கிருயல்லவா?

*காசி-* இலங்கையில் நலத்திற்கு என்ன குறை? காடுகளையும், கட்டாந்தரைகளையும் கழனியாக்குகிருேம்; செந்நீரைச் சிந்துகிருேம்; செழிப்பாக வாழ்கிருேம்!

*ஜெம்பு:* செழிப்புக்கு குறை இருக்காது. பத்தினித் தெய்வம் சீதாதேவியின் பாதங்கள் பட்ட இடமல்லவா? பசும்பொன் விளையும் பூமியாகிவிட்டது. எண்ணற்ற தமிழர்களின் உழைப்பு கொழும்பைக் கொழுக்கவைக்கிறது.

*காசி-* இலங்கையைப் பற்றியே பேசிக்கொண்டிருக்கிறீர்களே, நீங்கள் வந்த விஷயத்தையும், நம் நாட்டு நிலையையும் கூறவில்லையே!

*ஜெம்பு:* நம் நாடு நலம்தான். வந்த விஷயம்......

*துரை-* விஷயம் என்று ஒன்று இருந்தால்தானே!

*ஜெம்பு:* ஆமாம். எல்லாம் தலை விதிதான்!

*காசி-* நீங்கள் சலிப்படைவதைப் பார்த்தால் அங்கு ஏதோ நடந்திருக்கிறதென்று எண்ணுகிறேன்.

*ஜெம்பு:* நடந்ததைத் தெரிவிக்கத்தானே கடல்கடந்து வந்திருக்கிறோம். (துரையைப் பார்த்து) நீயே சொல்.

*துரை-* சொல்கிறேன். நாட்டின் நிலைதான் எங்கள் வரவுக்குக் காரணம். தமிழகத்தில் பொய்யும் பித்தலாட்டமும் மலிந்துவிட்டதப்பா!

*காசி-* அது எங்கும்தான் இருக்கிறது. உங்களுக்கு என்ன நேர்ந்தது?

*ஜெம்பு:* காசி, இன்றைய தமிழகத்தில் பல தொழிலாளர்களை ஆட்டிவைக்கிறான் ஒரு முதலாளி. பகலென்றும் இரவென்றும் பாராமல் தொழிலாளர்களைக் கொடுமைப்படுத்தி கொள்ளை இலாபம் அடித்து வெள்ளையர்களுக்குத் தானம் செய்து, அடிமைகளாக அவர்களிடம் பட்டம் பெற பல்லைக்காட்டிநிற்கும் பச்சோந்திகள் ஒருபுறம், கிழமானாலும், வாலிபன் என்று எண்ணி, பணத் திமிர் ஏறி வனிதையர்களை வதைக்கும் கயவர்கள் ஒரு புறம், இந்தக் கூட்டத்தைச் சேர்ந்த குள்ள நரி ஒன்று காம வெறி பிடித்துக் கன்னி ஒருத்தியின் கற்பைச் சூறையாடத் துணிந்தது!...

*துரை-* அந்த வேளையில் அந்த இழிசெயலைக் கண்டான் ஒரு கடமை வீரன். கன்னியைக் காப்பாற்றினான். மானைக் காப்பாற்றினால் துரத்தி வரும் வேங்கைக்குப் பதில் கூறவேண்டுமே, வேங்கையை எதிர்த்தான்; விரட்டியடித்தான். அதன் எதிரொலி? கிழ வேங்கையின் பணம் பல வழிகளிலும் சென்று பாய்ந்தது. வீரன் திருடனானான். அல்ல; ஆக்கப்பட்டான். அடுத்து அவனால் என்ன செய்ய முடியும்?

*காசி-* யார் அந்த வீரன்?

*துரை-* (ஜெம்புவைக் காட்டி) இதோ!

*காசி-* (கைகளை விரித்து) நீங்களா திருடன்! (ஜெம்புவும், காசியும் தழுவிக்கொள்ளுதல்)

*ஜெம்பு:* ஆச்சரியப்படாதே! முதலில் கூறினேனே, விதி என்று. அதை நினைத்து சமாதானம் அடையவேண்டியதுதான்.

*காசி-* சமாதானமெல்லாம் பிறகு. முதலில் உங்களைத் திருடனாக்கியவன் யார்? நடந்தவைகளை விபரமாகக் கூறுங்கள்.

*ஜெம்பு:* சொல்லுகிறேன். வழக்கம்போல் நான் வியாபாரத்திற்குச் சென்றுவிட்டுத் திரும்பினேன். வழியில், கோட்டக்கரை சண்முகம் பிள்ளையை உனக்குத் தெரியுமல்லவா?

*காசி-* நல்லாத் தெரியும். அவர் நமக்கு மிகவும் வேண்டியவரல்லவா? எவ்வளவோ உதவிகள் செய்திருக்கிருரே!

*ஜெம்பு:* ஆ! அந்த சண்முகம் பிள்ளைதான் அவரைக் காண்பதற்காக அன்று அவர் வீட்டிற்குச் சென்றேன். அங்கு......

[ திரை ]

***

## காட்சி 3

(கோட்டக்கரை, சண்முகம் பிள்ளையின் வீடு)

மாலை நேரம்: சண்முகம் பிள்ளையின் மகள் செல்வி (வயது 17), கோபாலபிள்ளை, ஜெம்புலிங்கம், மற்றும் கோபாலபிள்ளையின் காலிகள் சிலர்.

(செல்வந்தரும், வயோதிகருமான அயோக்கியன் கோபால பிள்ளை வீட்டினுள் செல்வியை பலவந்தம் செய்ய முயல்கிருன். வெளியே வாயிலில் அவரது கூலிகளான சில காலிகள் காவல் நிற்கின்றனர். இந்த வேளையில் சண்முகம் பிள்ளையைக் காண ஜெம்புலிங்கம் வருதல்.)

*காலிகளின் தலைவன்-* (ஜெம்புவின் வருகை கண்டு) ஏய், யார் நீ? இப்போது உள்ளே போகக்கூடாது. வந்த வழி பார்த்து நட. (மீசையை முறுக்குதல்)

*ஜெம்பு:* அடேய், முதலில் மரியாதையாகப் பேசக் கற்றுக்கொள்! மடையனே!...... மீசையை மெதுவகா

முறுக்கு! கையோடு வந்துவிடப்போகிறது! (நடந்து கொண்டே) எட்டி நில்! என்னைத் தடுத்தால் உன் தலை தரையில் உருண்டுவிடும்!

(ஜெம்பு உள்ளே செல்ல, அதைக் காலிகள் தடுக்க. ஜெம்புவிற்கும் அந்தக் கூட்டத்திற்கும் கடுமையான சண்டை நடக்கிறது. முடிவில், தலைவன் அடிபட்டு விழ, கூட நின்ற காலிகள் ஓடிவிடுதல். ஜெம்பு வீட்டினுள் வருகிருன். அங்கு காமவெறியன் கோபால பிள்ளை செல்வியை நெருங்க, செல்வி, புலியிடம் சிக்கிய மாஞக நடுங்குகிருள்! ஜெம்பு, அமைதியாக மறைந்து நின்று கவனிக்கிருன்)

*கோபால பிள்ளை*- (செல்வியிடம், குடி வெறியில்) உன் தந்தைக்கு ஏற்பட்டிருக்கும் கடன் தீரவேண்டுமாஞல் நான் பண உதவி செய்யவேண்டும். நான் பணம் கொடுக்கவேண்டுமாஞல் கண நேரமாவது உன்னைக் கட்டித் தழுவவேண்டும். அதஞல்தான் சொல்கிறேன், என் சொல்லைத் தட்டாதே என்று. உன் தந்தையின் மானம் போகாமல் இருக்கவேண்டுமாஞல்......

*செல்வி*- நான் மானங்கெட்டவளாக வேண்டும். அப்படித்தானே! ......ஐயா, என் தந்தையைப் போன்ற உங்களிடம் தயவாகக் கேட்கிறேன். தாங்கள் எங்களுக்கு பண உதவி செய்யவே வேண்டாம். என்னை உங்கள் மகளாக எண்ணிப் போய்விடுங்கள். தனியாக இருக்கும் என்னை.........

*கோபா*- (கொடூரமாகச் சிரித்து) நீ தனிமையாக இருப்பதால்தானே இனிமையாக இருக்க அழைக்கிறேன். .........அழகுத் திருவுருவே! உன்னை அப்படியே அணைத்துக்கொள்ள என் அகத்தில் ஆசைக் கடல் பொங்கி வருகிறது. நாஞும் எத்தனையோ பெண்களைப் பார்த்திருக்கிறேன். ஆஞல் உன்னைப்போல் பார்த்ததே இல்லை. உனக்காகப் பத்தாயிரம் ரூபாய் அல்ல, பவுன்களாக வேண்டுமாஞலும் பரிசாகவே கொடுப்பேன். (நெருங்குதல்)

*செல்வி*- (சற்று பின்புறம் ஓடி) சீ, காமப் பேயே! மகளைப் போன்ற என்னை மருவ நினைக்கும் மாபாவியே! என் உயிர் இருக்கும் வரை உன் எண்ணம் ஈடேருது!

*கோபா*- (கிண்டலாக) என் உயிர் நிலைக்கவேண்டு மானாலும் என் ஆசை நிறைவேறவேண்டும்! என்ன செய்வது? வா......

(அருகில் சென்று செல்வியை அணைக்கக் கைகளை உயர்த்த, செல்வி அருகிலிருந்த கத்தியை எடுத்து அவன் முன் நீட்டி ஆவேசமாக முழங்குதல்)

*செல்வி*- நெருங்காதே! நெறி கெட்டவனே........ என்னைப் பார்த்தால் உனக்குக் குழந்தைப் பாசம் ஏற்பட வில்லையா? உன் இதயத்தில் இரக்கமே இல்லையா? பரிவு என்ற பண்புக்கே இடமற்றுவிட்டதா? பாதகனே! உடனே சென்றுவிடு. என்னை நெருங்கினால் என் பிணத்தைத்தான் உன்னால் தொடமுடியும். போய்விடு, கொலைகாரனாகாதே!

*கோபா*: (சற்று அஞ்சி, பின் நிதானித்து) பெண் புத்தி பின்புத்தி என்பது சரியாயிற்று! பைத்தியக்காரி! நான் தான் குடிவெறியில் எதையாவது உளறினாலும், நீ என்னை மன்னித்து ஆதரவளிக்கவேண்டாமா? எனக்குப் பெண்களுக்குப் பஞ்சமா? உன்னைத்தான் கெடுத்து திருப்தி கொள்ளவேண்டுமா? நீ சாகவேண்டாம். நான் பேசியது தவறென்ருல் என்னைக் கொன்றுவிடு. (இதமாகப் பேசி அவளை நெருங்க, அவன் பேச்சை உண்மையென்று நம்பிய செல்வி, மனம் மாறி, சினம் தணிகிருள். அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கத்தியைப் பிடுங்குகிருன் கோபால பிள்ளை.)

*செல்வி*: (திகைத்து) ஆ!

*கோபா*: திகைக்காதே! நீ என்னைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் பேசிவிட்டாய்! நான் நினைத்தால் உன்னை ராணியைப்போல் வாழ வைக்கவும் முடியும்; உன் குடும்பத்தையே அழித்து ஒழிக்கவும் முடியும்! (சிரித்து)

இரண்டும் உன் கையில்தான் இருக்கிறது. எது வேண்டும்? ......கொஞ்சும் மொழியாளே! கோபம் வேண்டாம். கத்தி பிடிக்கவேண்டிய கையல்ல உன் கை. கனிகள் விளையாட வேண்டிய கையல்லவா?

*செல்வி:* (அவர் காலடியில் விழுந்து) கடவுள் மீது ஆணையிட்டுக் கேட்கிறேன். என் பெண்மையைக் காப்பாற்றுங்கள். காலமெல்லாம் உங்களைத் தெய்வமாக எண்ணி வணங்குவேன். (கண்ணீர் விட்டு அழுகிருள்)

(மறைந்து நிற்கும் ஜெம்புவின் கண்களிலும் நீர் நிறைந்து வடிகிறது)

*கோபா:* எதிர்க்கமுடியவில்லை. சரணுகதியடைகிருய்! (சிரித்து) என்னை எதிர்க்க எவன்தான் இருக்கிருன்?

*ஜெம்பு:* (கோபத்துடன்) நான் இருக்கிறேன்!

(ஜெம்புவின் குரல் கேட்டு கோபால பிள்ளையும், செல்வியும் திகைத்துத் திரும்பிப் பார்த்தல்)

*ஜெம்பு:* (அருகில் வந்து) பணத் திமிரால் பாவையர் கற்பைச் சூறையாடத் துணிந்த கயவர் கூட்டத்தின் தலைவனே! உன் இழிசெயல் ஒழிக்க, கடமை வீரர்கள் நிறைந்த இக்கன்னித் தமிழ் நாட்டில், என்னைப்போல் காளையர் எண்ணற்ருேர் இருக்கின்ருர்கள்.

*செல்வி:* (நன்றி உணர்வோடு) ஜெம்பு அண்ணு!

*ஜெம்பு-* நீ தைரியமாக இரு அம்மா! (கோபால பிள்ளையைப் பார்த்து) மிருகமே, மகள் என்று கூறி உன் காலைப் பிடித்து, கண்ணீர் விட்டுக் கதறியழுகிற கன்னிப் பெண்ணைக் கற்பழிக்க எப்படியடா உன் மனம் துணிந்தது? சீ, நீயும் ஒரு மனிதனு? தூக்கி எறி கத்தியை. ஓடிவிடு இந்த இடத்தைவிட்டு.

*கோபா:* (கத்தியைக் காட்டி) முதலில் நீ ஓடிவிடு.

*செல்வி:* (அச்சத்துடன்) அண்ணு!

*கோபா:* அண்ணுவா, ஆசைக் காதலனு?

*ஜெம்பு:* நாவை அடக்கிப் பேசுடா.

*கோபா:* டேய், நான் யாரென்று தெரியாமல் விளையாடுகிருய்! நான் விரல் அசைத்தால் இந்த உலகத்திலிருந்தே நீ ஒழிந்துவிடுவாய்! இதோ பார். (கத்தியால் ஜெம்புவைத் தாக்க நெருங்கும்போது, ஜெம்பு தடுத்து அவர் முகத்தில் குத்துகிருன். கோபாலபிள்ளை கீழே விழ, கத்தியும் தரையில் விழுகிறது. அதே வேளையில் சண்முகம் பிள்ளை உள்ளே வருதல்)

*செல்வி:* (எதிர் சென்று) அப்பா! (தந்தையை அணைத்துக்கொள்ளுதல்)

*சண்மு:* (திகைப்பு மேலிட) என்ன'ம்மா......என்ன நடந்தது? வாசலில் வேறு இரத்தம் சிந்திக் கிடக்கிறது. மண்டையில் அடிபட்டு ஒருவன் விழுந்து கிடக்கிருன். (ஜெம்புவைக் கண்டு) ஜெம்பு! என்ன.........

*கோபா:* வாசலில் இரத்தமா?

*செல்வி:* நான் சொல்கிறேன் அப்பா, இதோ நிற்கிருரே பெரிய மனிதர், இவரிடம் நீங்கள் கடன் கேட்டிருந்தீர்களாம். அதற்குப் பதில்......அதற்குப் பதில் (அழுகை)

*சண்மு:* (ஆத்திரமுடன்) என்னம்மா, சொல்.

*செல்வி:* என் பெண்மையைக் கேட்கிருர்! அப்பா, என்னைக் கெடுக்கத் துணிந்து நெருங்கும்போது, இந்த மனித மிருகத்திடமிருந்து...... ஜெம்பு அண்ணு என்னைக் காப்பாற்றினுர் அப்பா......!

*சண்மு:* அப்படியா! (கோபால பிள்ளையைப் பார்த்து) அட பாவி! உனக்கு நான் என்ன கெடுதல் செய்தேன்! என் குலத்தையே கெடுக்க எண்ணிஞயே! ......கோபால பிள்ளை!...... (கோபத்தில்) பணத்தில்தான் உன்னைவிட குறைந்துவிட்டேனே தவிர, வேறு எதிலும் நான் குறைந்தவனல்ல! உன்னை ஒழித்துவிடுகிறேன் பார்! என் வீடு புகுந்து என் மானத்தை அழிக்க நினைத்த உன்னையும், உன் வீடு புகுந்தே அழிப்பேன்! போய்விடு!

*கோபா:* பார்க்கலாம்! (ஜெம்புவைப் பார்த்து) ஜெம்புலிங்கம் என்பவன் நீதாஞ?

*ஜெம்பு:* உம், நானேதான். போ! உன் பண பலத்தை என் மீதும் திருப்பு!

*கோபா:* கோபாலபிள்ளை யார் என்பதை விரைவில் தெரிந்துகொள்வீர்கள். (கோபால பிள்ளை போதல்)

*சண்மு:* ஜெம்புலிங்கம்! சமயத்தில் வந்து என் குலப் பெருமையைக் காப்பாற்றிய நீ கடவுள் மாதிரியப்பா! உன்னை நான் மட்டுமல்ல, என் குடும்பமே மறக்காது!

(செல்வி உள்ளே சென்று காப்பி கொண்டுவருதல்)

*ஜெம்பு:* என்னங்க, பெரிய உதவி! நான் ஒன்றுமே செய்யவில்லை! நீங்க எனக்கு செய்கிற உதவிகளுக்கு இது ஈடாகுமா? சாதாரண மனிதன் செய்யக்கூடிய காரியம் தானே இது!

*செல்வி:* காப்பி சாப்பிடுங்கள் அண்ணு!

*ஜெம்பு:* எதற்கம்மா!

*சண்மு:* சாப்பிட்'ப்பா! செல்வி அன்பாகச் சொல்கிறது.

*ஜெம்பு:* சரி'ம்மா, கொடு. (காப்பியை வாங்கி அருந்துகிருன்.)

*சண்மு:* ஜெம்பு! இந்த கோபால பிள்ளையை இப் படியே விட்டுவிடக்கூடாது!

*ஜெம்பு:* என்ன செய்யவேண்டும்?

*சண்மு:* என் சபதம் நிறைவேறவேண்டும்.

(செல்வி உள்ளே போக, ஜெம்புவும் சண்முகம் பிள்ளை யும் ஒருபுறமாக ஒதுங்குதல்)

*ஜெம்பு:* அதற்கு நான் என்ன செய்யவேண்டும்?

*சண்மு:* அப்படிக் கேள். (குரல் தாழ்த்தி) அவன் வீட்டிற்குள் புகுந்து அவமானப்படுத்தவேண்டும். அதோடு அவன் திமிருக்குக் காரணமான பணத்தையும் கொள்ளை யடிக்கவேண்டும்! எனக்கு அவன் பொருளில் ஒரு காசு தேவையில்லை! மேலும் ஆகும் செலவிற்குப் பணம் கொடுப் பேன். என்ன சொல்கிருய்?

*ஜெம்பு:* இது அநீதி'ங்க. ஆத்திரத்தில், தோன்றிய வாறு பேசுறீங்க. அவன் செய்த குற்றத்திற்கு அவன் வீட்டார் பொறுப்பாகமுடியுமா? உங்களைக் காப்பாற்ற வேண்டுமானால் என் உயிரையும் கொடுப்பேன். எதிர்ப் பவர் யாராகிலும் எமலோகம் அனுப்புவேன்! அது என் கடமை! இழிசெயல்களுக்கு என் மனம் இடந்தராது'ங்க!

*சண்மு-* (யோசித்து) ...சரி, உனக்கு விருப்பமில் லையானால் விட்டுவிடு. எனக்கு வேறு ஆட்கள் இருக்கின் றனர். நான் சொன்னதை நிறைவேற்றியே தீருவேன்.

*ஜெம்பு:* அது உங்கள் விருப்பம்......நேரம் இருட்டி விட்டது. நான் வருகிறேன்.

*சண்மு:* போய் வா. (ஜெம்புலிங்கம் போதல்)

[ திரை ]

***

## காட்சி 4

(வடலிவிளை)

துரைவாப்பாவை சிறு வயதிலேயே வளர்த்துவரும் விதவை பார்வதி யின் கடை. பின்புறம் வீடு.

துரைவாப்பா, பொன்னி, பார்வதி, ( ஜெம்பு பிறகு வருதல் )

*துரை-* (தன்னுலே மெதுவாகப் பாடிக்கொண்டு, கல்லாப் பெட்டியில் தாளமிடுதல்)

செக்கச் சிவந்த குட்டி
சிரிக்கச் சிரிக்கப் பேசும் குட்டி
பக்கத்தில் வருவாயடி — என்
பசியினைத் தீர்ப்பாயடி — (செக்)

(பொன்னி வருதல்)

*பொன்னி-* என்ன...பார்வதியம்மா இல்லையா?

*துரை-* இல்லை. நீ யாரம்மா?

*பொன்-* அடியாத்தே? என்னைத் தெரியவில்லையா?... இந்தப் பொன்னம்மாளை அடியோடு மறந்திட்டிங்களா?

*துரை-* அடே! பொன்னியா? அதுதான் இவ்வளவு சுதந்திரமா பேசுறே. மின்னல் வேகத்தில் வளர்ந்துட்டியே!

*பொன்:* ஏன் மாமா, நீங்க மட்டும் அப்படியேதான் இருக்கிறீங்களா? (சிரித்து) சுகமாக இருக்கிறீங்களா? (துரை வாப்பா, பொன்னியின் அழகை ரசித்தவாறே தன்னை மறந்து இருத்தல்) அட, உங்களைத்தானே!

*துரை-* (திடுக்கிட்டு) அ...ஆ!...ஆமா...ஆமா!

*பொன்-* (சிரித்து) என்ன ஆமா? கடையிலே இப்படியிருந்தால் வியாபாரம் நடந்தாப்பிலேதான்......ஏங்க இப்படி பார்க்கிறீங்க?

*துரை:* ஏன், பார்க்கக்கூடாதா? உன்னைப் பார்த்து எத்தனை வருஷமாச்சு?

*பொன்-* சரிதான். அத்தனை நாட்களையும் சேர்த்து, இப்பொ மொத்தமா பார்க்கிறீங்களா? கண்ணு...

*துரை-* கண்ணுக்கு ஒரு கேடும் வராது. முழு நிலவின் ஒளியைப் பார்த்து இன்புற என் கண்களுக்குக் கொடுத்துவைத்திருக்கிறது.

*பொன்-* ஏது?...உளறத் தொடங்கியாச்சு! பகலிலே நிலவா? (பார்வதி அம்மாள் வருதல்)

*பார்வதி-* ...யாரு...பொன்னம்மாளா? வா'ம்மா, வா.

*பொன்:* ஆமா'ம்மா, நானேதான். சுகமா இருக்கிறீங்களா'ம்மா?

*பார்-* நாங்க சுகம்தான். நீதான் எங்களையெல்லாம் மறந்திட்டியோன்னு......

*பொன்-* நினைச்சீங்களா? நான் மறப்பேனா?

*பார்-* பின்னே என்னவாம், ஊரிலே இருந்து வந்து ஒரு வாரம் ஆயிட்டுதே......

*துரை-* (கிண்டலாக) அவங்களுக்கு இப்பத்தான் வேளை வந்தது. குறைந்தது பத்து தடவையாவது இங்கே

வந்திருக்கவேண்டாமா? முன்பெல்லாம் நிமிடத்திற்கொரு முறை ஓடி ஓடி வருவியே!

*பார்:* முன்னாலே சின்னப் பெண்ணு.

*துரை-* இப்பொ பெரிய பாட்டி ஆயிட்டா. அதனாலே நடக்க முடியல்லே. இங்கே எப்படி வரமுடியும்?

*பார்-* துரை! உனக்கு என்னடா தெரியும்? எந்தெந்த வயதில் எப்படி எப்படி இருக்கவேண்டுமோ அப்படி அப்படித்தான் இருக்கவேண்டும்! பருவத்திற்கு ஒவ்வாத முறையில் நடப்பவர் பைத்தியக்காரர்கள். அதிலும் கன்னிப் பெண்களுக்குக் கட்டுப்பாடு ரொம்பத் தேவை. 'காப்பில்லா குமரி வாழ்க்கை கரையில்லா ஏரிக்கு ஒப்பாகும்' என்று முன்னோர் சொல்லியிருக்கிறார்கள். அடக்கமே அணங்குகளுக்கு அழகு. பொன்னி (அவள் தலையை வருடியவாறு) இப்பொழுது, பூத்துக் குலுங்கும் பொன் செடி. முன்னைப்போல் இங்கு துள்ளி வரமுடியுமா?

*பொன்-* அம்மா, உங்க அறிவுரை ரொம்ப நல்லா இருக்கு. ஆனால் வரமுடியாமலா நான் இப்பொ வந்திருக்கிறேன்? உங்க அனுமதியிருந்தால் நான் எப்போதும் வருவேன்.

*பார்-* என்னம்மா, உன் வீட்டிற்கு நீ வருகிறாய்!

*பொன்-* அப்படீன்னா சரி'ங்க. இப்போ நான் வரட்டுமா?

*துரை-* என்ன பொன்னி போகிறாயா?

*பொன்-* (சிரித்தவாறு) நான் வரட்டுமா? என்றல்லவா கேட்டேன்.

*பார்-* அவன் கிடக்கிறான் நீ போய்வா'ம்மா!

(இருவரிடமும் விடைபெற்று பொன்னி போதல். அவள் சென்ற திசையையே பார்த்தவாறு சிலையாக இருக்கிறான் துரை.)

*பார்-* துரை! ஏய் துரை!

*துரை-* ...உம்...உம்...என்ன? என்ன அத்தே!

*பார்-* அத்தையாவது, பொத்தையாவது......இது என்னடா இழவு பார்வை?

*துரை-* (வெட்கத்தோடு)......ஒன்றுமில்லே'ங்க...

*பார்-* சரி, நான் வந்த விஷயத்தை சொல்லி விடுகிறேன்.

*துரை-* (ஆவலோடு) என்ன விஷயம் அத்தே! சீக்கிரம் சொல்லுங்க, ரகசியமா?

*பார்-* இரகசியம் மாதிரிதான். ஜெம்புலிங்கத்தைப் பற்றி ஊரிலே பலமாதிரி பேசுருங்க!... அதனாலே நீ இனி மேல் அவனோடு ஊர் சுற்றுவதை விட்டுவிடவேண்டும்!

*துரை-* என்ன அத்தே, திடீரென்று குண்டு போடுறீங்க!

*பார்-* குண்டுமில்லே, குழியுமில்லே! சொல்லற மாதிரி கேள்!

*துரை-* கேட்கிறேன். ஆனால் ஏன் சுற்றக்கூடாது? காரணம் தெரியவேண்டும்.

*பார்-* காரணம் உண்டு. ஜம்புலிங்கம் கள்ளனாயிட் டானும். கள்ளனோடு நல்லவன் சேரலாமோ?

*துரை-* ஏன் சேரக்கூடாது? அத்தே, 'ஜெம்பு கள்ளன்' என்று சோம்பேறிகள் சிலர் சொல்லுகிறார்கள். நானும் அறிந்தேன். ஆனால் உங்களைப்போல் எளிதில் நம்பமாட்டேன். ஜெம்பு எப்படியிருந்தாலும் என் நண்பன் தான். அவன் கள்ளனாகவே இருந்தாலும் பிறரை நல்லவர் களாக்கிவிடுவான்.

*பார்-* கெட்டபின், அடுத்தவரை எப்படியப்பா நல்லாராக்கமுடியும்? கள்ளியிலே முல்லே மலருமா?...... ஏதோ வளர்த்த பாசம் உனக்கு எவ்வித இடையூறும் வரக் கூடாதே'ன்னு சொல்கிறேன்.

*துரை:* (உருக்கமாக) அத்தே, என் ஆத்தா உங்க ளிடம் என்னை ஒப்புவித்துவிட்டு இறக்கும்பொழுது என் வயது பன்னிரெண்டு ஆயிட்டுதே! என்னை முஸ்லீம்

என்று எண்ணி புறக்கணித்தா வளர்க்கிறீர்கள்? பெற்ற பிள்ளை மாதிரி எண்ணி வளர்க்கிறீங்க. உங்க சொல்லை மீறினுல் நான் உருப்படமாட்டேன்... ஜெம்புலிங்கமும் நானும் எப்படி இருக்கிறோம் என்று உங்களுக்குத் தெரியாதா?

*பார்-* (மனம் இளகி) வருத்தப்படாதே'ப்பா. நான் உனக்குக் கட்டளை இடவில்லை. நிலைமையைக் கூறினேன். யோசித்து முடிவு செய். வருகிறேன், கடையைக் கவனித்துக்கொள். (பார்வதி போதல்; ஜெம்பு வருதல்)

*துரை:* ஜெம்பு! வா, வா, உன்னைப் பார்க்கவேண்டும் என்றுதான் எண்ணிக்கொண்டிருக்கிறேன்.

*ஜெம்பு:* (சோர்வோடு) உம்,பார். நல்லா பாரு! நீ ஒருவனுவது என்னைப் பார்க்க விரும்புகிருயே! அது போதும்.

*துரை:* என்ன! ஜெம்புலிங்கம் பேச்சிலே இத்தனை சோகமா? ஜெம்பு, என்ன இது? காரணமின்றி ஏன் இத்தனை சோர்வு? பொங்கும் வீர உணர்வும், பொலியும் புன்முறுவலையும் தவிர வேருென்றையுமே காணமுடியாத உன் முகத்திலேயா இத்தனை மாற்றம்? வீரனே, மன உறுதி மட்டும் நம் உடமையாக இருக்கட்டும்.

*ஜெம்பு:* உறுதிவேண்டும் என்று எனக்கு நீ சொல்கிருயே! என்னை உனக்குத் தெரியாதா?.. எதை வேண்டுமாயினும் எதிர்த்துப் போராடுகிற வலிமை எனக்கு உண்டு. அனுல் திருடன் என்ற பட்டத்தை மட்டும் என்னுல் ஏற்று எதிர்க்கமுடியவில்லையே!

*துரை-* ஜெம்புலிங்கம் திருடனு! யார் நம்புவார்கள்? அயோக்கியன் எவனே அவிழ்த்துவிட்ட சரடு! சூதுமதியினரின் சூழ்ச்சி.

*ஜெம்பு:* சரியாகத்தான் சொல்கிருய். ஆனுல், அந்த சூழ்ச்சி நாடகத்தின் சுருக்கம் கேட்டாலே, நீ துள்ளி எழுந்து துரோகிகளைத் தொலைத்துவிடுவாய்!

*துரை:* அப்படியென்ருல், துரோகி யார் என்பதைத் தெரிந்துவிட்டாயா? (ஆவலோடு) சொல் ஜெம்பு, நடந்தவற்றைச் சுருக்கமாகச் சொல்.

ஜெம்பு: சொல்கிறேன்—அன்று சண்முகம் பிள்ளையின் வீட்டில் நடந்ததைக் கூறினேனல்லவா?

துரை: ஆமாம்!

ஜெம்பு: அந்த பெரிய மனித அயோக்கியனைப் பழி வாங்க......

துரை: அதாவது...கோபால பிள்ளையைப் பழி வாங்க?

ஜெம்பு- ஆமாம். சண்முகம் பிள்ளை, பட்டப்பகலில் கோபால பிள்ளையின் வீட்டில் கொள்ளையிட, வீரலிங்கத்தின் கூட்டத்தைத் தூண்டியிருக்கிறார்! வீரலிங்கம்தான் நம் விரோதி ஆயிற்றே. கொள்ளையடிக்கும் போது 'ஜெம்புலிங்கம், ஜெம்புலிங்கம்' என்று என் பெயரைப் பன்முறை கூறி விளம்பரப்படுத்திவிட்டான். கோபால பிள்ளை, பதறி அடித்துக்கெண்டு ஓடி, போலீஸ் நிலையத்தில் ஜெம்புலிங்கம் கொள்ளையிட்டான் என்று கூறிவிட்டார். ஏற்கெனவே நான் அவர் விரோதியல்லவா?

துரை: (எழுந்து) அப்படியா சம்பவம்? ஜெம்பு எழுந்திரு! நாம் இருவரும் இப்பொழுதே சென்று அந்த கயவனுக்குப் புத்தி புகட்டிவிட்டுத் திரும்புவோம். அதோடு அந்த வீரலிங்கத்தின் துடிப்பையும் தூளாக்கி வருவோம், எழுந்திரு.

ஜெம்பு- நீ ஆத்திரப்படுவாய் என்று எனக்குத் தெரியும். இரண்டு நாட்களாக போலீஸ் தேடுகிறது. கோபால பிள்ளை கலெக்டர் துரைக்கே ரொம்ப வேண்டியவரு! இப்பொ நாமாகச் சென்று மாட்டிக்கொண்டால் நம்மை சித்ரவதை செய்து அவர்களுக்கு சாதகமாகச் சிக்க வைத்துவிடுவார்கள். பொறு; முதலில் வீரலிங்கத்திற்கு விவேகம் உணர்த்தி, குற்றவாளி தானே என்று அவனை போலீஸ் நிலையத்தில் சொல்ல வைப்போம்.

துரை- நல்ல யோசனை; நாளையே போகலாம்.

ஜெம்பு: (இரண்டு பழத்தை எடுத்துத் தின்றபடி) மாலையில் வழக்கமான இடத்தில் சந்திப்போம்.

(தூரத்தில் இரு போலீஸ்காரர்கள் வருவதை துரை பார்க்கிருன்)

துரை- ஜெம்பு, போலீஸ்!

*ஜெம்பு:* (திரும்பிப் பார்த்து) வீரலிங்கத்தை சந்திக்கும்வரை, நாம் போலீஸ் கையில் அகப்படக்கூடாது. வருகிறேன். (ஜெம்பு ஓடி மறைதல்)

[ திரை ]

★★★

## காட்சி 5

(ஜெம்புவின் வீடு)

ஜெம்பு, அவன் மனைவி சுந்தரி. (துரை பிறகு வருதல்)

(ஜெம்புவின் மனைவி, வழுக்கி விழுந்து காலில் அடிபட அவள் காலுக்கு மருந்து வைத்துக் கட்டுகிருன் ஜெம்பு)

*சுந்தரி:* ஆ...அத்தான்...மெதுவா...மெதுவா...

*ஜெம்பு:* இந்த சின்ன காயத்திற்குக் கூடஇத்தனை வேதனையா?

*சுந்:* சோதனைகள் அடுக்கடுக்காக வந்தால் வேதனை இருக்காதா?

*ஜெம்பு:* நீ அந்த வேதனையில் இருக்கிருயா? சுந்தரி, இன்பம் வரும்பொழுது எல்லோரும்தான் மகிழ்ச்சியாக இருப்பார்கள். அது ஒரு சாதனையல்ல! துன்பம் வரும் போது மகிழ்ச்சியாக இருப்பதுதான் சாதனை.(துரை வருதல்)

*துரை:* (வந்துகொண்டே) ரொம்ப சரி ஜெம்பு! உன் கருத்துரை வீட்டுக்கு மட்டுமல்ல, இந்த நாட்டிற்கே தேவை!

*சுந்:* வாருங்கள் அண்ணு! உலகத்திற்கே தேவை என்று சொல்லுங்கள். ஆனல் என்னுல் ஏற்றுக்கொள்ள முடியவில்லையே!

*துரை:* (சுந்தரியின் காலைப் பார்த்து) காலில் என்ன?

*ஜெம்பு:* பிரமாதமாக ஒன்றுமில்லை. நேற்று மாலை தண்ணீர் எடுக்கும்பொழுது சற்று வழுக்கிவிட்டது.

*துரை:* ஐயோ, கர்ப்பவதி...நீயேன’ம்மா தண்ணீர் எடுப்பதற்குப் போகிறாய்?

*ஜெம்பு:* காலில் அடிபடவேண்டிய விதி இருக்கிறதே!

*துரை:* கலங்காதே ஜெம்பு நமக்கு ஒரு துன்பமும் வராது. வந்தாலும் அதை இன்பமாக மாற்றிவிடலாம். எழுந்திரு. ஆற்றில் சென்று குளித்துவிட்டு வீரலிங்கத்தையும் பார்த்து வருவோம்.

*ஜெம்பு:* இந்த வேளையிலா? கையில் விலங்குடன் போலீஸ் சுற்றி வருகிறது! நான் ஒரு யோசனை சொல்கிறேன். நீ சென்று வீரலிங்கத்தை சந்தித்து வேண்டுவன செய். நான் மலையில் நாவல் மரப்பக்கத்தில், நமது பழைய இடத்தில் காத்திருப்பேன். செய்வாயா?

*துரை:* இது என்ன கேள்வி? இப்போதே புறப்படுகிறேன். வரட்டுமா? சுந்தரி போய்வருகிறேன். நீ தைரியமாக இரு! (ஜெம்புவும் சுந்தரியும் விடை கொடுக்க துரைவாப்பா போதல்)

[ திரை ]

★★★

## காட்சி 6

### (பார்வதியின் வீடு)

துரைவாப்பா, பொன்னி. (துரைவாப்பா, அவசரமாக வெளியில் புறப்படும்பொழுது பொன்னி வருகிறாள்)

*பொன்:* (விளையாட்டாக) என்ன!...ரொம்ப அவசரமாக ஐயா வெளியே புறப்படுவதுபோல் தெரிகிறதே!

*துரை:* ஆகா, கண்டுபிடிச்சுட்டியே! பெரிய தீர்க்க தரிசிதான்! வழியை விடு!

*பொன்:* வழிவிடுகிறேன். ஆனால் அந்த அவசர விஷயத்தை என்னிடம் சொல்லக்கூடாதா?

*துரை:* (சற்று கோபத்தில்) பொன்னி, எப்பவும் விளையாட்டுப் பேச்சுத்தானா? வேளை தெரியவேண்டாமா?

*பொன்:* அதைத்தானே கேட்கிறேன் (அடக்கமாக) சொன்னால்தானே தெரியும்?

*துரை-* அதாவது நம் ஜெம்புவின் மனைவி சுந்தரிக்கு இது பிரசவ காலம். இப்பொழுது நோவு இருப்பதாக ஆள் வந்தது. மருத்துவச்சியை அழைத்துக்கொண்டு உடனே போகணும்! உனக்கு விருப்பமானால் நீ முதலில் போய் ஆகவேண்டியதைப் பாரு!

*பொன்-* என்ன இப்படிக் கேட்கிறீங்க! அது நம் கடமை ஆயிற்றே! நானே மருத்துவச்சியை அழைத்துக் கொண்டு உடனே போகிறேன். நீங்கள் மெதுவாக வாருங்கள்.

*துரை:* சரி, பொன்னி! சீக்கிரம் போ. நான் ஜெம்புவைக் கண்டு ஒரு சில விஷயங்களைக் கூறிவிட்டு விரைவில் வருவேன்! (தலையை அசைத்தபடி பொன்னி விரைதல்; பார்வதி வருதல்)

*பார்:* என்ன துரையவாள், ரொம்ப வேகமாகப் புறப்பட்டமாதிரி தெரியுதே!...

*துரை:* ஒன்றுமில்லை ...அத்தே!...சும்மா ஜெம்பு வீடு வரைக்கும்.

*பார்:* நீ இப்படியே கண்டபடி சுற்றினால் கடை உருப்பட்டாப்போலத்தான். வியாபாரத்தைக் கவனிக்காமல்...

*துரை-* வியாபாரம் இருக்கட்டும். முதலில் விபரீதம் ஏற்படாமல் தடுக்கவேண்டுமே!

*பார்-* (திகைத்து) என்னடா உளறுகிறே?

*துரை-* இல்லை அத்தே! உண்மையைத்தான் சொல்லுகிறேன். ஜெம்புவின் மனைவிக்குப் பிரசவ வேதனையாம்! இந்த சமயம் உதவி செய்யவேண்டாமா?

*பார்-* செய்யவேண்டியதுதான். ஆனால் ஜெம்பு லிங்கத்தின் நட்பை அடியோடு விட்டுவிடு. அவன் நண்பன் வீரலிங்கத்தை மூன்று நாட்களாகக் காணவேயில்லை யாம்! பலபேர் பலவிதமாப் பேசுறாங்க ஆனால், நான் சொன்னபடி நீ நடந்துகொள்!

*துரை-* நல்லா இருக்கு உன் பேச்சு! சிறுவயதிலேயே உயிருக்குயிராய் பழகிய நண்பனை அவனுடைய இன்ப காலத்தில் கைவிட்டாலும் துன்ப காலத்தில் கைவிடவே கூடாது. அவ்வாறு விடுவது தமிழ்ப் பண்பிற்கே இழுக்கு. குலப் பெருமைக்கு அழகல்ல. எனக்கு எந்த ஆபத்து வந்தாலும் என் ஜெம்புவை மட்டும் நான் மறக்கவே மாட்டேன். பழி ஏற்று வாழ்வதைவிட பண்போடு மாள்வதே நல்லது! (ஜெம்பு வருதல்)

*ஜெம்பு:* (உணர்ச்சியோடு) ஆகா! நீயே நண்பன்! ஆபத்தில் அறியலாம் (பார்வதி உள்ளே போதல்) அருமை நண்பனை என்ற இலக்கணத்திற்கு நீயே இலக்கியம்!

*துரை-* ஜெம்பு. இது என்ன... திடீரென்று பட்டப் பகலில் வந்திருக்கிறாயே! நான் உன்னையும் பார்க்கவே புறப்பட்டேன்.

*ஜெம்பு:* என்ன......என்ன செய்தி?

*துரை-* சுந்தரிக்கு ஒரு மாதிரியாக இருக்கிறதென்று ஆள் வந்தது!

*ஜெம்பு:* (சோகத்தோடும், திகைப்போடும்) ஆ! சுந்தரிக்கா?

*துரை-* ஒன்றும் பயமில்லை. மருத்துவச்சியுடன், பொன்னி சென்றிருக்கிறாள்.

*ஜெம்பு:* அப்படியென்றால், சீக்கிரம் வா போகலாம்.

*துரை-* நீயும் கூடவா? வேண்டாம். நீ வருவது சரியல்ல. நீ நம் இடத்திற்கே போய்விடு. நான் சென்று பார்த்துவிட்டு உடனே வருவேன்.

*ஜெம்பு:* (துயரத்துடன்) பார்த்தாயா துரை! [சே இந்தக் கோழை வாழ்வும் ஒரு வாழ்வா? அந்த அளவுக்கு நான் ஒதுக்கப்பட்டுவிட்டேனு?

*துரை-* அல்ல; சந்தர்ப்பம் அப்படியிருக்கிறது. இப்பொழுது அதற்குத்தக்க நாம் நடந்துகொள்வதுதான் அறிவுடைமை! சதிகாரர்கள் மூட்டிய தீ உன்னைச் சுற்றி வட்டமிடுகிறது!

*ஜெம்பு:* அந்தத் தீ, என்னைச் சுட்டு சாம்பலாக் கட்டும். என்ருவது ஓர் நாள் சாம்பலாகவேண்டிய உடல் இன்றே ஆகட்டும். நான் இப்போதே சுந்தரியைப் பார்க்கப் போகிறேன். (ஜெம்பு திரும்பி நடக்க)

*துரை-* ஜெம்பு, நில்! ஆத்திரம் (ஜெம்பு நின்று, துரையைப் பார்க்க) உன் அறிவை மறைக்கின்றது. உன் வீரம் அந்த வீணரை அழிக்க வீறுகொண்டெழுகிறது. உன் வீட்டின் முன்பு உனக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால் அந்த அதிர்ச்சியில் உன் மனைவியின் நிலை எப்படியிருக்கும்? சற்று சிந்தித்துப் பார்.

*ஜெம்பு:* (சிந்தித்து)..........என் புத்தியே குழம்பி விடும்போலிருக்கிறது. நீ இப்பொழுது என்ன செய்யச் சொல்கிருய்?

*துரை-* உன் இடத்திற்கே போ! அந்த வீரலிங்கம் எங்கோ மறைந்துவிட்டான். அவனைப்பற்றி ஏதாவது துப்பு கிடைக்குமா? என்பதைப் பார்த்துவிட்டு, உன் வீட்டு நிலையும் அறிந்துகொண்டு நான் விரைவில் வருவேன்.

*ஜெம்பு:* (சலிப்புடன்) எதையாவது செய். நான் போகிறேன். (ஜெம்பு போதல்)

*துரை-* தெய்வமே, நல்லவர்களுக்கு மட்டும் ஏன் துன்பம் வருகிறது...... (பொன்னி வருதல்)

*பொன்-* (வந்துகொண்டே) இல்லை; இன்பமும் கலந்துதான் வரும்.

*துரை-* வா, பொன்னி. போன காரியம்......?

*பொன்-* இந்த பொன்னி போனகாரியம் பொன்னுகத் தான் முடியும். பிறந்து விட்டான் வீரமகன்! ஜெம்பு அண்ணுவை அப்படியே உரித்து வைத்திருக்கிறது.

*துரை-* ரொம்ப மகிழ்ச்சி. என் மனம் சற்று நிம்மதி அடைகிறது. ...ஆமா...வீட்டைச் சுற்றி போலீஸ் வேலி யிருந்ததே, உன்ஃன சந்தேகப்படவில்லேயா?

*பொன்:* வேலியுண்டு. ஆனுல் இந்த விட்டில் பூச்சியை என்ன செய்ய முடியும்?

*துரை-* உண்மை தான். நீ திறமைசாலி பொன்னி உனக்கு ஏதாவது பரிசளிக்க விரும்புகிறேன். என்ன வேண்டும்? கேள்!

*பொன்-* (குழைவுடன்) வேஃள வரும்போது வாங்கிக் கொள்கிறேன். (பார்வதி வருதல்)

*பார்-* துரை, சடம்புக் கயிறு கட்டுகள் வந்திருக் கின்றன. நீ கொண்டு போய் திருநெல்வேலியில் விற்று வா.

*துரை-* நாஃள போகிறேன் அத்தே!

*பார்-* (கண்டிப்புடன்) அது எனக்குத் தெரியும். நீ இன்றுதான் போகவேண்டும்!

*பொன்-* போய் வாங்களேன். அத்தை சொன்ன மாதிரி கேட்டால் என்ன?

*துரை-* சரி, இப்பவே போகிறேன்.

*பார்:* உம், நான் சொன்னுல் கேட்கமாட்டான். நீ சொன்ன பிறகுதான் சரி'ங்கிருன். பார்த்தாயா'ம்மா! (இன்ஸ்பெக்டர் வருதல்)

*இன்-* (துரையிடம்) என்ன...எங்கே பிரயாணம்?

*துரை:* வாருங்கள்...வியாபார விஷயமா வெளியூர் போகிறேன்...

*இன்:* (கிண்டலாக) ஓகோ......

*துரை:* நீங்க வந்த விஷயம்?

இன்: உங்களுக்குத் தெரியாதா?......ஜெம்புலிங்கம் அடிக்கடி இங்கு வருவதாகத் தகவல் வருகிறது. அதனால் உங்களிடம் கேட்டுவிட்டுப் போகலாம்'னு வந்தேன்.

துரை: அப்படியா? அதற்கு என்னிடம் கேட்க என்ன இருக்கிறது? உங்கள் தகவல் படி கண்டுபிடிக்க வேண்டியதுதானே! (பொன்னியும், பார்வதியும் ஒருவரை ஒருவர் பார்த்துத் திகைத்தல்)

இன்- மிஸ்டர் துரைவாப்பா! இப்படி பொறுப்பில்லாமல் பேசினால், நீங்களும் குற்றவாளியாகவேண்டியது வரும். வீணாகக் கஷ்டப்படக் கூடாதே என்று சொல்ல வந்தேன்.

துரை- (பணிவுடன்) அப்படிங்களா? அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?

இன்- பெரிதாக ஒன்றும் செய்ய வேண்டாம். ஜெம்புலிங்கம் இருக்கிற இடத்தைத் தெரிவித்தால். நீங்கள் தப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க வெகுமதியும் கிடைக்கும்!

துரை: வெகுமதி வேறு கிடைக்குமா? (கோபத்தில்) உங்க சி ஐ. டி. வேலை ஒன்றும் இங்கு நடக்காது. வெகுமதியாம், வெகுமதி. யாருக்கு யார் வெகுமதி கொடுப்பது? நம் கையைக் கொண்டே நம் கன்னத்தில் அடித்தாற் போல், நம் பணத்தைக் கொண்டே நமக்கு வெகுமதி அளிக்கிறான் வெள்ளைக்காரன். அந்தப் போலி வெகுமதி எனக்குத் தேவையில்லை. மேலும் ஜெம்புலிங்கத்திற்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. வீணாக என்னை துன்புறுத்தாதீர்கள். உங்கள் தயவு என் போன்ற ஏழைகளுக்கு எதற்கு? பெரும் முதலாளிகள் இருக்கிறார்களே, அவர்களுக்குத்தான் தேவை. அவர்களிடம் சென்று வெகுமதி பற்றிப் பேசுங்கள். உங்களுக்காக இல்லாவிட்டாலும் வெள்ளைக்காரனுக்குப் பயந்தாவது உதவி செய்வார்கள்.

இன்- (கபடச் சிரிப்புடன்) தொடர்பு இல்லாமல் தான் ஜெம்புலிங்கத்தின் மனைவிக்கு உதவி செய்கிறீர்களா?

*துரை-* அவர்களுக்கு மட்டுமல்ல, துன்பப்படுவோர் யாராக இருந்தாலும் அவர்களுக்கு இயன்ற அளவு உதவி செய்வது என் பழக்கம்.

*இன்-* (கிண்டலாக) நானும் தான் ஜெம்புலிங்கத்தைப் பிடிக்க எவ்வளவோ துன்பமடைகிறேன்.

*துரை:* வெறி கொண்ட வேங்கை புள்ளிமானைப் பிடிக்கத் துன்பமடைகிறது. என்றாலும் மனித உள்ளம் படைத்தவன் மானைத்தான் காப்பாற்றுவான்.

*இன்-* (கோபத்தோடு) துரைவாப்பா! யாரிடம் பேசுகிருய் என்பதை மறந்துவிடாதே! உன் பேச்சிலிருந்தே ஜெம்புலிங்கத்தை நீ காப்பாற்றி வைத்திருப்பதாகக் கூறி விட்டாய்! கட்டளையிடுகிறேன். அவன் இருக்குமிடத்தை நீ சொல்லித்தான் ஆகவேண்டும்.

*பார்-* துரை!......

*துரை-* நீங்க சும்மா இருங்க! (இன்ஸ்பெக்டரைப் பார்த்து) மிரட்டாதீங்க சார். நீங்கள் எனக்குக் கட்டளையிட நான் உங்களிடம் வேலை பார்க்கவுமில்லை. வெள்ளைக்காரனிடம் பணம் வாங்கவுமில்லை! நீதி - அநீதியை ஆராயாமல் நல்லவனைக் கள்ளனாக்கி அவனை அழிக்கத் துடிக்கிறீர்களே!

*இன்-* நிறுத்து. உனக்கு சிறைவாசம் சமீபித்து விட்டது.

*துரை-* கவலையே இல்லை!

*இன்-* துள்ளிய மாடு பொதி சுமக்கும்!

*துரை-* மாட்டின் கயிறு உங்கள் கையில் கிடைத்தால் தானே!

*இன்-* நான் நினைத்தால் ஒரு நொடியில் கிடைத்து விடும்.

*துரை:* இப்படித்தான் எண்ணியிருப்பீர்கள் ஜெம்புலிங்கத்தையும்.

*இன்:* நான் வந்த வேலை தீர்ந்தது. இனி வரவேண்டிய விதத்தில் வந்து செய்யவேண்டியதைச் செய்கிறேன். (இன்ஸ்பெக்டர் போதல்)

*பார்:* என்னடா, முட்டாள்தனமாகப் பேசி ஆபத்தைத் தேடிக் கொண்டாயே!

*பொன்:* என்ன ஆபத்து? அவரு கேட்ட கேள்விகளுக்குத் தக்க பதில் சொன்னூர். அந்த இன்ஸ்பெக்டர், எட்டப்பன் பரம்பரை. அதனுல்தான் காட்டிக்கொடுக்க வேண்டும் என்று இங்கு வந்து கேட்டார். ஜெம்பு அண்ணுவின் தோழர் கட்டபொம்மன் பரம்பரை. கட்டபொம்மனுக்கு ஒரு ஊமைத்துரை. ஜெம்பு அண்ணுவுக்கு ஒரு பேசும் துரை!

*துரை·* அப்படிச் சொல் பொன்னி! உனக்குள்ள வீரம் கூட அத்தைக்கு இல்லையே!

*பார்:* இளம் கன்று பயமறியாதடா!

*துரை-* கன்றுதானே அறியாது! நான் காளையாகி விட்டேனே!......அத்தே......தைரியமாக இருங்கள். நான் வியாபாரத்திற்கு போய் வருகிறேன்...பொன்னி அத்தைக்கு தைரியம் சொல்லு! (துரை போதல்)

[ திரை ]

★★★

## காட்சி 7

(ஜெம்புவின் வீடு)

சுந்தரி, துரை. மற்றும் சீனியம்மாள் என்ற பெண்; (சுந்தரியின் அருகில் அவள் குழந்தை)

*சுந்:* (துரை வருவதைக் கண்டு) வாங்க அண்ணு! உட்காருங்க.

*துரை:* (சீனியம்மாளைப் பார்த்து) அட! நீ எப்பொழுது வந்தாய்?

*சீனி* இப்பத்தான். குழந்தை பிறந்த செய்தி கிடைத்தது. உடனே வந்தேன். வந்த பிறகுதான் எல்லா விபரங்களும் தெரிந்தேன்!

*துரை:* (குழந்தையைப் பார்த்து) டேய் பயலே!... பெரிய வீரனாக வரவேண்டுமடா! (சுந்தரியைப் பார்த்து) பயல் ரொம்ப உற்சாகமாக இருக்கின்றான்! உனக்கு எப்படி'ம்மா இருக்கிறது! நான் திருநெல்வேலிக்குப் போகிறேன். உனக்கு ஏதாவது வாங்கிவர வேண்டுமென்றால் சொல்!

*சுந்:* எதுக்கு போறீங்க.

*துரை:* சடம்புக் கயிறு கொண்டுபோறேன். வண்டி வெளியிலேதான் நிற்கிறது. உனக்கு வேண்டியதைக் கேள்?

*சுந்:* (நிராசையுடன்) எனக்கு எதுவுமே வேண்டாம்!... என் அத்தானைப் பார்த்தால் போதும்...அது முடியுமா அண்ணா?

*துரை:* தாராளமாக முடியும்!

*சுந்-* எப்படி முடியும்? என் பிரசவ சமயம் கண்டிப்பாக அவர் வருவார் என்று, வீட்டைச் சுற்றி போலீஸ் வட்டமிட்டது. இன்னும் வட்டமிடுகிறது. இந்த நிலையில் என் அத்தான் எவ்வாறு வரமுடியும்? வந்தாலும் நான் பார்க்குமுன் பாய்ந்து சூழ்ந்துகொள்வார்கள் போலீஸ்காரர்கள்...உம், என் விதி அவ்வளவுதான்.

*துரை:* சுந்தரி, உடன் பிறந்தால்தான் சகோதரி என்று அல்ல, நான் ஒரு முஸ்லீம். நீ ஒரு இந்து. ஆனால் விவேகத்தோடு ஆராய்ந்தால். நானும் ஒரு இந்துதான், நாம் இருவருமே மனித இனம்தான். செம்புலிங்கம் உன்னை மணந்த அன்றே நீ என் தங்கையாகி விட்டாய்! நான் இறக்கும்வரை உன் அண்ணாதான். உன் வேதனையை நான் நன்கு உணருகிறேன் அம்மா! நன்கு உணருகிறேன். இந்த அண்ணா இருக்கும் வரை நீ எண்ணியது நடக்கும்.

*சீனி:* எல்லோரும், கள்ளனின் மனைவி என்று ஏளனம் செய்கிறார்களாம்!

*துரை*- அதற்காகக் கவலைப்படுகிருளா? (சுந்தரியைப் பார்த்து) தங்கச்சி, இதில் கவலைப்பட என்ன இருக்கிறது? அம்மா. ஏழை என்ருெரு இனம் இருக்கும்வரைக்கும் இரக்கமில்லாதார் ஏளனமும் இருக்கத்தான் செய்யும். பணத்திற்கும், பதவிக்கும் பஞ்சணை விரிக்கும் இந்த உலகில் பண்பிற்கு மதிப்பிருக்குமா? ஜெம்புவுக்கு வந்த வீண்பழி உன்னையும் அவன் குழந்தையையும் தொடருகிறதா? கவலைப்படாதே!

*சீனி*: (வெளியில் பார்த்தவாறு இரகசியமாக) வெளியே ஒரு போலீஸ்காரர் உங்களையே விழுங்கி விடுவது போல் பார்க்கிருர்.

*சுந்*- (துரையிடம்) அண்ணு! இந்தப் போலீசால் உங்களுக்கும் ஆபத்து வந்துவிடும்போலிருக்கிறதே!

*துரை*- என்ன அம்மா, எனக்காவது ஆபத்தாவது என்னையும் ஜெம்புவையும் எதிர்ப்பவர்களுக்குத்தான் ஆபத்து. நிரபராதியைக் கள்ளன் என்று பழி சுமத்தியவர்களுக்கும், கன்னியர் கற்பைச் சூதாடும் கயவர்களுக்கும், வெள்ளையருக்கு சலாம் போடும் வீணர்களுக்கும்தான் எங்களால் ஆபத்து வரும்! வீரத்தை விலை கொடுத்து வாங்க எண்ணும் வீணர்கள் என்னையும், உன் வீட்டையும் சுற்றிப் பயனில்லை. விரைவில் அவர்கள் அதை உணர்ந்து கொள்வார்கள். வருகிறேன்.

*சுந்*: சரி அண்ணு. அத்தானிடம் சொல்லுங்கள்.

*துரை*- அது என் கடமை. வரட்டுமா? (துரை போதல்)

[ திரை ]

★★★

## காட்சி 8

(பார்வதியின் வீடு)

பார்வதி, பொன்னி: (துரை, ஜெம்பு பிறகு வருதல்)

(பார்வதி வெளியூர் போக, சில பொருட்களை ஒழுங்குபடுத்தி வைக்கிருள். பொன்னி வருதல்) மறைவில் சி. ஐ. டி. அப்பாவு.

*பொன்*: என்ன பிரயாணத்திற்கு என்னவெல்லாமோ சேகரிக்கிறீங்களே! நாளையே வருவதாகச் சொன்னீங்க...?

*பார்*- வா'ம்மா. உன்னைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். உன் தாத்தாவிடம் அனுமதி வாங்கிட்டியா?

*பொன்*- ஓ. வாங்கிட்டேனே. அவரும் காலையிலேயே தன் மகன் வீட்டுக்குப் போயிட்டாரு.

*பார்*- (வியப்புடன்) அவருக்கு ஏதம்மா மகன்?

*பொன்*: ஏதோ தூரத்து உறவாம். வயசு காலத்திலே இரண்டு நாள் அங்கு போய் இருந்துட்டு வருவேன்'னு போயிட்டாரு.

*பார்*- அப்படீன்னு இரண்டு நாள் நீ இங்கேதான் இருப்பே! எனக்கு உதவிதான்.

*பொன்*: இரண்டு நாள் இருந்தா போதுமா?

*பார்*- உனக்கு சம்மதமானல் ஆயுள் முழுவதும் இந்த வீட்டியே இரு. நானும் அதற்குத்தான் திட்டமிடுகிறேன்.

*பொன்*: என்ன சொல்றீங்க!

*பார்*- (கிண்டலாக) ஐயோ பாவம்! ஒன்றுமறியாத கன்னி, அவளுக்கு வந்ததாம் ஆறு மாத ஜன்னி! பொன்னி எனக்கு ஒன்றுமே தெரியாது'ன்னுதான் எண்ணிக்கிட்டிருக்கியா?

*பொன்*- (வெட்கத்துடன்) போங்க'ம்மா...

*பார்*- உம், போகத்தான் போறேன். நான் நினைக்கிறது நடக்கணும் அவ்வளவுதான். ஒரே ஒரு இடையூறு. அது கிடக்கட்டும்...

*பொன்*- என்ன இடையூறு?

*பார்*: துரை... வந்து... என்னதான் நான் வளர்த்தாலும், மதம் வேறு ஆயிற்றே...

*பொன்*: மனம் சேர்ந்தபின் மதத்திற்கு அங்கு என்ன வேலை?

*பார்:* அதை வைத்துத்தான் நான் முடிவு செய்திருக்கிறேன். உனக்கும் உன் தாத்தாவைத் தவிர யாருமில்லை! எனக்கும் துரைவாப்பாவையும், உன்னையும் தவிர யாருமில்லை....ஆனுல் துரையினுடைய போக்கும், அவன் சேர்க்கையும் பார்த்தால் பயமாக இருக்கிறது.

*பொன்-* பயம் எதற்கு அம்மா! துன்பப் படுவோர்க்குத் துணை நிற்பது அவர் குணம். ஜெம்பு அண்ணுவைப் பாருங்கள்! தான் உண்டு தன் வேலையுண்டு என்பதோடு, இயன்ற அளவு பிறருக்கும் உதவி செய்து வாழ்ந்தார். அவரைப் போல் ஒரு நல்ல உள்ளம் படைத்தவர் நம் ஊரில் யாராவது உண்டுமா? இருவரும் நீதியைத் தேடி அலைகிருர்கள். நான் அவர்களுக்குத் துணையாக இருக்கிறேன்.

*பார்:* நீயே இயபடியெல்லாம் பாராட்டினுல் பிறகு நாம்தான் துயரப்படவேண்டும்... எப்படியோ செய்யுங்கள். நான் வருகிறேன். வீட்டைக் கவனமாகப் பார்த்துக்கொள். வரட்டுமா? (பொன்னி தலையசைக்க, பார்வதி போதல்)

(பொன்னி பாடிக்கொண்டிருக்க துரை வருதல்)

*துரை:* ஆகா பிரம்மாதம்! நல்லா பாடுகிருயே...... (சுற்றிலும் பார்த்து) ஆமா... அத்தை எங்கே?

*பொன்:* ஊருக்குப் போயிருக்காங்க.

*துரை-* எங்கே ஏர்வாடிக்கா?

*பொன்-* ஆமா. நீங்க கை கழுவிட்டு சாப்பிடுங்க.

(இலை எடுத்துப் போடுதல்)

*துரை-* என்ன விளையாட்டா?

*பொன்-* ஆமா, குழந்தையல்லவா, விளையாடுகிறேன்.

*துரை-* அதுக்கில்லை பொன்னி, கன்னிப் பெண்ணை தனியாக வைத்துவிட்டு போயிருக்காங்களே, ஊரிலே என்ன சொல்லுவாங்க?

*பொன்:* (கோபம் கொள்வதுபோல்) அப்படீன்னு, நான் போய்விடுகிறேன். (புறப்படுதல்; ஜெம்பு வருதல்)

*ஜெம்பு:* எங்கே புறப்பாடு? புள்ளிமான் துள்ளிச் சாடுவதைப் பார்த்தால் வேடன் தொந்தரவு கொடுத்திருப்பான்னு...

*பொன்-* வாங்க, அண்ணு!

*துரை:* வா ஜெம்பு, உட்காரு சாப்பிடலாம்!

*ஜெம்பு-* சாப்பாட்டுக் கவலேயே எனக்கு இல்லே. வயிராற சாப்பிட்டாயிட்டுது! பொன்னி, உனக்கு என் மனமார்ந்த நன்றி.

*பொன்-* நன்றியா, எனக்கா? (ஆமாம் என்ற குறிப்பில் ஜெம்பு தலேயசைக்க) எதுக்கு?

*ஜெம்பு:* உன் அண்ணிக்கு நீ பிரசவம் பார்த்ததற்காக. எல்லா விபரங்களேயும் துரை என்னிடம் கூறினுன். அதனுல்தான் உனக்கு நன்றி கூற முதலில் உன்னேத் தேடி வந்தேன்.

*பொன்-* என்னண்ணு இது? என் அண்ணிக்கு நான் பிரசவம் பார்த்ததற்கு நன்றி தெரிவிக்கவேண்டுமா? எனக்கும் என் தாத்தாவுக்கும் நீங்கள் எவ்வளவு உதவிகள் செய்திருக்கிறீர்கள்! முதலில் அண்ணியையும் குழந்தையையும் பாருங்கள்.

*துரை-* பொன்னியிடம் மட்டும் பேசி வெற்றிபெற உன்னுல் முடியாது. போலீஸ்காரர்களே அவளேக் கண்டு மிரளுருங்க!

*ஜெம்பு:* ... ஆ! போலீஸ் என்றதும் நினேவு வருகிறது. உன்னே அந்த இன்ஸ்பெக்டர் மிரட்டினுர் என்ருயே அதன் பிறகு ஏதாவது தொல்லே உண்டுமா?

(சீ. ஐ. டி., அப்பாவு மறைந்து நின்று கவனித்தல்)

*துரை:* உம் ..... அப்படி ஒன்றுமில்லை. அதை விட்டுத் தள்ளு. நாளை ஏர்வாடிக்குப் போகவேண்டும். நீயும் வரவேண்டும்.

*ஜெம்பு:* நானுமா? ஏன் என்ன விசேடம்?

*துரை-* விசேடமில்லாமல் கூப்பிடுவேனு? சதா கவலையில் உழன்றுகொண்டிருக்கிறேமே... அதைத் தீர்க்கும் அருமருந்தான நாடகக் கலையை ரசிப்பதற்குத்தான் அழைக்கிறேன்.

*ஜெம்பு:* நாடகமா! எங்கே என்ன நாடகம்?

*துரை-* கறுப்பாயி கம்பெனி – வள்ளித் திருமணம். ஜானகிதான் வள்ளி வேடம். கேட்கவேண்டுமா?

*ஜெம்பு-* பார்க்கவேண்டிய நாடகம்தான். ஆனல் நான் இருக்கும் சூழ்நிலையில் அந்த ரசனைக்கெல்லாம் இட மேது? நான் வந்தால், நாடகத்தைப் பார்க்க மனம் வராது நாடகம் பார்க்க வருபவர்களைத்தான் நான் பார்த்துக் கொண்டிருப்பேன்.

*துரை-* நீ என்ன அவ்வளவு கோழையா; உன் மன உறுதி எனக்குத் தெரியாதா?... ஒருக்கால் வீரலிங்கம் அங்கு வந்தாலும் வருவான்.

*ஜெம்பு:* சரி, நான் வீட்டிற்குச் சென்று குழந்தையையும் பார்த்துவிட்டு, கொட்டகைக்கே வந்துவிடுகிறேன். நேரமாகிறது வரட்டுமா? பொன்னி எங்கே.........

(பொன்னி காப்பிகொண்டு வந்து கொடுக்க)

அடே... அதற்குள் காப்பி வந்துவிட்டதே...கெட்டிக் காரப் பொண்ணு ... (காப்பியைக் குடித்துவிட்டு, துரையை நோக்கி) நீ யோகக்காரனப்பா... (பொன்னியைப் பார்த்து) நான் வருகிறேன் பொன்னி.

(இருவரும் விடைகொடுக்க ஜெம்பு போதல்;மறைந்து நின்ற அப்பாவும் வேறு வழியாக விரைந்து போதல்)

[ திரை ]

## காட்சி 8

(வழிப்பாதை)

ஜெம்பு மாறு வேடத்தில் வர, எதிரே கோபாலபிள்ளை, ஒரு விவசாயி மாணிக்கம்.

(கோபாலபிள்ளையின் நிலத்தைப் பயிர் செய்துகொண்டிருந்த விவசாயி மாணிக்கம், ஒரு முறை நெல் கொடுக்காததால் அவனிடமிருந்த நிலத்தை கோபாலபிள்ளை வேறொருவனுக்குக் கொடுத்துவிட, மனம் வருந்திய அந்த விவசாயி அவரை மன்றாடுதல்)

*மாணி*- (கோபாலபிள்ளையின் பின்னால் வந்து) ஐயா, ஐயா! பத்து வருஷமா பயிர் செய்த நிலத்தை திடீரென்று வேறொருவனுக்குக் கொடுத்துட்டீங்களே!

*கோபா*- டேய், பின்னாலேயே வந்து தொந்தரவு கொடுத்தால் நிலத்தை உன்னிடம் கொடுத்துவிடுவேன்'னு நினைக்கிறியா? போடா மடையா! பத்து வருஷம் பயிர் செய்தால் அது உன் பாட்டன் சொத்து ஆகிவிடுமா? கழிந்த தடவை நீ நெல் கொடுத்தாயா? மரியாதையாகப் போய்விடு! இல்லை, போலீஸில் ஒப்புவித்துவிடுவேன். என்னைத் தெரியுமில்லே?

*மாணி*- ஏதுக்குங்க? நான் திருடினேனா; கொள்ளையடித்தேனா? போலீஸாம், போலீஸ்! அந்தப் பிடியை வைத்துக் கொண்டுதானே ஏழைகளைக் கொடுமைப்படுத்துறீங்க! (ஜெம்பு நின்று கவனித்தல்)

*கோபா*- என்னடா சொன்னே? ஏழைகளை நான் கொடுமைப்படுத்துகிறேனா? அயோக்கியப் பயலே! (கன்னத்தில் ஓங்கி அறைந்துவிட்டு, கைத்தடியை ஓங்க, ஜெம்பு, அதைத் தடுத்து பறித்து எடுத்தல்)

*கோபா*- (கோபமாக) நீ யாருடா?

*ஜெம்பு*: மனிதன். அவனை ஏன் அடித்தீர்?

*கோபா*- அதைக் கேட்க நீ யார்? நான் யார் தெரியுமா?

*ஜெம்பு:* சும்மா மிரட்டாதேய்யா! நீரும் மனிதன், நானும் மனிதன். அடிபட்டானே, இந்த விவசாயியும் மனிதன்தான். பத்து வருஷமா பாடுபட்ட நிலத்தைப் பிடுங்கிக்கிட்டதுமல்லாமல், அவன் கன்னத்திலே வேறு அடிச்சிட்டியே! சீ! உன்னை மனிதன் என்று கூறியதுதான் தவறு! மரியாதையா அவன் பயிர் செய்த நிலத்தை அவனிடமே கொடுத்துவிடும். இல்லையென்றால் இன்னும் ஒரு வாரத்தில் நீ எமலோகம் போய்விடுவாய்!...

*கோபா-* (பயந்து) ஐயோ! கொலைகாரன். போலீஸ், போலீஸ்.

*ஜெம்பு:* இந்தா'ய்யா, கூப்பாடு போடாதே! என்னை யாருமே அசைக்கமுடியாது. இந்தா உன் கைத்தடி. சொன்னது ஞாபகம் இருக்கட்டும்! (விவசாயியைப் பார்த்து) உலகிற்கு உணவூட்ட இரத்தம் சிந்தும் உழவனே! இந்த மாதிரி பணப் பிசாசுகளிடம் பல்லைக் காட்டி கெஞ்சக் கூடாது. அநியாயமாகக் கொடுமைப்படுத்தினால் தீர்த்துக் கட்டிவிடவேண்டும்! உன்னால் முடியாவிட்டால் என்னிடம் கூறு. நான் ஒரு வாரத்திற்குள் உன்னைச்சந்திக்கிறேன். (கோபாலபிள்ளையின் கன்னத்தில் தட்டியபடி) உயிரைப் பத்திரமாகப் பார்த்துக்கொள். (ஜெம்பு போதல்)

*கோபா-* (விவசாயியைப் பார்த்து) என்னடா, தீர்த்துக் கட்டிடுவியா?

*மாணி-* (நிதானமாக) வேறு...வழியில்லேண்ணு... என்னுங்க...செய்கிறது? (போலீஸ் '103' வருதல்)

*கோபா-* (போலீசைக் கண்டதும்) இவன்தான்... என்னைக் கொலை செய்துவிடுவானும்! பிடியுங்கள்! ... ...
(போலீஸ், விவசாயியைப் பிடிக்க)

*மாணி-* பெரிய பொய்! என்னை விட்டுடுங்க......... (கோபாலபிள்ளையைப் பார்த்து) நானு சொன்னேன். யாரு சொன்னுன்னு தெரியுமில்லே!......... நான் சிறைக்குப் போனால் உங்க பாடு......

கோபா- (பயந்து, போலீஸ்காரனைப் பார்த்து) விட்டு விடுங்க .. பாவம் பிழைச்சுப் போருன்!...வாங்க, உங்க கிட்டே ஒரு முக்கிய விஷயம் பேசணும்.

மாணி- ஐயா, அந்த நிலம்!......

கோபா- (கோபமும், ஆத்திரமும் எழ, பின் நிதானமாக) போடா, நாளை வீட்டுக்கு வா!...

மாணி- சரி'ங்க

(போதல்; போலீஸ் '103' ம், கோபாலபிள்ளையும் தனியாகப் போதல்)

★★★

## காட்சி 9

(ஜெம்புலிங்கம் வீடு)

ஜெம்பு, சுந்தரி (குழந்தை தொட்டிலில் தூங்குகிறது)

ஜெம்பு- (மாறு வேடத்தில், வந்தபடி) சுந்தரி, சுந்தரி!

சுந்- (திரும்பிப் பார்த்ததும் திகைத்து, பிறகு நிதானமாக) நீங்கள்...நீங்கள்...?

ஜெம்பு: உனக்கே தெரியவில்லையா? என் குரல் கூட என்னைக் காட்டிக் கொடுக்கவில்லை?

சுந்: (மகிழ்ச்சியோடு) அத்தான்! குரல் கேட்டுத் தான் உங்களை நிதானித்தேன்! என்றுலும் வேடம் என் எண்ணத்தை மாற்றமுயன்றது. வாருங்கள் அத்தான். கதவு?

ஜெம்பு: தாளிட்டுவிட்டேன்! (அன்போடு அருகில் நெருங்கி) சுந்தரி... ...... உன்னைப் பார்க்காமல் என்னுல் இருக்கவே முடியவில்லையே!... எங்கே என் குழந்தை!

சுந்: (தொட்டிலைக் காட்டி) இதோ தூங்குகிறுன்!

*ஜெம்பு:* (குழந்தையைப் பார்த்தவாறு) தூங்கு மகனே! நன்றாகத் தூங்கு! தூக்கத்திற்காகவே உனக்கு ஆண்டவன் அளித்த பருவம் இதுதான்! நன்றாகத் திருப்தி யாகத் தூங்கு! வருங்காலத்தில் உன் பணி எத்தகை யதோ! எந்த பணியானாலும், இம் மாதிரி நிம்மதியாகத் தூங்கவே முடியாது'டா கண்ணே! மேலும் உன் வாழ்க்கை சுதந்திர பாரத நாட்டில்தான் நடக்கும்! அப்போது உனக்கு தூங்கவே நேரமிருக்காது! இல்லை, நீ தூங்கவே கூடாது'டா. உன்போன்ற காளையர் சுதந்திர இந்தியாவில் தூங்கினால் மறுபடியும் அன்னியன் எவனாவது நம்மை அடிமைப் படுத்திவிடுவான்! மறந்துவிடாதே!...

*சுந்:* என்ன ...என்னவெல்லாமே சொல்லுறீங்களே!

*ஜெம்பு:* (சுந்தரியின் கன்னத்தை வருடியபடி) ஆம் சுந்தரி, நான் கூறியவற்றையெல்லாம், என் மகனுக்கு நாளும் எடுத்துச் சொல்லி, உணர்த்தி வளர்த்து வா!

*சுந்:* ஆகட்டும் அத்தான்........ முதலில் ஏதாவது சாப்பிடுங்கள்! பிறகு பேசலாம்!

*ஜெம்பு:* சாப்பிடுகிறேன் உன் அன்புக் கரத்தால் அமுதுண்ணத்தானே ஆடை மாற்றி, அழகு மாற்றி வந்திருக்கிறேன். சுந்தரி, உன் உடல் நலம் எப்படியிருக் கிறது?... தனிமையாகத்தான் இருக்கிறாயா?

*சுந்:* இல்லை அத்தான்! நான் ஏன் தனிமையாக இருக்கவேண்டும்? நம் உறவினர்களெல்லாரும் தினமும் வருகிறார்கள். பொன்னியும், துரை அண்ணாவும் என்னைக் கண்ணாகக் கவனிக்கிறாங்க. சீனியம்மா என்கூடவே இருக் கிறாள். சற்றுமுன்தான் வெளியே சென்றாள். (சலிப்புடன்) நீங்கள் அருகில் இல்லாதக் குறையைத் தவிர எனக்கு ஒரு குறையும் இல்லை!

*ஜெம்பு:* இத்தனை உதவிகள் இருக்கிறதே போதாதா?

*சுந்:* என்ன அத்தான்!... ஆயிரம் நட்சத்திரங்கள் இருந்தாலும், அழகு நிலவுக்கு நிகராகுமா? கற்புடைப்

பெண்களுக்கு கணவன் மட்டும் போதும்! அவன் இல்லாத இடத்தைப் பூர்த்தி செய்ய யாரால் முடியும் அத்தான். அந்த இறைவனுல் கூட முடியாது!

*ஜெம்பு:* உண்மை சுந்தரி! உண்மை! தமிழ்நாட்டுப் பண்பை மிகச் சுருக்கமாக அழகாகக் கூறிவிட்டாயே!... உம் பள்ளிப்படிப்பு இல்லாவிட்டாலும், பழந்தமிழ் இலக்கியம் உன் அறிவை வளர்க்கிறது. (கதவு தட்டுகிறது)

*சுந்:* (திகைத்து) அத்தான்!

*ஜெம்பு-* பயப்படாதே! யாரென்று கேள்.

*சீனியம்மாவின் குரல்:* சுந்தரி, சுந்தரி... !

*சுந்-* வேறு யாருமில்லே'ங்க. நம்ம சீனியம்மாதான்! (வெளியில் பார்த்தவாறு) சீனியக்கா, கொஞ்சம் நில்லு. நான் வருகிறேன். (உள்ளே சென்று, முறுக்கு, பலகாரம் முதலியவைகளை எடுத்து வந்து ஜெம்புவிடம் கொடுத்து) நீங்கள் சாப்பிடுங்கள்! நான் சீனியக்காவிடம், விபரம்கூறி அழைத்து வருகிறேன். (சுந்தரி வாயிலை நோக்கி வருதல்: ஜெம்பு பலகாரங்களைச் சாப்பிடுகிருன்.)

*சீனி-* (சுந்தரியுடன் உள்ளே வந்தவாறு) அப்படியா? வெளியே போலீஸ்காரர் இரண்டுபேர் நிற்கிருங்களே!

*ஜெம்பு:* (சீனியம்மாவிடம்) வாங்க........ என்ன நலம் தானே!

*சீனி:* ஏதோ இருக்கேன்!... உனக்கு வந்த விதியை நினைத்துத்தான் சங்கடமா இருக்கு!

*ஜெம்பு:* சங்கடப்பட்டால், சங்கடம் அதிகரிக்கும்! அதனுல், சந்தோஷப்பட்டே பழகிவிடவேண்டும்!........ ஆமா... வெளியே, போலீஸ் நிற்கிறதா?

*சீனி-* இரண்டு பேர் நிற்கிருங்க!........... நீங்க பேசிக்கொண்டிருங்க. நான் காப்பி போட்டுக் கொண்டு வருகிறேன். (சீனியம்மாள் உள்ளே போதல்)

*போலீ*- (103 கதவைத் தட்டியவாறு) யார் உள்ளே! சீக்கிரம் கதவைத் திறங்கள்!

*சுந்*- (அச்சத்துடன்) அத்தான்!... போலீஸ்!...

*ஜெம்பு*: போக்கற்றவன்!... .. நீ உள்ளே சென்று காப்பியை எடுத்து வா! குடித்துவிட்டே போவேன்!

*சீனி*- (உள்ளே இருந்தவாறு) இதோ ஒரு நொடியில் கொண்டு வருகிறேன்!

*சுந்*: அத்தான் இந்த நிலை எத்தனை நாளைக்கு?

*ஜெம்பு*- வீரலிங்கம் கிடைக்கும் வரைதான்! அதற்குள் நான் போலீஸ் கையில் சிக்கிவிட்டால், என்னையே குற்றவாளியாக்கி, ஆயுள் கைதியாக்கிவிடும் இந்த அன்னிய சர்க்கார்!

*சுந்*- நீங்கள் இப்போது போய் விடுவீர்கள்.........என் நிலைதான்......!

*ஜெம்பு*: (உருக்கமுடன்) கண்ணே, உன்னைப் பிரிவதென்பது...... ஏதோ உடையைக் களைவதுபோல் என்று நினைக்கிருயா? என் உயிரையே விட்டுப் பிரிவதுபோல் என் உள்ளம் துடிக்கிறது!

*போலீ*- (மறுபடியும் தட்டுதல்) கதவைத் திறக்கிறீர்களா, இல்லையா?

*சீனி*- (காப்பியுடன்) இதோ காப்பி.

[சுந்தரி காப்பியை வாங்கி, ஜெம்புவிடம் கொடுக்க, ஜெம்பு குடித்துவிட்டு எழுந்து] நான் பின்புறமாகப்போய் விடுகிறேன். என்னைப்பற்றிக் கவலைப்படதே! நீ தைரியமாக இரு! (சீனியம்மாளிடம்) சுந்தரிக்குத் துணையாக இருங்கள் வருகிறேன்.

(ஜெம்புலிங்கம் போக, சீனியம்மாள் கதவைத் திறக்கச் செல்லுதல்)

*போலீ*- 103, (உள்ளே வந்தவாறு) என்ன இவ்வளவு நேரம்?

*சீனி-* என்னுங்க!... பச்சப்பிள்ளைக்காரி இருக்கிற இடத்திலே கூப்பிட்டவுடன் கதவைத் திறக்கமுடியுமா?

*போலீ-* (உள்ளே பார்த்தவாறு) இங்கே ஜம்புலிங்கத்தின் குரல் கேட்டதே!

*சீனி-* (குழந்தையைக் காட்டி) இவன் குரல்தான் கேட்டிருக்கும்!

*போலீ-* (கோபத்துடன்) கிண்டல் செய்யுறீங்களா?

*சீனி-* ஏதாவது கனவு கண்டீங்களா? நாங்களே ஜெம்புலிங்கத்தைக் காண்பதற்குப் படாதபாடுபடுகிறோம்!.. நீங்க வேறே தொந்தரவு கொடுக்கிறீங்களே! பெண்களிடம் வந்து இப்படியெல்லாம் தொந்தரவு கொடுத்தால், ஊர்காறங்களெல்லாரும் சேர்ந்து கலெக்டர் துரைக்கு மனு எழுதி விடுவோம்!

*போலீ-* ஓகோ... சரி, பிறகு பார்த்துக்கலாம்!...... எத்தனை நாளைக்கு ஒளிந்து நடமாடமுடியும்?...

(போலீஸ் போதல்)

*சுந்:* அக்கா, சரியான போடு போட்டீங்க!

*சீனி-* இல்லேன்னு, இவன் போவானு?

[ திரை ]

★★★

## காட்சி 11

(வள்ளியூர், போலீஸ்டேஷன்)

இன்ஸ்பெக்டர், அருகில் இரு போலீஸ், சி. ஐ. டி. அப்பாவு

(இன்ஸ்பெக்டர் இருக்க, அப்பாவு வருதல்)

*இன்:* (அப்பாவு வருகை கண்டு) வாங்க மிஸ்டர். உங்களைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

*அப்-* (உட்கார்ந்தவாறு) என்ன விஷயம்?......... ஏதாவது......

இன்- எல்லாம் அந்த வம்பன் விஷயம் தான்.

அப்- ஓஹோ, ஜெம்பு விஷயமா?... அதற்குத்தான், அந்த துரைவாப்பாவை ஒரு இறுக்கு இறுக்கச் சொன்னேன்! செய்தீங்களா?

இன்- அவனை நல்லா இறுக்கிப் பார்த்தாயிற்று. அவன் என்னுன்னு நம்மை இறுக்கிருன்!

அப்: அப்படீன்னு இனிமேல் நம் கைவரிசையைக் காட்டவேண்டியதுதான்.

இன்- என்ன... வரிசை?

அப்- அடியாத மாடு படியாது! உள்ளே தள்ளி உதை கொடுத்தால் உண்மை தானுக வருகிறது......... இல்லேன்னு... வேறொரு திட்டம் இருக்கு!

இன்- அது என்ன திட்டம்?

அப்- நீங்க துரைவாப்பா வீட்டிற்குப் போன சமயம் அங்கு ஒரு பெண்ணைக் கண்டீங்களோ!

இன்: (யோசித்து) ......ஆமா, ஒரு பெண் இல்லே. இரண்டு பெண்களைக் கண்டேனே!

அப்- இரண்டா? ஓகோ ஒன்று கிழம்; கூட நின்றதே ஒரு பழம்?

இன்: ஆமா ஒரு சின்னப் பெண்ணும்...

அப்- ஆ! அவளே தான். அந்தப் பெண் தான் அந்தப் பயல்களுக்கு சி. ஐ. டி.

இன்: அப்படியா? ... ... சரி, இனி கவனிக்கிறேன். ஆமா......... இன்றைக்குக் கிடைத்த செய்தி இவ்வளவு தானுக்கும்!

அப்- என்ன சார் ஒரு மாதிரியா கேட்கிறீங்க! இன்றைக்கு வெற்றிச் செய்தி கொண்டு வந்திருக்கிறேன்.

இன்- (ஆத்திரத்தால்) அதனுல்தான் கதை அளந்து கொண்டிருக்கிறீர்களோ...........! செய்தியைச் சீக்கிரம் சொல்லுங்கோன்னு!

அப்- இன்று இரவு செம்புலிங்கமும், துரைவாப்பும் ஏர்வாடிக்கு - நாடகம் பார்க்கப் போறுங்க. ரொம்ப கஷ்டப் பட்டு 'நியூஸ்' எடுத்திருக்கிறேன். மேலதிகாரிகளுக்கு எழுதுங்கோ!

இன்- ஓ... எழுதுகிறேன். இன்று எப்படியும் பயல் களை உள்ளே தள்ளிவிடுவேன்... அவங்க இரண்டு பேரு தாஞ கூட யாராவது......

அப்- வேறு யாரு......... அந்த இராமசாமியும் கூட வருவான். அவன் ஒரு சிலம்படிக்காரஞச்சே...

இன்- அதையெல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன்.

அப்- சரி,...... நான் நாளைக்கு வந்து சந்திக்கிறேன்.

இன்- ஆல்ரைட். (அப்பாவு போதல்)

[ திரை ]

***

## காட்சி 12

(பார்வதியின் வீடு)

பொன்னி: (இன்ஸ்பெக்டர், பண்ணையாரைப்போல் வேடமிட்டு வருதல்)

இன்: (பொன்னியிடம்) இது துரைவாப்பாவின் வீடுதானே!

பொன்: (எழுந்து நின்று) ஆமா... நீங்க...?

இன்: இந்த வீட்டிலே யாரெல்லாம் இருக்கிருங்க?

பொன்: மனிதர்கள்தான்! நீங்க யாருன்னு கேட்டால்?

இன்: (கோபத்தை அடக்கிக் கொண்டு) அது தெரி யுது. இருப்பவர்களின் பெயரைத்தான் கேட்டேன்......... போகட்டும். எனக்குத் துரைவாப்பாவைத்தான் பார்க்க வேண்டும். நீ வந்து... துரைவாப்பாவுக்கு என்ன உறவு?

*பொன்:* நெருங்கிய உறவுதான்.

*இன்:* அதனுல்தான் உதவி செய்கிருய்! இப்போ... வீட்டிலே ஒருவரும் இல்லையா?

(ஜெம்பு வந்து மறைந்து நின்று கேட்கிருன்)

*பொன்:* (கண்டிப்புடன்) இங்கே இப்போ யாருமில்லை. நீங்க போயிட்டு வாங்க! உங்க பெயரைச் சொன்னுல் வந்ததும் சொல்லுகிறேன்.

*இன்:* அது சரி, துரைவாப்பா எங்கே போயிருக்கிருன்?

*பொன்:* எனக்குத் தெரியாது.

*இன்:* (இதமாக) என்னிடம் சும்மா சொல்லு. இன்றைக்கு நாடகம் பார்க்கப் போகணும்னு என்னிடம் சொன்னுன். போலீஸ் காவல் வேறு பலமாக இருக்கிறது. அதைத் தெரிவித்துவிட்டுப் போகலாம்னு வந்தேன்.

*பொன்:* (இன்ஸ்பெக்டர் என்று அறியாமல், ஏமாற்றமடைந்து, துரையின் நண்பர் என எண்ணி) அப்படியா, இவங்களை ஏன் போலீஸ் பிடிக்கணும்?

*இன்:* ஜெம்புலிங்கத்துடன் சேர்ந்து திரிவது ஒன்று போதாதா?

*பொன்:* ஏன் ஜெம்பு அண்ணு தான் போலீஸ் காரங்களை என்ன செய்துட்டாங்க? வீணுக அவரைப் பிடிக்க அலையுருங்க.

*இன்:* ஜெம்புலிங்கத்தையும் உனக்குத் தெரியுமா?

*பொன்:* நல்லா தெரியும்!

*இன்:* அவனை பெரிய போக்கிரி'ன்னு சொல்ருங்களே!

*பொன்:* சொல்கிறவங்க தான் போக்கிரி. பணக்காரர்களுக்குப் பயந்துகிட்டு அவரைப்பிடிக்க அலைகிற போலீஸ் காரங்கதான் போக்கிரிகள்! ஏழ்மையிலும் பண்புடன்

வாழ நினைக்கும் ஜெம்பு அண்ணவை போக்கிரின்னு சொல்கிறவங்க முட்டாளுங்கதான்.

இன்: போதும்! இவ்வளவு கோபம் வருதே உனக்கு... சரி,... . துரைவாப்பா வந்தால் நாளை மாலையில் ஆற்றங் கரை அரசமரம் பக்கமாக வரச்சொல். நான் காத்துநிற்பேன்

பொன்: நீங்க யாருன்னு சொல்லவில்லையே!

இன்: துரைவாப்பாவிடம் சொன்னல் தெரியும். பிறகு சந்திப்பேன்! வருகிறேன்.

(ஜெம்பு போதல், அடுத்து இன்ஸ்பெக்டரும் வேறு வழியாகப் போதல்)

[ திரை ]

★★★

## காட்சி 13

(ஏர்வாடி நாடகக் கொட்டகை)

ஜெம்பு, துரை, இராமசாமி, இன்ஸ்பெக்டர், அப்பாவு, போலீஸ் முதலானோர் மறைவிடத்தில்

(துரைவாப்பா டிக்கட் எடுக்கும் வேளையில், அப்பாவும், போலீஸ் ஆளான வெள்ளைப் பாண்டியனும், துரைவாப்பாவை நெருக்கி இடையூறு ஏற்படுத்துதல். ஜெம்பு மாற்று உடையில் மறைந்து நின்று கவனித்தல்)

துரை- (வெள்ளைப் பாண்டியனையும், அப்பாவையும் பார்த்து) ஏன் வீணுக நெருக்குகிறீர்கள்?

வெ-பா- கூட்டத்தில் வந்தால் நெருக்கம் இருக்கும். வீட்டில் இருக்கக்கூடாதா!

அப்- அவரு பெரிய ரசிகர். வீட்டிலே எப்படி இருப்பாரு.

துரை- ஓகோ......... மிஸ்டர் அப்பாவு! உம்மை எனக்குத் தெரியும்.

*வெ-பா-* என்னைத்தான் தெரியாது. தெரிந்திருந்தால், எனக்கு வழிவிட்டு ஒதுங்கியிருப்பான்!

*துரை-* டேய்! தெரு நாய்களைத் தெரியவேண்டிய அவசியமில்லை. நீ என்ன பெரிய புலியா? வேலையைப் பார்த்துப் போ. வீணுக உதை வாங்காதே!

*அப்-* துணைக்கு ஜெம்புலிங்கம் கூட இல்லை!

*துரை-* கிண்டலா செய்யுறீங்க! அயோக்கியர்களே! (அப்பாவுவின் கன்னத்தில் துரைவாப்பா அறைய, வெள்ளைப்பாண்டியன் துரைவாப்பாவை அடிக்க, இராமசாமி, வெள்ளைப்பாண்டியனைத் தாக்க,இன்ஸ்பெக்டரும்,போலீஸ்காரர்களும் துரைவாப்பாவை சூழ்ந்துகொள்ளுதல். இவைகளைக் கண்ட ஜெம்பு, ஆவேசத்துடன் வெள்ளைப்பாண்டியனின் கம்பைப் பறித்து, எல்லோரையும் அடித்துச் சிதறடிக்கிருன். ஜெம்பு, இராமசாமி, துரை மூவரும் தப்பிச் செல்லுதல்)

[ திரை ]

★★★

## காட்சி 13

(பார்வதியின் வீடு)

துரை, பொன்னி (மாணிக்கமும், பார்வதியும், ஜெம்புவும் பிறகு வருதல்)

*பொன்-* (துரையின் தலையில் அடிபட்ட காயத்தைக் கட்டியவாறு) பேடிப்பயல்கள்! கூட்டமாக நின்றுகொண்டு நயவஞ்சகமாக அடித்துவிட்டார்களே! ஜெம்பு அண்ணு மட்டும் இல்லையென்ருல் கொன்றேபோட்டிருப்பான். இந்த மாதிரி கோழைங்க எல்லாம் ஆண்பிள்ளைகளா? செ!

*துரை-* என்ன பொன்னி, வீட்டிலே இருந்து வாய்ச் சிலம்பம் வீசுறே! நேற்றைக்கு அங்கு நடந்த சிலம்பத்தை நீ பார்த்திருக்கவேண்டும்! நாங்க மூன்று பேரும் சேர்ந்து

முப்பது பேர்களை ஓட ஓட விரட்டினேம்!...... கிடக்குது தள்ளு! புது விஷயம் ஏதாவது பேசு!

*பொன்-* ஆ! புது விஷயம்'னு சொன்ன பிறகுதான் நினைவு வருது. நேற்று ஒரு புது ஆள் உங்களைத் தேடி வந்தார். இன்று மாலை ஆற்றங்கரை அரசமரத்துப் பக்கம் சந்திக்கச் சொல்லிவிட்டுப் போய்விட்டார்!

*துரை-* புது ஆளா? அது யாரடா அவன்.........!

(யோசித்தல்; மாணிக்கம் வருதல்)

*மாணி-* என்ன யோசனை பலமா இருக்குதே!

*துரை-* மாணிக்கமா! வா, உட்காரு. நேற்று யாரோ புது மனிதன் என்னைத் தேடி வந்தானும். அதுதான் யோசிக்கிறேன்......

(ஜெம்பு வருதல்)

*ஜெம்பு:* நீ யோசிக்க வேண்டாம், நான் சொல்கிறேன். முதலில் காயம் எப்படி இருக்கிறதென்று சொல்!

*துரை-* வா'ப்பா, வா! காயம் சாரமில்லை! புது மனிதன் யாரென்று உனக்குத் தெரியுமா? அல்லது நீயேதான் புது மனிதனுக வந்துவிட்டாயா?

*ஜெம்பு-* (சிரித்து) அப்படியெல்லாம் இங்கே வருவேனு? நேற்று இங்கே வந்து பொன்னியோடே பேசினது நம்ம இன்ஸ்பெக்டர் அவாள்தான்! மாறுவேடத்தில் துப்பு எடுக்க வந்தார்.

*பொன்-* அட பாவி! இது தெரிந்திருந்தால், அவனை உடனே வெளியேற்றியிருப்பேனே!

*ஜெம்பு-* அதனுல்தானே மாற்று உடையில் வந்தார்! பொன்னி, நீ இனிமேல், தெரியாதவர் யார் வந்தாலும் எதுவும் பேசக்கூடாது.

*துரை-* அது சரி, ஆனுல் இன்ஸ்பெக்டர் வந்ததை நீ எப்படித் தெரிந்து கொண்டாய்?

*ஜெம்பு-* நான் நேரில் பார்த்தேன். பொன்னி விசேடமாக ஒன்றும் கூறிவிடவில்லை. என்னைத் தாக்கிப் பேசி, பொன்னிக்குக் கோபத்தை உண்டாக்கி உளவறிய முயன்ருர். அவ்வளவுதான்!

*பொன்-* (வியப்புடன்) எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டுதான் இருந்தீங்களா! நீங்க பெரிய ஆள்தான் அண்ணு!

*ஜெம்பு-* (மாணிக்கத்தைப் பார்த்து) என்ன'ப்பா, அந்தப் பண்ணையார் கோபால பிள்ளை உனக்கு நிலத்தைக் கொடுத்துவிட்டாரா? அல்லது பிடுங்கிக்கொண்டாரா?

*மாணி-* (வியப்புடன்) அது உங்களுக்கு எப்படித் தெரியும்?

*துரை-* (மாணிக்கத்திடம்) என்ன விஷயம்? எனக்கு ஒன்றும் புரியவில்லையே! நீ பயிர் செய்த நிலத்தை பண்ணையார் எடுத்துக்கொள்வேன்'னு சொன்னரா?

*மாணி-* சொன்னர். (ஜெம்புவைப் பார்த்தவாறு) இரண்டு நாட்களுக்கு முன், பாதையில் வைத்து பண்ணையார் என் கன்னத்தில் அடித்துவிட்டார். அந்தச் சமயம், முரட்டு மீசையுடன், தலைப்பாகைக் கெட்டி வாட்டசாட்டமான ஒருவர் வந்து பண்ணையாரை மிரட்டி, "நிலத்தைக் கொடுக்காவிட்டால் உயிரை எடுத்துவிடுவேன்!" என்று ஒரு போடு போட்டார். அவ்வளவுதான்! பண்ணையார், நிலத்தை என்னிடமே விட்டுவிட்டார்!

*துரை-* அது யாரப்பா! முரட்டு மீசை, தலைப்பாகை!

*மாணி-* கொஞ்சம் தாடிகூட உண்டு. ஓரளவுக்கு (ஜெம்புவைக் காட்டி) இவங்க மாதிரிதான் உருவம்! ஆனல்......

*துரை-* (புரிந்துகொண்டு) ஆனல் என்ன'ப்பா! அசல்...இந்த ஜெம்புலிங்கமேதான்!

*மாணி-* (வியப்பும், மகிழ்ச்சியும், பணிவும் மிளிர) ஐயா, நீங்கதானு? நீங்க நல்லா இருக்கணும். எனக்கு துரை வாப்பா அண்ணுச்சிதான் உயிர் நண்பர். இன்று முதல் உங்களுக்கும் நான் சகோதரன்தான். நீங்க செய்த உதவியை நான் மறக்கவே மாட்டேன்.

*ஜெம்பு:* (சிரித்து) மாணிக்கம், இது ஒரு உதவியா? அந்த நிலம், நீ வியர்வை சிந்திய நிலம். உன் நிலமாக

வேண்டும்! அதை யார் உனக்கு செய்து தருகிறார்களோ! அவர்கள்தான் உனக்கு உண்மையில் உதவி செய்தவர்கள் ஆவார்கள். அந்தக் காலம் விரைவில் வரும்!

(பார்வதி வருதல்)

*துரை-* வருவதென்ன? நாம் வரவழைக்கவேண்டும்!

*பார்-* யாரையப்பா வரவழைக்கப் போறே? (அங்குமிங்கும் பார்த்தவாறு) இங்கு என்ன கூட்டம்?

*துரை-* அத்தே! வாங்க அத்தே, வாங்க!

*ஜெம்பு-* வாங்க'ம்மா.

*பார்-* யாரு? ஜெம்புலிங்கம், மாணிக்கம்...உம், என்ன விசேடம்?......

*ஜெம்பு:* சும்மாதான் பேசிக்கொண்டிருக்கிறோம்.

*பொன்-* (ஓடி வந்து, பார்வதியிடமிருந்த பொருட்களை வாங்கியவாறு) வாங்க'ம்மா!

*பார்-* பார்த்தயாடா! எத்தனை ஆண்பிள்ளைகள் தான் இருந்தாலும், ஓடி வந்து உதவி செய்கிறது பெண்பிள்ளை தான்'டா! வாழ்க்கையிலும் பாரத்தைக் குறைப்பது பெண் குழந்தைகள்தான்!

*ஜெம்பு:* உண்மைதான். எனக்கு நேரமாகிறது. சுந்தரியைப் பார்த்துவிட்டு வரவேண்டும். வரட்டுமா?

(எல்லோரிடமும் விடைபெற்று ஜெம்பு போதல்)

*பார்-* ஏன்'டா துரை, உனக்குப் பொறுப்பும், புத்தியும் வரட்டும் என்று தனியாக உன்னை விட்டுவிட்டு இரண்டு நாள் வெளியூருக்குப் போனேன். நீ என்னடா'ன்னு வீட்டுக்குள்ளேயே கூட்டம் கூட்டிவிட்டாயே! (பொன்னியிடம்) ஏன்'மா நீயும் பக்கமேளமா?

*பொன்:* நான் என்ன செய்யமுடியும்?

*பார்:* (துரையின் தலையைப் பார்த்தவாறு) என்னடா தலையில் காயம்?

*துரை-* ...வந்து நேற்று....நேற்று குளிக்கப் போகும் பொழுது...

*பொன்:* ஆற்றங்கரையில் வழுக்கி விழுந்திட்டாங்க அம்மா.

*துரை-* ஆமா ...விழுந்துவிட்டேன்!

*பார்-* ஐயய்யோ! பார்த்து இறங்கக்கூடாதா! அடி பலமா பட்டதா!

*பொன்:* அப்படி ஒன்றுமில்லே! சின்னக் காயம்தான். மருந்து வைத்து கட்டியிருக்கிறேன்!

*பார்-* நீதான் கட்டிவிட்டியா?

*பொன்-* (வெட்கத்துடன்) நீங்கதான் இல்லையே!

*பார்-* நான் நினைத்து வந்தது நடக்காது போலிருக்கே!

*துரை-* என்ன வேண்டும், ஏன் நடக்காது?

*பார்-* நீ இப்படி அடிபட்டு நிற்கிறே......திருநெல்வேலியிலே குறைந்த விலையில் ஒரு வண்டி விலக்கு வந்தது. உடனே வாங்கி விட்டுவிட்டு வந்தேன். நம்ம காளையைக் கொண்டுபோய், அந்த வண்டியிலே போட்டு கொண்டுவரணும்.

*துரை-* இது என்ன பெரிய வேலை! எனக்கு என்ன பெரிய வியாதியா? நான் போய் கொண்டுவாரேன். (மாணிக்கத்தைப் பார்த்து) என்ன போகலாமா?

*மாணி-* ஓ, நான் தயார்.

*துரை-* புறப்படு. அத்தே, பொன்னி, போயிட்டு வாரேம்! (துரையும், மாணிக்கமும் போதல்)

[ திரை ]

***

## காட்சி 14

(ஏர்வாடி கிராம முன்சீப் பங்களா)

கிராமத்தலைவர், கிராம முன்சீப் (முஸ்லீம்). துரை பங்களாவின் முன்பக்கமாகப் போதல்; கிராமத் தலைவர், துரை போவதைப் பார்த்து அருகில் நிற்கும் வேலையாளிடம் துரையை அழைத்துவர பணித்தல். வேலையாள் துரையைக் கூப்பிட, துரை வருதல்)

*துரை-* (கி-தலைவரிடம்) எதற்காகக் கூப்பிட்டீங்க?

*கி-த-* (கிண்டலாக) நீங்க இப்பொழுது பெரிய வீரன் ஆயிட்டீங்களாமே...

*கி-மு-* தான் உண்டு, தன் வேலையுண்டு என்று இருந்தவன், கூட்டத்தில் கலாட்டா செய்வதும், கொள்ளையடிப்பதுமாக புதுத் தொழில்களில் இறங்கியிருக்கிறான்.

*துரை-* (சிரித்து) பேசாமல் போன என்னை வலிய கூட்டிவைத்து கிண்டல் செய்யுறீங்க......நீங்க என்ன வேண்டுமானாலும் சொல்லுங்க. நான் கேட்டுக்கொள்வேன். உரிமையோடுதானே சொல்றீங்க.

*கி-மு:* (கிராமத் தலைவரைப் பார்த்து) சிரிக்கிறான். பார்த்தீர்களா? ஐயாவுக்கு அதிக ஆனந்தம்!

*துரை:* சிரிப்பதுகூட குற்றமா?

*கி-மு:* சிரி. ஆனால் இந்தச் சிரிப்பு என்றும் நிலைக்க வேண்டும் என்பதுதான் எங்கள் ஆசை.

*துரை:* உங்க புண்ணியத்தில் நிலைக்கும் என்றுதான் நம்புகிறேன்.

*கி-த:* நிலைக்கவேண்டுமென்றுதான் உன்னை இப்பொழுது கூப்பிட்டேன்.

*துரை:* விஷயத்தைச் சொல்லாமல் சுற்றி வளைத்தால்?

*கி-மு:* ஏன், உனக்கு ஒன்றுமே தெரியாதா?

*துரை:* எல்லாம் தெரிந்தவர் யாருமில்லையே!

*கி-மு:* (கோபத்தில்) ஆணவத்தோடு பேசுகிறாயா? நெடுநாள் பழகியவன் ஆயிற்றே என்று எண்ணி, எச்சரிக்கை செய்கிறேன். இனிமேலாவது கெட்டவர் உறவை விட்டுவிடு! சர்க்கார் குற்றப்பத்திரிக்கையில் உன் பெயர் வராமல் பார்த்துக்கொள். நேற்றே நீ சிறைக்குள் செல்ல வேண்டியவன். என்னால் காப்பாற்றப்பட்டாய். 'மேலாவது ஒழுங்காக நடந்துகொள்வேன்' என்று உறுதி கூறி விட்டுப் போ!

*துரை:* ஒழுங்காக நடப்பவன், நடப்பேன் என்று உறுதி கூறவேண்டியதில்லை! நடக்காதவன் உறுதி கூறி

ஞலும், ஒழுங்காக நடக்கமாட்டான்! வீணுக என்னை கெட்டவனுக்காதீர்கள்!

*கி-த:* அதிகம் பேசாதே! உன் மீது இரண்டு குற்றச் சாட்டுகள் பதிவாகியுள்ளன!

*துரை:* குற்றச்சாட்டுகளைக் கூறுங்கள்.

*கி-மு:* மூன்று நாட்களுக்கு முன், 8-வது தெருவில் உள்ள ஓ. பி. எம். முதலாளி ராதாபுரம் சந்தைக்குப் போய்விட்டு வரும்போது கொள்ளையடிக்கப்பட்டார். அதில் நீயும் சம்பந்தப்பட்டிருக்கிருய்! அடுத்து, நாடகக் கொட்டகையில் குழப்பம் விளைவித்து, போலீசையே அவமதித் திருக்கிருய்!

*துரை:* இப்படி எல்லாம் கதை கட்டி என்னை அவமானப்படுத்துகிறீர்கள். இல்லை, அவமானப்படுத்த சர்க்கார் உங்களைத் தூண்டுகிறது. ஊரைக் கொள்ளையடித்து, சர்க்காரையும் ஏமாற்றி, சுயநல உருவாக வாழும் ஓ. பி. எம். இன்று முதலாளியாகிவிட்டார். அவரை வேறு எவனே ஒரு கொள்ளைக்காரன் கொள்ளையடித்திருக்கிருன். வெள்ளைக்கார சர்க்காருக்கு வேண்டாத ஆட்களையெல்லாம் அதில் சேர்த்திருப்பார்கள். அதோடு என்னையும் சேர்த்து விட்டார்கள்! ஜெம்புலிங்கத்தைச் சேர்க்கவில்லையா? (கி-முவைப் பார்த்து) நீங்களும் முஸ்லீம், நானும் முஸ்லீம்! நம் மதத்தின் தத்துவம் என்ன? அன்பையே அரணுகக் கொண்டு, புரியாத மக்களால் கல்லடியும், சொல்லடியும் ஏற்று அதே மக்களுக்கு நீதி காட்டி, நேர்மை புகட்டி, அவர்கள் வாழ்வுக்காக தன் வாழ்வையே அர்ப்பணித்த நபி நாயகத்தையே நாம் இருவரும் வழிபடுகிருேம்! தாங்கள் பொய் கூறலாமா?பிறர்கூறினுலும் நீங்கள் நம்பலாமா?எனக்குக் கொள்ளையடிக்கப் போகவேண்டிய அவசியம் என்ன?

*கி-மு:* துரை! வீண் சொற்பொழிவில் பயனில்லை! ஜெம்புலிங்கத்தின் இருப்பிடத்தைக் கூறிவிட்டு நல்ல பெயர் எடுத்துக்கொள்!

*துரை:* ஜெம்புவைக் காட்டிக கொடுத்தால் நல்ல பெயரா? நண்பனைக் காட்டிக் கொடுப்பவனுக்கு நல்ல பெயரா கிடைக்கும்?

*கி-மு:* அப்படியென்றால் ஜெம்புலிங்கத்திடம் நீ இன்னமும் நட்பு வைத்திருக்கிறாய்?

*துரை-* நல்லவனுடன் நட்பு வைத்திருப்பதில் தவறில்லையே!

*கி-த:* ஊருக்குக் கேடி, உனக்கு நல்லவன்! உன்னிடம் பேசுவதில் பயனில்லை! ஆபத்து உன்னை நெருங்குகிறது. போய் வா!

*துரை:* ரொம்ப நன்றி! எவ்வளவு சூழ்ச்சி செய்தாலும், எவராயினும், ஆண்டவனுக்குப் பதில் சொல்லியாக வேண்டும். போகிறேன்! வணக்கம்! (துரை போதல்)

(கி-மு-வும், கி-த-வும் ஒருவரை ஒருவர் பார்த்து விழித்தல்)

[ திரை ]

***

## காட்சி 14 - A

(பாதை)

துரை, மாணிக்கம் (ஜெம்பு, இராமசாமி பிறகு வருதல்)

*மாணி:* (எதிரில் வரும் துரையிடம்) என்ன!...... பெரிய யோசனையுடன் போவதாகத் தெரியுதே!

*துரை:* (நிமிர்ந்து நோக்கி) மாணிக்கமா?... என்ன கேட்டே?

*மாணி:* யோசனை பலமாக இருக்குதேன்னு...

*துரை:* ஆமாம், யோசிக்கவேண்டிய இடம்தான்! விதி விளையாடுது! சும்மா வந்தவனை கூப்பிட்டு வைத்து மிரட்டுறாங்க!

*மாணி:* அது யாருப்பா?

*துரை:* வேறு யாரு? கிராமத் தலைவரும், முன்சீப்பும் தான்! வீட்டிலே போனால், ஜெம்புவோடு சேராதே'ன்னு அத்தை விரட்டுறாங்க. வெளியிலே இந்த மாதிரி கலக்கு றாங்க! அந்தப் பண்ணையாரும், போலீஸ்காரங்களும் தான் ஜெம்புவை கள்ளனாக்கினார்களென்றால், இந்த ஊராரும், நம் உறவினர்களுங்கூட அதை உறுதிப்படுத்துகிறார்களே!

*மாணி-* இதனால்தான் அகதிக்குத் தெய்வமே துணை என்று ஆன்றோர்கள் கூறினார்கள்! சர்க்காரின் விரோதி என்றால் எல்லாரும் அவனைக் கைவிட்டுவிடுகிறார்கள்! நாட்டில் எப்படி அறம் வளரும்? (ஜெம்பு வருதல்)

*ஜெம்பு:* சரியாகச் சொன்னாய் மாணிக்கம்! வெள்ளைக் காரனின் விரோதி என்றிருந்ததினால் வீர மன்னனான வீர பாண்டியக் கட்டபொம்மனையே மன்னர்களும் மக்களும் கைவிட்டுவிட்டார்களே! சாதாரண மனிதனுக்கு எப்படி ஆதரவு கொடுப்பார்கள்? நம் நாட்டு வீரர்களை, மகான்களை அழித்தவர்களெல்லாரும் நம்மவரேதான்! (துரையின் மௌனம் கண்டு) என்ன துரை, ஏன் ஊமையாக இருக்கிறாய்?

*மாணி:* வேறொன்றுமில்லை, நம்ம கிராம முன்சீப் பும், கிராமத் தலைவரும் கூப்பிட்டு, மிரட்டிப் பார்த்திருக் காங்க! அவங்களைப் பொருட்படுத்தாமல் பேசிவிட்டு வந்து விட்டார் துரை!

*ஜெம்பு-* ஓகோ! இதற்காகத்தான் கவலைப்படுகிறாயா?

*துரை-* கவலை ஒன்றுமில்லை! எதிர்காலம் பற்றி யோசிக்கிறேன். (இராமசாமி வருதல்)

*ஜெம்பு:* வா, வா! இராமசாமி, துரையின் முகத் தைப் பார்த்தாயா?

*இரா-* வாடியிருக்கிறது! காரணம் என்ன?

*துரை:* உங்களையெல்லாம் பிரிந்து செல்லவேண்டுமே என்ற கவலைதான் என் வாட்டத்திற்குக் காரணம்!

*ஜெம்பு:* (திகைத்து) என்ன!...என்ன சொன்னாய்? எங்களைப் பிரிந்து போகிறாயா?

*துரை-* ஜெம்பு! கவலைப்படாதே! கொஞ்ச நாள் கொழும்பிற்குப் போய் வரலாம் என எண்ணுகிறேன். நாடகக்கொட்டகையில் நடந்த கலகம் வேறு விஸ்வ ரூபம் எடுக்கிறது!

*இரா-* நீ தனியாகவா போகிறாய்!

*ஜெம்பு-* என்னால் உனக்குத் தொல்லைகள் ஏற்பட்டிருக்கலாம்......

*துரை-* ஏன் இப்படி தளர்ந்து பேசுகிறாய்! ஆயிரம் ஈட்டிகள் தாக்க வந்தாலும் எதிர்த்து நிற்கும் உன் இதயம், 'நான் போகிறேன்' என்றதும் கலங்கிவிட்டதே! என்னிடம் இருக்கும் தைரியம் கூட நீ கொடுத்ததுதானே!

*ஜெம்பு:* தைரியமிருந்தால் ஏன் போகவேண்டும்? கூலிப் பட்டாளங்களுக்குப் பயந்துதானே?...நாடகக் கொட்டகையில் நாமா கலகம் உண்டுபண்ணினோம்?

*இரா-* எனக்கு ஒரு யோசனை தோணுது.

*ஜெம்பு-* அட, உனக்குக் கூடவா? சொல்லு!

*இரா-* நாம் மூவருமே கொஞ்ச நாளைக்குக் கொழும்பிற்குச்சென்று இருந்துவிட்டு வருவோமே! இந்த நெருக்கடி நிலைமை தீர்ந்ததும் திரும்பி விடலாம்!

*துரை-* சரியான திட்டம்! அப்படியே செய்வோம்! ஜெம்பு, சரி என்று சொல்லு!

*ஜெம்பு:* (யோசித்து) உம்...ஏதாவது ஒரு முடிவுக்கு வரவேண்டியதுதானே!...... நாளை நாம் சந்திக்கலாம். வரட்டுமா?

*துரை-* நாளை மலைக்கே வருகிறேன். (ஜெம்புவும், இராமசாமியும் போதல்; பார்வதி வருதல்)

*பார்:* டேய் துரை! அங்கு என்னடா பார்வை? அவங்கதான் போயிட்டாங்களே!...... ஏன்'டா, போறது ஜெம்புலிங்கம்தானே! கூட யாருடா?

*துரை:* ஆமா! ஜெம்புலிங்கமும் இராமசாமியும்தான்!

*பார்-* (தலையில் அடித்து) உனக்குப் புத்தி வராது. காலையிலிருந்து போலீஸ் தொல்லேதான். வீட்டிலே இருக்க முடியல்லே!

*மாணி* -இனிமேல் அந்தக் கவலே உங்களுக்கு வேண்டாம்!

*பார்-* ஏன்? ஏதாவது புதுத் திட்டமா?

*துரை:* ஆமா! நான் கொழும்பிற்குப் போக முடிவு செய்துவிட்டேன்.

*பார்:* (திகைத்து) ஏன்'டா. உன்னே நம்பித்தானே கடை வைத்தேன்! பொன்னி வேறு காத்திருக்கிருள்!

*துரை:* இருக்கட்டுமே! கடையும் இருக்கட்டும்! கொழும்பிற்குப் போனல் அங்கேயே இருந்துவிடுவேனு!

*மாணி-* ஊரிலேஇருக்கிறகெட்ட பெயர்சற்று குறைந்ததும் அல்லது மறைந்ததும் திரும்பி வந்துவிடலாம்!

*துரை-* ஆமா அத்தே! பொன்னி நம்ம வீட்டிலே இருக்கட்டும்!

*பார்-* (பெருமூச்சுவிட்டு) இனிமேல் நம் வீட்டைத் தவிர அவளுக்கு வேறு இடம் இல்லேயே! இருந்த கிழமும் இன்று காலையிலேயே போய்விட்டது!

*துரை-* என்ன! பொன்னியின் தாத்தா போய்விட்டாரா? அப்படின்னு பொன்னி?

*பார்-* செய்தி தெரிந்ததும், திருநெல்வேலிக்குப் போயிருக்கிருள்!

*துரை:* மாணிக்கம், புறப்படு, உடனே திருநெல்வேலி சென்று பொன்னியை சந்தித்துவிட்டு பிறகு பிரயாணத் திட்டமிடுவோம்! அத்தே! வரட்டுமா?

*பார்-* போயிட்டு சீக்கிரமா வந்துடுங்க! (பிரிதல்)

[ திரை ]

***

## காட்சி 15

### (மலைப்புறம்)

ஜெம்பு, துரை, இராமசாமி.

*துரை-* (யோசித்து) நாம் போகவேண்டியது மாறு வேடத்தில்...

*இரா:* என்ன வேடமிடலாம்?

*ஜெம்பு-* இராமசாமி, நீ பெண் வேடம் போடு.

*இரா-* சரி.

*ஜெம்பு:* நான் சாமியார் வேடம் போடுகிறேன்.

*துரை-* சரி, இராமசாமி ஊர்வசி, நீ விசுவாமித்திரன். நான் சிஷ்யனாகிவிடுகிறேன். ஆனால் அதற்குரிய சாதனங்கள் வேண்டுமே!

*ஜெம்பு-* என்ன வேண்டும்?

*துரை-* ஒரு உத்திராட்ச மாலை.

*ஜெம்பு:* புன்னைக்காய்க் கொட்டை இருக்கிறதே!

*இரா:* வெகு பொருத்தம்.

*துரை:* ஜெபமாலை?

*ஜெம்பு-* கொடுக்காப்புளிக் கொட்டை.

*துரை-* கமண்டலம்?

*ஜெம்பு:* நம்மிடமிருக்கும் திருக்குச் செம்பு.

*துரை-* போதும். விபூதிக்கு கவலையில்லை! சாமியார் பெயர் என்னவோ?

*ஜெம்பு-* இமய மகாரிஷி!

*துரை-* ரொம்ப சரி. புறப்படுவோம்!

[ திரை ]

★★★

## காட்சி 16

(கொழும்பு)

ஜெம்பு, துரை, இராமசாமி, காசி.

*ஜெம்பு:* இப்படியாக நாங்கள் இங்கு வந்து சேர்ந்தோம்! செய்யாத குற்றத்திற்காகக் குற்றவாளியாக்கப்பட்டு, அந்தக் குற்றத்திலிருந்து தப்புவதற்குள் வேறொரு குற்றத்தைச் செய்து, சர்க்காரின் விரோதிகளாகி, உன் முன் வந்து நிற்கிறோம்!

*காசி:* புண்படும் உள்ளங்களுக்காகப் போராடத் துணிந்து, புல்லர் ஆட்சியால் துரத்தப்பட்டு வந்தவர்கள் நீங்கள்!

*ஜெம்பு-* கோழைகளாக வந்துள்ளோம்!

*காசி-* அல்ல, வீரர்களாக வந்திருக்கிறீர்கள். ஆனால் சமுதாயத்தைச்சீர்திருத்த எண்ணுகிறவர்கள் போலீசுக்கும், போலிகளுக்கும் அஞ்சி பிறந்த நாட்டையும், வீட்டையும் மறந்து இப்படி புறப்பட்டுவிட்டால், சமுதாயம் சீர்திருந்தாது! போலிகள் பெருகிவிடுவார்கள். நம்மைப் போன்ற ஏழைகள் பலியாகிவிடுவார்கள்! அன்னியர் ஆட்சியில் வீரரும் கோழையாவர்!

*ஜெம்பு:* என் அகத்திலும் இதே எண்ணம்தான் எழுந்தது. ஆனால்...

*துரை:* நான்தான் ஜெம்புவையும், இராமசாமியையும் இழுத்து வந்துவிட்டேன்! தவறு என்னுடையதுதான்!

*ஜெம்பு:* தவறென்றுமில்லை! துரோகிகளை எதிர்த்து, அதன் காரணமாக அழிவே வரினும், ஏற்றுக்கொள்வது தான் ஆண்மைக்கழகு! அந்த அழகு இன்று வெளிப்படையாகத் தெரியாவிட்டாலும் நாளை ஒரு நாள் நம் தமிழகத்தினின்றும் ஒளி வீசும்!

*காசி-* அப்படிச் சொல்லுங்கள் அத்தான்! உங்களுக்குத் திருட்டுப் பட்டம் கட்டி கடல் கடக்கவைத்த கபோதிகளை கன்னித் தமிழகத்தின் நடுவிலே நிறுத்தி தண்டனை

வழங்கவேண்டும்! நாடு பிடிக்க வந்து நம்மை ஆளும் உரிமை எடுத்துக்கொண்ட பரங்கியருக்குப் புத்திபுகட்ட மக்களை ஒன்றுதிரட்டவேண்டும்! ஆளுவோர் நிம்மதியை அணுவணுவாக அழிக்கவேண்டும்! வெறும் வீரர்களாக அல்ல, புரட்சி வீரர்களாக மாறி போக்கிரிகளுக்கு போக்கிடம் காட்டவேண்டும்!

*ஜெம்பு:* அதற்கும் காலம் வரும்! நாம் நிரந்தரமாக இங்கு இருக்கப்போவதில்லையே! தாய் நாட்டிற்கு விரைவில் செல்வோம். அயோக்கியர்களின் சதி, கோழைகளின் கொக்கரிப்பு, ஆங்கிலேயரின் அடக்குமுறை அத்தனைக்கும் முடிவு கட்டுவோம்!

*காசி:* அந்த அரும்பணிக்கு நானும் உடன் வருவேன். தாய் நாட்டைக் காணவேண்டும் என்ற ஆவல் என் அகத்தில் நாளும் வளர்ந்துவருகிறது. சேர்ந்தே செல்வோம்! செயற்கரிது செய்வோம்!......எழுந்திருங்கள்! கொழும்பு எப்படி என்று தெரிந்து வருவோம். மற்றைய விஷயங்களை இரவில் பேசிக்கொள்ளலாம்!

(நால்வரும் எழுந்து செல்லுதல்)

[ திரை ]

★★★

## காட்சி 17

(தமிழ்நாடு; ரேஸ்மியாபுரம், ஜெம்புவின் வீடு)

சுந்தரி, பொன்னி, சீனியம்மாள். (சுந்தரி குழந்தையைத் தாலாட்டுதல், சீனியம்மாள் அரிசி புடைக்க, பொன்னி காய்கறி நறுக்குதல்)

*சுந்:* தாலாட்டுப் பாட்டு.

ஆராரோ ஆராரோ அன்புமகனே ஆராரோ!
சீராரும் செல்வா ஆராரோ... (ஆராரோ)

தூங்கும் பருவம் இதுதானென்று
சொல்லச் சென்றார் உன் தந்தை
தேங்கும் அழகே தெள்ளமுதே தேனே
ஏங்கும் எனக்கென நீ அழவேண்டா

கள்ளன் இல்லையடா உன் தந்தை
கொள்ளையடிப்பதும் தொழிலில்லை!
வெள்ளையுள்ளம் கொண்டவர்தான்
வீணர்கள் அவரைக் கள்ளனென்றார்... (ஆராரோ)

*பொன்:* அண்ணி, குழந்தை அப்போதே தூங்கி விட்டான்!

*சீனி:* அவள் இங்கு இருந்தால்தானே குழந்தை தூங்கினது தெரியும்! உருவம் இங்கு இருக்கிறது! உயிரும் உணர்வும், கொழும்பில் அல்லவா அலைகிறது!

*பொன்:* உண்மைதான். அதனால் பயன் என்ன? உடல் மெலிவதுதான் காணும் பலன்! (சுந்தரியைப் பார்த்து) அண்ணி, வீணாகக் கவலைப்பட்டு உடம்பைக் கெடுத்துக்கொள்ளாதீர்கள்! 'விரைவில் வருவோம்' என்று தானே கடிதத்தில் எழுதியிருக்கிறார்!

*சீனி-* ஆறு மாசமா இதே மாதிரிதான் கடிதம் வருது. ...போலீஸ் தொல்லையும் குறைந்துவிட்டது.

*பொன்:* இந்த மாதம் கடிதம் வந்துவிட்டதா?

*சுந்-* கடிதமும் பணமும் வந்தது. சீனியக்காவுக்கு பத்து ரூபாய் கொடுக்கவேண்டியதிருந்ததே, அதைக் கொடுத்தேன்!

*சீனி-* எனக்குப் பணம் தேவையில்லை என்று எவ்வளவோ மன்றாடினேன். நீதான் வற்புறுத்தித் தந்தாய்!

*பொன்:* எப்படியிருந்தால் என்ன! சமயத்திற்குக் கொடுத்து உதவினதும் நீ. மேல் உதவப் போவதும் நீ! எல்லார் பணமும் ஒன்றுதானே! பார்வதி அம்மாளுக்கும் இன்று ரூபாய் வந்தது......அவங்க அங்கு ஏதாவது வேலை பார்த்திட்டாங்க போலிருக்கு!

*சுந்-* வேலை பார்க்காவிட்டாலும், காசி இருக்கிறானே! பணம் அனுப்பாமல் இருப்பானா? சின்ன வயதிலேயே இங்கு நின்றுதான் வளர்ந்தான்! நான்தானே வளர்த்தேன்! இப்பொ, நல்லா இருக்கான். நன்றி உணர்வுள்ள நல்ல

வனாயிற்றே அவன்! உம், மூன்று பேரும் இப்போ சேர்ந் திட்டாங்க. நாம்தான் தனியாக வேதனைப்படுகிறோம்! என் வாழ்வு இன்னும் எத்தனை நாட்களுக்கோ?

*பொன்:* என்ன அண்ணி, இப்படிச் சொல்கிறாய்? நமக்கும் நல்ல காலம் உண்டு! துன்பமும், துயரமும் மனிதர்களுக்குத்தானே!

*சுந்:* நீ என்னவோ எளிதாகச் சொல்லிவிட்டாய்! என் உடல் நிலை எனக்குத் தெரியாதா?...பொன்னி, என் அத்தானை நான் பார்த்துக்கொண்டிருந்தால் இன்னும் ஒரு சில வருடங்கள் வாழ்வேன். அதுவும் இல்லையேல் இன்றோ நாளையோ இந்த உலகத்தை விட்டுப் போய்விடுவேன். தயவு செய்து அவருக்கு ஒரு கடிதம் எழுது. உடனே வரச் சொல்லி எழுது!

*பொன்-* எழுதுகிறேன் அண்ணி. இப்போதே தபால் ஆபீசுக்குப் போகிறேன். (சீனியம்மாவிடம்) அக்கா, நான் அண்ணுவுக்கும், அவருக்கும் கடிதம் எழுதிப் போட்டு விட்டு வரட்டுமா?

*சீனி-* போயிட்டு வா'ம்மா! (பொன்னி போதல்)

[ திரை ]

★★★

## காட்சி 17 - A

(பாதை)

(ஆறு மாதத்திற்குப் பின் ஜெம்பு, துரை, காசி, இராமசாமி நால்வரும் திரும்பி வருதல்)

ஜெம்பு, துரை, காசி, இராமசாமி. (மாறுவேடத்தில்)

*ஜெம்பு-* எல்லோரும் நம் வீட்டிற்குச் சென்று விட்டு பிறகு போகலாமே!

*துரை:* இப்பொழுது உன்னுடன் நாங்கள் வருவது சரியில்லை. மாலையில் சந்திக்கலாம்.

*காசி, இரா:* ரொம்ப சரி!

*ஜெம்பு*- துரையவாளுக்குப் பொன்னியைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல்! உம், இருக்கத்தானே செய்யும்! சென்று வாருங்கள். (அவ்வேளை போலீஸ் 103 நால் வரையும் கூர்மையாகக் கவனித்தவாறு போதல்)

*துரை:* வில்லன் போகிருன்! நீ வீட்டுக்குப் போ. மாலையில் மறந்து விடாதே......

(ஜெம்பு விடை கொடுக்க, மூவரும் போதல்)

[ திரை ]

***

## காட்சி 18

(ஜெம்புவின் வீடு)

ஜெம்பு, சுந்தரி. (சுந்தரி தூங்கிக்கொண்டிருக்க, ஜெம்பு அருகில் வருதல்)

*ஜெம்பு*- (அன்புடன் சுந்தரியின் தோளை வருடிய வாறு) சுந்தரி, சுந்தரி!

*சுந்:* (திடுக்கிட்டு எழுந்து) யார்! (ஜெம்புவைப் பார்த்து, வியப்பும், மகிழ்ச்சியும் மிளிர) அத்தான்!... வந்து விட்டீர்களா!... வந்துவிட்டீர்களா!...

*ஜெம்பு:* (ஆசையோடு தழுவியவாறு) உன் தடு மாற்றமும், திகைப்பும்... காணும்போது இன்பத்தின் சிக ரத்தில் சென்றுவிட்டாய் என்பது எனக்குப் புரிகிறது...... அன்பின் முழு உருவே...! கண்ணே சுந்தரி, என் பிரிவு உன்னை எந்த அளவுக்கு பாதித்துவிட்டது. மண மலராக இருந்த நீ பிணக்கோலமாகிவிட்டாயே! எப்பொழுதும் அன்று மலர்ந்த செந்தாமரையாக ஒளி வீசும் உன் முகம் வெண்டாமரையாக வெளுத்து மங்கிவிட்டதே! கொஞ்சு மொழி சிந்தும் உன் செந்தூர இதழ்கள் பஞ்சாக உலர்ந்து விட்டனவே! நாணமும் நளினமும் நடமாடும் உன் வட் டக் கருவிழிகள் வாடிய மலர் போல் வண்ணமிழந்துவிட்

டனவே... சுந்தரி, இத்தனைக்கும் காரணம்... (சினமெழ) இத்தனைக்கும் காரணம்?......

சுந்: யாருமில்லை. என் பருவம்தான். மார்க்கண்டேயன் மாதிரி என்றும் பதினுருக நான் இருக்கமுடியுமா அத்தான்! அழகு அழியக்கூடியது. அன்பு வளரக்கூடியது; நான் இப்போது அன்பில் வளர்கிறேன். ஒரு குழந்தைக்கும் தாயாகிவிட்டேனல்லவா?

ஜெம்பு: தாயாகிவிட்டாயே தவிர, பாட்டியாகவில்லையே! ஆ!... எங்கே நம் குழந்தை?

சுந்: இதோ, தொட்டிலில் தூங்குகிருன்.

ஜெம்பு: (தொட்டிலைப் பார்த்தவாறு) தூங்கு'டா, நன்ருகத் தூங்கு! ஆனுல் விழிக்கும்பொழுது வீரனுக விழிக்கவேண்டும்! சுந்தரி, நான் உன் கடிதம் கண்டதால் மட்டும் புறப்படவில்லை!

சுந்: தெரியுமே. உங்கள் அன்பு மகனைக் காணவே புறப்பட்டீர்கள்.

ஜெம்பு- ஒரு திருத்தம். காணவே அல்ல, காணவும்' என்று கூறு. (அவள் கரம் பற்றி) எப்படி இருந்த கைகள்! இப்படியாகி விட்டனவே!

சுந்: என்ன அத்தான். கவலையற்ற வாழ்வு இருந்தால் உடம்பு கட்டுக் குலையாமல் இருக்கும். செல்வந்தர்கள் அழகாக இருப்பதற்குக் காரணம் கவலையற்ற வாழ்வும் உடல் உழைப்பு இல்லாமையும்தான்! நம்மால் அவ்வாறு வாழமுடியுமா?

ஜெம்பு: முடியாது. ஆனுல் மனக் கவலை பலக் குறைவு என்பதும் பயனற்றது என்பதும் உனக்குத் தெரிய வேண்டும்.

(சீனியம்மாள் வருதல்)

சீனி- (வந்தவாறே) ஜெம்பு! (அதிர்ச்சியில் நின்று விடுதல்)

ஜெம்பு: (அருகில் வந்து) சீனியம்மா!...... என்ன திடீர் அதிர்ச்சி!

*சீனி:* (சமாளித்து) என் கண்களேயே நம்பமுடியவில்லேயப்பா!... இனி என் கவலே தீர்ந்தது. நான் புறப்பட்டுவிடுவேன்!

*ஜெம்பு-* எங்கே?

*சீனி:* என் ஊருக்கு!

*ஜெம்பு-* அப்படியென்ருல் இது உன் ஊர் இல்லேயா? இது உன் வீடு இல்லேயா? அப்படி உனக்கு இல்லாத வீட்டிற்குத்தான் நீ இத்தனே நாளும் காவலிருந்து ஆதரவும் கொடுத்தாயா?

*சுந்:* நீங்கள் சும்மா இருங்கள்! நாம் போகச் சொன்ஞலும் சீனியக்காள் போகமாட்டாள்! நம்மிடம் அத்தனே அன்பு உண்டு! (குழந்தை அழ, சுந்தரி எடுத்து ஜெம்புவிடம் கொடுக்க, அழுகை அதிகமாகிறது)

*ஜெம்பு:* (குழந்தையைத் தூக்கியவாறு) ஏண்'டா ராஜா, ஏன் அழுகிருய்? இந்தப் பாவியைப் பார்த்தவுடன் 'இவனுக்கா மகஞகப் பிறந்து விட்டோம்!' என்று எண்ணி அழுகிருயா? அல்லது, நல்லோர்கள் நிம்மதியாக வாழமுடியாத தமிழகத்தில் பிறந்துவிட்டோமே என்று அழுகிருயா? அதுவுமின்றேல்,ஒரு சுதந்திர நாட்டில் பிறக்காமல் அடிமை நாட்டில் பிறந்துவிட்டோமே! என்று எண்ணி அழுகிருயா? ஏன் அழுகிருய் கண்ணே ஏன் — அழுகிருய்?

*சுந்:* (குழந்தையைக் கையில் வாங்கி) வீணுக ஏன் மனதைக் குழப்பிக்கொள்கிறீர்கள். நான் ஒன்று சொல்கிறேன். கோபம் கொள்ளாமல் கேட்பீர்களா?

*ஜெம்பு-* சுந்தரி, நீ கூட என்னேக் கண்டு அஞ்சுகிருயா? உன் சொற்படி நடக்கமுடியாவிட்டாலும், அதற்காக வருந்துவேனே தவிர கோபம் கொள்ளமாட்டேன். எதுவாயினும் சொல்!

*சுந்:* நீங்கள்... நீங்கள் போலீஸில் சரணடைந்துவிட்டால் உங்களேத் தண்டிக்கமாட்டார்களாம்; குற்றங்களேப் பெரிது பண்ணமாட்டார்களாம்......

*ஜெம்பு* குற்றவாளியாக இருந்தால் அல்லவா, சரணடையவேண்டும்? சுந்தரி, சரணுகதி என்பது தமிழன் சரித்திரத்தில் உண்டுமா? மருதிருவரைப் பற்றி உனக்குத் தெரியுமா? தாயகத்தின் மானம் காக்க தன் உயிரைக் கொடுத்தார்களே தவிர சரணடையவில்லை. வீரத்தின் ஒளி உருவம் வீரபாண்டிய கட்டபொம்மனைத் தூக்கிலேற்றும் அந்த விஞடியில் 'சரணடைகிறேன்' என்று ஒரு வார்த்தை கூறியிருந்தால் அந்த சுத்த வீரன் சுகபோகங்களுடன் வாழ்ந்திருப்பான். அவன் அமைச்சன் தாஞதிபதிப் பிள்ளையின் தலையை வெட்டி ஊர் நடுவில் நட்டார்கள் நய வஞ்சகர்கள்! தலை வெட்டப்படும் என்று அறிந்தும் சரணடையவில்லையே அந்தத் தன்மானத் தமிழன்! கேவலம் இந்த வெள்ளையராட்சி நம்மை என்ன செய்துவிடும்? (குரல் உயர்த்தி) சுந்தரி, நான் என் வாழ்வை மாற்றி அமைக்கத் திட்டமிட்டுவிட்டேன்! நம்மை ஆளுகிற அன்னியரை அசைக்கத் துணிந்துவிட்டேன்! அவர்களின் பக்க பலமாக இருக்கும் உள் நாட்டுப் பணப் பெருச்சாளிகளுக்கும் புத்தி புகட்டத் துணிந்துவிட்டேன்! எனவே வேறு ஏதாகிலும் கூறு!

*சுந்-* அத்தான்! நீங்கள் மட்டும் நினைத்து அது நடக்கக்கூடிய காரியமா?

*ஜெம்பு:* இப்பொழுது நடக்காமலிருக்கலாம்! ஆனல் என் பணி வீண் போகாது!

*சுந்-* அவர்களாகவே உங்களைப் பிடித்துத் தண்டித்து விட்டால்?

*சீனி:* (வருத்தத்துடன்) உயிருக்கே ஆபத்து வந்தாலும் வரும்!

*ஜெம்பு:* வரட்டுமே! உயிர் என்ன நிரந்தரமானதா? வீணுகப் போகும் உயிர். வெள்ளையரின் அதிகார வர்க்கத்தை எதிர்த்துப் பலியாகட்டுமே!

*சுந்:* எங்கள் கதி?

*ஜெம்பு-* இதுதான் சுயநலம்! நாட்டு மக்கள் கதி என்ன என்பதை சிந்தித்துப் பார்!

*சீனி-* நாட்டு மக்கள் உன் வழிக்கு வரமாட்டார்களே!

*ஜெம்பு-* அதனால் நான் அவர்கள் வழியில் வாழ வேண்டும் என்கிறீர்களா?... நீங்கள் நினைப்பது நடக்கும் என்பதுதான் என்ன நம்பிக்கை? நானாக சரணாகதி அடைந்த பிறகு அவர்கள் என் மீது பல குற்றங்களைச் சுமத்தி மரண தண்டனை அளித்துவிட்டார்களென்று வைத்துக்கொள்ளுங்கள். அப்பொழுது நீங்கள் என்ன செய்வீர்கள்?

*சுந்:* அத்தான் அப்படி ஒருக்காலும் நடக்காது! நமது இராமலிங்கம் அண்ணா கூடச் சொன்னார்கள். நீதி மன்றத்தில் ஆஜராகி, குற்றத்தை ஒப்புக்கொண்டால் மன்னித்து, வழக்குகளையும் தள்ளிவிடுவார்களாம். அப்படி ஒரு வாய்ப்பு இருக்கும்பொழுது ஏன் இழக்கவேண்டும்? நீங்கள் குற்றமே செய்யவில்லை என்றாலும் நீதிபதியின் முன் 'நான் குற்றவாளி அல்ல' என்றாவது கூறியாகவேண்டுமல்லவா? அதற்காகவாவது நீதிமன்றத்திற்குச் செல்லுங்கள்! என் வாழ்நாளில் நான் தங்களிடம் வேண்டுகிற ஒரே வேண்டுகோள்! இதற்குமுன் நான் எதையுமே கேட்டதில்லை. இனிமேலும் கேட்கமாட்டேன்.

*ஜெம்பு:* இராமலிங்கமே கூறினாரா?... (யோசித்து) நீ கூறியதில் ஒரு உண்மை இருக்கிறது. நான் குற்றவாளி அல்ல என்று கூறுவதற்காவது நீதிமன்றம் செல்லவேண்டியதுதான். உன் வேண்டுகோளையும் நிறைவேற்றத்தான் வேண்டும்!...... எதற்கும் யோசித்து முடிவு செய்யலாம்... இராமலிங்கம் நம்மவர்தான். என்றாலும், அவரும் ஏமாற்றமடைந்துவிடக்கூடாது. ஆளும் வர்க்கத்தின் தந்திரம் அவரையும் ஏமாற்றக்கூடும்!... சரி, நான் துரைவாப்பாவை சந்தித்துவிட்டு வருவேன். (சற்று நடந்து, பிறகு திரும்பி) சுந்தரி, உன்னிடம் ஒரு செய்தியைக் கூறவில்லையே!......நம் காசி வந்திருக்கிறான்!

*சுந்:* அப்படியா? இங்கு ஏன் அழைத்து வரவில்லை?

*ஜெம்பு:* துரைவாப்பாவுடன் சென்றுவிட்டான். வரும்போது அழைத்து வருவேன். வரட்டுமா? (சீனியம் மாவைப் பார்த்து) நீ எங்குமே போகவேண்டாம்! எனக்கும் சுந்தரிக்கும் தாய் மாதிரி இங்கேயே இரு. உன் யோசனைப் படி நான் நீதிமன்றம் போவேன். (சுந்தரியும், சீனியம்மா வும் விடைகொடுக்க ஜெம்பு போதல்)

[ திரை ]

★★★

## காட்சி 19

(பார்வதியின் வீடு)

பார்வதி, பொன்னி, துரை.

*பொன்:* (துரை வருவது கண்டு) அம்மா, அத்... (நிறுத்தி) வந்து .. (சமாளித்து) அவர் வருகிறார் அம்மா!

*பார்:* (வெளியில் பார்த்தவாறு, மகிழ்ச்சியில்) துரை... என் துரை வருகிறான்! (துரை அருகில் வந்ததும்) வா, வா துரை! .. எங்கே இராமசாமி!... நீ மட்டும்தான் வருகிறாய்?

*துரை:* (பொன்னியையும், பார்வதியையும் மாறி மாறிப் பார்த்தவாறு) இராமசாமியும், காசியும் ஊரைச் சுற்றப் போய்விட்டார்கள். ஜெம்பு அவன் வீட்டிற்குப் போயிருக் கிறான்!

*பொன்:* (உள் சென்று காப்பி கொண்டுவந்து) முத லில் இதைச் சாப்பிடுங்கள்.

*பார்:* அடேயப்பா! என்ன அக்கறை!

*துரை-* இருக்காதா அத்தே!... உங்களுடன் பழகும் பெண் அல்லவா? அன்பிற்கும் அக்கரைக்கும் கேட்கவா வேண்டும்! (காப்பியை அருந்துதல்)

*பார்-* (துரையின் உடலைத் தொட்டுப் பார்த்து) உடம்பு ஒன்றுக்குப் பாதியா இளைச்சுப் போச்சே!

*துரை:* பாதியும் ஆகல்லை; பாதிரியும் ஆகல்லை. (காப்பிக் குவளையைப் பொன்னியிடம் கொடுத்தபடி) அத்தே! நம்ம ஊர் எப்படி இருக்கிறது? ஏதாவது விசேடம் உண்டுமா?

*பார்:* ஊர் விஷயம் கேட்குமுன் நம் விஷயத்தைப் பேசுவோம்!

*துரை:* தாராளமாகப் பேசுவோம்!

*பார்-* (பொன்னியைப் பார்த்தவாறு) சொல்லேன்!

*பொன்:* நீங்களே சொல்லுங்கள். நீங்கள் சொன்ஞல்தான் மறுக்க மாட்டார்!

*துரை-* என்ன புதிர் போடுகிறீர்கள்? யாராவது சொல்லுங்கள்! தன்மானம் இழக்காத விஷயம் என்ருல் இருவரில் யார் சொன்ஞலும் மறுக்கமாட்டேன்!

*பார்-* அப்படிச் சொல்லக்கூடாது! நான் எது சொன்ஞலும் அப்படியே நடக்கவேண்டும்! இந்த ஒரு விஷயத்தில் மட்டுமாவது என் சொல்லைத் தட்டக்கூடாது. வாக்குறுதி கொடு!

*துரை:* (யோசித்து) ஏதோ பலமான திட்டம் போலிருக்கிறது! உம்,...... அத்தே! நான் உங்களை அத்தை என்றே அழைத்துப் பழகிவிட்டேன்! என்ருலும் இந்த உடலை வளர்த்து உயிரைப் பாதுகாத்துவரும் தாய் என்பதை நான் மறக்கவில்லை; மறக்கவுமாட்டேன்! உறுதி கூறுகிறேன், நீங்கள் இப்பொழுது இடுகிற கட்டளை எதுவாயினும் மறுக்கமாட்டேன்!

*பார்-* (உருக்கத்துடன்) எனக்குத் தெரியும்... துரை, உன்மீது பல குற்றங்கள் பதிவாகியிருக்கிறது... போலீஸையும் சர்க்காரையும் எதிர்த்து நாம் நிம்மதியாக வாழ முடியாது. அதனுல், நீ இன்றே போலீஸில் சரணடைய வேண்டும்.

*துரை:* (வியப்புடன்) அத்தே! நானகச் சரணடைய வேண்டுமா?(யோசித்து)...நான் என்ன குற்றம் செய்தேன்?

*பார்-* குற்றம் செய்யாத காரணத்தால்தான் சரண டையச் சொல்கிறேன். செய்யவில்லை என்று கூறுவதற்குத் தான் போகச் சொல்கிறேன். சரணடைந்தால், வழக்கு களைத் தள்ளிவிடுவார்களாம்! அப்படி நடந்துவிட்டால், உன் திருமணத்தை முடித்துவிட்டு, நான் நிம்மதியாக இருப்பேன்! உன் நன்மைக்காகத்தான் சொல்கிறேன்.

*துரை:* அது உண்மைதான்! ஆனல் நீங்கள் எதிர் பார்ப்பது மட்டும் நடக்காது. போலீஸ் தந்திரம் உங்க ளுக்குத் தெரியாது. இது ஆளும் வர்க்கத்தின் கடைசி ஆயுதம்!...இது நீங்களாகக் கூறுகிறீர்களா? அல்லது யாரா வது உங்களிடம் இப்படிக் கூறச் சொன்னார்களா?

*பார்-* எல்லாம் நமக்கு வேண்டியவர்கள்தான் சொன்னார்கள். எனக்கும் நம்பிக்கை இருக்கிறது. நீதான் வாக்குறுதி கொடுத்திருக்கிருயே! இனிமேல் மீறமாட்டாய் என்பது எனக்குத் தொரியும்!

*பொன்:* உண்மைதான்! வாக்கு மீறுவதென்பது அவர் வாழ்விலேயே கிடையாது! (துரை பொன்னியை முறைத்துப் பார்க்க, அவள் தலை திருப்பிக்கொள்ளுதல்)

*துரை-* (யோசித்தவாறு) சற்று அவகாசம் கொடுங் கள். ஜெம்புவைப் பார்த்துவிட்டு வருகிறேன். (பார்வதியைப் பார்த்தவாறு) வாக்கு மீறமாட்டேன்; கவலைப்படாதீர்கள். (துரை வாயில் பக்கமாகத் திரும்பி நடக்க, எதிரில் கிராம முன்சிப் வருதல்)

*கி-மு:* (துரைவாப்பாவைக் கண்டு திகைத்தபடி) ஓ! துரையவர்கள் திரும்பிவிட்டார்களா? எத்தனை நாளாச்சு?

*துரை-* வாருங்கள். உங்களுக்குத் தெரியாதா? தெரிந்துதானே வந்திருக்கிறீர்கள்!

*பொன்-* (நாற்காலியை எடுத்துப் போட்டு) உட் காருங்கள்!

*பார்-* நீங்கள் கூறியதைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தோம்! துரை சம்மதித்துவிட்டான்.

*கி-மு:* ரொம்ப சந்தோஷம். (துரையைப் பார்த்து) போகலாமா?

*துரை-* போகவேண்டாம்! நானே நீதிமன்றத்திற்கு வருவேன்!

*கி-மு:* (கிண்டலாக) எப்பொழுது?

*துரை-* நாளையே வேண்டுமாயினும் வருவேன்!

*கி-மு:* அது முடியாதே! இப்போதே; என் கூடவே வரவேண்டும்!

*துரை:* (கிண்டலாக) அதுவும் முடியாதே!

*கி-மு:* (கோபத்தில்) துரைவாப்பா! உன்னைக் கைது செய்யும்படி உத்தரவு இருக்கிறது!

*துரை-* யார் உத்தரவு?

*கி-மு:* அரசாங்க உத்தரவு!

*துரை-* இதைக் கூற உங்களுக்கு வெட்கமாக இல்லையா? எந்த அரசாங்கம் எவருக்கு உத்தரவிடுவது? நம்மை உபயோகித்தே நம்மை ஆளுகிருன் அன்னியன்! இந்த வெளிப்படையான உண்மையைக் கூட உங்களால் உணரமுடியவில்லையா? ஒரு தமிழனைக் கைது செய்ய மற்ருெரு தமிழன்! சிந்திக்கும் திறனுண்டா உங்களுக்கு? எதற்காக என்னைக் கைது செய்ய வந்தீர்கள்? காரணம் சொல்லுங்கள்!

*கி-மு:* காரணம்! ஊரைக் கேட்டுப் பார்.

*துரை-* ஏன், உங்களுக்குத் தெரியாதா? ஊரைக் கேட்கவேண்டுமாம், ஊரை! ஊரில் நல்லவர்களைக் கேட்க வேண்டுமா? அல்லது நஞ்சினும் கொடிய வஞ்சகர்களைக் கேட்கவேண்டுமா?

*கி-மு:* உன்னிடம் விவாதம் நடத்த வரவில்லை! கைது செய்யும் உத்தரவோடு வந்திருக்கிறேன்! கடமை தவறினல் நான் அரசாங்கத்திற்குப் பதில் கூறவேண்டும்!

*துரை-* சீ! அரசாங்கமாம், அரசாங்கம்! ஏன் இப்படி அஞ்சி நடுங்குகிறீர்கள்! பாழும் வயிறு உங்களை இவ்வளவு கோழைகளாக்கிவிட்டதா? உதவாக்கரைக் கூட்டத்திற்கு உலுத்தர்களின் உத்தரவு!

*கி-மு:* பார்வதி அம்மா! நீங்கள் என்ன கூறினீர்கள்? 'என் சொல்லைத் துரை மீறவேமாட்டான்' என்று சொன்னீர்களே! பேசுகிற பேச்சைப் பார்த்தீர்களா?

*பார்-* துரை, எப்பொழுது போனல் என்ன? உன்னை உடனே விட்டுவிடுவார்கள்!

*கி-மு:* என் பொறுப்பிலேயே விடச் சொல்கிறேன்! எல்லோர் நன்மைக்குமாகத்தான் சொல்கிறேன். (துரையைப் பார்த்து) என்னை நம்பி வா!

*பார்-* போய் வா, துரை. முன்சீப் நமக்கு கெடுதல் செய்யமாட்டார்!

*பொன்-* போய் வாருங்கள்!

*துரை:* (கி-மு-வைப் பார்த்து) வருகிறேன். ஆனல் விபரீதம் நடந்தால் நான் பழி வாங்கிவிடுவேன்!

*கி-மு:* நடந்தால்தானே! என்னோடு வா! (எழுந்து, பார்வதியிடம் விடை பெற, துரையும் இருவரிடமும் விடை பெற்றுச் செல்லுதல்)

[ திரை ]

★★★

## காட்சி 20

(ராதாபுரம் நீதிமன்றம்)

துரை, இன்ஸ்பெக்டர், மற்றும் நீதிபதி உள்பட மன்றத்திலுள்ளோர். (துரை கூண்டில் நிற்க அரசாங்க வழக்கறிஞர் குற்றம் சாட்டுதல்)

*வழக்கறிஞர்-* யூவர் ஆனர்! இதோ நிற்கும் துரை வாப்பா ஒரு பயங்கர மனிதன்! கொள்ளைக்காரன் ஜெம்புலிங்கத்தின் தோழன். அவனுடன் சேர்ந்தும், தனியாகவும் இரு கொள்ளைகளை நடத்தியிருக்கிருன். நாடகக் கொட்

டகை போன்ற பொதுமக்கள் கூடும் இடங்களில் குழப்பத்தை உண்டுபண்ணி களவு செய்வதுமுண்டு. இப்படியிருந்தவனை போலீசார் பிடிக்க முயற்சித்ததும், போலீசை ஏமாற்றி ஜெம்புலிங்கத்துடன் இலங்கை சென்றுவிட்டான்! இவன் கொள்ளைக்காரன் மட்டுமல்ல, அரசாங்கத் துரோகியும்கூட. எப்பொழுதும் அரசாங்கத்திற்கு எதிராகவே பேசியும், செயல்பட்டும்வரும் ஜெம்புலிங்கத்தின் தோழன் என்ற ஒன்றே இவன் அரசாங்க விரோதி என்பதை தெளிவாக்கும்! இவன் செய்த குற்றங்களின் பதிவுப் பட்டியல் நீதிமன்றத்தில் இருக்கிறது! எனவே, யூவர் ஆனர்! இவனுக்குச் சட்டப்படி தக்க தண்டனை அளித்து, நாட்டில் அமைதியை நிலைநிறுத்த வேண்டுகிறேன்,

*நீதிபதி-* (துரையிடம்) துரைவாப்பா, குற்றங்களை ஒப்புக்கொள்கிறாயா?

*துரை:* (சிரித்து) வழக்கறிஞர் கூறியவைகளில் ஒன்று மட்டும் உண்மை!

*நீதி-* எது?

*துரை:* நான் ஜெம்புலிங்கத்தின் நண்பன் என்பது மட்டும்!

*வழ-* (எழுந்து) பிற குற்றங்களை மறுக்கக் காரணம்?

*துரை-* செய்யாத குற்றங்கள். சுமத்தப்படும் குற்றங்கள் என்ற காரணத்தாலேதான்! (நீதிமன்றத்தில் சிரிப்பு)

*நீதி-* அமைதி! அமைதி!... (துரையிடம்) அத்தனையும் நீ செய்யாத குற்றம்தானா?

*துரை-* ஆம், எனக்குக் கொள்ளையிட்டுப் பழக்கமே கிடையாது. களவு என்னும் கயமைத்தனத்தை நான் கண்ணெடுத்தும் பார்த்ததில்லை! ஜெம்புலிங்கமும் அப்படித் தான்!...

*நீதி-* ஜெம்புலிங்கத்திற்கு வக்காலத்து வாங்கவேண்டாம். உன் சமாதானத்தை மட்டும் கூறு! சட்டப்படி நீ குற்றவாளியா, இல்லையா?

*துரை:* சட்டம்! யாருக்காக யார் இயற்றியது? உங்கள் சட்டம் மனிதர்களுக்காக இயற்றப்பட்டதா? சட்டம் என்ற குதிரையை, சூழ்ச்சி நிறைந்த மனிதர்கள், சுயநலம் என்ற கடிவாளத்தால் இழுத்துத் திருப்பி அது தாறுமாருகச் சாடுகிறது. அதன் காலடியில் அகப்படும் ஏழை எளியவர்கள், நிரபராதிகள் மிதிபட்டு மடிகிருர்கள்! மனிதர்களுக்காக ஏற்படவேண்டிய சட்டம், நாசகாரர்களிடம் அகப்பட்டு, நல்லவர்களைக் கொல்வதோடு தானும் மடிகிறது. நீங்கள் அந்தக் குதிரை இழுக்கும் நீதி என்ற ரதத்தில், அல்ல; அ-நீதி என்ற ரதத்தில் இருக்கிறீர்கள். குதிரை செல்லும் வழிதானே நீங்களும் செல்லமுடியும்!

*வழ-* (வேகமாக எழுந்து) எவ்வளவு அழகாக, அழுத்தமாகப் பேசுகிருன்! சட்டத்தை மட்டுமல்ல, நீதியையே அவமானப்படுத்துகிருன்! இவன் பெரிய கேடி என்பதற்கு இப்பொழுது பேசிய பேச்சே போதுமானது.

*நீதி-* அலங்கார வசனங்கள் உன்னைக் காப்பாற்ருது. கேள்விக்குப் பதில் வேண்டும்!

*துரை:* கேளுங்கள்.

*வழ:* அரசாங்கக் குற்றவாளியான ஜெம்புலிங்கத்தைப் போலீஸ் பிடித்துக்கேட்டதற்கு, போலீசையே அவமதித்தது உண்மைதானே!

*துரை:* உண்மை!

*வழ-* ஏர்வாடி நாடகக் கொட்டகையில் கலகம் நடத்தியது?

*துரை-* கலகம் தொடங்கியது நாங்களல்ல!

*நீதி-* கலகத்தில் நீயும் ஜெம்புலிங்கமும் சம்பந்தப்பட்டு பலரைக் காயப்படுத்தியது உண்மைதானே?

*துரை:* உண்மைதான்!

*நீதி-* உன் மீது மூன்று குற்றங்கள் தகுந்த ஆதாரத்துடன் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன: 1) கொள்ளைக்காரன் ஜெம்புலிங்கத்திற்கு ஆதரவு கொடுத்தது. 2) நாடகக் கொட்டகையில் கலகம் விளைவித்து, நான்கு பேர்களைக்

காயப்படுத்தியது. 3) போலீசை ஏமாற்றி நாடு கடந்து சென்றது! இக்குற்றங்களுக்காக ஒரு வருடம் கடுங்காவல் தண்டனை விதிக்கிறேன்.

*துரை-* வஞ்சித்துவிட்டான் அந்த கிராம முன்சீப்!

(நீதிமன்றம் கலைய, துரைவாப்பாவுக்கு விலங்கிட்டு அழைத்துப் போதல்)

[ திரை ]

***

## காட்சி 20 - A

(காட்டுப் பாதை)

ஜெம்புலிங்கம், காசி, இராமசாமி (பொன்னி பிறகு வருதல்)

*ஜெம்பு-* (யோசித்து) ...... அதுதான் சரி!

*காசி, இரா:* எதுதான் சரி?

*இரா:* திட்டத்தை தெரிவித்தால்தானே தெரிந்து கொள்ளமுடியும்?

• *ஜெம்பு:* நாம் மூவரும் இப்பொழுதே நீதிமன்றத்திற்குச் சென்று மனு எழுதிக் கொடுத்துவிடவேண்டும்!

*காசி-* ஏன், துரைக்குத் துணையாக உள்ளே தூங்குவதற்கா?

*ஜெம்பு:* புரியாமல் பேசாதே! துரையை வெளியே கொண்டுவருவதற்கு! அவன் தனியாக இருந்தால் வெளியே வரமுடியாது! மேலும் சிறை நடவடிக்கைகளைத் தெரிந்துகொள்ளவும் எனக்கு விருப்பமிருக்கிறது. அதற்கு இது ஒன்றே வழி!

*காசி:* நம் மூவரையும், துரையுடன் ஒரே அறையில்தான் அடைத்து வைப்பார்கள் என்பது என்ன நிச்சயம்?

*ஜெம்பு-* அதற்கு நம் இராமலிங்கம் இருக்கிறூர் தந்திரமாக ஏற்பாடுகளைச் செய்துவிடுவார்! அவர் அரசாங்க ஆள் அல்ல; நம்மவர்! ஆளும் வர்க்கத்தை அடியோடு ஒழிக்க அவர் உள்ளம் அனுதினமும் துடித்துக்கொண் டிருக்கிறது. ஆனல் செயல்பட இயலாமல் அவர்களுக்கு நல்ல பிள்ளையாக நடிக்கிறூர்!

*இரா-* ஆமாம், நமக்கு அவர் எந்த உதவியையும் செய்வார்! (பொன்னி, துக்கத்துடன் விரைந்து வருதல்)

*பொன்:* (ஜெம்புவிடம்) அண்ணு! அண்ணு! அவரைச் சிறையில் போட்டுவிட்டார்களாமே!... பார்வதி அம்மாள் கதறுகிறுள்! பாவி, கிராம முன்சீப் அப்துல்லா சாகிப் ஏமாற்றிவிட்டான்! என்ன செய்வது!

*ஜெம்பு:* வீணுக ஏன் பதறுகிறுய்? அமைதியாக வீட்டிற்குப் போ. பார்வதி அம்மாவிடம் சொல்லு. நாங்களும் சிறைக்குத்தான் செல்கிறேம்! துரையை எப்படியும் அழைத்து வந்துவிடுவோம்.

*பொன்-* (திகைத்து) அழைத்து வந்திடுவீங்களா? வக்கீல் வைத்துப் பேசப்போறீங்களா?

*ஜெம்பு-* ஆமாம், வக்கீலாகவே போகிறேம்!

*பொன்:* கொஞ்சம் புரியும்படியாத்தான் சொல்லுங் களேன்......

*ஜெம்பு:* பொன்னி, துரையை அழைத்து வரவேண் டும். அவ்வளவுதானே! விரைவில் அழைத்து வருவேன். போதுமா?

*பொன்:* போதும் அண்ணு. நான் பிறகு சந்திக்கிறேன்.

*ஜெம்பு-* கவனமாகப் போய் வா! இந்த இடம் யாருக் குமே தெரியக்கூடாது!

*பொன்:* உயிர் போனலும் நான் தெரிவிப்பேனு?...

(பொன்னி போக, மூவரும் வேறு பக்கமாகப் போதல்)

[ திரை ]

★★★

# காட்சி 21

## (நீதிமன்றம்)

(குற்றவாளிக் கூண்டில், ஜெம்பு, காசி, இராமசாமி. பார்வையாளர் இடத்தில், சி.ஐ.டி. அப்பாவு, பண்ணையார் கோபால பிள்ளை முதலியோர்)

*வழ-* கனம் கோர்ட்டார் அவர்களே, இந்த ஜெம்பு லிங்கம்தான் பண்ணையார் கோபால பிள்ளையின் வீட்டில் பகற்கொள்ளையிட்டவன். மேலும், ஓ. பி. எம். முதலாளி என்ற ஜவுளி வியாபாரியை வழிமறித்து வழிப்பறி செய்தது, நாடகக் கொட்டகையில் குழப்பம் விளைவித்து போலீஸ் காரர்களைத் தாக்கியது போன்ற பல குற்றங்களைச் செய்தி ருக்கிறான். பொது இடங்களில் நின்றும், இரகசியமாகவும் அரசாங்கத்தைப் பழித்துப் பேசுவதே இவன் நித்திய துரோ கம்! குற்றங்களுக்கெல்லாம் தகுந்த ஆதாரம், சாட்சிகள் நேற்று நிரூபிக்கப்பட்டன. எனவே இவனுக்கு கடுமை யான தண்டனை அளிக்க கோர்ட்டார் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

*நீதி:* குற்றங்களை ஒப்புக்கொள்கிறாயா?

*ஜெம்பு:* ஒப்புக்கொள்ளாவிடில் விட்டுவிடுவீர்களா? இவையெல்லாம் ஒரு நாடகம்தானே! நான் குற்றவாளி என்பதை நிரூபிக்கச் சட்டம் துணை செய்கிறது! கருப்புக் கோட்டுப் போட்ட கறுப்புத் துரைகள் துணை செய்கிறார்கள். அசல் தமிழரான கோபால பிள்ளை ஆவல்ததும்பக் காத்திருக் கிறார். வெள்ளையன் கைக்கூலிகளான கோழைகள் பலர் போலீஸ் உடைக்குள் இருக்கிறார்கள்! எனக்கு யார் இருக் கிறார்கள்? 'நான் குற்றவாளியல்ல' என்று நானே கூறிவிட் டால் விட்டுவிடுவீர்களா?

*வழ:* (துள்ளியெழுந்து) சாட்சி வேண்டாமா?

*ஜெம்பு:* துள்ளாதீர்கள்! என் சார்பில் உண்மை கூற என்போன்ற ஏழைத் தொழிலாளர்தானே வருவார்கள்! அப்படி வருபவர்கள் அடுத்த நாள் இதே கூண்டில், இதே மாதிரி கற்பனைக் குற்றங்களுக்கு இலக்காகி நிற்பார்களே!

*நீதி:* நீதிமன்றத்தைப் பழித்துப் பேசாதே! குற்றங்களுக்குத் தக்க சமாதானம் கூறி தண்டனை குறைய வழி தேடு!

*ஜெம்பு:* போலீஸ்காரர்களிடம் அகப்படாமல் மறைந்திருந்தேனே தவிர, வேறு எந்தக் குற்றமும் நான் செய்யவில்லை!

*வழ:* குற்றம் செய்யாதவன் ஏன் போலீசுக்கு அஞ்சி வாழவேண்டும்? (ஜெம்பு திகைத்தல்) ஏன் மறைந்து வாழவேண்டும்?

*ஜெம்பு:* சூழ்நிலைதான் காரணம்.

*வழ:* இது நொண்டிச் சமாதானம். கோட்டக்கரை கோபால பிள்ளைப் பண்ணையாரை நீ தாக்கவில்லை? சர்க்காரை அவமதிக்கவில்லை? செல்வந்தர்களைக் கொள்ளையடிக்கவில்லை?

*ஜெம்பு:* இல்லை! இனிமேல் செய்யவேண்டிய வேலைகள் இவை. பண்ணையாரைத் தாக்கியது உண்மை! புலியிடம் இருந்து புள்ளிமானைக் காப்பாற்ற புலியைத் தாக்கி விரட்டுவது குற்றமானால் நான் பண்ணையாரைத் தாக்கியதும் குற்றம்தான்!

*வழ:* நேரடியாகப் பதில் கூறு. யார் புலி, யார் புள்ளி மான்?

*ஜெம்பு:* பண்ணையார் புலி, புள்ளி மான்... (செல்வியின் குரல், 'அண்ணா என் மானத்தைக் காத்தீர்கள்' என்று ஜெம்புவின் காதுகளில் ஒலிக்கிறது) ...என் தங்கை! அந்த மங்கையைப் பலவந்தமாகக் கெடுக்கத் துணிந்தான் பண்ணையார்! நான் அவள் மானம் காக்க, அந்த மடையனுக்குப் புத்தி புகட்டினேன், அவ்வளவுதான்! (கோபால பிள்ளை பண்ணையார், குமாஸ்தாவின் காதுகளில் இரகசியம் கூற, குமாஸ்தா, வழக்கறிஞர் காதுகளில் பண்ணையார் கூறியதைக் கூறல்)

*வழ:* என்ன கதையளக்கிறாய்? உனக்கு ஏது தங்கை?

*ஜெம்பு-* உடன் பிறந்தால்தான் தங்கையா? என்னை அண்ணுவென்று அழைக்கும் அத்தனைப் பெண்களும் என் தங்கையர்தான்; அவ்வாறே அத்தனை காளையரும் என் தம்பிகள்தான்!

*வழ-* ஓகோ!......... சரி, அந்த தங்கையின் பெயர் என்னவோ?

*ஜெம்பு:* பெயர்!... (சட்டென்று நிறுத்தி யோசித்து பின், அவள் பெயர்கூறி அவளுக்கு அவமானத்தை உண்டு பண்ணவேண்டாமென்ற முடிவில்) பெயர் எனக்குத் தெரியாது!

*வழ:* யாருக்கு மகள் என்ருவது தெரியுமா?

*ஜெம்பு-* தெரியாது!

*வழ-* முன்பின் தெரியாத ஒருத்திக்காகப் பண்ணை யாரைத் தாக்கினேன் என்று கூறுகிருயே! (நீதிபதியைப் பார்த்து) பணக்காரர் மேலுள்ள பொருமையால் அவர்களை அவமானப்படுத்த இப்படி கதை கட்டுகிருன் ஜெம்புலிங்கம்!

*ஜெம்பு-* கருநாகத்திடமிருந்து புருவைக் காப்பாற்ற புருவின் முகவரி தெரியவேண்டிய அவசியமில்லையே! பணத் திமிர் ஏறி பாவைகளைக் கெடுக்கும் பதவி வெறியர் வேண்டுமானுல் முகவரி கேட்டு குறித்துவைப்பர். எனக்கு அது தேவையில்லை! நான் செய்தது அறம்! நான் செய்தது அநீதி என்ருல் நீதி என்பது எங்கே இருக்கிறது?

*வழ-* மேலும் கூறுகிறேன். நீதிமன்றத்தையோ, தனிப்பட்ட மனிதர்களையோ தாக்கிப் பேசாதே!

*ஜெம்பு:* (அழுத்தமாக) நான் மனிதர்களைத் தாக்கிப் பேசவில்லையே!

*வழ-* இவன் ஒரு கொள்ளைக்காரன் மட்டுமல்ல, பேச்சாளனும் கூட.

*நீதி-* குற்றவாளியில்லாத நீ, கன்னிப் பெண்ணைக் காப்பாற்றிய நீ, உடனே பண்ணையார் மீது குற்றம் சாட்டி போலீசிடம் புகார் செய்யாமல், ஏன் மறைந்து வாழ்ந்து

ஒளிந்து ஓடவேண்டும்? (ஜெம்பு மௌனம்) துரைவாப்பா உன் தோழன்தானே?

*ஜெம்பு-* நண்பன்தான்! (பொறுமையிழந்தவனுக) அவனும் கொள்ளையடிக்கவில்லை; நானும் கொள்ளையடிக்க வில்லை!

*நீதி:* கேள்விக்கு மட்டும் பதில்! கொள்ளையடித்த பணத்தையும், பொருட்களையும் எங்கே வைத்திருக்கிருய்?

*ஜெம்பு:* அப்படிச் செய்திருந்தால், அந்தப் பணத்தை வாரி வீசி, அமெரிக்க நாட்டு வெள்ளைக்கார வக்கீலையே வரவழைத்து என் வழக்கை நடத்தி வெற்றி வீரனுக வெளியில் சென்றிருப்பேனே!

*நீதி-* உன்னிடம் இனி கேள்வி கேட்பதில் பயனில்லை! நிரூபிக்கப்பட்ட நான்கு குற்றங்களுக்குமாக ஜெம்புலிங்கத்திற்கு மூன்று ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும், அவனேடு எல்லா குற்றங்களிலும் பங்குகொண்ட இராமசாமி, காசி என்ற இருவருக்கும் ஒரு வருடக் கடுங்காவல் தண்டனையும் விதிக்கிறேன்!

(மூவரையும் போலீஸ் அழைத்துச் செல்லுதல்)

[ திரை ]

***

## காட்சி 22

(ராதாபுரம் சிறை)

ஜெம்பு, துரை, காசி, இராமசாமி, இராமலிங்கம், இன்ஸ்பெக்டர் சில போலீஸ்காரர். (அப்பாவு, சிறை அதிகாரி பிறகு வருதல்)

(துரை சிறைக்குள் இருந்து பார்க்க, நால்வரையும் போலீஸ் அழைத்து வருதல்)

*துரை:* (சிறைக்குள் இருந்தவாறு) வருக, வருக! வஞ்சகர்களின் வைரியே, வருக!

*ஜெம்பு-* சிறைவாசம் எப்படி இருக்கிறது?

இன்- உள்ளே இருந்து பார். உனக்கும் தெரியும்!

(ஜெம்புலிங்கத்தை சிறையில் அடைத்துவிட்டு இன்ஸ்பெக்டரும், இராமலிங்கமும் போதல். இராமலிங்கம் போகும்போது, ஜெம்புவிடம் கண்சாடை காட்டிப் போதல். எதிரில் சிறை அதிகாரியும் அப்பாவுவும் வருதல்)

சி-அதி: (சி. ஐ. டி. அப்பாவுவைப் பார்த்து) மிஸ்டர் அப்பாவு, பார்த்தீர்களா? ஜெம்புலி கம்பிக் கூண்டிற்குள் வலம் வருகிறது!

அப்- (கிண்டலாக) புலி மட்டுமில்லையே! அதன் தோழர்களும் அகப்பட்டுக்கொண்டார்களே!

சி-அதி: மேலாவது புத்தியுடன் பிழைத்தால் நல்லது. சர்க்காரை ஏமாற்ற நினைப்பவர்களுக்கு, அரசாங்க அதிகாரிகளை அவமதிக்கத் துணிபவர்களுக்கு இந்த நிலைதான் வரும்! (ஜெம்புவைப் பார்த்து) எங்களை ஏமாற்ற இயமன் வந்தாலும் முடியாது!

அப்- (தலையைப் பலமாக அசைத்து) உண்மை!

ஜெம்பு- டேய், தலையாட்டி! உன் உயிரைக் கொஞ்ச நாட்களுக்குக் காப்பாற்றிக்கொள்! (சிறை அதிகாரியைப் பார்த்து) இயமன் வந்தாலும் உங்களை ஏமாற்றமுடியாது! ஆனல் ஏகாதிபத்திய வெறி பிடித்த வெள்ளையரால் நம்மை ஏமாற்றமுடியும்! ஏனென்றல், இயமனையே வென்றவர்களல்லவா வெள்ளையர்கள்!

சி-அதி: உனக்கு இன்னமும் புத்தி தெளியவில்லை!

ஜெம்பு: பைத்தியக்காரர்கள் அப்படித்தான் கூறுவார்கள்.

சி-அதி: (கையிலுள்ள தடியை ஓங்கியவாறு)எலும்பை நொறுக்கிவிடுவேன்! (ஓங்கிய தடியை துரைவாப்பா பிடித்துப் பறித்து எடுத்தல்)

துரை: உம். எலும்பை நொறுக்கு பார்க்கலாம்!

(இராமலிங்கம் வருதல்)

இரா- இங்கு என்ன கலாட்டா? ...... (அப்பாவுவையும், சிறை அதிகாரியையும் பார்த்து) உங்களை இன்ஸ்

பெக்டர் கூப்பிடுகிருர். (இருவரும் இராமலிங்கத்திற்கு வணக்கம் செலுத்திப் போதல்)

*இரா-* (போலீஸ்காரரைப் பார்த்து) நீயும் போகலாம்! (போலீஸ் போதல்)

*இரா:* (ஜெம்பு, முதலானவர்களைப் பார்த்து) சிறைக்குள் வராமலிருக்கவேண்டும். வந்துவிட்டால் இங்குள்ளவர்களை எதிர்க்காமல் இருக்கவேண்டும்!

*ஜெம்பு:* மேலால் வராமலே நடந்துகொள்கிருேம்!

*இரா-* (இரகசியமாக) நான் வெளியில் போகிறேன். நீங்கள் நான் இல்லாத வேளையில் தகராறு செய்தீர்களாஞல், கொடுமையாகத் துன்புறுத்துவார்கள். இதமாக நடந்து கொள்ளுங்கள்.

*ஜெம்பு:* எங்கள் வீட்டிற்குச் சென்று விபரம் கூறி சமாதானப்படுத்துங்கள்!

*இரா-* அதற்காகவே போகிறேன். மேலும் வீட்டுச் செலவுக்கு அவள் என்ன செய்வாள்? எல்லாம் நான் கவனித்துவிட்டு வருகிறேன். (அப்பாவு வருதல் கண்டு) அந்தப் பாவி வருகிருன். நான் போகிறேன். (இராமலிங்கம் போதல்)

*அப்-* (தன்னுடன் வந்த போலீஸ்காரனைப் பார்த்து, கிண்டலாக) பாவம்! குடிப்பதற்கு ஏதாவது கொண்டு கொடு!

*ஜெம்பு:* (கோபத்தில்) அப்பாவு! உன் கிண்டலும் கேலியும் நெடுநாள் நடக்காது. கேவலம் பிச்சைக் காசுக்காக இனத்தவனையே சிறையிலடைத்து ஆனந்தப்படுகிருயா?

*அப்-* ஆனந்தப்படவில்லை; அனுதாபப்படுகிறேன்.

*துரை:* உன் அனுதாபம் தேவையில்லை. உடம்பை பத்திரமாகப் பார்த்துக்கொள்.

*அப்-* சிறை அதிகாரியிடம் அதைப்பற்றிக் கூறிவிட்டுத் தான் போவேன். (அப்பாவுவும் போலீஸ்காரனும் போதல்)

*துரை-* சிறை அதிகாரியிடம் போய் ஒன்றுக்குப் பத்தாகக் கதை கட்டுவான்.

*ஜெம்பு:* அவன் நம்மைத் துன்புறுத்துவான்! தின மும் சித்ரவதைதான் நடக்கும். அதற்கு இடம் கொடுக்கக் கூடாது. (துரையின் கையிலிருக்கும் தாள் பொதியைப் பார்த்து) அது என்னது பத்திரமாக மடக்கி வைத்திருக்கிருய்?

*காசி-* மூக்குப் பொடியாக இருக்கும்!

*துரை:* அல்ல; இங்குள்ள மூட்டைப்பூச்சிகளை யெல்லாம் பிடித்து மடக்கி வைத்திருக்கிறேன்.

*இராம-* எதற்கு?

*துரை:* காரணம் உண்டு. காட்டுகிறேன்.........(ஜெம்புவைப் பார்த்து) காசி எப்படி குற்றவாளியானுன்?

*ஜெம்பு:* இயன்ற மட்டும் கூறினேன். அவன் கேட் காமல், 'நான் ஜெம்புலிங்கத்தின் உறவினன். நாடகக் கொட்டகை கலகத்தில் நானும் கலந்ததுண்டு' என்றெல் லாம் கூறி குற்றவாளியாகிவிட்டான்! சிறையிலும் நம் முடன்தான் இருக்கவேண்டுமென்பது அவன் விருப்பம்.

*துரை-* நம் கை பலப்படுகிறது... நாளை எப்படியும் வெளியேறவேண்டும்!

*ஜெம்பு-* இல்லாவிட்டால் தினமும் நம் உடலை வாட்டி உயிரை எடுத்துவிடுவார்கள்! நீதான் சிந்தனைச் சிற்பி ஆயிற்றே! ஏதாவது திட்டமிட்டு வைத்திருந்தால் கூறு

*துரை:* பட்டம் கொடுக்கிருயா?

*ஜெம்பு-* ஏன் கொடுக்கக்கூடாது? நம்மவர்களுக்கு ராஜா என்றும், ஜமீன் என்றும் வெள்ளையர் பட்டம் கொடுக்கிருர்களே, அவற்றைவிட மதிப்புக் குறைவானதா நான் கொடுக்கும் பட்டம்?

(சிறை அதிகாரியும், போலீஸ் 103-ம் வருதல்)

*சி-அதி:* உங்களை வேறு ஊருக்கு மாற்றியிருக்கிருேம். இந்த அறையைச் சுத்தம் செய்துவிட்டுப் புறப்படத் தயா ராகுங்கள்! (சிறை அதிகாரி போதல், போலீஸ் 103 அங்கே நிற்கிருர்)

*போ-103:* எஜமான் சொன்னது காதில் விழ வில்லையா?

*துரை:* என்ன அப்பா, கோபப்படுகிருய்? (தாள் பொதியைக் காட்டி) நம்ம ஜெம்பு வரும்பொழுது கொஞ்சம் மிக்சர் கொண்டுவந்தான் சாப்பிட்டுக்கொண்டிருக்கிருேம். ...புது மாதிரி மிக்சர்!

*போ-103:* (ஆசையோடு)என்னது புதுமாதிரி மிக்சரா?

*துரை:* ஆமா, உனக்கு வேணுமா? போலீசாக இருந்தாலும் நீயும் மனிதன்தானே! உன் கடமையை நீ செய்கிருய்!...... மிக்சர் சாப்பிடுகிருயா?

*போ-103:* கைதியாகிவிட்டால் இப்படியெல்லாம் எங்களைக் காக்காய் பிடிக்கிறது சகஜம்தான்!...... எங்கே மிக்சரை இப்படிக் கொடுங்கள். (கை நீட்டுதல்)

*துரை:* ஊஹூம். கையில் கொடுத்தால், நாங்கள் லஞ்சம் கொடுப்பதாக எண்ணிவிடுவார்கள். அருகில் வந்து வாயைத் திறந்தால் அப்படியே போட்டுவிடுறேன்.

*போ-103:* (அங்குமிங்கும் பார்த்தபடி) நான் மிக்சர் பிரியமாக சாப்பிடுவேன் என்று உனக்கு எப்படித்தெரியும்?

*துரை:* நான்தான் இங்கு வந்து மூன்று நாட்களா கிறதே! எப்பொழுதும் நீ சாப்பிடுவது அதுதானே!

*போ-103:* தெரிந்துதான் வைத்திருக்கிருய்! (அங்கு மிங்கும் பார்த்தபடி அருகில் நெருங்கி வாயைத் திறக்க, பொதியில் இருந்த மூட்டைப்பூச்சியை வாயில் தட்டுகிருன் துரை)

*போ-103:* (சவைத்து, பின் அருவருப்புடன் அங்கு மிங்கும் உமிழ்ந்துவிட்டு, கோபத்தில்) சீ, சீ! விளையாடு கிருயா? (எல்லோரும் சிரித்தல்) சிரியுங்கள்! உங்களைச் சீரழித்துவிடுவேன்!...... முதலில் சிறையைச் சுத்தப்படுத் துங்கள்! இல்லையென்ருல் கசையடி கிடைக்கும்!

*ஜெம்பு:* ஏன்? நீ சம்பளம் வாங்குகிருயே! சுத்தப் படுத்து!

*போ-103:* அதிகப்பிரசங்கமா? உங்களை என்ன செய்கிறேன் என்று பாருங்கள்! (சிறை அதிகாரி வருதல்)

*சி-அதி:* என்ன மேன்! கதை பேசிக்கிட்டிருக்க. சிறையைச் சுத்தப்படுத்தச் சொல்லவில்லையா?

*போ-103:* நீங்கள் சம்பளம் வாங்குகிறீர்களாம் அதனால் நீங்கள்தான் சுத்தப்படுத்தவேண்டுமாம்! சொல்கிறார்கள்!

*சி-அதி:* (கோபத்தில்) அப்படியா சொன்னார்கள்? அப்பாவு சொன்னது சரிதான். (தன் கையிலிருக்கும் சாட்டையால் வெளியில் நின்றவாறே நால்வரையும் அடிக்கிறார். பொறுக்கமுடியாத ஜெம்பு, சாட்டையைப் பற்றி இழுக்க, அதிகாரியின் தலை கம்பியில் மோதி பலத்த காயம் ஏற்படுகிறது. போலீஸ் 103 கூச்சல் போட, சில போலீஸ் காரர்கள் வந்து சிறை அதிகாரியை தூக்கிச் செல்லுதல்)

*ஜெம்பு:* அடுத்த கட்டம் மிகக் கடுமையாக இருக்கும்!

(இன்ஸ்பெக்டர் வருதல்)

இன்: (கோபத்துடன்) உங்கள் ரௌடித்தனம் இங்கு நடக்காது! (துப்பாக்கியை எடுத்து) சுட்டுப் பொசுக்கி விடுவேன்! கலெக்டர் துரை வரட்டும். உங்கள் காலித் தனத்திற்கு முடிவு கட்டி விடுவார்! (அருகில் நிற்கும் இரு போலீஸ்காரர்களைப் பார்த்து) இந்தப் பயல்களை சிறுநீர் கழிக்கக்கூட வெளியில் விடக்கூடாது. ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்! நான் கலெக்டர் துரைக்குத் தகவல் கொடுத்துவிட்டு விரைவில் வந்துவிடுவேன்.

(இன்ஸ்பெக்டர் போதல்)

*போலீ-1:* (சிறைக்குள் பார்த்தவாறு) சிறுநீர் முட்டி அணுவணுவாக வேதனைப்படுங்கள்.

*ஜெம்பு:* அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம்! (அருகிலிருக்கும் சட்டியைக் காட்டி) அது இங்கே நடந்து விட்டது!

*போலீ-2:* முட்டாள்கள். 'பூல்'சுகள். கொஞ்சம்கூட 'மேனேர்ஸ்' இல்லை! பட்டினி போட்டால்தான் புத்தி வரும்!

*ஜெம்பு:* யாருடா பூல்? இங்கிலீஸ் பேசுறியா? வெள்ளைக்காரன் காற்று உன் மீதும் பட்டுவிட்டதா?

*துரை-* அவன் கூலிக்காரன்தானே இவன்! தாய் மொழியும், தாயகப் பற்றும் எப்படி மனதுள் எழும்? திட்டித் தீர்க்கணும் என்றால் தமிழிலேயே திட்டு!

*போலீ-1:* இதே சட்டியை காலையில் நீயே தூக்கிக் கொண்டு வெளியில் வருவாய்!

*ஜெம்பு:* நாங்க ஏன் தூக்கவேண்டும்?

*காசி:* இவன் முகத்தில் கொட்டுவதற்குத்தான்!

*இரா:* நீ எதற்கு சம்பளம் வாங்குகிறாய்? வேண்டு மென்றால் நீயே தூக்கு! அடிமையாக இருந்துகொண்டே இத்தனை அதிகாரமும் செலுத்துகிறாயே! உன் உடலில் ஓடுவது இரத்தம்தானா?

*போலீ-1:* இல்லை, தண்ணீர்! மரியாதையாகப் பேசு!

*போலீ-2:* நமக்கு எதற்கு வம்பு! வரவேண்டியவர்கள் வருவார்கள்! கொடுக்கவேண்டியதைக் கொடுப்பார்கள்! நாம் பார்த்து ரசிக்கலாம்! வா!

*போலீ-1:* அதுவும் சரிதான்! (இருவரும் போதல்; ஒரு ஆங்கில அதிகாரியும், போலீஸ் 103-ம் வருதல்)

*ஆ-அதி:* (103-ஐ பார்த்து) யார் மேன் ஜேம்பு-லிங்கம்?

*போலீ-103:* (சிறையைக் காட்டி) இதோ இந்த நால்வரும்தான்.

*ஆ-அதி:* நால்வேர் பேரும் ஜேம்புலிங்கமா?

*போலீ-103:* இல்லை சார்... (ஜெம்புவைக் காட்டி) இவன் ஒருத்தன் பேருதான் ஜெம்புலிங்கம்!

*ஜெம்பு:* இல்லை ஜேம்பலிங்கம்!

*ஆ-அதி:* என் சொல்றான் ... வாட்டீஸ் தீஸ்?

*போலீ-103:* இந்த றூம்... சுத்தம்...கிளீன் பண்ண ஆர்டர்... இவங்க முடியாதுன்னு கலாட்டா செய்கிறான்.

*ஆ-அதி:* வாட் மேன்?..... (ஜெம்புவைப் பார்த்து) வாட்...! கிளீன் பண்ணு... இல்லே?.....

*போலீ-103:* துரை கிட்டே எதிர்க்காதே! பேசாமல் சுத்தம் பண்ணு!

*ஜெம்பு:* உங்க துரைகளையெல்லாம் ஒழித்தால்தான் இந்தியா சுத்தமாகும்! அதைத்தான் செய்யக் காத்திருக் கிருேம்! நீ ஒரு கோடரிக் காம்பு!

*ஆ-அதி:* என்ன மேன்,...லெச்சர்? வெரி கன்பிஷன் ...லாங்வேஜ்!

*போலீ-103:* (தலையைச் சொறிந்தபடி) கிளீன் செய் யத்தான்... நினைக்குருங்களாம்!

*ஆ-அதி:* அதுக்கு இத்தனைப் பேச்சா?...ஓவர் டைம்! ..... ஆல் ரைட், டாப்பிலே இருந்து கொஸ்டீன் வராமல் வேலையைக் கவனி. (இருவரும் போதல்)

*ஜெம்பு:* ஆதவன் அடிவானத்தின் மறைகிருன்! வட்ட நிலா வானில் எழுகிறது!

*துரை:* திட்டத்தை செயலாக்கவேண்டியதுதான்!

*காசி-* தாமதித்தால் ஆபத்து!

*இராம-* ஆரம்பித்துவிடுவோம்!

*ஜெம்பு:* ஆம்! இயற்கையின் முதல்வனும் இறை வனை வணங்குவோம்! இனிமேல் சிறை மிதிக்கமாட்டோம் என சபதம் செய்வோம்! நம்மைப்போல தண்டனை அனு பவிக்கும் நிரபராதிகளுக்கு, அவர்கள் குடும்பத்திற்கு ஆதர வளிக்கவும், அன்னிய ஆட்சியை அசைத்துப் புத்தி புகட் டவும் உறுதிகொள்வோம்! ஏழைகளின் தோழர் ஆவோம்! எத்தர்களை ஏங்கவைப்போம்! இராமசாமி, காசி, இருவரும் ஒருவர் மேல் ஒருவராகக் குனிந்துகொள்ளுங்கள். நான் முதலில் ஏறி சன்னல் கம்பிகளை வளைக்கிறேன்.

*துரை:* விரைவில் நடக்கட்டும்!

(திட்டப்படி சன்னல் கம்பிகள் முறிக்கப்பட்டு, நால் வரும் வெளியேறுகிருர்கள்.)

[ திரை ]

★★★

## காட்சி 23

(ஜெம்புவின் வீடு)

(பார்வதி இறந்துவிடுதல்; சுந்தரியும், பொன்னியும் அழுதுகொண்டிருக்க, சீனியம்மாள் பிறகு வருதல்).

*சுந்:* பொன்னி, பார்வதியம்மாள் வளர்த்த பாசத்தினுல் துரை அண்ணுவின் பிரிவைத் தாங்கமுடியாமல் மறைந்துவிட்டாள்...... செய்தியைச் சிறையிலிருப்பவர்களுக்குத் தெரிவித்தாயா?

*பொன்:* எப்படித் தெரிவிக்கமுடியும்? சற்றுமுன் தான் இராமலிங்க அண்ணுவிடம் சொல்லிவிட்டு வந்தேன். அந்த அம்மா போனபிறகு அந்த வீட்டில் தனியாக இருக்க என்னுல் முடியவில்லை. அதனுல்தான் இங்கே வந்தேன்!

*சுந்:* இங்கேயே இரு! எனக்கும்தான் வேறு யார் இருக்கிருர்கள்? சீனியக்கா மட்டும் அடிக்கடி வந்து கவனிக்கிருள்!... (பெருமூச்சு விட்டு) என் வாழ்வு இப்படி ஆகிவிடும் என்று கனவில் கூட கருதவில்லை! குறைந்த வருவாயிலும், நானும் அவரும் நிறைந்த வாழ்வை அனுபவித்தோம்! இன்று!...... அவர் கடுங்காவல் தண்டனை அனுபவிக்கிருர்!

*பொன்:* கடுங்காவல் என்ருல் கசையடி கூட நடக்குமாம்! எனக்கு புத்தியே கலங்கிறுற்போல் இருக்கிறது...

(சீனியம்மாள் வருதல்)

*சீனி:* (வந்துகொண்டே) பொன்னி! பார்வதியம்மா காலமாயிட்டாங்களாமே?

*பொன்-* ஆமா'க்கா! தெய்வம்போல இருந்தாங்க! திடீர்னு தவிக்கவிட்டுப் போயிட்டாங்க!

*சீனி:* சந்தேகமா? அன்பின் முழு உருவம் ஆயிற்றே! ...நான் அங்கு சென்றுவிட்டுத்தான் வருகிறேன். உன்னைக் காணவில்லை! நேராக இங்கு வருகிறேன்! ஊரில்

எப்படியெல்லாமோ எத்தனையோ குடும்பங்கள் வாழ்கின்றன. நமக்கு மட்டும் எத்தனை தொல்லைகள்! அவர்கள் சிறையில்! நாம் துயரக் கடலில்! விதியின் சக்தியைப் பார்த்தாயா?

*சுந்:* உண்மைதான்! அதன் நியதியிலிருந்து யாருமே தப்பமுடியாது......

*சினி-* (இருபது ரூபாய் எடுத்து) இந்தா'ம்மா இதை வைத்துக்கொள்! நான் ஏர்வாடிக்குப் போய்விட்டு விரைவில் வருகிறேன்.

*சுந்-* செலவுக்கு ரூபாய் இருக்கிறதே!

*பொன்-* இப்போதே போகவேண்டுமா?

*சினி-* (ரூபாயை சுந்தரியின் கையில் திணித்தவாறு) எல்லாம் எனக்குத் தெரியும்! வைத்துக்கொள்! (பொன்னியைப் பார்த்து) அங்கு கொஞ்சம் நெல் கிடக்கிறது. விற்றுவிட்டு உடனே வருவேன்! வரட்டுமா?

*சுந்-* உடன் பிறந்த சகோதரி கூட உன்போல் இருக்கமாட்டாள்!

*சினி-* அப்படி ஒன்றுமில்லை! ஏதோ உன் மீதும் பொன்னி மீதும் எனக்கு அளவுகடந்த பாசம் வந்துவிட்டது! அவ்வளவுதான்! வீணுகக் கவலைப்படாதீர்கள். முயற்சிதான் நம்மிடம் இருக்கிறதே தவிர, முடிவு இறைவனிடம்தான் இருக்கிறது. வரட்டுமா? (இருவரும் விடைகொடுக்க, சினியம்மாள் போதல்)

[ திரை ]

***

## காட்சி 24

(காட்டுப் பாதை)

ஜெம்பு, துரை, வண்டிக்காரன். (பாதையில் ஒரு பார வண்டி, அரிசிப் பாரம் ஏற்றி வருதல்)

*ஜெம்பு-* (வண்டியின் முன்பக்கம் வந்து, தன் கையிலுள்ள கம்பால் தட்டியபடி, கிண்டலாக) டிரைவர், வண்டியை நிறுத்து! இறங்கு கீழே! என்ன பாரம்?

*வண்டிக்காரன்*- (அஞ்சி, நடுங்கி, வண்டியிலிருந்து கீழே குதித்து) அரிசிப் பாரமுங்க!

*துரை*- யாருடைய அரிசி!

*வண்டி*- (சாவதானமாக) அதுங்களா? .. எங்க முதலாளியை உங்களுக்குத் தெரியாதுபோலிருக்கு. தெரிந்தால் நீங்கள் பயந்து நடுங்கிவிடுவீர்கள்!

*ஜெம்பு*- ஏன், உங்க முதலாளி பிசாசா?

*வண்டி*: அப்படியும் அவருக்கு ஒரு பட்டம் உண்டு'ங்க. ஆனால் அவரு பேரு, திருநெல்வேலி, சேவன்னா காவன்னா முதலாளி! (மூச்சைப் பிடித்தவாறு) பெரிய முதலாளி! வெள்ளைக்காரங்கக் கூட அவரு பங்களாவிலே விருந்து சாப்பிடுவாங்க!

*ஜெம்பு*- ஓகோ! வெள்ளைக்காரங்களே விருந்து சாப்பிடுறாங்களா? அப்படீன்னா அவரு பெரிய முதலாளிதான்!

*துரை*: ஏன் அப்பா, வெள்ளைக்காரங்கன்னா மனுஷன்கள் தானே?

*வண்டி*- இல்லைங்க! அதுதான் உங்களுக்குத் தெரியாது! அவங்கள்ளாம் துரைங்க!

*ஜெம்பு*- ஆமா, உன் முதலாளி உன்னோடு வரவில்லையா?

*வண்டி*- இல்லைங்க. நான் ரொம்ப நம்பிக்கையானவன். கால் காசுக்குப் பொய் சொல்லமாட்டேன்!

*ஜெம்பு*: அப்படியா? உனக்கு எவ்வளவு சம்பளம்?

*வண்டி*- மூணு வேளை சாப்பாடும், பழைய துணியும் போக, மாசா மாசம் ஐந்து ரூபாய் கொடுக்கிறாங்க. என் பொஞ்சாதியும் அங்கேதான் வேலை செய்கிறாள்.

*துரை*: இருவருக்கும் சேர்த்துத்தான் ஐந்து ரூபாயா?

*வண்டி*- என் மகன் கூட அவங்ககிட்டதான் மாடு மேய்க்கிறான்!

ஜெம்பு- மூன்று பேருக்கும் ஐந்து ரூபாயா? இந்த ரூபாயை வைத்து நீ எப்படியப்பா காலம் தள்ளுகிருய்?

வண்டி- என்னுங்க செய்யறது? என் தலைவிதி அவ்வளவுதான்!

ஜெம்பு- தலைவிதியா? நம் நாட்டு தொழிலாளர்களுக்கு எப்பொழுதுதான் உணர்ச்சி வருமோ? எதற்கெடுத்தாலும் தலைவிதிதான்! எப்பா, தலைவிதி, இப்பொழுது எங்க தலைவிதி என்ன சொல்கிறது தெரியுமா?

வண்டி- என்ன சொல்லுது?

ஜெம்பு- இந்த வண்டியிலுள்ள அரிசி முழுவதையும் இறக்கச் சொல்லுது.

வண்டி- அப்படீங்களா! பணம் கொடுப்பீங்களா?

ஜெம்பு- ஓ! கொடுப்போம். நாங்கள் கொடுப்பதை நீ உன் முதலாளியிடம் கொடுத்துவிடு!

துரை: நேரமாகிறது. சீக்கிரம் மூடைகளை இறக்கு.

வண்டி: ஓகோ! விலை பேசவேண்டாமா?

ஜெம்பு: அதெல்லாம் பிறகு பேசிக்கொள்ளலாம்! சீக்கிரம் இறக்கு! (மூவரும் அரிசி மூடைகளை இறக்குதல்)

ஜெம்பு- சரி, நீ போகலாம்!

வண்டி: பணம்?

ஜெம்பு: டேய், மரியாதையாகப் போய்விடு! இல்லே உடம்பு சிதறிவிடும்!

வண்டி- விளையாடாதீங்க. எங்க முதலாளிக்குத் தெரிஞ்சா உங்களைச் சிறையிலே தள்ளிடுவாரு! அவருக்கு எவ்வளவு சொத்து இருக்கு தெரியுமா?

ஜெம்பு- நல்லாத் தெரியும்! அதனுல்தான் அரிசியை இறக்கினேம்! இனிமேலாவது தலைவிதி, அப்படி, இப்படின்னு சொல்லாமல், உழைப்பிற்கேற்ற ஊதியத்தைக் கேட்டு வாங்கு. சீக்கிரம் வண்டியை ஓட்டிக்கிட்டுத் திரும்பு!

(துரையைப் பார்த்து) நீ நம் குகைக்குச் சென்று, இராம சாமியையும், காசியையும் அழைத்துவந்து சீக்கிரமாக அரிசி மூடைகளைக் கடத்து! (துரை போதல்)

*வண்டி-* ஐயய்யோ! திருடன்! திருடன்!

*ஜெம்பு-* (வண்டிக்காரனின் வாயை அடைத்து) டேய் நீ எங்களைப் போன்ற ஏழை! அதனால்தான் உன்னை உருப்படியாக அனுப்புகிறோம்! ஏதாவது கூச்சல் போட்டே, சமாதிதான். உம், சீக்கிரம் திரும்பு!

*வண்டி-* எங்க முதலாளிக்குத் துரோகம் செய்யவா?

*ஜெம்பு-* அட முட்டாளே! உனக்குத் துரோகம் செய்யும் மனமில்லை! ஆனால், முதலாளிவர்க்கம் இருக்கிறதே துரோகத்தைத் தவிர எதுவுமே செய்வதில்லை! உன் போன்ற எத்தனை ஏழைகளை—தொழிலாளர்களை வதைத்து—வஞ்சித்து வாழுகிறது தெரியுமா? அது கொலைகார வர்க்கமடா! வீண் பேச்சுப் பேசாதே!... உன் உயிர் மேல் உனக்கு ஆசையிருக்கிறதா?

*வண்டி-* ஆமாங்க. என் அம்மாவுக்கு நான் ஒரே பிள்ளை!

*ஜெம்பு:* உன் மனைவிக்கு?

*வண்டி-* நான் ஒரே புருஷனுங்க!

*ஜெம்பு:* அதிசயம்தான்! (சிரித்து) நீ இப்படியிருப்பதால்தான் உன் முதலாளி உன்னை ஏமாற்றுகிறான். மேலாவது ஏமாறாதே!

*வண்டி:* அது சரிங்க... நீங்க இந்த அரிசி முழுவதையும் என்ன செய்வீங்க?

*ஜெம்பு:* அப்படிக் கேள்! நாள் முழுதும் உழைத்தும், உண்ண உணவின்றி உன்னைப்போல் தலைவிதியைக் காரணம் கூறி வறுமையில் உழலும் ஏழை சமுதாயத்திற்குப் பரிசளிக்கப் போகிறோம்! உனக்கு மகிழ்ச்சி தானே!

*வண்டி:* அப்படீன்னு சரிதான்! நல்லாச் செய்யுங்க. என்னதான் உண்மையாக உழைத்தாலும், முதலாளிங்க மனசு இரக்கப்படுவதேயில்லே! நேற்று என் பொஞ்சாதிக்கு மருந்து வாங்க அஞ்சு ரூபா கேட்டதற்கு, எங்க முதலாளி வெளியே போடா'ன்னு விரட்டிட்டாரு! சண்டாளன்! அவருக்கு இது வேண்டியதுதான். (துரை, காசி, இராமசாமி மூவரும் வந்து மூடைகளைத் தூக்கிச் செல்லுதல்)

*ஜெம்பு:* அப்படிச் சொல்! இந்தா ஐந்து ரூபாய்! உன் மனைவிக்கு மருந்து வாங்கிக் கொடு! இனிமேல் கஷ்டம் வந்தால் இந்தப் பக்கம் வா! நான் உதவி செய்கிறேன்!

*வண்டி-* (ரூபாயை வாங்கிக்கொண்டு) ஐயா! உங்களையும் திருடன் என்று சொன்னேனே!... நீங்க நல்லா இருக்கணும்! நானும் மூடைகளைத் தூக்கி உங்க இடத்துக்குக் கொண்டு வரட்டுங்களா?

*ஜெம்பு-* வேண்டாம்! அங்கெல்லாம் நீ வரக்கூடாது. போய்விடு!

*வண்டி-* (தலையை அசைத்து திருப்பி, பின் ஜெம்புவை அணுகி) ஐயா, 'அரிசி மூடையைப் பறிகொடுத்து விட்டாயே' என்று எங்க முதலாளி வெளியே தள்ளிட்டா ... நான் எங்கே போவேன்!

*ஜெம்பு:* எங்கும் போகவேண்டாம்! இங்கேயே வந்துவிடு. உன் முதலாளி வீட்டிலும் எங்களுக்கு வேலையிருக்கிறது. அதற்கு உன் உதவி தேவைதான்!

*வண்டி-* அப்படீன்னு சரி'ங்க. நான் வரட்டுமா?

*ஜெம்பு-* போய் வா! (வண்டிக்காரன் போதல்; ஜெம்பு குகையை நோக்கிச் செல்லுதல்)

[ திரை ]

***

# காட்சி 25

## (ஜெம்புவின் குகை)

ஜெம்பு, காசி, துரை, இராமசாமி. (குகையின் ஒருபுறம் அரிசி மூடை அடுக்கி வைக்கப்பட்டிருக்கிறது! நால்வரும் தேனீர் அருந்துதல்)

*ஜெம்பு:* (குகைக்குள் சுற்றிலும் பார்வையைச் சுழற்றியபடி) எப்படியிருக்கிறது நம் அரண்மனை?

*துரை:* எப்படியிருந்தாலும் பாதுகாப்பிற்குப் பொருத்தமானது!

*காசி-* இன்னமும் சற்று வசதிகள் செய்யவேண்டும்!

*இராம·* செய்யலாம்! இப்பொழுதுதானே அரண்மனையே கிடைத்திருக்கிறது! இனிமேல் ஆட்சியைத் தொடங்கினல் எல்லாம் வசதியாகிவிடும்!

*ஜெம்பு:* அது சரி. வரி போட்டு வசூலித்தால்தான் நாட்டின் வாழ்வுக்கு வழங்கமுடியும். நம் வசதியையும் சீராக்கமுடியும்!

*துரை-* நமக்கு எதற்கு வசதி? இதுகுகை தானே! இப்படியே இருந்தால் போதும்!

*ஜெம்பு:* அல்ல; இது குகையல்ல! (சற்று உரக்க) கற்கோட்டை! கருங்காலிகளின் கண்களில் படாமலிருக்க கடவுளால் நமக்களிக்கப்பட்ட கவசமிது! (புதர்களைக் காட்டி) பாருங்கள்! இந்த முட்புதர்களையெல்லாம் முற்றக் களைந்து இங்கே முத்துக் குவியல்களைக் காண்போம்! அதோ அந்தக் கள்ளிச்செடிகள் நிற்கும் இடத்தில் வெள்ளிக் கட்டிகளை அடுக்குவோம்! காளான் நிறை இடங்களை கற்பகச்சோலையாக மாற்றுவோம்! பாழும் செடிகளை அகற்றி வெடிமருந்து கிடங்காக்கி வெள்ளை ஏகாதிபத்தியத்தை வேரறுக்க உதவுவோம்! (வெளியே காட்டி) அதோ பார்!

*துரை:* பாம்புகள்!

*ஜெம்பு:* (வேறொரு இடம் காட்டி) அங்கே பார்!

*இராம:* காட்டு விலங்குகள்!

ஜெம்பு ஆம்! அவைதான் நம் காவலர்கள். காட்டில் பிறந்த மிருகங்களானாலும் நாட்டில் நடமாடும் சில மனிதர்களை விட பண்பு மிக்கது! அவை தன் இனத்தை அழிப்பதில்லை. பொறாமைக் குணம் கிடையாது. மேலும் தன் பசி தீரவே பிற பிராணிகளை அழிக்கிறது. எக்காரணம் கொண்டும் நம்மைக் காட்டிக்கொடுக்காது. பூனைக்கண் புல்லர்களின் கீழ் அடிமையாக வாழ்வதை விட புலிகள் கூட்டத்தில் சுதந்திரமாக வாழ்வதே வாழ்வு. (பறவைகள் ஒலி கேட்க). ஆகா!... அதோ கேள். வெற்றி விரைவில் என்று மங்கல கீதம் பாடுகிறது! (ஆந்தை அலறல் கேட்க) ஆந்தையின் அலறல்!... ஆங்கில ஏகாதிபத்தியத்திற்குச் சாவு மணி அடிக்கிறது! (பெருங் காற்று வீசுதல்) பார்த்தாயா, காற்றின் வேகத்தை! இது சாதாரணக் காற்றல்ல! பாரதம் முழுவதும் சுதந்திரத்திற்காகப் பாடுபடும்—கப்பலோட்டிய தமிழன், சுப்பிரமணிய சிவா—போன்ற தியாகிகளின் தியாக மூச்சு!

காசி: இங்கே பார், கூட்டங் கூட்டமாகப் போகிறது குள்ள நரிகள்.

ஜெம்பு: உத்தேசம் எத்தனை இருக்கும்?

காசி: ஐம்பது வரை இருக்கும்.

ஜெம்பு- இவ்வளவுதானே! நாட்டிலுள்ளதைவிடக் குறைவுதான். (எல்லோரும் சிரித்தல்)

துரை- சரி, இனிமேல் அடுத்த திட்டத்தைச் செயல் படுத்துவோம்!

ஜெம்பு: சரி, புறப்படுவோம்! நால்வரும் நான்கு திசையில் செல்வோம்! (போதல்)

[ திரை ]

***

## காட்சி 25 - A

(பாதை)

பல போலீஸ்காரர்கள், அங்குமிங்குமாக ஜெம்புலிங்கத்தையும், அவன் தோழர்களையும் விசாரித்தும், கூர்ந்து நோக்கியவாறும் செல்லுதல். (ஜெம்பு, பெண் உடையில், போலீஸ் 103-ன் எதிரில் வருதல்)

*ஜெம்பு*: (குரல் மாற்றி) ஐயா, ஐயா......

*போ-103*: யாரம்மா நீ? என்ன வேண்டும்?

*ஜெம்பு*: உன்னை வேண்டித்தான் வந்தேன்!

*போ-103*: (வியப்புடன் ஆசையாக) ஆ!........ என்னை வேண்டியா? உண்மையாகவா!

(சிரித்துக் குழைதல்)

*ஜெம்பு*- (அவன் நெஞ்சில் தட்டியவாறு) ஆமா ஐயா, போலீசில் எனக்கு ஒரு வேலை வாங்கித் தர முடியுமா?

*போ-103*: ஐயே, போலீசில் வேலை பார்க்க வேண்டியவளா நீ? வீராங்கனையே, உன் விழிகளின் கீழ் ஆயிரம் போலீஸ் பணி செய்யக் காத்து நிற்குமே!........ வேண்டாம்! நீ...என்...என்......

*ஜெம்பு*- என்ன'ய்யா தயங்குறே! (அவன் கன்னத்தைத் தடவியவாறு) உன் மனைவியாக இருக்கவேண்டுமா?

*போ-103*: (குழைந்து, மகிழ்ந்து கை கொட்டியவாறு) ஐயோ கண்டுபிடிச்சுட்டியே!... நீ வெறும் அழகி மட்டுமல்ல! அறிவாளியும்கூட!

*ஜெம்பு*: ஏ'ய்யா, இப்பொ புதிசா ஒரு இன்ஸ்பெக்டர் வந்திருக்கிருரே, அவரு பேரு என்னவாம்?

*போ-103*: மிஸ்டர்......மார்க்கண்டன்!

*ஜெம்பு*: ஓகோ! என்றும் பதினுரு?

*போ-103*: (சற்றுக் கோபத்தில்) ஏ'ம்மா, அவருக்குப் பதினுறும் இல்லை, பதினேழுமில்லை!

ஜெம்பு- அட, இவ்வளவு கேட்கிறதுக்குள்ளே இவ் வளவு கோபப்படுறீங்களே! உங்களை எப்படி கட்டிக்கிறது?

போ-103: (இதமாக) செ—செ! அப்படி ஒன்று மில்லே. உன் விஷயத்தில் நான் கோபமே படமாட்டேன்!

ஜெம்பு: சரி, நீ இப்போ எங்கே புறப்பட்டே?

போ-103: கொள்ளைக்காரன் ஜெம்புலிங்கத்தையும் அவன் கூட்டத்தையும் பிடித்துவர!

ஜெம்பு: அதற்குத் துப்பாக்கி வேணுமே! உங்க சிறையிலே கூட துப்பாக்கி இருக்காதே!.......

போ-103: (கோபத்தில்) யார் சொன்னது? எங்க சிறையிலே மட்டும் இருபத்தியொரு துப்பாக்கி இருக்கிறது.

ஜெம்பு- (குழைவுடன்) பொய்! எனக்குத் தெரியுமே! வடக்குப் பக்கம், ஏட்டையா இருப்பிடத்தின் அருகே ஒரு ஐந்தோ, பத்தோ இருந்தது.

போ-103: (ஆணவத்துடன்) நீ சொன்னதுதான் பொய்! இப்பொ அங்கே துப்பாக்கியே இல்லே! எல்லாம் கிழக்குப் புறத்தில் இன்ஸ்பெக்டர் அறையின் அருகே புதிதாகக் கட்டின அறையில் ரெடியாக இருக்கிறது இருபத்தி ஒன்று!

ஜெம்பு: மச்சான்...... உனக்கு துப்பாக்கி சுடத் தெரியுமா?

போ-103: (பதட்டத்துடன்) ஓ... சுடத்தானே... உம்... தெரியும்... சுடுவேன்...

ஜெம்பு: அப்படீன்னு நான் உன்னைத்தான் காதலிப் பேன்...... வரட்டுமா?

போ-103: (ஏமாற்றத்துடன்) காதலிப்பேன் என்று சொல்லிவிட்டுப் புறப்படுகிறுயே!... இங்கு

ஜெம்பு: இல்லே; இனிமேல் அடிக்கடி வந்து உன் னைக் காதலிப்பேன்!

போ-103: அப்படியா? (சிரித்து) அப்படீன்னு சரி!

ஜெம்பு- வரட்டுமா?

*போ-103:* (சிரித்து) போயிட்டு வா!... அடிக்கடிக் காதல்!... (தலையை அசைத்தவாறு ஜெம்பு போதல்; ஜெம்பு சென்ற திசையைப் பார்த்தவாறு நின்று) அழகு என்றால் இப்படியிருக்கணும்..... டக், டக்'ன்னு நடந்து சென்ற அழகு...... ஐயோ! அவள் யாரென்றுகூடத் தெரிந்துகொள்ளாமல் போயிற்றே!..... பெயரைக் கூட கேட்கவில்லையே!... (தலையில் அடித்துக்கொண்டு) இந்த போலீஸ் வேலைக்கு வந்தாலே புத்திக் குழம்பிவிடும்! என் ஆயுளில் என்னைக் காதலித்ததே இந்த ஒருத்திதான்! இவளையும் விட்டுவிட வேண்டியதுதானே! (வருந்தி) இல்லை அடிக்கடி காதலிக்க வருவேன் என்று கூறினாளே!

(போதல்)

[ திரை ]

★★★

## காட்சி 26

(ஜெம்புவின் வீடு)

சுந்தரி, சீனியம்மாள். (ஜெம்பு பிறகு வருதல்)

*சுந்:* (கந்தரலங்காரம் பாடிக் கொண்டிருத்தல்)

வேலே விளங்குகையான் செய்ய தாளினில் வீழ்ந்திறைஞ்சி
மாலே கொளவிங்கன் காண்பதல்லான் மனவாக்குச் செய
லாலே அடைதற் கரிதாயருவுருவாகி யொன்று
போலே யிருக்கும் பொருளை யெவ்வாறு புகல்வதுவே......

*சீனி:* (வந்துகொண்டே) என்ன... சுந்தரி, பக்திப் பாடலா?... என்ன புஸ்தகம்?...

*சுந்:* வா, அக்கா. கந்தரலங்காரம் படிக்கிறேன். மனிதர்கள் உதவாதபோதுதானே தெய்வத்தைஅழைக்கிறோம்.

*சீனி-* உண்மைதான்!... நான் ஒன்று கேள்விப் பட்டேனே...

*சுந்-* என்னது?...

*சீனி-* அவங்க எல்லோரும் சிறையிலிருந்து தப்பி ஓடிட்டாங்களாமே!

*சுந்-* (சோர்வுடன்) ஆமாம்... நானும் இன்றுதான் அறிந்தேன். அதற்குள் எத்தனையோ தடவைகள் போலீஸ் வந்துபோய் விட்டது.

*சீனி:* நீ ஏன் ரொம்பவும் வருந்துகிறாய்?

*சுந்-* ஆபத்து அதிகமாகிவிட்டதே! வருந்தாமல் என்ன செய்யமுடியும்? அந்தப் பொண்ணு பொன்னியும் இத்தனை நேரம் இங்கிருந்து அழுதுகிட்டுப் போவுது.

*சீனி:* அப்படீன்னு தப்பிச் சென்றது தவறு என்று சொல்கிறாயா? உள்ளேயிருந்தால் உயிருக்கே ஆபத்து வந்திருக்கும். அணுவணுவாக அடித்துக் கொன்றிருப்பார் களே! நாட்டில் நடக்கிற அக்கிரமங்கள் உனக்குத் தெரி யாதா? எங்கெல்லாமோ—யாரையெல்லாமோ வெள்ளைக் காரங்க சுட்டுக் கொல்லுறாங்களாம்! நம்ம நாட்டுக்கு சுதந் திரம் வேணும்'னு கேட்டால் போலீஸ்காரங்க அடித்து மிதித்துச் சிறையிலே அடைக்கிறாங்களாம்!

*சுந்-* அதுதான் சொல்லுகிறேன். பெரிய தலைவர் களுக்கே இந்த நிலை என்றால், நம் நிலை அதிக ஆபத்து தானே!

*சீனி:* அவங்க கையில் சிக்கினால்தானே!

*சுந்-* சிக்காமல் வாழமுடியுமா?

*சீனி-* கண்டிப்பாக முடியும்! அவர்கள் மட்டுமல்ல. ஜெம்புவின் திட்டப்படி நம் நாட்டு ஏழைகள் கூட இனி மேல் நன்றாக வாழ்வார்கள். இல்லாதவனை இடையூறுக்கு ஆளாக்கும் இழிநிலை மாறும். செல்வந்தர் திருந்துவார்கள். கண்மூடித்தனத்தால் பெண்களைக் கெடுக்க நினைக்கும் அற்பர்கள் ஒடுக்கப்படுவார்கள்.

*சுந்-* போலீஸ் !......

*சீனி-* (சிரித்து) போலீஸ் என்ன புலியா? வெள்ளையர்களின் கூலிகள் அணிந்துள்ள உடையின் பெயர்தானே போலீஸ்! இவர்கள் தப்பியது அவர்களுக்குத் தலைவலி தான்! ஜெம்புவின் திட்டமெல்லாம் எனக்கு நன்கு தெரியும். (ஜெம்பு பெண் உடையில் வருதல்)

*ஜெம்பு:* (குரல் மாற்றி) அம்மா, அம்மா! உள்ளே வரலாமா?

*சுந்-* (உள்ளே நிற்கும் ஜெம்புவையும், சீனியம்மாளையும் மாறிமாறிப் பார்த்தவாறு திகைத்து) ஏம்மா, நீ உள்ளேதானே நிற்கிருய்! நீயாகவே உள்ளே வந்துவிட்டு வரலாமா? என்று கேட்கிருயே! யார் நீ?

*ஜெம்பு-* நான் ஜெம்புலிங்கத்தின் காதலி! இது அவர் வீடுதானே?

*சீனி:* அடியம்மாடி! நீ காதல் எலியா? எந்த ஊர் எலியம்மா நீ?

*ஜெம்பு-* எலியுமில்லை, புலியுமில்லை! ஜெம்புலிங்கத்தின் வீடு இதுதானே?

*சுந்-* ஊரில் எத்தனையோ பேர் இருப்பார்கள்!

*சீனி:* ஆமாம்மா, ஜெம்புலிங்கம் என்ற பெயரில் வேறு பலபேர் இருப்பார்கள். நீ விசாரித்துப் பார்! இந்த வீட்டு ஜெம்புலிங்கம், இராமபிரான் மாதிரி!

*ஜெம்பு:* என்ன'ம்மா, இராமனே — இராவணனே, எனக்கு வேண்டியது இந்த வீட்டு ஜெம்புலிங்கம்தான் சமீபத்திலே சிறையிலிருந்து தப்பி ஓடினுரே, அதே ஜெம்புலிங்கம்தான் என் காதலர்!

*சுந்:* (திகைத்து) ஆ!......

*சீனி:* (ஜெம்புவை நன்கு உற்றுக் கவனித்துப் பெண் வேடம் என்பதை உணர்ந்து) ஓகோ, ஏனப்பா, உன் சி. ஐ. டி. வேலைக்கு வேறு இடம் கிடைக்க வில்லையா? ...... (சுந்தரியைப் பார்த்து) சுந்தரி, கதவைத் தாளிடு.

வீட்டிலுள்ள பெண்களைத் தொந்தரவு செய்ய வந்த இவனை சும்மா விடக்கூடாது!

*ஜெம்பு:* (பெண் உடைகளைக் களைந்தபடி) ஐயோ! ...... வேண்டாம்!

*சுந்:* (அன்பும் மகிழ்ச்சியும் மிளிர) அத்தான்!...

*சீனி:* (வியப்புடன்) ஜெம்பு!......

*ஜெம்பு:* உம்; வீராங்கனைகள்தான்! (சீனியம்மாளைப் பார்த்து) கதவைத் தாளிட்டு விட்டு வா! பேசலாம்!

(சீனியம்மாள் போதல்)

*சுந்-* என்னை ஏமாற்றிவிட்டீர்களே!

*ஜெம்பு:* இல்லை. வேடம் பயன்படுகிறதா என்று பரீட்சை செய்தேன். அவ்வளவுதான்!

(சீனியம்மாள் வருதல்)

*ஜெம்பு:* அளவுக்கு மீறிப் புகழ்ந்துவிட்டாள் சீனியம்மாள்! ஆனால் சுந்தரி கூறியதிலும் உண்மையிருக்கிறது!

*சீனி:* என்ன உண்மை?

*ஜெம்பு:* சீனியம்மா! நீ எண்ணுவதுபோல் மாறு வேடத்தில் வாழ்வதும், மறைந்து வாழ்வதும் அவ்வளவு எளிதல்ல! அதிலும் தற்பொழுது ஆங்கில ஏகாதிபத்தியம் போலீஸ் இலாகாவுக்கு வழங்கியுள்ள அதிகாரமிருக்கிறதே, சாதாரணமானதல்ல! சர்வாதிகாரம்!

*சீனி:* (யோசித்து) சரி... நம் வீட்டுக் கதவு தாளிடப்பட்டதுதான் தவறு! சந்தேகத்திற்கு இடம் வந்துவிடும். அதனால், நான் கதவைத் திறந்துவிட்டு வெளி வாசலிலேயே இருக்கிறேன். நீங்கள் பேசி முடித்ததும் தெரிவியுங்கள்!

(சீனியம்மாள் போதல்)

*ஜெம்பு-* சீனி என்றால் சீனியேதான்! (சுந்தரியைப் பார்த்து) எத்தனை புத்திசாலி பார்த்தாயா? குறிப்பறிந்து நடந்துகொண்டாள்!

*சுந்:* (வெட்கத்துடன்) போதுமே! உங்களுக்கு எப்பொழுதும் விளையாட்டுப் பேச்சுத்தான். சூழ்ந்திருக்கிற ஆபத்தை நினைத்துப் பார்த்தீர்களா?

*ஜெம்பு:* பயித்தியக்காரி மாதிரிப் பேசுகிருய்! இந்த உலகில் ஆபத்துச் சூழாமல் வாழ்கின்றவன் யார்? உலகில் பிறந்த ஒவ்வொரு உயிரையும் ஆபத்து சூழ்ந்துதான் இருக்கிறது! இதை உணராத மனிதன் மட்டும் ஏதோ தனக்கு மட்டும்தான் ஆபத்து சூழ்ந்திருப்பதாக எண்ணி தனக்குள்ளே கவலையை வளர்த்து ஆபத்தை அதிகப் படுத்தி நிம்மதியற்று மடிகிருன்! உணர்ந்தவன், இருக்கும் வரை ஆனந்தமாக வாழ்கிருன்! உயர்ந்த தத்துவம் இது! நன்ருக உணர்ந்துகொண்டால் வாழ்வில் கவலைக்கே இடம் இல்லை!

*சுந்:* அத்தான், இவ்வளவு அறிவுடன் பேச எங்கே கற்றீர்கள்?

*ஜெம்பு:* ஒருவரும் கற்றுத் தரவில்லை. நான் இப் பொழுது குடியிருப்பது மலை! அதுதான் கற்றுத் தந் திருக்கும்!...... இனி மேலாவது சிரி. சிரி, சுந்தரி! மனம் விட்டுச் சிரி! உன் சிரிப்பு காணவே சிங்காரியாக வந்தேன்!

*சுந்-* (சிரித்து) சிறையிலிருந்து வெளியேறி இரண்டு நாட்களாகின்றன!......

*ஜெம்பு:* 'இன்றுதான் வர முடிந்ததா'? என்று கேட் கிருய். அப்படித்தானே! என் மனம் உனக்குத் தெரியாதா சுந்தரி? (அணைத்தவாறு) உன் பட்டு மேனியில் என் கரம் பட்டவுடன் உன் இதயம் சிலிர்ப்பது போல் என் இதயமும் சிலிர்க்காதா? எதற்கும் துணிந்து நிற்கும் என் ஞல் கூட உன்னைக் காணுமல் இருக்கமுடியவில்லை. உன் நிலையைச் நீ சொல்லவேண்டுமா கண்ணே!...

*சுந்:* சொல்லவேண்டும் என்ருல் சொல்லுகிறேன்.

*ஜெம்பு-* வேண்டாம். உன் நிலையை உன் வாயால் சொல்லவேண்டாம்! நான் என்ன குருடஞ? கருமேகம் முழு நிலவை மறைத்தாற்போல் கவலைத் திரை உன் அழகு முகத்தை மூடி மறைத்து விட்டதே! ... கவலைப் படாதே சுந்தரி. எல்லோரையும்போல் உழைத்து பிழைத்

தவர்கள்தான் நாம்! என்ன செய்யலாம்? நேர்மையாக நடந்ததால் சில தொல்லைகள். அதுவும் நன்மைக்கே!

*சுந்:* தெய்வம் விட்ட வழி நடக்கட்டும்...... (பெரு மூச்சு விட்டு) அத்தான், (ஜெம்புவின் மடியில் தலை வைத்த படி) சிறையிலிருந்து எப்படித் தப்பினீர்கள்?

*ஜெம்பு:* கம்பிகளை முறித்தேன், சன்னல் வழிகாட்டியது. துள்ளி ஓடிவந்தேன், இந்தப் புள்ளிமானைக் காண. அதையெல்லாம் கேட்காதே! கிடைத்த நேரத்தை மகிழ்ச்சியுடன் செலவு செய்வோம்!

*சுந்:* அத்தான்!........

*ஜெம்பு-* (அன்பு மிகுதியில்) அன்பே!........

(விளக்கு அணைதல்)

[ திரை ]

★★★

## காட்சி 26 - A

(ஜெம்புவின் வீட்டு வாயில்)

சீனியம்மாள், போலீஸ்-103, மற்றும் இருவர். (பொது மக்கள் சிலர்)

*போ-103:* (சீனியம்மாளைப் பார்த்து அதிகாரத்துடன்) ஏ பொம்பளை! உள்ளே யாரு இருக்கா?

*சீனி:* (கோபத்துடன்) இந்தா'ய்யா, ஆம்பிளை, மரியாதையாப் பேசு.

*போ-103:* நான் யாரு'ன்னு தெரியுமில்லே?

*சீனி:* மனுஷன்'னு நினைக்கிறேன்!

*போ-103:* தவறு! உடையைப்பார்! நான் போலீஸ்காரன்!

*சீனி-* (பயந்ததுபோல் நடித்து, உள்ளே—ஜெம்புவுக்குக் கேட்கும்படியாக உரக்க) அப்படியா? போலீஸ்! போலீஸ்காரன்'னு எனக்குத் தெரியுதுங்களே! போலீஸ்,

போலீஸ்! (சீனியம்மாளின் குரல் ஜெம்புவுக்குக் கேட்டதின் அடையாளமாக வீட்டின் உள்ளிருந்து 'விசில்' ஒலி கேட்கிறது.)

(வீட்டினுள்ளே)

*ஜெம்பு*: (சுந்தரியிடம்) கண்ணே, சீனியம்மாள் 'எச்சரிக்கைக் குரல்' எழுப்பிவிட்டாள். சீக்கிரம் போக வேண்டும். விடைகொடு!

*சுந்*- (ஜெம்புவின் மீது சாய்ந்தவாறு) அத்தான், இன்பங்களத்தனையும் அள்ளிக் கொடுத்துவிட்டு, உடனேயே துள்ளி ஓடட்டுமா என்று கேட்கிறீர்களே! என் மனம் என்ன பாடுபடும்?

*ஜெம்பு*- திடப்படுத்தவேண்டியதுதான் சுந்தரி. இத்தனை நெருக்கடியிலும், இத்தனை நேரம் உன்னோடு இன்பத்தின் சிகரத்தில் வீற்றிருந்தேனே! காரணம் என்ன? மன திடம்! மறந்துவிடாதே! எத்தர்களும், சுயநலப் பித்தர்களும் (வெளியில் பெரிய குழப்பமும், கூச்சலும் கேட்கிறது) நாட்டில் இருக்கும்வரை கடமை வீரன் நிம்மதியாக வாழமுடியாது! சுந்தரி...என் அன்பே, என் உயிர் இருக்கும் வரை உனக்கு ஒரு குறைவும் வராது!.. சீனியம்மாள் வேண்டுமென்றே குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிருள். இந்தக் குழப்பத்தைச் சாதகமாக்கி நான் கூட்டத்துள் புகுந்து தப்பிவிடுவேன்!...(பெண் உடை அணிதல்)

(வெளியே)

*சீனி*- ஐயோ!... இந்த அநியாயத்தைக் கேட்பாரில்லையா? (வீதியில் செல்வோர் அத்தனை பேரும் கூடுதல்) தனியாக இருக்கும் பெண்ணிடம் வந்து, இந்தப் போலீஸ்காரர் துப்பாக்கியைக் காட்டி மிரட்டுருரே!...... கடவுளே! இவன் தலையில் இடி விழாதா?...... பொம்பளையை மிரட்டுகிறவனும் ஒரு ஆம்பிளையா?

*கூட்டத்தில் ஒருவர்*- (போலீஸ்காரர்களைப் பார்த்து) என்னய்யா, அநியாயம்! சும்மா இருக்கிற பெண்ணிடம்

வந்து கலாட்டா செய்கிறே! நான் இப்போதே சூப்ரெண்டுக்கு தகவல் கொடுத்துவிடுவேன்!

*வேருெருவர்*- அநியாயத்திற்கும் ஒரு அளவு வேண்டும்!

*போ-103:* நாங்கள் ஜெம்புலிங்கத்தைத் தேடி வந்தவர்கள்!

*முதல்வர்*- ஜெம்புலிங்கத்தைத் தேடிவந்தால் உள்ளே போய்ப் பார்த்துவிட்டுப் போ! இவளை ஏன் மிரட்ட வேண்டும்? ஜெம்புலிங்கத்தை மடியில் ஒளித்து வைத்திருக்கிருளா?

*எல்லோரும்:* போங்கய்யா! கலாட்டாவை உண்டு பண்ணுதீங்க!

*கூட்டத்தில் ஒருவர்*- போலீஸ் அடக்குமுறை!

*கூட்டத்துள்*- ஒழிக!

(இந்த வேளை ஜெம்பு ஒரு பக்கமாக நழுவிவிட, போலீஸ் காரர்களும் போய்விடுதல்)

[ திரை ]

***

## காட்சி 27

### (ஜெம்புவின் குகை சமீபம்)

இன்ஸ்பெக்டர், இராமலிங்கம், சுற்றிலும் சில போலீஸ்காரர்கள், பொன்னி. (பொன்னி காட்டுப் பெண் வேடத்தில் விறகு பொறுக்கிக் கொண்டிருக்க)

*போ-103:* (அவள் அருகில் வந்து) ஏய் பொண்ணு! நீ என்ன இங்கேயே சுத்துறே! என்ன விஷயம்?

*பொன்*- (கிண்டலாக) என்ன சாமி! தெரியலையா? (கையிலிருக்கும் விறகுச் சுள்ளிகளை அவன் கண்களுக்கருகில் காட்டி) பார்த்தியா சாமி! இது என்னன்னு தெரியுதில்லே? ஆமா, நீங்க என்ன இங்கே தனியா சுத்துறீங்க?

போ-103: (பொன்னியின் அழகை ரசித்தவாறு) அதுவா? அதெல்லாம் ரகசியம்!

பொன்: ஓகோ, என்னிடம்கூட சொல்லக்கூடாதுங்களா? உங்களைப் பார்த்தால்... உங்களைப் பார்த்தால்...

போ-103: (ஆசையோடு) என்ன... என்ன பொண்ணு? என்னைப் பார்த்தால் உனக்கு எப்படி இருக்குது?

பொன்: பரிதாபமாக இருக்குதய்யா!

போ-103: (ஏமாற்றத்துடன்) என்ன இப்படிச் சொல்லுறே!

பொன்- பின்னே என்ன ஐயா, நான் மட்டும் நீங்க கேட்டவுடன் சுள்ளி பொறுக்க வந்தேன்'னு உண்மையைச் சொன்னேன். நீங்க என்ன'ன்ன இரகசியம்'னு சொல்லுறீங்களே! உங்களிடம் எப்படி அன்பு வரும்?

போ-103: அன்பா!... அப்படீன்ன நான் உன்னிடம் உண்மையைச் சொல்கிறேன்... வந்து... (பொன்னி அருகில் நெருங்கி கவனமாகக் கேட்க) நான் தனியாக வரவில்லை! (தூரத்தில் சுட்டி) அங்கே முப்பது போலீஸ்காரங்க கூடவே வந்திருக்காங்க! இங்கே ஜெம்புலிங்கமும் அவன் கூட்டாளிங்களும் சுத்துருனுங்க! அவங்களைப் பிடிக்க வந்திருக்கோம். இந்தமாதிரி திருட்டுப் பயல்கள் இருக்கிற இடத்தில் கன்னிப் பொண்ணு நீ தனியாக வரலாமா?

பொன்- தனியாக வந்தால் திருடங்க கழுத்தை சீவிப்பிடுவாங்களா?

போ-103: கழுத்தை சீவமாட்டாங்க, கற்பை களவாடுவாங்க!

பொன்: (கோபத்தில்) என்ன சொன்னீங்க! என்னையா? என் பக்கத்தில் வர ஒரு பயல் இருக்கிருனு? யார் அவன்? வரட்டும் என் முன்! இது கன்னித் தமிழ் நாடு! பத்தினித் தெய்வம் கண்ணகி பிறந்த வீடு! கற்புக்கு கவரி

மானே ஈடு. யோவ், ஒரு பெண்ணைக் கெடுக்க ஆண்கள் நினைத்தால் மட்டும் போதாது! பெண்ணும் இணங்க வேண்டும்! அவள் விருப்பமின்றி எந்த ஆணும் கெடுத்திடமுடியாது! கண்டவரோடு கை கோர்க்க நான் வெள்ளைக்கார நாட்டிலே பிறக்கல்லை'ய்யா! இந்தக் காட்டுக்குள்ளேயே விறகு பொறுக்க வந்திருக்கேன். ஆம்பிளைங்க கைவரிசை என்னிடம் நடக்காது. (இராமலிங்கம் வருதல்)

*இரா-* என்ன? இங்கே என்ன தகராறு? (பொன்னியைத் தெரிந்தும் தெரியாதமாதிரி) யார் இந்தப் பெண்?

*போ-103:* யாரோ எனக்குத் தெரியாது! ஆபத்தான இடம் போய்விடு'ன்னு சொல்கிறேன். அவ்வளவுதான்.

*இரா:* (பொன்னியிடம் குறிப்பாக) ஆமா, இங்கே துப்பாக்கிப் பிரயோகம் கூட நடக்கலாம். போலீஸ்காரர் உனக்காகத்தான் சொல்கிறார். (கண் ஜாடை காட்டி) நீ கவனமாக—சீக்கிரமாகப் போய் ஆகவேண்டியதைப் பார்!

*போ-103:* என்னு'ங்க. இதையெல்லாம் இந்த சின்னப் பெண்ணிடம் போய் சொல்லுறீங்க...

*பொன்-* துப்பாக்கியா! (பயந்தவள்போல்) அப்படியா? ஐயோ... நான் போகிறேன். (ஓடிவிடுதல்)

*இரா-* (போலீஸ்காரனிடம்) பார்த்தாயா! நான் அப்படிச் சொன்னதனால்தான் இப்படி பயந்து ஓடுது! எல்லாமே கொஞ்சம் புத்தியோடு செய்யணும்!

*போ-103:* அது சரி!

*இரா-* நான் வருகிறேன்... கவனமாகப் பார்த்துக் கொள்!

*போ-103:* சரிங்க! (இராமலிங்கம் போக, இன்ஸ்பெக்டர் வருதல்)

*இன்-* இந்தா'ப்பா-103! யாராவது இந்தப் பக்கம் நடமாடினாங்களா?

*போ-103:* இல்லை'ங்க! நான் கவனமாகத்தான் இருக்கிறேன்!

*இன்-* இருக்காதே! சுற்றி நட!

*போ-103:* சரி'ங்க! (இன்ஸ்பெக்டர் போதல்) செ, உலகத்திலே எவனுக்கெல்லாமோ காதலி கிடைக்கிரு! அன்று ஒரு குட்டி வந்து அடிக்கடி காதலிக்க வரு வேன்'னு சொன்னுள். இன்று ஒரு குட்டி! நைஸா வளைச் சுப் பிடிக்கலாம்'னு இருந்தேன். காரியம் கெட்டது! (தலையில் அடித்து) கர்மம்!...

[ திரை ]

★★★

## காட்சி 27 - A

(காட்டுப் பாதை)

ஜெம்பு, துரை, இராமசாமி. பொன்னி. (மூவரும் குகைக்கு வர, எதிரில் பொன்னி வருதல்)

*ஜெம்பு:* (பொன்னி விரைந்து வருதல் கண்டு) என்ன பொன்னி, நீ வருவதைப் பார்த்தால் ஏதோ...

*பொன்:* ஆமாம். நில்லுங்கள், இல்லே, திரும்புங்கள். இப்பொழுது குகைக்குப் போகவேண்டாம்! துப்பாக்கியும் கையுமாகச் சுற்றி வளைந்து நிற்கிருர்கள் கொலேகாரர்கள்!

*துரை-* நீ எப்படிக் கண்டுபிடித்தாய்?

*பொன்:* காலையிலேயே நம் வீட்டுப் பக்கமாக போலீஸ் போய்க்கொண்டிருந்தது. சந்தேகப்பட்டு மலே ஜாதி வேடமிட்டு காட்டுக்குள் விறகு பொறுக்கவந்தது போல் காத்திருந்தேன். நம் இராமலிங்க அண்ணுவும் அந்த மடையன் 103-ம் சேர்ந்து விஷயத்தைத் தெளிவாக் கிட்டாங்க! போய்விடுங்கள்! (இராமலிங்கம் வருதல்)

*இரா:* ஆமாம்! ஏன் இங்கே நின்று பேசிக்கொண் டிருக்கிறீர்கள்! சீக்கிரம் போங்கள்! (ஜெம்பு யோசனையில் நிற்க) என்ன யோசனை?

*ஜெம்பு:* ஆங்கிலேய அதிகார வர்க்கம், நம்மை அழிக்க முடிவு கட்டிவிட்டது! ஆயுத பலத்தை ஆயுதங்

களால்தான் எதிர்க்கவேண்டும்! இல்லையேல் அழிவுதான். அதற்காகத்தான் சிந்திக்கிறேன்!

*இரா:* சிந்தனையின் முடிவு?

*ஜெம்பு:* துப்பாக்கிக்குத் துப்பாக்கி! நாமும் துப்பாக்கிகளைச் சேகரிக்கவேண்டும்!

*துரை:* அப்படிச் சொல்! சரியான திட்டம்! ஆனால் நிறைவேற்ற வழி?

*ஜெம்பு:* இருக்கிறது! இன்ஸ்பெக்டர், சர்க்கிள்—இவர்களுடைய சலவைக்காரர் யார்?

*இரா:* எனக்குத் தெரியும். நம்ம குப்புசாமிதான்.

*துரை:* எந்தக் குப்புசாமி?

*ஜெம்பு:* கீழத் தெரு, குளத்தங்கரை வீடு குப்புசாமிதானே?

*இரா:* ஆமாம், அவனேதான்!

*ஜெம்பு:* வெற்றி, இப்பொழுதே புறப்படுவோம் குப்புசாமி வீட்டிற்கு! இதுதான் நல்ல சமயம்! போலீஸ் முழுதும் இங்கு நிற்கிறது!...(இராமலிங்கத்திடம்)அண்ணு, நம் காசி குகைக்குள் இருக்கிருன்.

*இரா:* அதைப்பற்றி நீ கவலைப்படாதே! சற்று நேரத்திற்குள் போலீஸ் கவனத்தைத் திருப்பி, நால்வரும் ஊருக்குள் சுற்றுகிருர்கள் என்று கூறி நான் அனுப்பிவிடுவேன். அதற்குச் சாட்சியாக ஊருக்குள் ஏதாவது அறிகுறியைக் காட்டிவிடுங்கள், போதும்!

*ஜெம்பு-* அறிகுறிதானே! தக்க இடத்தில் சரியான சான்று காட்டுகிரேம். ஆனல் சற்று நேரம் அவகாசம் தேவை.

*இரா:* அதை நான் பார்த்துக்கொள்கிறேன். போய் வாருங்கள்! (நால்வரும் போக, இராமலிங்கம் மறுபுறம் போதல்)

[ திரை ]

***

## காட்சி 28

(குப்புசாமி வீடு)

ஜெம்பு, துரை, இராமசாமி, குப்புசாமி

*குப்புசாமி*: (மூவரையும் கண்டு) வாங்க, வாங்க... என்னுங்க திடீர்னு...

*ஜெம்பு*: ஆச்சரியமாக இருக்கிறதா? குப்புசாமி, எங்களுக்குப் போலீஸ் உடை தேவை. உடனே வேண்டும்.

*குப்பு*: (பயந்து) ஐயய்யோ! போலீஸ் உடையைத் தரலாமா? என் தலை போய்விடுமே! தயவுசெய்து அவைகளை மட்டும் கேட்காதீங்க.

*ஜெம்பு*: ஏன் இப்படிப் பயந்து சாகிறாய்? நாங்கள் உன்னிடம் கேட்காமல் எடுத்துக்கொண்டு போனால் என்ன செய்வாய்?

*குப்பு*: என்னுங்க செய்யமுடியும்?

*துரை*: அப்படியே எண்ணிக்கொண்டு உடைகளைக் கொடுத்துவிடு. இன்ஸ்பெக்டரோ சர்க்கிளோ கேட்டால் யாரோ வந்து களவாடிக்கிட்டுப் போயிட்டாங்கன்'னு சொல்லிவிடு. உம்...... சீக்கிரம் எடு!

*ஜெம்பு*: உனக்கு ஒரு ஆபத்தும் வராது. எங்களுக்கு உதவியவர்களை நாங்கள் உயிர் கொடுத்தும் காப்பாற்றுவோம்! உன்னிடம் அவர்கள் மேலால் சலவைக்குப் போடாவிட்டால் கவலைப்படாதே! குப்புசாமியின் வீடு செல்வச் செழிப்பில் கொடிகட்டிப் பறக்கும்! இராமசாமி— குப்புசாமியைக் கவனி! (இராமசாமி ரூபாய் கொடுக்க, குப்புசாமி மனமின்றிப் பெற்றுக்கொண்டு உடைகளைக் கொடுக்க, ஜெம்பு சர்க்கிள் வேடத்திலும், துரை இன்ஸ்பெக்டர் வேடத்திலும், இராமசாமி போலீஸ்காரன் வேடத்திலும் வெளிவருதல்)

*குப்பு*- கச்சிதமாக அமைஞ்சுட்டுதுங்க!

*ஜெம்பு*: போய் வருகிறோம்! (மூவரும் போதல்)

[ திரை ]

***

# காட்சி 29

(அசம்பு போலீஸ் நிலயம்)

போலீஸ் உடையில் ஜெம்பு, துரை, இராமசாமி, ஒரு போலீஸ்காரன் எண் 77 (மூவரும் அதிகாரத்தோடு போலீஸ் நிலயத்துள் நுழைதல்)

*ஜெம்பு:* (போலீஸ் எண்ணைப் பார்த்துவிட்டு) ஏய் 77, என்ன'ப்பா நின்றுகொண்டு தூங்குறே! (போலீஸ் 77. வெள்ளைக்கார பாணியில் வணக்கம் செய்து நிமிர்ந்து நிற்க) உம்... இதற்கொன்றும் குறைவில்லை. தூக்கம் வருது'ன்னு கொஞ்சம் நீட்டிப் படுத்துக்கோ! எங்கே மேன், ஒரு 'பூல்'களையும் காணோம்?

*போ-77:* (பதட்டத்துடன்) எல்லாரும் மலைக்குப் போயிருக்காங்க, எஜமான்! (நாற்காலியை சரியாகப்போட்டு)

*ஜெம்பு-* எதற்குடா? மான் வேட்டைக்கா?

*போ-77:* இல்லை'ங்க. ஜெம்புலிங்கத்தைப் பிடிக்க...

*துரை:* இன்று நீ மட்டும்தான் காவலா?

*போ-77:* நம்பர் நூற்றிஒன்றும் உண்டுங்க!

*ஜெம்பு:* எங்கே போனான்?

*போ-77:* அவங்க மாமியார் செத்துப்போயிட்டாள்'னு தகவல் வந்ததுங்க. எழுதி வைத்துட்டுப் போயிருக்கான். (ஒரு காகிதத்தை எடுத்துக் கொடுத்தல்)

*துரை-* (அதை வாங்கிப் படித்துவிட்டுக் கிண்டலாக) ஏட்டை'ய்யா எங்கே?

*போ-77:* (தயக்கத்துடன்) அவரு... அவரு...

*ஜெம்பு:* (அதிக கோபத்துடன்) என்ன மேன், அவரு, சுவரு...... நான்சென்ஸ், எல்லோரும் இப்படிப் போய்த் தொலைந்தால் நிர்வாகம் எப்படி நடக்கிறது? சீக்கிரம் சொல்லு!

*போ-77:* மகளுக்கு கல்யாணம்... அதற்கு...

*ஜெம்பு:* தாலி வாங்கப் போயிருக்காரா?

*துரை-* ஒன்று கருமாதி, இன்னென்று கல்யாணம்!

*ஜெம்பு:* உனக்கு ஒன்றும் வரவில்லையோ? நீயும் எங்கேயாவது போய்த் தொலைகிறதுதானே! எடு மேன் 'விசிட் புக்!' (போலீஸ் 77 புத்தகத்தை எடுத்துக் கொடுக்க)

*ஜெம்பு:* (அதில் கையெழுத்துப் போட்டவாறு) அக்கவுண்ட் நோட்டு எடு! (போலீஸ்-77 கணக்குப் புத்தகத்தை எடுத்துக் கொடுக்க, கணக்குப் புத்தகத்தைப் பார்த்தவாறு) என்னப்பா...... தோட்டா கணக்கு குறையுது! ஸ்டாக் எங்கே இருக்கு?

*போ-77:* (பக்கத்து அறையைக் காட்டி) இதோ இங்கேதான் இருக்குது. (சாவியை எடுத்துக் கொடுக்க, ஜெம்பு இராமசாமியையும் துரையையும் கண் குறிப்புக் காட்ட, இருவரும் உள்ளே சென்று தோட்டாக்களை எடுத்து மறைத்து வைத்துக்கொண்டு வெளிவருதல்)

*ஜெம்பு-* துப்பாக்கி எங்கே இருக்குது?

*போ-77:* இதோ இருக்கிற ஐந்து துப்பாக்கித்தானுங்க! மீதியெல்லாம் ......

*ஜெம்பு:* மலைக்குக் கொண்டுபோயிருக்காங்களா?

*போ-77:* ஆமாங்க. இதில் ஒரு துப்பாக்கி சுடாது. ரிப்பேர்!

*துரை-* ஜெம்புலிங்கத்தைப் பிடித்துவிடுவார்களா?

*போ-77:* இந்தத் தடவை கண்டிப்பாகப் பிடிச்சுடுவாங்க! (எல்லோரும் துப்பாக்கிகளை எடுத்து தோட்டாக்களால் நிறைத்து கையில் வைத்துக்கொண்டு புறப்படுதல்)

*ஜெம்பு:* (போலீஸ் 77-ஐப் பார்த்து) மிஸ்டர், மிக்க நன்றி. உங்க எஜமான் வந்தால், ஜெம்புலிங்கமும், துரைவாப்பாவும், இராமசாமியும் வந்து தோட்டாக்களையும் துப்பாக்கிகளையும் எடுத்துக்கொண்டு போனார்கள் என்று கூறு. (போலீஸ் திகைக்க) திகைக்காதே 77, நான்தான் ஜெம்புலிங்கம்.

*துரை-* நான்தான் துரைவாப்பா!

*இரா-* நான்தான் இராமசாமி!

*போ-77:* அட பாவி! (உரக்க) திருடன்! திருடன்!...

*ஜெம்பு:* போலீஸ் ஸ்டேஷனில் இருந்தே கூச்சல் போடுகிருயா? வெட்கமில்லையா?

*துரை:* 'கொள்ளைக்காரர்களைப் பிடிக்க வெள்ளைக் காரர்கள் இட்ட திட்டம் சாம்பலாயிற்று' என்று எல்லோரிடமும் கூச்சல் போடு!

*ஜெம்பு:* போய் வருகிருேம்! கூச்சல் போட்டால், (துப்பாக்கியை நீட்டி) முதல் வேட்டு உனக்குத்தான்! (போலீஸ்-77 பயந்து நடுங்க, மூவரும் வெளியேறுதல்)

[ திரை ]

***

## காட்சி 30

(நிழற் காட்சி; ஜெம்புவின் குகை வெளியில்)

ஜெம்பு, துரை, இராமசாமி. (மற்றும் குகையைச் சுற்றி போலீஸ்)

*ஜெம்பு:* சுற்றி நிற்கும் போலீசாரின் கவனத்தைத் திருப்பவேண்டும்!

*துரை:* திட்டத்தைக் கூறு. நிறைவேற்றிவிடுகிறேன்.

*ஜெம்பு:* (பெருமிதத்துடன்) துரை! நீயும், நானும், இராமசாமியும், காசியும் சென்ற பிறவியில் சகோதரர்களாகப் பிறந்திருக்கவேண்டும்.

*இரா:* சென்ற பிறவியில் என்ன? இந்தப் பிறவியிலும் அப்படித்தான்!

*ஜெம்பு:* மனிதன் நட்பினுல் இணையும்போது ஜாதி, மதம் என்ற சிறிய பிளவு சக்திகளெல்லாம் எப்படித் தூள் தூளாகப் போய்விடுகிறது பார்த்தீர்களா? துரை, முஸ்லீம்,

நாம் இந்துக்கள்! அந்தச் சொற்களுக்கே இடமின்றிப் போய் விட்டதே! நட்பின் சக்தி மிகப் பெரிது......

*துரை-* இந்து, முஸ்லீம், கிறிஸ்தவர் என்பதெல்லாம் போலிச் சொற்கள்! பிழைப்பிற்காகப் பிரிவினைவாதிகள் இந்தப் பெயர்களைக் கூறி வாழ்கிருர்கள்! எல்லாம் மனித ஜாதியே! நட்பு இன்றேல் தந்தையும் பிள்ளையும்கூட வேறு ஜாதிகள்தான். நட்பு உணர்ச்சி பரவுமாயின் உலகமே ஒரு ஜாதிதான்!

*ஜெம்பு:* உண்மை! உண்மை! பெரிய உண்மை!...

*துரை:* குகைக்குச் சென்று பேசலாம். முதலில் திட்டத்தைக் கூறு!

*ஜெம்பு:* நாம் மூவரும் பிரிந்து சென்று மூன்று திசைகளிலும் நின்று துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டும்.

*துரை:* அப்படியே செய்வோம். நீ இங்கேயே நின்றுகொள்! நானும் இராமசாமியும் கிழக்கும் மேற்குமாகப் போய்விடுகிரேம்! அப்படியே மூவரும் குகையைஅடைந்து விடுவோம்!

*ஜெம்பு-* நடக்கட்டும். நம்முடைய ஒரு வேட்டுக்கு, எதிரிகளின் ஒன்பது வேட்டு வெத்து வேட்டாகவேண்டும்!

*துரை-* அப்படியே நடக்கும்! (இருவரும் பிரிந்து போதல். மூவரும் மூன்று திசைகளிலுமிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ய, போலீசும் சுடுகிறது. அதோடு சேர்ந்து பாறைகளையும் உருட்ட சில போலீஸ்காரர்கள் நசுங்க, அவர்களின் துப்பாக்கிகளும் ஜெம்புவிடம் கிடைக்கின்றன! இராமசாமி துப்பாக்கிப் பிரயோகத்தில் மடிகின்ருன்! துரை ஓடிச் சென்று இராமசாமியைத் தூக்கி எடுத்து வருதல்)

[ திரை ]

★★★

## காட்சி 31

(ஜெம்புவின் குகை)

(காசி இருக்க ஜெம்பு வருதல்; துரை, இராமசாமியைத் தூக்கிய வாறு பின்னால் வருதல்)

*ஜெம்பு:* (கைகளில் துப்பாக்கிகளுடன்) காசி! பார்த் தாயா பரிசுப் பொருட்களை!

*காசி-* யார் ஜெம்பு அத்தானா?... முதலில் உங்கள் உடையைக் கண்டதும் ..

*ஜெம்பு-* பயந்துவிட்டாயா?

*காசி-* இல்லை, அதிர்ச்சியடைந்துவிட்டேன்!... நீங் கள் மட்டும் வருகிறீர்களே! அவர்கள் எங்கே?

*ஜெம்பு-* துரையும் இராமசாமியும் வரவில்லையா! (துரை, இராமசாமியைத் தூக்கிவருதல்)

*துரை-* வந்துவிட்டேன். இதோ பாருங்கள்!

*ஜெம்பு, காசி:* (அதிர்ச்சியுடன்) இராமசாமி!...... இராமசாமி! என்ன! என்ன நேர்ந்தது?

*துரை-* சூழ்ச்சிக்காரர்களின் துப்பாக்கிக் குண்டுகள் இராமசாமியின் உடலை ஊடுருவி விட்டன! மண்ணில் சாய்ந்துவிட்டான் மாவீரன்!

*ஜெம்பு-* ஐயோ... இராமசாமி... சகோதரனே! சதி காரர்கள் உன் உயிரைக் குடித்துவிட்டார்களே!...(கலங்கி இராமசாமியின் உடலைத் தழுவி அழுதல்)

*துரை:* விண்ணில் கலந்துவிட்டான் வீரன் இராம சாமி. அழுது பயன் என்ன? வீரனுக்கு வீணர்களால் விபத்து நேர்ந்துவிட்டது.

*காசி-* துப்பாக்கி ஒலி கேட்டதும் நான் எண்ணி யது நடந்துவிட்டதே! நம்மவரில் ஒருவன் போய்விட் டானே!

*ஜெம்பு-* (இராமசாமியின் கால்களைத் தொட்டு வணங்கி) இலட்சியத்திற்காக உயிர் விட்ட வீரனே, உன் இலட்சியத்தை நாங்கள் நிறைவேற்றுவோம்! காசி, துரை, அருகில் வாருங்கள். கரங்களை உயர்த்துங்கள்! வீரனின் முன் வீர சபதம் எடுப்போம்! (மூவரும் ஒன்றுசேர்ந்து கரம் உயர்த்தி நிற்க) ஏழைகளைக் கசக்கிப் பிழிந்து வெள்ளையர்களின் கையாட்களாக வாழும் ஐந்தாம் படை உலுத்தர் கூட்டத்தை ஒழிப்போம்! சுதந்திரத்திற்காகப் பாடுபடும் தியாகிகளுக்குத் தொண்டு செய்ய இயன்ற மட்டும் ஆங்கில ஏகாதிபத்தியத்தை அசைத்து ஆட வைப்போம்!

*துரை-* ஓட வைப்போம்!

*ஜெம்பு-* வாழ்க நம் ஒற்றுமை! வளர்க நம் திட்டம்!

*காசி:* ஒழிக அன்னிய ஆட்சி, ஒழிக எத்தர்கள் சூழ்ச்சி! (இராமசாமியின் இரத்தத்தை எடுத்து ஒரு காகிதத்தில் திலகமிட்டு அதன் கீழ் சபதத்தை எழுதுதல்)

*ஜெம்பு:* காசி, நீ ஊருக்குள் சென்று இராமலிங்க அண்ணுவிடமும், பொன்னியிடமும் செய்தியைத் தெரிவித்துவிட்டு, நம்மிடம் இருக்கும் அரிசியை ஏழைகளுக்கு விநியோகம் செய்ய நம்பிக்கையான இருவரை அழைத்து வா! நாங்கள் இங்கு வேண்டியவைகளைச் செய்கிறோம்!

*காசி:* ஆகட்டும்!

*துரை:* மாறு வேடத்தில் போ! (காசி போதல்)

[ திரை ]

★★★

## காட்சி 32

(ஜெம்புவின் வீடு)

சுந்தரி, சீனியம்மாள். (பொன்னி பிறகு வருதல்)

**சுந்-** (சீனியம்மாளிடம்) அக்கா, சரியாக ஏழு நாட்களாகின்றன. அவர் ஒரு தரம் கூட வரவில்லை!

*சீனி*- வராமலிருப்பது உனக்குக் கவலையாகத்தான் இருக்கும். வந்து, போலீஸ் கையில் சிக்கிக்கொண்டால் உன் கவலை அதிகப்படுமே!

*சுந்*- உண்மைதான்!...... இப்பொழுது போலீஸ் நெருக்கடி மிகவும் அதிகமாக இருக்கிறது!

*சீனி*: இருக்காதோ? போலீஸ் ஸ்டேஷனிலேயே போய் துப்பாக்கிகளையும், தோட்டாக்களையும் தூக்கிட்டுப் போயிட்டாங்களே!

*சுந்*- அதனால்தான் இராமசாமி அண்ணு இறந் திட்டாரு!

*சீனி*- அதனால் இல்லை'ம்மா! துப்பாக்கிகளை எடுத் துக்கொண்டு போன செய்தியே போலீஸ்காரங்க ஊருக்குள் வந்தபிறகுதானே தெரியும்! இவங்க கையிலே துப்பாக்கி இருந்ததினலே ஜெம்புவும், துரையும் பிழைச்சாங்க!

*சுந்*: இவ்வளவு விஷயம் உங்களுக்குத் தெரிந்திருக் கிறதே;

*சீனி*: எல்லாம் அந்தப் பொன்னி சொன்னதுதானே!

*சுந்*- பாவம் அந்தப் பொண்ணு. எந்தவித பிரதி பலனையும் எதிர்பார்க்காமல் அவங்களோட சேர்ந்து, துன் பம் அனுபவிக்கிருள்! (பொன்னி ஒரு பையுடன் வருதல்)

*பொன்*- இரண்டு பேருக்கும் வணக்கம்!

*சீனி*: வா! பொன்னி, உன் பெயரைக் கூறிய உடனேயே வந்துவிட்டாயே!

*சுந்*- உனக்கு நூறு வயது!... இவ்வளவு நேரமும் எங்கே போயிட்டே?

*பொன்*: உங்களுக்குத் தெரியாதா?... இன்று அரிசி விநியோகம்! சுமார் முப்பது மூடை அரிசி இருக்கும்! கிராமம் கிராமமாக அள்ளிக் கொடுத்துத் தீர்த்திட்டோம்! ஜெம்பு அண்ணவை எல்லோரும் வாயார வாழ்த்தினுங்க!

சீனி- அவங்க வாழ்த்துருங்க! ஊருக்குத் தொண்டு செய்கிறவங்க வீட்டை மறந்திடுவாங்க'ன்னு சொல்கிறது சரியாயிட்டுது!

பொன்: அவங்க மறந்தாலும் நான் மறப்பேனா? இதோ அரிசி! (பையைக் கொடுத்தல்)

சுந்: பொன்னி, அடுத்த பிறவியில் நான் உன் வயிற்றில் பிறக்கவேண்டும்!

பொன்- ஓ, பிறந்தால் போச்சு!... முதலில், உன் வயிற்றிலுள்ள இரண்டாவது சிங்கம் வெளியே வரட்டும்!

சீனி: அப்படீன்னா இதுவும் ஆண் குழந்தை தான்'னு முடிவு பண்ணிட்டியா?

பொன்: சந்தேகமா?

சுந்- எந்தக் குழந்தையானாலும் சரி. சுதந்திர நாட்டில் பிறக்காவிட்டாலும், வளர்ந்தால் எனக்கு நிம்மதி!

பொன்: சரி, எனக்கு நேரமாகிவிட்டது. குகைக்குச் செல்லவேண்டும். வரட்டுமா?

சுந்: போய்வா'ம்மா. அவரிடம் ஒரு வார்த்தை சொல்லு!

பொன்- நான் சொல்கிறதென்ன! வேளை கிடைக்கும் போது வேங்கையாகப் பாய்ந்து வருவார்! வரட்டுமா?

சுந்- குறிப்பறிவதில் நீ திறமைசாலிதான்! போய்வா! (பொன்னி போதல்)

[ திரை ]

***

## காட்சி 32 - A

(காட்டுப் பாதை)

ஜெம்பு, துரை, காசி. (துணிக் கட்டுகளுடன், ஒரு வண்டி, வண்டிக்காரன் சிங்காரம்)

ஜெம்பு: இன்று என்ன... ஒரு வேட்டையையும் காணோம்!

*துரை:* வரும்! எல்லோருக்கும் படி அளக்கும் பரமன் நம் மீது மட்டும் கடைக்கண் காட்டாதிருப்பானே? ஜெம்பு, மேட்டை வெட்டினால்தான் பள்ளம் நிரக்கும்!... நம் கிராமத்து செல்வந்தர்களைக் கொள்ளையடித்தே நம் கிராமத்து ஏழைகளை வாழ்விக்கலாம்!

*ஜெம்பு:* வாழ்விக்கவேண்டாம். வாழ வழி காட்டினால் போதும்! உழைக்க வசதி செய்து கொடுத்தால் போதும். உலுத்தர்களின் தலையீடு ஒழிந்தால் போதும். அதோடு நம் கிராமத்தை மட்டும் பார்த்தால் போதாது. அப்படிச் செய்வது அரசாங்கத்தின் கவனத்தைச் சிதறடிக்கவும் முடியாது! எனவே எடுப்பதும், கொடுப்பதும் பரந்த அளவில் நடைபெறவேண்டும்! ஏழைகள் நம் கிராமத்தில் மட்டுமல்ல. எங்கும் இருக்கிறார்கள். 'செல்வத்தைச் சேர்க்கவே நாம் அவதரித்திருக்கிறோம்' என்று எண்ணி, செருக்குற்று, பாதகங்கள் பல புரிந்து வறியோரை வாட்டி வதைத்து, நாட்டிலே பெரிய மனிதன் போர்வையில் நடமாடும் புல்லர்கள் எங்கிருப்பினும் திருத்தப்படவேண்டும்; அல்லது ஒழிக்கப்படவேண்டும்! (தூரத்தில் மணிச் சத்தம் கேட்க)

*துரை:* வேட்டை வருகிறது!

*ஜெம்பு:* உண்மை. மறைந்து நில்லுங்கள். நான் மட்டும் இங்கு நிற்கிறேன். (துரையும், காசியும் மறைந்து நிற்க, துணிக் கட்டுகளுடன் வண்டி ஒன்று அருகில் வருதல்)

*ஜெம்பு:* (கையிலிருக்கும் கம்மை உயர்த்தி) நிறுத்து வண்டியை!

*சிங்காரம்:* (வண்டியை நிறுத்தியவாறு) யார் நீ?

*ஜெம்பு:* திருடன்!

*சிங்:* பகற்கொள்ளையா?

*ஜெம்பு:* எப்படியேனும் வைத்துக்கொள்! துணிக் கட்டுகளை இறக்கு.

*சிங்-* (சிரித்துக்கொண்டு) தம்பி, யார'ப்பா நீ. தொழிலுக்குப் புதிதாக வந்திருக்கிருயா? இந்தக் காட்டுப் பாதையில் ஒருவன் வண்டி ஓட்டிக்கொண்டு வரவேண்டுமாளுல் அவன் எப்படிப்பட்டவனுக இருக்கவேண்டும்! ஜெம்புலிங்கத்தைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிருயா? அவன் கூட என் பெயரைக் கேட்டால், திசை தெரியாமல் ஓடி விடுவான்! மேலும் நான் தனியாக வரவில்லை. பின்ஞல் ஆட்கள் இருக்கிருர்கள். (பின் பக்கம் திரும்பியபடி) டேய் வீராசாமி, திருவேங்கடம்! இறங்குங்கடா!...

(இருவர் இறங்கி வருதல்)

*ஜெம்பு:* (பயந்தவன்போல் நடித்து) ஐயா, என்னை விட்டுவிடுங்க! உங்க பேரு என்னுங்க?......

*சிங்-* (ஆணவத்துடன் சிரித்து) சிலம்படி ஆசான் சிங்காரம்! வண்டியில் இருக்கிற ஜவுளிகள் எல்லாம் ராவ் பகதூர் காவன்ஞ—மாவன்ஞ முதலாளிக்கு சொந்தமானது. போலீஸ் இலாகாவே அவர் பக்கம்! ஓடிப்போ!

*ஜெம்பு:* இவ்வளவு பெரிய முதலாளியுடைய சொத்து'ன்ஞ சும்மா போகமுடியாதே! எ'ப்பா (குழைவுடன்) சிங்காரம், மரியாதையாகக் கட்டுகளை இறக்கி வையடா! ஜெம்புலிங்கம் கூட உன் பெயரைக் கேட்டு ஓடுவாஞ? (விசில் அடித்து, அழுத்தமாக) நான்தான் அந்த ஜெம்புலிங்கம், எங்கே, என்னை ஓட்டு பார்க்கலாம்!

(துரையும், காசியும் வருதல்)

*சிங்-* அதையும் பார்த்துவிடுகிறேன்! (மீசையை முறுக்கியபடி கையில் கம்புடன் சாடி வருதல்)

*ஜெம்பு:* துரை, காசி! நீங்கள் அவர்களைக் கவனியுங்கள். ஆசானை நானே பார்த்துக்கொள்வேன்! (சிங்காரம் குழுவினருக்கும், ஜெம்பு, துரை, காசிக்கும் பலத்த சிலம்படி நடக்கிறது. முடிவில், சிங்காரத்தின் கம்பு முறிந்து கையில் அடிபட்டு கீழே விழுகிருன்! துரையும், காசியும் கூட வந்தவர்களை விரட்டிவிட்டு, கீழே விழுந்த சிங்கா

ரத்தை அடிக்க கம்பை ஓங்க, ஜெம்பு தடுத்துவிடுதல்) அவனை அடிக்காதீர்கள்; அது வீரமல்ல; கோழைகளின் செயல்! சிங்காரம் வெறும் வாய் வீரனல்ல! செயலிலும் வீரமிருக்கிறது. அவனிடம் தொழிலும் இருக்கிறது. அவனை நாம் பாராட்டவேண்டும்!

*சிங்:* ஜெம்பு, உன்னைக் கொள்ளைக்காரன் என்று சொன்னேன்! கொலை செய்யவும் துணிந்து கம்புடன் இறங்கினேன்! என்னை மன்னித்துப் பாராட்டிய உன் வெள்ளை உள்ளம் இப்போதே உணர்ந்தேன். துணிக் கட்டுகளை எங்கு கொண்டுவைக்கவேண்டுமென்று சொல்! நானே சுமந்து வருவேன்! ஏனென்றால், இந்தத் துணிகள் உனக்காக அல்ல, ஏழைகளின் மானம் மறைக்க உதவும் என்பதும் எனக்குத் தெரியும்!

*ஜெம்பு:* (துரையையும், காசியையும் பார்த்து) பார்த்தீர்களா, இதுதான் வீரனின் பண்பு! நல்ல காரியத்திற்குப் பயன்படுமென்று தெரிந்ததும் 'நானே சுமந்து வருவேன்' என்கிறான்! சிங்காரம், இன்றுமுதல் நீ என் நண்பன். என் உதவி உனக்கு எப்போதும் உண்டு. கட்டுகளை கீழே இறக்கிவிட்டு நீ சென்றுவிடு.

*சிங்:* ஆகட்டும் நண்பா! (போதல்; ஜவுளிக்கட்டுகள் இறக்கப்பட்டு, குகைக்குக கொண்டு போகப்படுகிறது)

[ திரை ]

***

## காட்சி 33

### (நம்பியார் கோவில் திருவிழா)

மக்கள் கூட்டத்துள், துணிக் கட்டுகளுடன் ஜெம்பு, துரை, காசி. மற்றும், ஒரு கிழவி ஒரு பலகார வியாபாரி.

*ஜெம்பு:* (ஏழைக் கிழவி ஒருத்தி கந்தல் உடையுடன் செல்வது கண்டு) ஏய் பாட்டி! எங்கே போறே?

*கிழவி-* கோவிலுக்குப் போறேம்ப்பா......

*ஜெம்பு:* என்ன பாட்டி! கடவுளை வணங்குவதற்குக் கந்தல் துணியைக் கட்டிக்கிட்டுப் போறியே! நல்ல சேலை யாகக் கட்டிக்கிட்டுப் போ!

*கிழவி-* நல்ல சேலை எங்கே இருக்குது? எனக்குக் கொடுத்துவச்சது கந்தல் துணிதான்.

*துரை-* அப்படிச் சொல்லாதே! நல்ல துணி உடுத்துத் தான் கடவுளை வணங்கணும்.

*கிழவி:* அதுதான் இல்லேன்னு சொன்னேனே!

*ஜெம்பு-* நாங்க கொடுக்கிறோம். உடுத்துக்கோ!

*துரை:* இதோ (பட்டுப் புடவையை எடுத்து) பட்டுச் சேலை...கட்டிக்க!

*கிழவி-* (வியப்பும், மகிழ்ச்சியும் மிளிர) ஆ!...... பட்டுச்சேலை. கோடிச் சேலையா? (சேலையை மார்போடு அணைக்க)

*ஜெம்பு:* கோடிச் சேலையில்லை, பாட்டி. ஒரே சேலை தான்.

*கிழவி:* (சிரித்து) வேடிக்கையானவங்க. புதுச் சேலையா கொடுத்திருக்கீங்களே'ன்னு சொன்னேன். நீங்க ஒரு குறைவும் இல்லாமல் தீர்க்காயுசா இருக்கணும்!...... யாரப்பா நீங்க?.......

*ஜெம்பு:* நாங்களா? கள்ளர்கள்!

*கிழவி:* தானம் வழங்கும் கள்ளர்களா?...... ஏழை களின் துயர் நீக்கும் கள்ளர்களா?...அப்படியானால் ஜெம்பு லிங்கம், துரைவாப்பா, காசி......

*ஜெம்பு:* ஆமாம்! பாட்டி, நாங்களேதான்!

*கிழவி:* (உருக்கமாக) தமிழ் நாட்டுச் தவச்செல்வர் களே!... உங்களைப் பிடித்து தூக்கிலிட்டுக் கொல்ல போலீ சார் முயற்சிக்கிறார்களாமே! படுபாவிகள், கொள்ளைக்காரர் என்று கூட உங்களுக்குப் பட்டம் கொடுத்திருக்கிறார் களே!

*துரை:* அந்தக் கொடுமைக்காரர்களிடம் போய், மூவரும் கொள்ளைக்காரர்கள் அல்ல, கொடையாளிகள் என்று நீ சொல்லு பாட்டி!

*கிழவி:* சொல்லுவேன், ஊர் முழுதும் சொல்லுவேன். வரட்டுமா?

*ஜெம்பு:* போய்வா! (கிழவி போதல்; ஒரு குருட்டுப் பிச்சைக்காரன், அவன் மனைவியுடன் குழந்தையையும் தோளில் போட்டுக்கொண்டு வருதல்)

*ஜெம்பு:* இந்தாப்பா-நில்லு! எங்கே போறே?

*பிச்சைக்காரன்:* என்னைப் பார்த்தாலே தெரிய'ல்லைங்களா? பிச்சை எடுக்கப் போறேன் சாமி!

*ஜெம்பு:* இது உன் மனைவிதானே!

*பிச்சை:* ஆமாங்க. (குழந்தையைக் காட்டி) இது என் குழந்தை'ங்க!

*துரை:* (பிச்சைக்காரனின் மனைவியைப் பார்த்து) இந்தா'ம்மா, உன் உடம்புதான் நல்லாவாட்டசாட்டமா இருக்குதே! எங்கேயாவது கூலி வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றக்கூடாதா?

*பிச்சை:* காப்பாற்றலாமுங்க. ஆனால் ஏதாவது வீடுகளில் வேலை செய்யணும்'னு... வீட்டு எஜமானர்களிலிருந்து தோட்டக்காரர் வரைக்கும் இடம் கொடுத்து நடக்கவேண்டியதிருக்குது'ங்க! அவள் உடம்பே அவள் பிழைப்பைக் கெடுக்கிறது!...

*ஜெம்பு:* உண்மைதான்! ஏழையின் மனைவி எல்லோருக்கும் கொழுந்திதானே! (துரையைப் பார்த்து) அவளுக்கு ஒரு சேலை, அவனுக்கு ஒரு வேட்டி, துண்டு, குழந்தைக்கு ஒரு துணி ஒரு மாதச் செலவுக்குப் பணம்...

*துரை:* (துணியும் ரூபாயும் எடுத்து) இந்தாங்க. சந்தோஷமாகப் போய் வாருங்கள். பிச்சை எடுக்கவேண்டாம். ஒரு சிறு கடை வைத்து, கருத்தாக வியாபாரம் செய்து முன்னேறுங்கள்.

இருவரும்: (மகிழ்ச்சியுடன்) சாமி... கடவுளே... நீங்க நல்லா இருக்கணும்! உங்க பேரு?...

*துரை:* ஜெம்புலிங்கம்'னு...... கேள்விப்பட்டிருக் கிறீர்களா?

*பிச்சை:* துரைவாப்பா, காசி... இராமசாமி...

*துரை:* ஆமாம். அவங்க நாங்கள் தான்.

*பிச்சை:* கடவுள் உங்களுக்கு நிறையக் கொடுப்பா ருங்க... நாங்க வரட்டுமா?

*ஜெம்பு:* போய் வாருங்கள்! சொன்னபடி முன்னேற வேண்டும்!

*பிச்சை:* ஆகட்டுமுங்க! உங்க பேச்சை மீறினல் வாழமுடியாது'ன்னு தெரியுமுங்க...

*ஜெம்பு:* போய் வாருங்கள்! (பிச்சைக்காரர் போக, பலகார வியாபாரி ஒருவன் வருதல்)

*பலகாரவியாபாரி:* முறுக்கு... வடை... முறுக்கு... சூடு முறுக்கு...

*துரை:* ஏய் முறுக்கு... இப்படி வா!

*பல-வியா:* (பயந்து) ஐயோ... (ஓடுதல்)

*காசி:* ஏய், கிறுக்கு! ஏன் ஓடுகிருய்?... (பின்னுல் சென்று வியாபாரியைப் பிடித்து வருதல்)

*பல-வியா:* (பயந்து) ஐயா.... சாமி!... நீங்க நல்லா இருப்பீங்க. நான் பிள்ளைகுட்டிக்காரன்... என்னை விட்டு டுங்க'ய்யா....

*துரை:* ஏனய்யா கத்துறே? உன்னைக் கொலை செய்யவா!......

*பல-வியா:* ஐயோ! கொலை!... என்னையா கொலை செய்ய?

*ஜெம்பு:* இந்தா'ய்யா. வீணுகக் கூச்சல் போடாதே! உன்னை கொலைசெய்யக் கூப்பிடவில்லை! அமைதியாக நில்!

*துரை:* நீ வியாபாரத்திற்குத்தானே வந்தே?

*பல-வியா:* ஆமாங்க... உங்களைப் பார்த்தால்...

*ஜெம்பு:* மனிதர்களாகத் தெரியவில்லையா?

*பல-வியா:* தெரியுதுங்க... ஆனால்...

*ஜெம்பு:* ஆனவும் இல்லை. ஆவன்னவும் இல்லை! விலையைச் சொல்லு!

*துரை:* பேசாமல் கொடுத்துவிட்டு விலையை வாங்கிக் கொண்டு போ!

*பல-வியா:* ஆகட்டுங்க... (முறுக்கு, வடை முதலியவைகளை எடுத்துக் கொடுத்தவாறு) ஊரிலே... கொள்ளையும் கொலையும் நடப்பதாகப் பேசிக்கிறாங்க...

*ஜெம்பு:* ஆமா, கொலைகாரங்களும், கொள்ளைக்காரங்களும் ஊருக்குள்ளேதான் இருக்கிறாங்க. கவனித்து நடந்துக்க. நாங்கள் ஊருக்கு வெளியே இருக்கிறவர்கள்! (மூவரும் மொத்தமாகப் பலகாரங்களை வாங்கிக்கொள்ளுதல்)

*துரை:* அத்தனைக்கும் விலை என்ன?

*பல-வியா:* பதினைந்து ரூபாய் கொடுங்கள்!

*காசி:* (சில பட்டுத்துணிகளைக் கொடுத்து) இந்தா! இதில் ஐம்பது ரூபாய்க்கு மேல் துணிகள் இருக்கின்றன. எடுத்துக்கொள்! (பலகார வியாபாரி துணிகளைப் பெற்றுக் கொண்டு வியப்புடன் மூவரையும் பார்த்து முழிக்க)

*ஜெம்பு:* ஆச்சரியப்படாதீர்கள்! நாங்கள் துணி வியாபாரிகள். இதுவரைக்கும் ஒரு துணிகூட விற்கவில்லை! பசி தாங்கமுடியவில்லை, அதனால்தான். எடுத்துக்கொள்! விற்று உன் பணத்தை எடுத்துக்கொள். மீதித் துணியை உன் மனைவிக்குக் கொடு, போ!

*பல-வியா:* (மகிழ்ச்சியுடன், வணங்கி) ஐயா, புண்ணியவான்களே! உங்களை நான் தவறாக எண்ணியதற்கு மன்னித்துக்கொள்ளுங்கள். பதினைந்து ரூபாய் பலகாரத்திற்கு இவ்வளவு பட்டுத் துணிகளா? நான் இனிமேல் துணி வியாபாரிங்க... வரட்டுங்களா?

*ஜெம்பு:* போய் வா! (பலகார வியாபாரி புறப்பட்டதும், சற்றுத் தூரத்தில் இன்ஸ்பெக்டரும், இரு போலீஸ் காரர்களும், அப்பாவுவும், துணி வியாபாரி ராவ்பகதூர் காவன்ன மாவன்ன முதலாளியும், சிங்காரமும் வருவதை மூவரும் காணுதல். தூரத்தில் சுட்டிக்காட்டி) துரை, காசி! கூலிப்பட்டாளமும், அந்த முதலாளியும், சிங்காரமும் வருகிறார்கள்.

*துரை, காசி:* பார்த்தோம்!

*துரை:* என்ன செய்யவேண்டும்?

*ஜெம்பு:* சிங்காரம், துணி களவு போய்விட்டது' என்று கூறியிருப்பான்! அந்த ராவ்பகதூர் உடனே போலீஸில் குற்றப் பத்திரிகைத் தாக்கல் செய்திருப்பான். எல்லோரும் துப்பு கண்டுபிடிக்க இங்கு நுழைந்திருக்கிறார்கள். நாம் இப்பொழுது நழுவிவிடவேண்டியதுதான்!

*துரை, காசி:* பிரிந்தா, சேர்ந்தா?

*ஜெம்பு:* சேர்ந்தே போய்விடுவோம்!

*துரை:* சரி. (மூவரும் அகன்றுவிடுதல்)

*பல-வியா:* துணி!...... அசல் பட்டுத் துணி......
(வேறு புறமாகப் போதல்)

*இன்ஸ்பெக்டர்:* (அப்பாவுவைப் பார்த்து) என்ன சி. ஐ. டி சார். ஆடு முழித்தாற்போல் முழிக்கிறீர்களே! தவிர ஒரு பயனும் இல்லை. கூட்டத்திற்குள் பார்வையைச் செலுத்துங்கள். திருவிழாக் கூட்டத்திற்குள் தங்கள் திருவிளையாடலை நடத்த கண்டிப்பாக வந்திருப்பார்கள்!

*அப்-* என்னிடம் இப்படியெல்லாம் சொல்ல வேண்டுமா? (குருடனும் அவன் மனைவியும் வருவதை முதலாளி கண்டுகொள்ளுதல்)

*முதலாளி-* அதோ!... அதோ பாருங்கள்! அந்தப் பிச்சைக்காரன் உடுத்திருக்கும் வேஷ்டி, அவள் கட்டியிருக்கும் புடவை... எல்லாம் என் துணிகள்தான்... பிடியுங்கள்!

இன்- (பிச்சைக்காரர்களைப் பார்த்து) இருக்கும். பிச்சைக்காரப் பயலுக்குப் பட்டுத் துணிகளா? (போலீஸ்காரர்களைப் பார்த்து) பிடித்து வாருங்கள். (போலீஸ்காரர்கள் விரைந்து பிச்சைக்காரர்களைப் பிடித்து வருதல்; அடுத்து, சேலை வாங்கிய கிழவியும் அந்தப் பக்கமாக வருதல்)

*முத-* சார், சார்!... இதோ...இவள் உடுத்தியிருக்கும் பட்டுப் புடவையும் என் துணியேதான்!

இன்- ஏய் கிழவி, நில்! (கிழவி பயத்துடன் நிற்க) நீ உடுத்தியிருக்கும் பட்டுச் சேலை உனக்கு எப்படிக் கிடைத்தது?

*கிழவி-* ஒரு மகராசன் சும்மா கொடுத்தாருங்க!

*முத-* கொடுப்பாரு—கொடுப்பாரு. ஏன் கொடுக்க மாட்டாரு?

இன்- நீங்க பேசாதீங்க சார்! (கிழவியைப் பார்த்து) ஜெம்புலிங்கம் கொடுத்ததுதானே!

*கிழவி-* ஆமாங்க. அந்தப் பெரிய மனுஷன் கொடுத்ததுதானுங்க! அவரு நல்லா இருக்கணும்!

இன்- (கோபத்தில்) சட்' நிறுத்து. (பிச்சைக்காரனைப் பார்த்து) ஏண்டா! உனக்கும் தானம் கிடைத்த துணிதானே?

*பிச்சை:* எனக் குமட்டுமில்லீங்க, என் பொஞ்சாதிக்கும், குழந்தைக்கும் கூட கொடுத்தாருங்க! தர்ம புண்ணியவான்.

இன்- நிறுத்துடா!

*பல-வியா:* (பட்டுத் துணி ஒன்றைக் கையில் எடுத்து விரித்தபடி) அசல் பட்டு! அருமையான பட்டு... விலை மலிவு! துண்டு ஒன்றுக்கு மூன்று ரூபாய்தான்... பட்டு ரவிக்கைத் துண்டு!...

*முத-* (அவன் அருகில் சென்று துணியைத் தொட்டுப் பார்த்து) அட பாவி, நீ பலகார வியாபாரி அல்லவா?

*பல-வியா-* அது கொஞ்ச நேரத்திற்கு முன்னாலே! இப்பொ பட்டு வியாபாரி. உங்களுக்கு வேணுங்களா?

*முத-* (இன்ஸ்பெக்டரைப் பார்த்து) சார், இதோ மூன்றாவது சாட்சி! திருட்டுப் பயல்!என் துணிகளைக் கொள்ளையடித்து என் முன்னாலே விற்கிறான்! இவனுக்கும் ஜெம்புலிங்கத்திற்கும் சம்பந்தம் இருக்கும். விடாதீங்க!...

*சிங்-* ஜெம்புலிங்கம் கொள்ளையிடவில்லை'ன்னு நான் தான் சொன்னேனே!

*முத-* நீ பேசாதே! பெரிய சிலம்படி வீரர். வண்டித் துணிகளையும் பறிகொடுத்துவிட்டு வந்து நிற்கிறே! வெட்கமில்லையா உனக்கு!

*சிங்-* (பலகார வியாபாரியைப் பார்த்து) ஐயா, உங்களுக்கு இந்த துணிகளைக் கொடுத்தது ஜெம்புலிங்கமா?

*பல-வியா-* இல்லை'ங்க! பெரிய ஜவுளி வியாபாரி ஒருவர் கொடுத்தாருங்க! வெளிநாட்டுக்காரர்!

*முத-* (கோபத்தில்) சிங்காரம், நீ பேசாதே!

*சிங்-* சும்மா நிறுத்தய்யா!

இன்- (கோபத்தில்) நாங்கள் இவர்களை விசாரிக்க வேண்டுமா? உங்கள் சண்டையை நிறுத்தவேண்டுமா? உங்க இரண்டு பேருக்கும் கொஞ்சமாவது மூளையிருக்கிறதா?

*முத-* இல்லை'ங்க!

*சிங்-* ரொம்ப சரி! (இன்ஸ்பெக்டரைப் பார்த்து) அவர் ஒப்புக்கொண்டுவிட்டார். நீங்கள் விசாரணை செய்யுங்கள்.

இன்: (கோபத்தை அடக்கியவாறு, பலகார வியாபாரியைப் பார்த்து) டேய், பலகாரம்! இந்தத் துணிகளெல்லாம் உனக்கு எப்படிக் கிடைத்தது?உண்மையைச் சொல் இல்லாவிட்டால், உன்னைப் பலகாரம் செய்துவிடுவோம்!

(போலீஸ்காரர்களைப் பார்க்க)

*பல-வியா*: (பயந்து) எஜமான், நான் உண்மையைச் சொல்கிறேனுங்க.... யாரோ மூன்று பேர், வெளிநாட்டுக் காரங்களாம்... என்னிடமிருந்த பலகாரங்களை வாங்கிக் கொண்டு, இந்தத் துணிகளை எல்லாம் கொடுத்தாங்க.

*இன்*: பலகாரத்தை வாங்கிக்கொண்டு, உன்னைப் பட்டு வியாபாரம் செய்யச் சொன்னுங்களா?

*பல-வியா*- ஆமாங்க. வேறு எதுவுமே எனக்குத் தெரியாதுங்க. எஜமான்! நான் பிள்ளைக்குட்டிக் காரனுங்க.

*இன்*: (யோசித்தவாறு) மூன்று பேர்...அப்படீன்ன, கண்டிப்பாக அந்த ஜெம்புலிங்கம், காசி, துரைவாப்பா தான்!.........

*முத*- (சிங்காரத்தைப் பார்த்து, கோபத்தில்) கேட்டாயா? ஜெம்புலிங்கம் இல்லை என்று சொன்னுயே!

*இன்*: சரி, முதலில் எல்லோரும் துணிகளைப் போலீஸ் ஸ்டேஷனில் கொண்டு வைத்துவிடுங்கள்! (போலீஸ்காரர் களைப் பார்த்து) உம் அழைத்துக்கொண்டு போ. அத்தனை துணிகளையும் வாங்கி வை!

*கிழவி*: நான் கொடுக்கமாட்டேன்.

*இன்*: (கோபத்தில்) ஏன் கொடுக்கமாட்டாய்?

*கிழவி*: (உறுதியாக) முதலில் நீங்கள் போட்டிருக் கிற உடையைக் கழ்ட்டிக் கொடுங்கள். பிறகு நான் கொடுக்கிறேன்! கொஞ்சமாவது யோசனை இருக்கா? கிழவியானுலும் மானத்தோடுதான் இருக்கிறேன்.

*இன்*: (வெட்கத்துடனும், ஆத்திரத்துடனும்) ஏய் கிழவி, பிரசங்கம் செய்யாதே! (போலீசைப் பார்த்து) இந் தக் கிழவியை அங்கு கொண்டு போடு! நான் வருகிற வரைக்கும் கிடக்கட்டும்! (போலீசார், எல்லோரையும் அழைத்துப் போதல்)

[ திரை ]

***

# காட்சி 34

## (காட்டுப் பாதை)

ஜெம்பு, துரை, காசி. (பாதையில் ஒரு வண்டி, வண்டிக்குள் பெண் (பார்வதி) ஒருத்தி, வண்டிக்காரன்; காமாட்சி பிறகு வருதல்)

*ஜெம்பு:* (வண்டி வருவது கண்டு) துரை, காசி! வண்டிக்குள் ஏதோ பெரிய சுமை வருவதுபோல் தெரிகிறது!

*துரை-* அதையும் பார்த்துவிடலாமே..... இன்று முழுவதும் செலவுதானே நடந்தது. இதில் ஏதாவது வரவு இருக்கிறதா, பார்ப்போம்.

*ஜெம்பு:* (வண்டி சமீபித்ததும், வண்டியின் முன் நின்று, வண்டிக்காரனிடம்) அண்ணைச்சி! வண்டியை நிறுத்துங்கள்.

*காசி:* (பின்புறம் வந்து) உள்ளே யார் இருக்கிறீர்கள்?

*பார்வதி:* (வண்டிக்குள் இருந்தவாறு) கேட்கிறது யாருடா? வண்டியை நிறுத்தி வம்புக்கு வந்தால் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகணும்ணும் தெரியுமோ?

*ஜெம்பு:* உள்ளேயிருப்பது போலீஸ் இன்ஸ்பெக்டரின் மனைவியா?

*பார்:* யாருடா அவன்... பேச்சை நன்ன அளந்து பேசுடா. நான் யாருன்னு தெரியுமோ இல்லியோ, சி.ஐ.டி. இன்ஸ்பெக்டர் ரெங்கசாமியோடே தங்கையாக்கும்! எங்க ஆத்துக்காரருக்கு கலெக்டர் ஆபீசில் வேலை! (வண்டிக் காரனைப் பார்த்து) சொல்லேண்டா .. ...

*காசி:* (வண்டிப் படுதாவை உயர்த்தியவாறு) இவ்வளவு செல்வமும் செல்வாக்கும் உள்ள குடும்பமா?

*ஜெம்பு:* அப்படீன்னா நகைகளைக் கழற்றிக் கொடுக்காமல் இங்கிருந்து போகமுடியாதே! அம்மா, உங்களை எந்தவிதத் தொந்தரவும் செய்யமாட்டோம். தயவு செய்து

அணிந்திருக்கிற நகைகளை மட்டும் நைசாகக் கழட்டிக் கொடுத்துவிட்டு உடம்பை அலட்டிக்காமல் ஆத்துக்குப் போய்ச் சேருங்கள்.

*பார்:* (வண்டிக்காரனிடம்) அட, அடுமண்டு போவான்!...... பார்த்துண்டு இருக்கியே! இறங்கி நாலு போடு போடேண்டா!

*வண்டி:* நான் உயிரோடு இருக்கிறது உங்களுக்கு விருப்பமில்லையா?... அம்மா, இவங்க எவ்வளவோ நல்ல வங்க. நகைகளை மட்டும்தான் கேட்கிருங்க வேறுயாராவது இருந்தால் நம்மை அடித்துக் கொன்றுவிட்டு, நகைகளு டன் ஓடிப் போயிடுவாங்க! பேசாமல் கொடுங்க அம்மா!

*பார்-* நாசமாப் போக!......... நீயுமா கொடுக்கச் சொல்லுறே!

*ஜெம்பு:* உம், வீணுகக் கூச்சல் போட்டுப் பயன் இல்லை! சீக்கிரம் கொடுத்துவிடுங்கள். (துப்பாக்கியைக் காட்டி) சீக்கிரம்!

*வண்டி:* (மூவரையும் பார்த்து) ஒன்று, இரண்டு, மூன்று...... அப்படீன்ன... ஜெம்புலிங்கம், காசி, துரை வாப்பா...! அம்மா!...

*பார்:* (பயந்து) ஆ!... ஜெம்புலிங்கமா?... (நகை களைக் கழட்டிக் கொடுத்து) போயிங்டுங்க... அப்பா...!

*ஜெம்பு:* (நகைகளை வாங்கியவாறு) மிக்க நன்றி! தாங்கமுடியாத அளவுக்கு தங்க நகைகளை அணிந்து ஏழைகளின் வயிற்றெரிச்சலை வளர்த்தால் இப்படித்தான் ஆபத்து வரும்! ஏழைப் பெண்கள் பார்த்து ஏங்கி அழத் தானே, உங்களைப்போன்ற செல்வந்தர் நகை அணிகிருர் கள்! போய் வாருங்கள்.

*பார்:* (வண்டிக்காரனிடம்) சீக்கிரமா போய்த் தொலை'டா! (வண்டி போதல், மூவரும் உரக்கச் சிரித் தல்; தயிர்ப் பானையுடன் காமாட்சி என்ற கிழவி வருதல்)

*ஜெம்பு:* பாட்டி, பானையில் என்ன இருக்கிறது?

*காமாட்சி:* கொஞ்சம் தயிர் இருக்கிறது அப்பா! விற்று—மீதி.

*துரை:* உன் பேரு என்ன பாட்டி?

*காமா-* காமாட்சி'ன்னு பேரு.

*காசி-* ஏன் பாட்டி, இவ்வளவு வயசான பிறகும் தயிர் விற்கிறியே! வீட்டிலே உனக்கு யாரும் கிடையாதா?

*காமா-* இல்லாமே என்ன'ப்பா. என் மகன் பிள்ளை பேத்தி ஒருத்தி இருக்கா. கல்யாண வயசு!

*ஜெம்பு:* மகனும், மருமகளும்?

*காமா-* அவங்க இருந்தால் எனக்கு என்ன கவலை? இரண்டுபேரும் ஒருவர்பின் ஒருவராக இந்த உலகத்தை விட்டே போயிட்டாங்க. நானும் கூடவே போயிருப்பேன். பாவம் அந்தப் பொண்ணு என் தலையிலே வந்து சேர்ந்து போச்சு!

*ஜெம்பு:* ஐயோ பாவம்!... பாட்டி, எனக்குத் தாகமா இருக்கு... உன்னிடம் இருக்கிற தயிரைக் கொடேன்!

*காம-* (தயிர்ப் பானையை எடுத்து) தாராளமா குடிச் சுக்க! என் மகன் கேட்டால் இல்லை என்பேனா?

*ஜெம்பு:* எங்களிடம் காசு ஒன்றுமில்லை!

*காமா-* யார் காசு கேட்டார்கள்? காசுதானா பெரிசு. தாகத்திற்கு தயிர்கொடுத்த புண்ணியமில்லே பெரிசு. குடிங்க. (மூவரும் தயிரைக் குடித்தல்)

*துரை:* பாட்டி, இந்தக் காட்டில் தனியாக வருகி ருயே, தயிர் விற்ற பணத்தை யாராவது கள்ளர்கள் தட்டிப் பறித்துக்கொண்டால் என்ன செய்வாய்?

*காமா:* கள்ளர்களும் ஏழைகள்தானே. பணக்காரர் களாக இருந்தால் நீங்கள் சொல்லுவதுபோல வழிப்பறிக்கு வருவானேன்! ஊருக்குள் இருந்தே வியாபாரம் என்ற பெயரில் கொள்ளையடிப்பாங்களே!

*ஜெம்பு:* ஆகா! எத்தனை கருத்து நிறைந்த சொற்கள்! பாட்டி, நீ எவ்வளவு அறிவாளி!

*காமா:* இதில் என்ன'ப்பா அறிவு? ஊரிலே நடக்கிற உண்மையைச் சொன்னேன். வரட்டுமா?

*ஜெம்பு:* நில்லு பாட்டி. உன் பேத்தி கல்யாணத்திற்கு நகையெல்லாம் செய்திட்டியா?

*காமா:* ஒரு முத்துமாலை மட்டும் செய்தேன். போன மாசத்திலே மாடு வாங்க ரூபாய் குறைந்துவிட்டது. அதை முப்பது ரூபாய்க்கு ஈடு வைத்திருக்கிறேன்!

*ஜெம்பு:* பாவம். (துரையைப் பார்த்து) பாட்டியிடம் அந்த அட்டிகையைக் கொடு! (துரை அட்டிகையை எடுத்து கொடுக்க, காமாட்சி வியப்புடன் விழிக்கிருள்) வாங்கிக்கொள் பாட்டி. உன் பேத்தி கல்யாணத்திற்கு நாங்க மூவரும் வருவோம்! தைரியமாக வாங்கிக்கொள்!

*காமா:* (நகையை வாங்கியவாறு) நீங்கள்......... நீங்கள்.........

*துரை:* கடவுள்கள் அல்ல! மனிதர்கள்தான். என் பெயர் துரைவாப்பா, இதோ ஜெம்புலிங்கம், இவன்தான் காசி.

*காமா:* (வியப்பும் மகிழ்வும் கலந்தவாறு) நீங்கதாளு? மும்மூர்த்திகள்மாதிரி தரிசனம் கொடுக்கிறீங்களே! உங்களைப் பார்க்கணும் — பார்க்கணும்னு ஆசைப்பட்டுக் கொண்டே இருந்தேனே! இன்றுதான் அந்தப் பாக்கியம் கிடைச்சது! நாசமாப்போகிற போலீஸ் உங்களை இந்தக் கதிக்கு ஆளாக்கிவிட்டதே!

*ஜெம்பு:* வருத்தப்படாதே பாட்டி. சந்தோஷமாகப் போய்வா!

*காமா:* அப்பா... இந்த நகை உங்களிடமே இருக்கட்டும்! கல்யாணச் சமயத்தில் வாங்கிக்கொள்கிறேன்!

*துரை:* ஏன் பாட்டி?

*காமா:* வழியில் வேறு யாராவது என்னிடம் கேட்டால் நான் கொடுத்துவிடுவேனப்பா!

*ஜெம்பு:* யாரும் கேட்கமாட்டார்கள். யாராவது திருடர்கள் கேட்டால், ஜெம்புலிங்கம் கொடுத்த நகை என்று சொல்! தைரியமாகப் போ! இன்னொன்று, இதை ஆசாரியிடம் கொடுத்து மாற்றி வேறு நகையாகச் செய்து போட்டுவிடு!

*காமா:* நீங்க நல்லா இருங்க!... நான் வரட்டுமா?

*துரை:* போய்வா! உன்னிடம் உணவு இருக்கும் வரை, பசி என்று யார் வந்தாலும், கொடு!

*காமா:* அப்படியே நடப்பேன்! வரட்டுங்களா?
(மூவரும் விடை கொடுக்க, காமாட்சி போதல்)

*ஜெம்பு:* பாவம்!

*துரை:* ஆனல் பெரிய மேதை!

*காசி:* அனுபவ அறிவு இல்லாமற் போகுமா? ...... அடுத்து?

*ஜெம்பு:* குகைக்குப் போவோம். நேரமாகிவிட்டது.
(மூவரும் குகைக்குப் போதல்)

[ திரை ]

***

## காட்சி 35

(மலைக் குகை)

ஜெம்பு, காசி, துரை, பொன்னி, இராமலிங்கம்.

*ஜெம்பு:* மனம் குழம்பி இருக்கிறது.

*இரா:* வீட்டு நினைவு வந்திருக்கும்.

*துரை:* அது மட்டுமல்ல. இன்று உழைப்பு அதிகம்! அதனல் என்ன? மனதை மகிழவைத்துவிட்டால் போகிறது. எல்லோருககுமே சற்று உற்சாகம் தேவைதான்! (பொன்னியின் பக்கம் திரும்பி) பொன்னி, நீதான் பெரிய நாட்டியமணி ஆயிற்றே! தயவு செய்து சற்று நேரம்...!

*பொன்:* (வெட்கத்துடன்) சும்மா இருங்கள். உங்களுக்கு எப்போதும் விளையாட்டுத்தான்!

*ஜெம்பு:* பொன்னிக்கு நாட்டியமாடவும் தெரியுமா?

*துரை:* தெரியுமாவா? பம்பரமாக இருக்கும்!

*ஜெம்பு:* அப்படியென்றால் நம் விருப்பத்தைப் பொன்னி மறுக்கவேமாட்டாளே!

*பொன்:* (துரையைப் பார்த்து) இப்படி இக்கட்டான நிலையில் கொண்டுவிட்டுவிட்டீங்களே!

*இராம:* எல்லோரும் விரும்புறாங்க, கொஞ்சம் தயவு பண்ணு பொன்னி!

*பொன்:* (துரையைப் பார்த்து, பழிக்குப் பழி வாங்குவதுபோற் குறிப்புக் காட்டி) நான் ஆடுகிறேன். ஆனால், (துரையைக் காட்டி) இவங்க பாடவேண்டும்!

*துரை:* ஐயோ, பாட்டா! நான் பாடவா? கழுதைப் படை அணிவகுத்துவிடுமே!

*பொன்:* (ஜெம்புவைப் பார்த்து) பொய்! நல்லாப் பாடுவாங்க!

*துரை:* பொன்னி, பழிவாங்குகிறாயா?

*ஜெம்பு:* வேண்டாம். உங்களுக்குள் பாட்டு விஷயத்தில் தகராறு வேண்டாம்! எல்லோரும் சேர்ந்தே பாடுவோம். முதலில் நானே தொடங்குகிறேன்—

தோழா, என் தமிழ் நாட்டுத் தோழா......
தோழா செந்தமிழ் நாட்டு வீரா...... (தோழா)
உலகம் கெடுவது எதனால் தோழா—

*துரை:* நமக்குள் ஒற்றுமை குறைவு அதனால் தோழா...

*ஜெம்பு:* பலவகை சாதிகள் எதனால் தோழா?-தொழிலாளி
பாமரன் ஆவது எதனால் தோழா...? (தோழா)

*துரை, காசி:* உழைக்காதவரால் உலகம் கெடுது- தோழா
(பொன்னி நடனமும் இணைகிறது)

உண்மை உணராமல் ஒற்றுமை அழியுது
பழமைப் பித்தால் சாதிகள் வளர்ந்தது—தொழிலாளி
பாமரன் ஆனது பணக்காரன் சூழ்ச்சியே! (தோழா)

*ஜெம்பு:* சரியாய்ச் சொன்னுய் சகோதரனே—நாட்டில்
சாதிகள் ஒழிந்தால் சண்டைகள் ஒழியும்
தெரியாமல் அழிந்து போகாதே தோழா--நீ
தெளிவுடன் நல்ல வழியினில் சென்றிடு (தோழா)

*மூவரும்:* எல்லோரும் இனிமேல் ஒன்ருகக் கூடி—நாட்டின்
இழிவு நீங்க ஏழ்மையை ஒழிப்போம்
தொல்லை தரும் அன்னியர் ஆட்சியினை—குழி
தோண்டிப் புதைத்தே சுயாட்சி காண்போம்(தோழா

சீருடன் செல்வச் செழிப்புற்ற நாட்டில்—நிலவும்
சீரழிவைப் போக்க சேர்ந்தே உழைப்போம்
பாரினில் புகழ் பெற்ற நம் நாட்டில்—தோழா
பகுத்தறிவால் நாம் சமத்துவம் காண்போம் (தோழா)
(பாட்டும், நடனமும் முடிதல்)

*ஜெம்பு:* பேஷ்...... பொன்னி! உன் நடனத்திற்கு எதை வேண்டுமாயினும் கொடுக்கலாம்! இவ்வளவு அழகாக ஆடுகிருயே!

*பொன்:* நீங்கள் இத்தனை நன்ருகப் பாடுவீர்கள் என்றும் எனக்குத் தெரியாது!

*ஜெம்பு:* உம், ஹூம், பாட்டு என்ன பாட்டு! (துரை வாப்பாவைப் பார்த்து) துரை, உன் பொன்னிக்கு உன் விருப்பப்படியே தக்க பரிசாகக் கொடு.

*பொன்:* என் பரிசு கிடக்கட்டும்! நான் தேவையான போது வாங்கிக்கொள்வேன். முதலில் சுந்தரி அக்காவுக்கு சேரவேண்டியதை என்னிடம் கொடுங்கள்!

*துரை:* ஆமாம். மறந்தே போய்விட்டோம்!

*இராம:* முதலில் வீட்டை வாழ வைத்துவிட்டு பிறகு நாட்டிற்குத் தானம் வழங்கவேண்டும்!

*காசி:* உண்மை! அத்தானுக்கு அந்த நினைவே கிடையாது! (பொன்னியைப் பார்த்து) பொன்னி, நீ போ! நான் இப்பொழுதே வேண்டிய அரிசி சாமான்கள் எல்லாம் கொண்டுவருவேன்!

*ஜெம்பு:* அது மட்டும் போதுமா? எல்லாவற்றையுமே எடுத்து நாம் குறிப்பிட்ட பகுதிகளில் விநியோகித்து விடு! இங்கு எதற்கு?

*துரை:* ஒரு மாத உணவுக்கு இங்கு இருக்கட்டும்! மீதி அத்தனையும் இன்றும், நாளையுமாக ஏழைகளின் குடிசைகளுக்கு ஏற்றுமதியாகட்டும்!

*ஜெம்பு:* சரி, உன் விருப்பப்படி நடக்கட்டும்! (துரையும், காசியும் அரிசி மூடைகளை வெளியில் கொண்டு செல்லுதல்)

[ திரை ]

★★★

## காட்சி 36

(ஜெம்புவின் வீடு)

சுந்தரி, சீனியம்மாள், ஜெம்புவின் (2-வயது) மகன், மார்வாரி உடையில் ஜெம்பு, துரை வருதல். (தயிர்க்காரி காமாட்சி பிறகு வருதல்)

*துரை-* (சுந்தரியிடம்) அரே நிம்பள் ஜெம்பு உள்ளே இருக்கான்?

*சுந்:* யார் நீங்கள்? கொஞ்சம்கூட மரியாதையில்லாமல் வீட்டிற்குள்ளேயே நுழைந்துவிட்டீர்களே!

*ஜெம்பு:* மருவாதை யார்க்கு? ஜெம்பு, என்கி நாப்பத் ரூபா கொடுக்கணும்.

*சுந்:* என்ன உளறுகிறாய்? யாருக்கு ரூபாய் கொடுக்கணும்?

*ஜெம்பு:* நம்பள்கி ஜெம்பு கொடுக்கணும்...

*சுந்:* (உள்ளே பார்த்தவாறு) சீனியக்கா, இங்கே வா. இந்த செம்மறிக் கிடாக்களிடம் விஷயத்தைக்கேட்டு விரட்டு! (சீனியம்மாள் வருதல்)

*சீனி:* யாரய்யா நீங்க? வந்த விஷயத்தைச் சொல்லி விட்டு சீக்கிரமாக வெளியே போங்கள்.

*துரை:* ஹை... படே கோபம் வருது. படே ஆத்மி.

*சீனி-* ஓகோ... ஹிந்தி பேசுறீங்களா? அது எங்களுக்குத் தெரியாது! போயிட்டு வாங்கோ!

*ஜெம்பு:* (குழைவுடன்) என்னு பொம்பளை விரட்றே... நம்மள் வந்தால் போறுன் இல்லை!

*சீனி-* (தலையில் அடித்தவாறு) கர்மம்! சரியா பேசித் தொலை!

*துரை:* (குரல் மாற்றி) பொம்ளை, உங்கள் ஜெம்பு லிங்கம் எங்களுக்கு ரூபாய் கொடுக்கணும்.

*சீனி-* தமிழும் தெரியுமா? மதிப்புக்குத்தான் மாற்று மொழியில் பேசினீங்களா? மானங்கெட்டுப் போச்சு...... உம், நீங்களாவது தேவலையே! உங்க தாய் மொழியிலே பேசுறீங்க. எங்க தமிழ் நாட்டுக்காரங்க இருக்காங்களே வெள்ளைக்காரங்க மாதிரி நடித்து தாய் நாட்டு மானத்தையே விலை பேசுறாங்க! சரி, போயிட்டு வாங்க!

*ஜெம்பு:* நம்பள் போறுன் இல்லை! (காமாட்சி, கையில் நெய்யுடன் வருதல்)

*காமா:* ஜெம்புலிங்கம் வீடு இதுதானே'ம்மா......

*சீனி-* ஆமா! நீ எதுக்கு வந்தே பாட்டி? (ஜெம்புவும், துரையும், காமாட்சியைக் கவனித்தல்)

*காமா:* (நெய் பாத்திரத்தை நீட்டி) இது நிறைய நெய் இருக்குது... சாப்பாட்டுக்கு போட்டுக்கம்மா!

*சீனி-* இவ்வளவு நெய் எங்களுக்குத் தேவையுமில்லை! கையிலே பணமும் இல்லை!

*காமா:* பணமா! யாருக்கு வேணும்? அந்த புண்ணியவான் வீட்டிலே பணம் வாங்குவேனு? அவன் பொஞ்

சாதியும், குழந்தையும் கஷ்டப்படுகிறதாகக் கேள்விப்பட்டேன். ஊருக்கு உபகாரியின் வீடு கஷ்டப்படலாமா? என்னாலே முடிஞ்சது இவ்வளவுதான். என் வீட்டு நெய். எடுத்துக்கோ'ம்மா! (ஜெம்புவின் விழிகளில் நீர் நிறைதல்)

*சீனி*- (ஜெம்புவையும், துரையையும் பார்த்து) பார்த்தீங்களா? நாப்பது ரூபாய்க்கு இப்படி விழுகிறீங்களே! இந்தப் பாட்டி சொன்னதை கேட்டீங்களா?

*காமா*- என்ன'ம்மா, நாப்பது ரூபாய் இவங்களுக்கு நீங்க கொடுக்கணுமா?

*சீனி*: ஆமா. ஜெம்புலிங்கம் கடன் வாங்கியிருந்தானும்!

*காமா*: இவ்வளவுதானே! நான் கொடுக்கிறேன். இனிமேல் நீங்கள் இங்கு வந்து கேட்கவேண்டாம். என்னோடு வாருங்கள். மாட்டை விற்றுவது உங்கள் கடனைத் தீர்த்துவிடுவேன்!

*ஜெம்பு*: (உருக்கமாக) பாட்டி, எங்களுக்கு யாருமே ரூபாய் கொடுக்கவேண்டியதில்லை. உன்னிடம் இப்படி யாராவது சொல்லி ரூபாய் கேட்டால் கொடுத்துவிடாதே. ஜெம்புலிங்கம் யாரிடமும் கடன் வாங்குவதே இல்லை. போயிட்டு வா!

*காமா*: அப்படீன்னா சரி!

*சீனி*- (ஜெம்புலிங்கம்தான் என்பதைப் புரிந்து கொண்டு) அட பாவி!...

*ஜெம்பு*: (காமாட்சியிடம்) நீ போ பாட்டி! நீ ரொம்ப தங்கமானவள்! உனக்கு ஒரு குறைவும் வராது.

*காமா*- அப்படியே இருக்கட்டுமப்பா! நான் வருகிறேன். (காமாட்சி போதல்)

*சீனி*- என்ன வேஷம் இது? யார் இந்தக் கிழவி?

*ஜெம்பு*: (வேடத்தைக் கலைத்துவிட்டு) சீனியம்மா, முதலில் நெய்யைக் கொண்டு உள்ளே வை. பாட்டி கொடுத்த நெய்! அவள் மனம்போல மணக்கும்! என்னதான் புத்திசாலியாக இருந்தாலும் ஏமாந்துவிட்டாயே!

*சீனி*- ஏமாந்ததனுல்தான் வெளியே போகச் சொன்னேன்.

*துரை:* ஏமாற்றினேம். ஆனுல் பயமுறுத்தமுடியவில்லையே! (சுந்தரியும், மகனும் அருகில் வர)

*சுந்:* நீங்களா? (மகனிடம்) டேய் பாலு, உன் அப்பா'டா!

*பாலு:* (கரங்களை விரித்தவாறு ஜெம்புவை நோக்கி வந்து) அப்பா...... அப்பா......!

*ஜெம்பு:* (மகனை எடுத்து அணைத்தவாறு) கண்ணின் மணியே, பாலு. நீ மகிழ்ச்சியாக இருக்கிருயா?

*சீனி:* உள்ளே சென்று பேசுங்கள். நான் வெளியே நிற்கிறேன்.

*துரை:* ஆமாம். நானும் இதே உருவில் அங்கேயே நிற்கிறேன்! (துரையும், சீனியம்மாளும் வெளியே செல்லுதல்)

*சுந்:* சீனியக்காள் இல்லாவிட்டால் எனக்கு பைத்தியமே பிடித்துவிடும்!

*ஜெம்பு:* இப்பொழுது மட்டும் என்னவாம்! பைத்தியம் மாதிரிதான் இருக்கிருய்! திடமாக இருப்பவனுக்கே கவலை வந்தால் துரும்பாகிவிடுவான். நீ கர்ப்பிணி, கவலைப் படலாமா? வருவது வரட்டும் என்று தைரியமாக இருக்க வேண்டும், சுந்தரி! சீனியம்மாளைப் பார். உன்னைப் போலவா? வீரமங்கை பொன்னியைப் பார்! விவேகத் திருவிளக்கு; வீணர்களின் வைரி; வீரர்களின் தோழி; கடமையின் முழுஉரு; பறங்கியரின் பரம எதிரி; உன்னை விடச் சிறியவள்!

*சுந்:* நீங்கள் கூறியவை உண்மைதான். ஆனுல் எனக்கென்னவோ போலீசைக் கண்டாலே உடல் நடுங்குகிறதே!

*ஜெம்பு:* போலீஸ் தொல்லை தினமும் இருக்கிறதா?

*சுந்:* தினமுமா? மணி தவறினுலும், போலீஸ் வரவு தவருது!

*ஜெம்பு:* பாவம்! அவர்களால் வேறு என்ன செய்ய முடியும்? வாங்கும் சம்பளத்தின் வட்டிக்காவது வேலை செய்யவேண்டுமே!

*சுந்:* நீங்கள் எல்லாவற்றையும் தைரியமாகப் பேசி விடுவீர்கள். என்றால் அப்படியிருக்க முடியவில்லையே!

*ஜெம்பு:* நீ இப்படிக் கூறுவதினால்தான் என் மனமும் கலங்குகிறது.

*துரை:* (வந்துகொண்டே) ஜெம்பு, நேரமாகிறது.

*ஜெம்பு:* ஆமாம். காசி தனியாக இருப்பான். வரட்டுமா சுந்தரி? (பாலுவின் கன்னத்தில் செல்லமாகத் தட்டிய வாறு) கண்ணே, அம்மாவுக்கு மகிழ்ச்சியோடு தைரியத்தையும் ஊட்டு. என் காலத்தில் இல்லாவிட்டாலும் உன் காலத்தில் நம் நாடு சுதந்திர நாடாகவே விளங்கும்! நீ சுதந்திர பாரதத்தின் மகனாக வாழ்வாய்! (பாலுவை சீனியம்மாளிடம் கொடுத்தவாறு) வருகிறேன்.

*துரை:* (சீனியம்மாளிடம் ரூபாய் கொடுத்து) இதை செலவுக்கு வைத்துக் கொள்ளுங்கள். (இருவரும் போதல்)

[ திரை ]

***

## காட்சி 36 - A

(காட்டுப் பாதை)

சிங்காரம், முத்துராமன், ஜெம்பு, துரை, காட்டிலாகா அதிகாரி.

(சிங்காரமும், முத்துராமனும் காட்டிற்குள் ஒரு மரத்தை வெட்டிக் கொண்டிருக்க, காட்டிலாகா அதிகாரி தடை செய்தல்)

*காட்டிலாகா அதிகாரி:* நிறுத்துங்கள். காட்டு எல்கைக்குள் மரம் வெட்டக்கூடாது என்று உங்களுக்குத் தெரியாதா?

*சிங்:* வெட்டக்கூடாது என்று கூறுவதற்கு உரிமை பெற்றவர் யார்?

*கா-அதி:* அரசாங்கம்! காடு முழுவதும் அரசாங்கத்தின் உடமை!

*சிங்-* எந்த அரசாங்கத்திற்கு எந்தக் காடு உரிமை? நாங்கள் வெள்ளேக்காரன் நாட்டில் மரம் வெட்டவில்லே! அவனுக்கு வக்காலத்து வாங்கும் நீங்களும் வெள்ளேக்காரன் இல்லே!

*கா-அதி:* இப்படி என்னிடம் பேசியதே குற்றம்! நான் காட்டிலாகா அதிகாரி. அனுமதியின்றி மரம் வெட்டுவதைத் தடுக்க எனக்கு உரிமையுண்டு!

*முத்-* அனுமதி! எங்கள் நாட்டு மரத்தை வெட்ட அன்னியரின் அனுமதி வாங்கவேண்டுமா?

*கா-அதி:* (கோபத்தில்) வீண் பேச்சில் பயனில்லே! அனுமதியில்லேயேல் மரம் வெட்டக்கூடாது!

(ஜெம்புவும், துரையும் வருதல்)

*ஜெம்பு:* இங்கு என்ன தகராறு?...... ஏதோ புரட்சி நடப்பதாகத் தெரிகிறதே!

*முத்:* நீங்கள் இதில் தலேயிடவேண்டா!

*சிங்-* அப்படிச் சொல்லாதே! இவர்கள் யார் என்று உனக்குத் தெரியாது. (ஜெம்புவைப் பார்த்து) வணக்கம்!... வந்து...இந்த மரத்தை வெட்டிக்கொண்டிருந்தோம். இவர் வந்து தடை செய்கிருர்!

*ஜெம்பு:* அதில் தவறென்ன? சட்டப்படி அவர் கூறுகிருர். நீங்கள் அவரிடம் கோபம்கொண்டு பயனில்லே......

*கா-அதி:* அப்படிச் சொல்லுங்கள்!

*ஜெம்பு:* நீங்கள் வெட்டுவதை அவர் பார்த்துவிட்டார்! (அழுத்தமாக) பார்த்ததினுல் கடமையைச் செய்கிருர். பார்க்காவிட்டால் உங்கள் எண்ணம் நிறைவேறியிருக்குமல்லவா?

*சிங்-* அபபடியானுல் பார்க்காத ரீதியில் வெட்ட வேண்டுமா?

*துரை:* கண்டிப்பாக இந்தத் தகராறு வராதல்லவா? புரிந்துகொள்ளுங்கள்!

*கா-அதி:* பார்க்கும்படியும் வெட்டலாம். ஆனல் அதற்குள்ள வழியில் இவர்கள்...... நடந்து...... கொள்ள வில்லையே!... நடந்திருந்தால், பார்க்காமலே இருந்து விடு வேன்! என் பார்வையில் வெட்டிஞல் என் பிழைப்பிற்கே ஆபத்தல்லவா? எப்படியும் சர்க்கார் தெரிந்துகொள்ளுமே!

*ஜெம்பு:* ஆமாம். (கோபத்தில்) தெரிந்துகொள்ளும்! சர்க்காராம்—சர்க்கார்!

*சிங்-* இந்த மாதிரி ஏழைகளின் தவறுகளைத்தான் சர்க்கார் தெரிந்துகொள்ளும்! வியாபாரம் என்ற பெயரில் பட்டப்பகலில் வெட்ட வெளிச்சத்தில் நடக்கும் பகற் கொள்ளை, பாதி இரவில் நடக்கும் பங்களா விபச்சாரம், பணத்திமிரால் விளையும் பதவி வெறி, பசிக்கொடுமையால் மடியும் ஏழைகள், லஞ்சப்பிடாரிகளின் கரங்களில் சிக்கி அவதியுறும் பொதுமக்கள் இம்மாதிரிக் கொடுமைகளை யெல்லாம் சர்க்காரால் தெரிந்துகொள்ளமுடியவில்லை. ஏழைகளின் சிறு தவறுகளை மட்டும் தெரிந்துகொள் கிருர்கள்! சர்க்கார்! இந்த அந்நிய சர்க்காருக்குச் சாவுமணி அடிக்கும் நாள் நெருங்கிவிட்டது. ஒரு நாள் வாழ்ந்தாலும் போதும்; சுதந்திர நாட்டில் வாழ வேண்டும்! தூத்துக்குடி சிதம்பரம் பிள்ளையின் தியாக முழக்கம் உன் சர்க்காரைத் தூளாக்கிவிடும்!

*ஜெம்பு:* (வீர உணர்ச்சியில்) சபாஷ்! சிங்காரம், உன் வீர உரை கேட்டு என் குருதி பொங்குகிறது! நரம்பு கள் விம்முகின்றன. சுதந்திரச் சங்கின் ஒலி கேட்கும் நாள் நெருங்கிவிட்டது. காட்டிலாகா அதிகாரியின் லஞ்சப் புத்தி பறந்துபோயிருக்கும்.

*கா-அதி:* (கோபத்தில்) யார் லஞ்சம் கேட்டார்கள்? நீங்கள்தான் தினமும் லஞ்சம் வாங்கிக் கொடுக்கிறீர்களா? வந்த வேலையைப் பார்த்துவிட்டுப் போங்கள்!

*துரை:* வந்த வேலையைப் பார்க்கவேண்டுமா?

*ஜெம்பு:* அப்படியானால் மரத்தை வெட்டிக்கொண்டு போங்கள்.

*கா-அதி:* யார் நீங்கள்?

*ஜெம்பு:* கண்டிப்பாகத் தெரியவேண்டுமென்றால் கூறுகிறேன். என் பெயர் ஜெம்புலிங்கம், இதோ துரை வாப்பா. ஒருவன் நம் இருப்பிடத்தில் இருக்கிறான்!

*கா-அதி:* (பயந்து) ஹாங்!... ஜெம்பு...லிங்கம்...... நீ...நீங்கள்தானா...... தவறாக எண்ணாதீர்கள்! நான் வருகிறேன்... (விரைந்து போதல், சிங்காரம் சிரிக்கிறான்)

*முத்:* (வியப்புடன்) ஜெம்புலிங்கம்!... நீங்களா...

*ஜெம்பு:* சிங்காரம்!... நீங்கள் ஜவுளி வியாபாரியிடமிருந்து விலகிவிட்டீர்களா?

*சிங்-* ஆமாங்க. நான் உங்களோடு சேர்ந்து ஜவுளிகளைக் களவு செய்துவிட்டதாக முடிவுசெய்திட்டாரு; எப்பொழுதும் ஜெம்புலிங்கத்தின் கூட்டாளி'ன்னு சொல்லிக்கிட்டே இருந்தாரு! எப்படி அவரிடம் வேலை செய்ய முடியும்?.........

*துரை:* அப்படீன்னா, உண்மைக் கூட்டாளியாகவே மாறிவிடு!

*ஜெம்பு:* ஆமாம், விறகு வியாபாரம் வேண்டாம்! எங்களோடு சேர்ந்துவிடு!

*துரை-* முதல் ஆரம்ப விழாவாக, உன் முதலாளி வீட்டிலேயே நம் தொழிலை நடத்திவிடலாம்!

*சிங்-* நான் எங்கிருந்தாலும் உங்கள் ஆள்தானுங்க. சுயநலத்திற்குக் கொள்ளையடிக்கிறவங்களை விடப் பொது நலத்திற்கு சுயநலக்காரர்களைக் கொள்ளையடிக்கிறவங்க உண்மையிலேயே தியாகிகள்தான்! விரைவில் உங்களோடு சேருவேன்!

*ஜெம்பு:* நன்றாகப் பேசுகிறாய்! சுதந்திரப் போராட்டத்தில் கலக்கவேண்டியவன்!... வருகிறோம்!

*சிங், முத்-* (வணங்கி) ஆகட்டுமுங்க!

(ஜெம்பு, துரை போதல்

[ திரை ]

★★★

## காட்சி 37

(குகை)

ஜெம்பு, துரை, காசி, மற்றும் மூவர். (பொன்னி மாறுவேடத்தில் பிறகு வருதல்)

*ஜெம்பு:* (வந்துகொண்டே, காசியைப் பார்த்து) என்ன மாப்பிளே!... வரவு செலவு கணக்கெழுதிக்கொண்டிருக்கிறீங்களா?

*காசி-* (ஜெம்புவையும், காசியையும் பார்த்து) உங்களுக்கு எப்பொழுதும் விளையாட்டுத்தான்! நான் ஒருவன் இருக்கிறேன்.........

*ஜெம்பு:* நீ ஒருவனு? கூட மூன்று பேர் இருக்கிருங்களே!

*காசி:* அதற்காகவா சொல்கிறேன்? நீங்கள் வெளியே சென்ருல் இந்த இடத்தையே மறந்துவிடுகிறீர்கள்! எனக்குத்தான் நீங்கள் வருகிறவரைக்கும் நிம்மதியில்லே!

*துரை:* ஏன், பயமாக இருக்கிறதா?

*காசி:* என்னேப்பற்றிய பயம் எனக்கில்லே!

(பொன்னி வருதல்)

*துரை:* (பொன்னியின் மாறுவேடம் கண்டு) பொன்னி இன்றைக்கு என்ன புதுவேடமா? அழகாகத்தான் இருக்கிருய்!

*ஜெம்பு:* பெண் அல்லவா? உருவத்தை எப்படி மாற்றிஞலும் அழகு அதிகப்படுமே தவிர, குறையாது! புதுச் செய்திகள் சேகரித்து வந்திருப்பாள்!

*பொன்:* ஆமாம்.

*துரை:* சீக்கிரம் சொல்!

*பொன்-* ஊருக்குள்ளே கலகமும் கொள்ளேயும் அதிகமாயிட்டுது. நம் பெயரைக் கூறி, ஒரு சிலர் ஏழைகளேயும் துன்புறுத்தத் தொடங்கிவிட்டார்கள்!

*ஜெம்பு-* பெயர்களே அறிந்தாயா?

*பொன்-* அறியாமல் வருவேனு? புலியூர்க்குறிச்சி உடையத்தேவரும் அவர் ஆட்களும்தான்! அடுத்து, நூல் வியாபாரி ஓ. பி. எம். முதலாளி, சர்க்காருக்குச் சொந்தமான நூற்கட்டுகளைப் பதுக்கிவிட்டு, நாம் கொள்ளையடித்துவிட்டதாக போலீசில் குற்றப் பத்திரிகை கொடுத்திருக்கிருர்.

*துரை-* சரி, கவனிப்போம்! அடுத்த செய்தி?

*பொன்-* பணகுடி இன்ஸ்பெக்டர் நாளைக்குச் சத்திரத்திற்குப் போகிருர்!

*ஜெம்பு-* (சிரித்து) சாப்பாட்டுக்கா?

*பொன்-* அல்ல, கலெக்டர் துரையையும், மேலதிகாரிகளையும் இரகசியமாகச் சந்தித்துப் பேச. அதாவது, இராணுவத்தை வரவழைக்கப்போகிருங்களாம்!

*ஜெம்பு-* கெட்டிக்காரி. இத்தனை செய்திகளையும் அறிந்துவிட்டாயே! பொன்னி, உனக்கொரு பரிசு கொடுக்கப்போகிறேன்.

*பொன்-* கடமைக்குக் கைமாரு?

*ஜெம்பு-* (துரையைப் பார்த்தவாறு) அல்ல; கல்யாணம் (இருவரையும் பார்த்து) விரைவில் உங்கள் திருமணத்தை முடித்துவிடலாம் என எண்ணுகிறேன்.

*பொன்-* (வெட்கத்துடன்) இப்பொழுது என்ன அவசரம்? அண்ணிக்கு இது பிரசவ மாதம். மிகவும் சோர்ந்திருக்கிருர்கள்! நேற்றுக்கூட மருந்து வாங்கிக்கொடுத்தேன். நான் உடனே போகவேண்டும்!

*துரை-* அப்படியா? முதலில் அதைக் கவனி! (ஜெம்புவைப் பார்த்து) கல்யாணத்திற்கு இது சமயமல்ல! வேளை வரும்போது நாங்களே சொல்லுவோம்! (பொன்னியைப் பார்த்து) நீ கொண்டுசென்ற பொருட்களையெல்லாம் விநியோகம் செய்துவிட்டாயல்லவா?

*பொன்-* முதலில் செய்த பணி அதுதானே! காமாட்சிப் பாட்டியின் பேத்திக்குக் கல்யாணம் நடந்துவிட்டது.

நகைகளைக்கொடுத்ததும், பாட்டியின் மகிழ்ச்சிக்கு அள வேயில்லை!...... நான் வரட்டுமா?

*ஜெம்பு:* போய் வா. சுந்தரியையும், குழந்தைகளை யும் கவனித்துக்கொள்! (பொன்னி போதல்)

*துரை-* சரி, நம் அடுத்த திட்டம்?

*ஜெம்பு:* கொஞ்சம் அரிசி இருக்கிறது. துணிமணி களும் இருக்கிறது. அவைகளை உடனேயே ஏழைகளுக்கு உரிமையாக்கவேண்டும்!

*துரை-* அதோடு, உடையத்தேவரையும், ஓ.பி.எம். சாகிப் அவர்களையும் எச்சரித்து வரவேண்டும்!

*காசி:* சத்திரத்திற்குச் சென்று இன்ஸ்பெக்டரை சந்திக்க நான் போகிறேன்!

*ஜெம்பு:* உனக்குத் தனியாக வேலை வேண்டுமா? உம், நடத்து!

*துரை-* சரி, புறப்படுவோம். (கூட இருந்தவர்களைப் பார்த்து) இருக்கிறவைகளை எடுத்துக்கொள்ளுங்கள்!

*காசி:* எல்லாவற்றையுமல்ல, ஒரு மாதச் செலவுக்கு இருப்பு வைத்துவிட்டு மீதியை எடுத்துக்கொள்ளுங்கள்!

*ஜெம்பு-* காசி கணக்குப்பிள்ளையல்லவா? கணக் காகச் செலவு செய்யச் சொல்கிறான். அப்படியே நடக்கட் டும். துரை, உன்னிடம் துப்பாக்கி இருக்கிறதல்லவா?

*துரை-* (துப்பாக்கியைக் காட்டி) இதோ!

*காசி-* நான் அப்போதே எடுத்துக்கொண்டேன்! நீங்கள்?......

*ஜெம்பு-* (இரு துப்பாக்கிகளைக் காட்டி) ஒன்றல்ல! இரண்டு! புறப்படுங்கள்! (ஆட்கள் அரிசி முதலியவை களை எடுத்துக்கொள்ள, ஜெம்பு நகைகளையும் பணத்தை யும் எடுத்துக்கொள்ள, எல்லோரும் போதல்!

[ திரை ]

***

## காட்சி 38

(வள்ளியூர், நாட்டாண்மைக்காரர் வீடு)

நாட்டாண்மைக்காரர் நாராயண பிள்ளை. (மாறுவேடத்தில் ஜெம்பு, துரை, காசி. பின்னல் அரிசியுடன் இருவர்)

*நாராயண பிள்ளை:* (ஜெம்பு முதலியோர் வருகை கண்டு) யார் நீங்கள்?...... உட்காருங்கள்!

*ஜெம்பு:* வணக்கம்! எங்களைத் தெரியுமுன்பே உபசாரம் செய்கிறீர்களே! உருமாற்றம் உங்கள் கண்களையும் மறைத்துவிட்டதா? மூவரையும் பார்த்த உடன் தெரியவில்லையா?

*நாரா:* மூவர்... ஓ!... சரிதான். (அன்புடன்) உட்காருங்கள். (கூட வந்தவர்களைப் பார்த்து) இவர்கள்?

*ஜெம்பு:* நம்மவர்கள்தான்! (இருவரையும் பார்த்து) அரிசி மூடைகளை இங்கு இறக்குங்கள்!

*நாரா:* நான் கதவைத் தாளிட்டு வருகிறேன். (எழுந்து சென்று வாயிற் கதவைத் தாளிட்டு வருதல்) நலமாக இருக்கிறீர்களல்லவா?

*ஜெம்பு:* இருக்கிறோம். ஊர் எப்படி இருக்கிறது?

*நாரா:* சர்க்காருக்கு எதிர்ப்பு அதிகமாயிற்று! மக்கள் விழித்துக்கொண்டார்கள். நேற்றுப் பத்திரிகையிலே யாரோ வெள்ளைக்காரக் கலெக்டரை நம் ஆள் சுட்டுக் கொன்று விட்டானும்!

*ஜெம்பு:* சபாஷ்! கொலைகள் அந்த வழியில்தான் நடக்கவேண்டும்!

*நாரா:* இருங்கள். மோர் கொண்டுவருகிறேன். (எழுந்து உள்ளே சென்று மோர் எடுத்துவர எல்லோரும் அருந்துதல்)

*ஜெம்பு:* நேரமாகிறது. சீக்கிரம் போகவேண்டும்! இந்த அரிசியையும், பொருட்களையும் ஏழைகளுக்கு இரகசியமாக விநியோகித்துவிடுங்கள்! இத்தனை நேரம் நாங்கள் அலைந்து கொடுத்தோம்! இருட்டிவிட்டது...

*நாரா:* நல்ல பணி... நாளையே பகிர்ந்தளித்துவிடுகிறேன்! (போலீஸ் வந்து கதவைத் தட்டுதல்)

*போலி:* நாட்டாண்மைக்காரரே! கதவைத் திறங்கள்!

*நாரா:* ஐயோ... போலீஸ் வந்துவிட்டதே!...... எப்படியோ அறிந்துவிட்டார்கள் போலிருக்கிறது.

*ஜெம்பு:* வரட்டும். இங்கேயே தீர்த்துக் கட்டிவிடுகிறோம்!

*துரை:* வீட்டிற்குள் தேடுகிற வீரப் புலிகளுக்குச் சரியான பாடம் கற்பிக்கிறோம்!

*காசி:* நான் காத்திருந்த பணி! பயப்படாதீர்கள்!

*நாரா:* பயமில்லை. நான் உங்களுக்கு உதவியாக இருப்பது சர்க்காருக்குத் தெரியலாமா?

*போலீ:* சீக்கிரம் திறங்கள்!... (தட்டுதல்)

*ஜெம்பு:* அதுவும் சரிதான். நாங்கள் தப்பிவிடுகிறோம்!

*நாரா:* பின்புற வாயில் வழியாகச் சென்றுவிடுங்கள்!

*ஜெம்பு:* சரி வாருங்கள், போய்விடுவோம்! (எல்லோரும் பின்புறமாகச் செல்ல, நாராயண பிள்ளை பின்புறக் கதவைத் தாளிட்டுவிட்டு, வெளிக்கதவை திறக்க வருதல்)

[ திரை ]

***

## காட்சி 38 - A

(சத்திரத்திற்கு முன்—வழிப் பாதை)

இன்ஸ்பெக்டர், குதிரைவண்டி, வண்டிக்காரன், ஜெம்பு, துரை, காசி.

(குதிரை வண்டியிலிருந்து இறங்கி இன்ஸ்பெக்டர் சத்திரத்திற்குள் செல்வதையும், போலீஸ் 103 உடன் செல்வதையும், மூவரும் மறைந்திருந்து பார்க்கிறார்கள். வண்டியோட்டியும் வண்டியை விட்டுவிட்டுப் போதல்)

*துரை-* வண்டியின் முன் பக்கம் பார்த்தாயா?

*காசி:* குதிரை நிற்கிறது! (மூவரும் சிரித்தல்)

*ஜெம்பு:* நல்ல தருணம். வண்டிக்குள் முன்புறம் ஏதோ துணி மூட்டை இருக்கிறது! அதைக் கவனி!

*காசி:* கொண்டு வரட்டுமா?

*ஜெம்பு:* சீக்கிரம் எடுத்து வா! (காசி விரைந்து சென்று, மூட்டையை எடுத்து வர மூவரும் பிரித்துப் பார்க்கும்பொழுது மூட்டையினுள், போலீஸ் தொப்பி, உடை முதலானவைகள் இருக்கின்றன) இதுவும் நமக்குத் தேவைதான்.

*துரை:* சரி, போய்விடுவோமா?

*ஜெம்பு:* அதோ, இன்ஸ்பெக்டர் வருகிறார். என்ன நடக்கிறதென்று பார்த்துவிட்டுப் போகலாம்!

*இன்:* (வண்டியோட்டியைக் காணுமல் அவனை அழைத்தவாறே வண்டிக்குள் பார்க்க, மூட்டையைக் காணுமல் திகைத்து) யேய், வண்டிக்காரா!... மூட்டையையும் காணவில்லை?

*வண்டி:* (வந்துகொண்டே) என்ன எஜமான்...... போகலாமா?

*இன்:* ஏய், பூல்! இங்கே மூட்டை......

*வண்டி:* ஆமாங்க... வண்டியிலே மூட்டைப்பூச்சி கொஞ்சம் ஜாஸ்திதான்!

*இன்:* (கோபத்தில்) சீ! இடியட் இங்கே ஒரு துணி மூட்டை இருந்ததே...

*வண்டி:* (பயந்து) ஐயோ!... எஜமான்... எனக்குத் தெரியாதுங்க...... நான் இப்பத்தான் காப்பி சாப்பிட்டு விட்டு......

*இன்:* நிறுத்துடா! உன்னைக் காவல் இருக்கச் சொன்னேனா, காப்பி சாப்பிடச் சொன்னேனா? ராஸ்கல்!...

*வண்டி:* உங்க சாமானையும் தூக்கிட்டுப் போக திருடன் வருவானு'ன்னு எண்ணி தைரியமாகப் போயிட்டேனுங்க. எஜமான் என்னை மன்னிச்சிடுங்க.

இன்: திருட்டுப் பயல்கள்... கொள்ளையும், திருட்டும் இனிமேல் போலீஸ் ஸ்டேஷன்களிலும், அதிகாரிகளின் வீட்டிலும் நடக்கும்போலிருக்கிறது. இருக்கட்டும், என் பதினைந்து வருட சர்வீஸிலே இது முதல் ஷாக்!... அந்தப் பயல்களை சுட்டுப் பொசுக்கிவிடுகிறேன்......

*வண்டி:* திருடர் யாருன்னு தெரிஞ்சுபோச்சா எஜமான்?

இன்: எனக்கா தெரியாது? (வண்டியில் ஏறி) வண்டியை ஓட்டு......வெளியில் யாரிடமும் சொல்லாதே!...... நானே அவங்களுக்கு முடிவு கட்டுகிறேன்.

வண்டி: (வண்டியை ஓட்டியவாறு) யாருக்கு முடிவு கட்டப்போறீங்க?

இன்: (கோபத்தில்) 'உங்க பாட்டனுக்கு'! வண்டியை ஓட்டுடா பூல்! (வண்டி போதல்; ஜெம்பு, துரை, காசி மூவரும் சிரித்தவாறே செல்லுதல்)

[ திரை ]

★★★

## காட்சி 39

(குகை)

ஜெம்பு, காசி, துரை, மற்றும் மூவர் (பொன்னி பிறகு வருதல்; ஜெம்பு சிந்தனையில் இருக்க துரையும், காசியும் அருகில் வருதல்)

*துரை:* என்ன ஜெம்பு, இன்று காலையிலிருந்தே உன்னைக் கவனிக்கிறேன். பெரிய யோசனையில் ஆழ்ந்திருக்கிறுயே!

*காசி:* துன்பத்தையும் இன்பமாக மாற்றும் உங்கள் சிரித்த முகம் பல்வேறு எண்ணங்களால் தாக்குண்டு போர் முடிந்த களம்போல் சின்னபின்னமாக இருக்கிறது. எங்களிடம் சொல்லக்கூடாத காரணம் ஒன்று உண்டா?

(பொன்னி அழுதுகொண்டே ஓடிவருதல்)

பொன்: அண்ணு! ஜெம்பு அண்ணு......!

ஜெம்பு: (திடுக்கிட்டு) என்ன! என்ன, பொன்னி? உன் கலக்கத்திற்குக் காரணமென்ன?

பொன்: (அழுதுகொண்டே) அண்ணு......

துரை: விஷயத்தைச் சொல், பொன்னி......

ஜெம்பு: தயவுசெய்து சீக்கிரம் சொல்... சுந்தரி எப்படி இருக்கிருள்!... என் இல்லற ஒளி.........

பொன்: அது அணைந்துவிட்டது அண்ணு! (உரக்க அழுகிருள்) நம்மை ஏமாற்றிவிட்டு அழகான தங்கச் சிலையை--வீர ஆண் மகனைப் பெற்றுக் கொடுத்துவிட்டுப் போய்விட்டாள் அண்ணு!......

ஜெம்பு: (திகைத்து, சில விஞடிகள் சிலையாக நிற்றல்) போ... போய்... விட்டாள்... என் சுந்தரி போய்... விட்டாளா?... அன்பின் ஒளி, அமரவிளக்கு... அணைந்து...
(கீழே சாயும்பொழுது துரை பிடித்துக்கொள்ளுதல்)

துரை: ஜெம்பு, ஜெம்பு......... மாவீரனுன உன் மனமும் சோர்ந்துவிட்டதா? (காசி ஜெம்புவின் முகத்தில் நீர் தெளித்தல்) ஜெம்பு... எதற்கும் கலங்காத நீயா இப்படி சாய்ந்துவிட்டாய்! ஜெம்பு ....

ஜெம்பு: (தன் நினைவு பெற்று) துரை ......காசி...... நான் கலங்கவில்லை... நான் கலங்கவில்லை... என் மனம் கலங்குகிறது... என் மூளை கலங்குகிறது... இந்த உலகமே கலங்குகிறது துரை!...பொன்னி... என் அன்புத் தெய்வம் ...எப்படி மறைந்தது?...தங்கச்சிலை போன்ற ஆண் மகனைப் பெற்றெடுத்தாள் என்று கூறினுயே!...... அவன் முகம் கண்ட பிறகுமா அவள் போய்விட்டாள்?...... சுந்தரி...... என்னை விட்டுவிட்டு நீ மட்டும் தனியாகப் போகலா'மா?... நீ தான் என்ன செய்வாய்! இந்தக் கொள்ளைக்காரனேடு வாழமுடியுமா? கள்ளனுடன் இருக்கவேண்டாம் என்று காலனுடன் போய்விட்டாயா? (துப்பாக்கியை எடுத்தபடி) இதோ வருகிறேன்.........

துரை: ஜெம்பு, எங்கு செல்கிருய்? உன் மக்கள்!... இரு விழிகளைப்போல் இரண்டு சிங்கங்களை உனக்கு

அளித்துவிட்டுச் சென்றிருக்கிருள் அந்தப் பெண்ணரசி! உன் கடமை உன்னே அழைக்கவில்லையா?

*ஜெம்பு:* (ஆவேசமாக) ஆம்! கடமைதான் என்னே அழைக்கிறது. என் கண்மணிகளைக் காணத்தான் போகிறேன!... என் இல்லாளின் இனிய முகம் என்னே அன்போடு அழைக்கிறது.

*பொன்:* அண்ணு, தயவுசெய்து நில்லுங்கள்! நீங்கள் ஆவேசப்பட்டால் யாரால் தடுக்கமுடியும்? இப்பொழுது நீங்கள் போகக்கூடாது! சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு சர்க்கார் கட்டளேப்படி வீட்டைச் சுற்றி சதிக்கூட்டம் கூடாரம் அடித்திருக்கிறது. அதனுல்தான் அண்ணியின் ஈமச்சடங்குகளைக் கூட சீனியக்காளும் இராமலிங்க அண்ணுவுமாகச் சேர்ந்து முடிக்கிருர்கள்!... ...

*ஜெம்பு:* (தலையில் அடித்து) ஐயோ!... தெய்வமே! ... ஒரு நல்லவன் உலகில் வாழ இத்தனே துன்பமா? தாலி கட்டிய மனேவியின் முகத்தைக்கூட காணமுடியாத பாவியா நான்! அட பழிகாரத் தெய்வமே... எனக்கு ஏன் இந்த சோதனேயும் வேதனேயும்! (ஆவேசமாக) இல்லே! என் கோழைத்தனம்தான் என் வேதனேக்குக் காரணம்!... பொன்னி, துரை, காசி, என்னேத் தடுக்காதீர்கள்! என் அன்புச்சுடர்களே! என்னேத் தடுக்காதீர்கள்! சதிகாரர்கள் என்னே என்ன செய்துவிடுவார்கள்? சாகடித்துவிடுவார்களா? அதையும் பார்க்கிறேன். இத்தனே நாளும் கொள்ளேக்காரனுக மட்டும்தானே இருந்தேன்! இன்றிலிருந்து கொலேகாரனுகவும் மாறிவிடுகிறேன்!... எதிர்ப்பவர்களே எமலோகம் அனுப்புவேன்! கண்ணில் பட்ட கயவர்களே எல்லாம் என் கைத்துப்பாக்கியால் காலனுக்கு விருந்தாக்குகிறேன்! தமிழனின் வீரத் தீச்சுடரை அந்நிய வெள்ளே அரசாங்கம் பார்த்து நடுங்குவதைப் பார்! பாஞ்சைப்பதி மன்னன் கட்டபொம்மன், அவன் தம்பி வீரசிங்கம் ஊமைத்துரை, வீரத்திற்கு இலக்கணம் வகுத்துக்கொடுத்த மருதிருவர்... நாஞ்சில் தமிழன் வேலுத்தம்பி—அத்தனே பேர் ஆத்மாக்களும் எனக்கு ஆசி கூறும்!...... கொள்ளே

யடிக்க வந்த கும்பினியாருக்கு நான் கோழையல்ல என் பதைக் காட்டுகிறேன்! உயிர் இருக்கும்வரை அவர்களை உருத் தெரியாமல் ஆக்குவேன். உயிர் போய்விட்டால் வீர மரணம்!... என் முன்னோர் சென்ற வழி!......

*துரை:* ஜெம்பு, ஆத்திரம் அறிவின் விரோதி யல்லவா! தயவு செய்து சமாதானமாக இரு. எங்களை அநாதைகளாக்கிவிடாதே!... உன் குழந்தைகளுக்கு உன் ஆதரவு தேவை. நடக்கவேண்டியதை நிதானமாக நடத்த வேண்டும்! தானாகச் சென்று ஆபத்தில் சிக்கிக்கொள்வது அறிவுடைமையல்ல! (சீனியம்மாள் வருதல்)

*ஜெம்பு:* வா, சீனியம்மா... எப்படி இறந்தாள்?... இறக்கும் தறுவாயில் என்ன சொன்னாள்? சதிகாரர்களும் சண்டாளர்களும் என் மனைவியை நான் பார்க்கமுடியாத படி பாதுகாத்தார்களாமே.....

*சீனி:* (அழுதுகொண்டே) விதி அதிசக்தி வாய்ந் தது. அது எழுதியதை எந்தக் கண்ணீராலும் அழிக்கமுடி யாது. சிங்கம் குகைக்கு வெளியே வரவேண்டாம் என்று சுந்தரியே கூறினாள். தங்கச் சிலைகளான குழந்தைகளை என்னிடம் கொடுத்து உன்னிடம் ஒப்புவிக்கப் பணித்தாள். 'நான் ஒரு கொள்ளைக்காரனின் மனைவியல்ல', கள்ள மில்லா உள்ளம் படைத்த ஒரு சுதந்திர சிற்பியின் மனைவி, வீரத் தமிழனின் பத்தினி,! என்று வீர முழக்கம் செய்து, குங்குமத் திலகமிட்டு, சிரித்த முகத்துடன் மங்கலப் பெண் ணாக மறைந்தாள்!

*ஜெம்பு:* தெரியும். என் சுந்தரிக்கும் என் கொள்கை தெரியும். என் உயிருக்கு என் உள்ளத்தின் பண்பு தெரி யாதா? என் கண்மணிகள் எங்கேயம்மா?......

*சீனி:* பத்திரமாக இருக்கிறார்கள். நான் போகிறேன். (துரையையும், காசியையும் பார்த்து) நான் வருகிற வரைக்கும் நீங்கள் எவருமே குகையைவிட்டு வெளிவரக் கூடாது.

(சீனியம்மாள் போதல்)

[ திரை ]

★★★

## காட்சி 40

(ஜெம்புவின் வீட்டுப்புறம்)

இன்ஸ்பெக்டர், சில போலீஸ்காரர்கள், அப்பாவு.

*இன்:* (அப்பாவுவைப் பார்த்து) என்ன மிஸ்டர்...... ஆசாமிகளைக் காணவேயில்லை?

*அப்:* அதுதானே எனக்கும் ஆச்சரியமாக இருக்குது! மனைவி இறந்த செய்தி எப்படியும் கிடைத்திருக்கும். ஜெம்புலிங்கமாவது வராமலிருக்கமாட்டானே!

*இன்:* அதோடு நாம் நிற்கும் செய்தியும் எட்டியிருக்குமே!

*அப்:* இருக்கும்!...... சார், ஒரு ஐடியா!

*இன்:* வந்திட்டுதா? ஏதாவது பணம் வேண்டுமா?

*அப்:* செ, சே!...ஐடியாவைக் கேளுங்க. ஜெம்புலிங்கத்தின் குழந்தைகளை நாம் எடுத்து வைத்துக்கொண்டால்?

*இன்:* சுகமாக வளரட்டும் என்று சும்மா இருந்துவிட்டால்?

*அப்:* அப்படியிருக்கமாட்டான்! இரத்தபாசம் அவனை இருக்கவிடாது.

*இன்:* கொக்கு தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிக்கச் சொல்கிறீர்! மனைவி இறந்ததற்கே வரவில்லை. கொள்ளைக்காரனுக்குப் பிள்ளைப் பாசமா? உமக்கு கொசு மூளைதான்.

*அப்:* அப்படீன்னு என்னுங்க?

*இன்:* தெரியாதா! கொசு இருக்குதில்லே கொசு.

*அப்:* ஆமாம்.

*இன்:* அது மனிதனின் உடம்பில் உட்கார்ந்ததும் ஒரேயடியாக அவன் இரத்தத்தை முழுவதும் குடித்துவிட வேண்டுமென்று தீர்மானித்து உறிஞ்ச ஆரம்பிக்கும். பாவம், ஆரம்பத்திலேயே கடியை உணர்ந்த மனிதன் அதை சட்டென்று ஒரு அடி அடித்து நசுக்கிவிடுவான்! அதைப்போல் உம் மூளையும்!

*அப்:* இந்தக் கதை எனக்கு இத்தனை நாளும் தெரியாதே!

*இன்:* தெரிந்திருந்தால் இந்த மாதிரி யோசனை சொல்வீரா? (போலீஸ் 103 சிரிக்க, இன்ஸ்பெக்டரும் அப்பாவும் முறைத்துப் பார்த்ததும் சிரிப்பை அடக்கிக் கொள்ளுதல்)

*அப்:* அப்படீன்னு நாம் இங்கேயே காவல் நிற்கவா?

*இன்:* இந்த போலீஸ் வேலையே காவல்காரன் வேலை தானே!

*அப்:* எப்படியும் வந்துவிடுவான்.

*இன்:* பெரிய தீர்க்கதரிசி! இந்த வரட்டுப் பயல்களைப் பிடிக்க வருடக் கணக்கில் ஆகிறதே! நீர் என்னவென்றால் 'வந்து விடுவான் - வந்து விடுவான்' என்று வாய்வீச்சு வீசுகிறீர்! நமக்கு இயமன் வரும்வரைக்கும் அவங்க வர மாட்டார்கள்! வாரும், பசிக்கிறது ஏதாவது சாப்பிட்டுவிட்டு வருவோம்! (போலீஸ்காரர்களைப் பார்த்து) கவனம்! ... (இருவரும் போதல்)

[ திரை ]

★★★

## காட்சி 41

(புலியூர்குறிச்சி)

கொள்ளையடித்து செல்வந்தரான உடையத் தேவர் வீடு

(உடையத்தேவர், துரை, காசி - உடையத்தேவர் பணத்தை எண்ணிக்கொண்டிருக்க துரையும், காசியும் வருதல்)

*உ-தே:* (ஒரு காகிதத்தில் எழுதியவாறு) ஆயிரத்தி முன்னூறு முன்னூறும்... ஒருநூற்றி ஐம்பதும்... நூற்றி ஐம்பதும்...

*துரை:* நானூற்றிஐம்பது!

உ-தே: (திகைத்து, பணத்தை மறைத்தபடி) ஆ!... உம்... யாரு... துரைவாப்பாவா... கூட... காசியா? (பின்புறம் பார்வையைச் செலுத்தியவாறு) ஜெம்பு...?

*துரை:* ஜெம்பு வரவில்லை!...

உ-தே: அப்படியா! வாருங்கள், உட்காருங்கள்... பாவம், அவர் மனைவி இறந்துவிட்டாள்... குடிப்பதற்கு மோர் கொண்டுவரச் சொல்லட்டுமா?

*காசி:* வேண்டாம்! உங்கள் உபசரிப்பே குளுமையாகத்தான் இருக்கிறது.

*துரை:* எதுவுமே அளவுக்கு மீறக்கூடாது!

உ-தே: மீறினல் அமுதம்கூட விஷமாகிவிடுமே!... நீங்கள் என்னைத் தேடி வந்த விஷயம்?

*துரை:* நாங்கள் பரங்கியர்களின் பாதம் பிடித்து பணக்காரர்களானவர்களைக் கொள்ளையடிக்கிறோம்! நீங்கள் சமரச நோக்கால் ஏழை, பணக்காரன் வேறுபாடின்றி கொள்ளையடிக்கிறீர்கள்!

உ-தே: (சிரித்து) தொழில் ஒன்றுதானே...

*துரை:* ஆமாம்..... அதனல்தான் கொள்ளையும் அடித்துவிட்டு எங்கள் பெயரைச் சொல்லிவிட்டு வருகிறீர்!

உ-தே: (பயந்து) ஆ... வந்து... அப்படி ஒன்றுமில்லையே...

*துரை:* பொய் மட்டும் சொல்லாதீர்கள்! தகுந்த ஆதாரத்துடன்தான் சொல்லுகிறேன்.

உ-தே: இல்லை...... நான் சொல்லவில்லை... என் கூட்டாளிகள் யாராவது சொல்லியிருப்பார்கள்.

*காசி:* ஓகோ... ஏன் ஐயா, வீரப் பரம்பரையில் உதித்தும் இந்த மாதிரி ஈன புத்தி! சரி, நேரமாகிறது! சீக்கிரம் எண்ணி வைத்ததை எடுங்கள்!

உ-தே: துரை, காசி, உண்மையிலேயே நான் இப்பொழுது அந்தத் தொழிலை அறவே நிறுத்திவிட்டேன்! ஒரு மாதமாக...

*துரை:* வட்டிக் கடை நடக்கிறது. அப்படித்தானே? தெரியும்!

உ-தே: அதையும் தெரிந்துதான் வைத்திருக்கிறீர்களா?

*துரை:* ஆமாம்! இது வேருெரு வழியில் கொள்ளையடிப்பு. பாணிதான் வேறு, தொழில் ஒன்றுதான்! மேலும் இப்பொழுது நீர் கொள்ளையடிப்பது தனி ஏழைகளை மட்டும் தான்!

*காசி:* ஆகவே உம் பணத்தில் ஒரு பகுதி ஏழைகளுக்குச் சேரவேண்டும்! உம், சீக்கிரம் எடுக்கிறீர்களா? (துப்பாக்கி எடுத்துக் காட்டி) வாழவேண்டுமல்லவா?

*துரை:* (துப்பாக்கி எடுத்து) வட்டி வாங்கவேண்டுமல்லவா?

உ-தே: (பயத்தால் சிரித்தவாறு) என்ன இது? நான் இல்லை என்று சொன்னேனு? எத்தனையோ முறை கொடுத்திருக்கிறேனே! (ரூபாயை எடுத்து) இதோ ... ஆயிரத்திற்கு மேல் இருக்கிறது. சந்தோஷமாகக் கொண்டு போங்க!... நம்ம முத்தையா கிட்டே இப்போ ஏராளமாக இருக்கிறது.

*துரை:* தெரியும், நன்றி. வருகிருேம்!

(இருவரும் போதல்)

[ திரை ]

★★★

## காட்சி 42

(செல்வந்தர் முத்தையாவின் வீடு)

முத்தையா, துரை, காசி.

*முத்:* (ஆடம்பரமான உடையுடன் இரும்புப் பெட்டியைப் பூட்டிவிட்டு) ஆண்டவா...... முருகா...... என் பணத்திற்கு நீதான் காவல்!

*துரை:* (வந்துகொண்டே) இல்லே, முருகன் எங்களேயும் அனுப்பியிருக்கிருன்!

*முத்:* (திகைத்துத் திரும்பி) ஆ!... துரை... காசி...

*துரை:* இருவர்தான், மூவர் அல்ல! மூச்சு நின்றுவிடக்கூடாது!

*முத்:* வாருங்கள்... உட்காருங்கள்!

*துரை:* வருகிருேம்.

*காசி:* உட்காருகிருேம்!

*துரை:* உங்கள் வியாபாரமெல்லாம் எப்படி நடக்குது?... ஊருக்கே பெரிய மனுஷன்! பல குழப்பங்கள் இருக்கும்.

*முத்:* (அசட்டுச் சிரிப்புடன்) உம்...ஆ...ஆமாம்... எல்லாம் உங்க தயவுதானே!

*துரை:* ஊரிலே அநேக மக்கள் மிகவும் கஷ்டப்படுகிருர்களாமே! பக்கத்து வீடுகள் பசியால் ஓலமிடும்போது உங்களால் நிம்மதியாக எப்படி இருக்கமுடிகிறது?...

*முத்:* (அனுயாசமாக) எல்லாம் பழக்கம்தான்!

*காசி:* அந்தப்பழக்கத்தைத்தான் படுகுழியில் புதைக்க வேண்டும்!

*துரை:* காசி, ஆத்திரப்படாதே! நிதானமாகச் சொன்னல் இவர் புரிந்துகொள்வார். (முத்தையாவைப் பார்த்து) உங்கள் சொந்த ஊர் இதுதானே?

*முத்:* ஆமாம், நான் பிறந்தது முதல் இன்று வரை இங்கேதான் இருக்கிறேன்!

*துரை:* சொந்த ஊரில் சோற்றுக்கு வழியின்றி தொல்லைப்படும் அக்கம்பக்கத்து வீட்டாரின் துயர ஓலம் உங்களுக்குக் கேட்கவில்லையா?

*முத்:* அது அவர்கள் தலைவிதி! நான் என்ன செய்ய முடியும்?

*காசி:* துன்பப் படுவது ஏழைகளின் விதி; ஏமாறுவது ஏழைகளின் விதி; இன்பம் அனுபவிப்பதும, ஏய்த்துப் பிழைப்பதும் உங்கள் விதி! அப்படித்தானே?

*துரை:* விதியல்ல, சூழ்ச்சிக்காரர்கள் கடைப்பிடித்த சதி!

*முத்:* நான் எவரையும் சதிக்கவில்லை. ஆண்டவன் கொடுத்திருக்கிறார்; அனுபவிக்கிறேன்.

*துரை:* அப்படியா? அதே ஆண்டவன்தான் எங்களுக்கும் உத்தரவிட்டிருக்கிறார். மரியாதையாகப் பெட்டிச் சாவியை எடுங்கள்! ஏழைகளின் விதியை மாற்றி விடுகிறோம்!

*முத்:* உங்கள் மிரட்டல்கள் என்னிடம் வேண்டாம்! நானும் எத்தனையோ கொலைகளையும், கொள்ளைகளையும் நடத்தியிருக்கிறேன்.

*துரை:* தெரிந்துதான் வந்தோம். சாவி எங்கே?

*முத்:* **என் உயிர் இருக்கும்வரை சாவி கிடைக்காது.**

*துரை:* இருக்கும்வரைதானே?

*காசி:* எடுத்துவிட்டால் சாவி கிடைக்குமல்லவா? அது போதும்!

*முத்:* (ஆவேசமாக எழுந்து கைத்துப்பாக்கியை எடுத்தவாறு) அதையும் பார்த்துவிடுவோம்! (முத்தையா துப்பாக்கியை எடுக்குமுன், காசியும் துரையும் சேர்ந்து அவரைக் கட்டிப் போட்டுவிட்டு, பணத்தை எடுத்துக் கொண்டு போதல்)

[ திரை ]

***

## காட்சி 43

(குகைக்குள்)

ஜெம்பு, சீனியம்மாள். (துரை, காசி பிறகு வருதல்)

*சீனி*- வெளியில் சென்றவர்களை இன்னமும் காண வில்லையே? நம் சந்தர்ப்பமும் சரியில்லாத வேளை......

*ஜெம்பு*- சரியில்லைதான். என்ன செய்யலாம்? எங் களை நம்பியிருக்கும் ஏழைகளுக்கு என்ன பதில் சொல்வது? கூட இருக்கும் தோழர்களுக்கும் சாப்பாடு போடவேண்டும். நாங்களும் வாழவேண்டுமே! இருந்தவை தீர்ந்துவிட்டன! புதிதாக உண்டுபண்ணத்தான் துரையும், காசியும் போயி ருக்கவேண்டும். என்னிடம் கூறினால் நானும் கூடப் புறப் படுவேன் என்று எண்ணி உன்னிடம் மட்டும் சொல்லி விட்டுப் போய்விட்டார்கள்! எனக்கும் கவலையாகத்தான் இருக்கிறது.

*சீனி*- கவலைப்பட ஒன்றுமில்லை. துரையும், காசியும் ஏமாறும் சோணகிரிகளா? (துரை, காசி வருதல்)

*துரை*- அப்படிச் சொல், சீனியம்மா. உன் வாயில் சீனியைத்தான் போடவேண்டும்!

*ஜெம்பு*- வாருங்கள், நூறு வயது! எங்கே சென் றீர்கள்?

*துரை*- எங்கெல்லாமோ சென்றோம்! நீ ஏன் வீணைகக் கவலைப்படுகிறாய். இலகுவில் எங்களுக்கு ஆபத்து வந்து விடாது.

*ஜெம்பு*- வராமலிருக்கவேண்டுமென்பதுதான் என் பிரார்த்தனை.

*காசி*- பிரார்த்தனை பலிக்கட்டும்... (நகைகளையும், பணத்தையும் எடுத்து) இதோ பாருங்கள், இன்றைய வருவாய்!

*துரை*- சீனியம்மா, அதை வாங்கி வை. பணம் மட் டும் ஜெம்புவிடம் இருக்கட்டும்!

*ஜெம்பு-* இவையெல்லாம் எங்கே கிடைத்தன?

*துரை-* எங்கோ கிடைத்தன. விபரம் பிறகு சொல்வேன். நீ நமது திட்டத்தை மறந்துவிட்டாயா?

*ஜெம்பு-* என்ன திட்டம்?

*காசி-* குழந்தைகள் விஷயமாக......

*ஜெம்பு-* (எழுந்து, ஆவலோடு) ஆமாம்!......... போகலாமா?

*துரை-* கேள்வி எதற்கு? உடனே செய்யவேண்டிய பணி அல்லவா? பொன்னி காத்திருப்பாள்.

*ஜெம்பு:* சீனியம்மா.........

*சீனி-* நான் இங்கேயே இருக்கிறேன். நீங்கள் போய் வாருங்கள். (மூவரும் போதல்)

[ திரை ]

★★★

## காட்சி 43 - A

(காட்டுப் பாதை)

டோறூர் - காருண்ய அம்மாள் என்ற கிறிஸ்தவ கன்னியாஸ்திரி, கூட சில ஆண்களும், பெண்களும்.

ஜெம்பு, துரை, காசி. (காருண்ய அம்மாள் பல்லக்கில் வருதல்)

*துரை-* அதோ, காருண்ய அம்மாளின் பல்லக்கு. அவர்கள் தரிசனம் கிடைப்பதே நம் பாக்கியம். தங்கமான குணம்; அன்பின் உறைவிடம். ஏற்கெனவே இராமலிங்க அண்ணு நம் குழந்தைகள் விஷயமாகக் கூறியிருப்பார். நாம் அதை நினைவூட்டி, எப்படியும் குழந்தைகளை அம்மாவின் பாதுகாப்பில் சேர்த்துவிடவேண்டும். 'சரி' என்று ஒப்புக்கொண்டுவிட்டால் போதும், கண்ணை இமை காப்பது போல் குழந்தைகளைக் காப்பாற்றுவார்கள்.

(பல்லக்கு அருகில் வந்ததும்)

*ஜெம்பு, துரை, காசி:* வணக்கம், தாயே!

*காருண்ய அம்மாள்:* நிறுத்துங்கள். (பல்லக்கு நின்றதும்) யார் நீங்கள்?

*கூட்டத்தில் ஒருவன்:* இவர்கள் பெரிய கொள்ளைக் காரர்கள்.

*ஜெம்பு:-* இல்லையம்மா! தன்னலமற்ற தன்மானத் தமிழர்கள்.

*காசி:* (மெதுவாக, 'கொள்ளைக்காரன்' என்று கூறியவன் காதருகில் சென்று) ஏன் அப்பா, உன் வீட்டில் கொள்ளையடித்தோமா? அல்லது அடிக்கவேண்டுமா?

*ஜெம்பு:* சி. ஐ. டி. இராமலிங்கம் அண்ணு தங்களிடம் கூறியிருப்பாரே......

*காருண்:* (யோசித்து) ஆ... ஆமாம். கள்ளர் மூவர் உங்களை சந்திப்பார்கள் என்று கூறினர்!

*ஜெம்பு:* ஏழைகளை ஏமாற்றி பெரிய மனிதர்களாக உலவத் தெரியாதவர்கள் கள்ளர் அல்லவே!

*காருண்:* (சிரித்து, இதமாக) அப்பா, நல்லவர்களை ஏன் கள்ளர்கள் என்று கூறவேண்டும்?

*ஜெம்பு:* தாயே, உங்கள் கேள்விகளுக்குப் பதில் கூறும் ஆற்றல் எங்களுக்கு ஏது? அனுதைகளுக்கு ஆதரவு கொடுக்க வருவீர்கள் என்ற நம்பிக்கையில்......

*காருண்:* (புன்முறுவலுடன்) கவலைப்படாதே, அப்பா! இராமலிங்கம் என்னிடம் எல்லா விபரங்களையும் கூறினர். உன் பெயர்தான் ஜெம்புலிங்கமா?

*ஜெம்பு:* ஆமாம், தாயே! நாங்கள் கெட்டவர்கள் அல்லர். ஆனுல் கோழைகளும் அல்லர். தன்மானம் இழக்கத் தயங்கி கள்ளர்களாக வாழுகிறோம்! இயன்ற அளவு நன்மை செய்கிறோமே தவிர தீமை செய்ததில்லை!

*காருண்:* புதிர் நிறைந்த இவ்வுலகில், எல்லோருமே நல்லவர்கள்தான். இறைவன் படைப்பில் குற்றம் காண யாரால் முடியும்! நம் மனம்தான் நல்லவர் கெட்டவர் என்று பிரித்துக் கலங்குகிறது. கர்த்தர் எல்லோருக்கும் தந்தை.

*ஜெம்பு:* உண்மை தாயே! உங்கள் கருத்தை உலகம் உணரவில்லையே!

*காருண்:* அதுவும் கர்த்தர் திருவுள்ளம்தான்! சரி, உங்கள் குழந்தைகள் இப்பொழுது எங்கிருக்கின்றன?

*ஜெம்பு:* ஏர்வாடியில், பொன்னி என்ற பெண்ணின் பாதுகாப்பில் பத்திரமாக இருக்கின்றன. தங்கள் அனுமதி கிடைத்தால் டோனாவூருக்கு அனுப்பிவிடுவோம்! பெற்ற தாயை இழந்து பேதலிக்கும் குழந்தைகளுக்கு உற்ற தாய் உங்களைத் தவிர யாருமிலர்.

*காருண்:* என்னிடம் அத்தனை நம்பிக்கையா? நீங்கள் ஏமாற்றித் தொல்லை கொடுக்கும் ஆங்கில சர்க்காரின் ஆட்களல்லவா நாங்கள். எங்களிடமே உன் குழந்தைகளை ஒப்புவிக்கிறாயே!

*ஜெம்பு:* அரசியல் வேறு, அன்பு வேறல்லவா? அன்பும் அறிவும் ஒருருவான தாங்கள் அறியாததா? மேலும் நாங்கள் ஆங்கிலேயர்களை வெறுக்கவில்லை தாயே! எல்லோரும் மனிதர்கள்தானே! அவர்கள் எங்கள் மீது திணிக்கும் அதிகாரத்தைத்தான் நாங்கள் வெறுக்கிறோம்!

*காருண்:* (சிரித்து) நீங்கள் சாதாரணக் கள்ளர்கள் அல்லர்! தேசீயவாதிகளும்கூட. கண்ணியமிருக்கிறது, வீரம் இருக்கிறது, விவேகமான பேச்சு வருகிறது. ஜெம்பு லிங்கம், நீயும் உன் தோழர்களும் ஏழைகளைக் காப்பாற்றத் திருடுவதை விட உங்கள் கொள்கைகளைப் பரப்பி, செல்வந்தர்களைத் திருத்துவதே நல்வழி. மறைந்து மலைக் குகைக்குள் வாழ்வதைவிட மக்கள் மத்தியில் கருத்துரை வழங்குவதுதான் சிறந்த வழி! 'ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவதைவிட கஷ்டமானது பணக்காரன் மோட்ச ராஜ்யத்திற்குள் வருவது' என்று ஆணித்தரமாகக் கூறிய இயேசு மகானின் பொன்மொழியைப் படித்துக்கொண்டே பணம் சேர்ப்போர் ஏராளமாக இருக்கிறார்கள். உழைத்து உழைத்துத்தான் அவர்களைத் திருத்தவேண்டும்!

*ஜெம்பு:* தாங்கள் கூறுவதுபோல், மக்கள் மத்தியில் நடமாட எங்களுக்கு அதிர்ஷ்டமில்லையே! கண்டவுடன் கைது செய்யக் காத்திருக்கிறதே சர்க்கார்!

*காருண்:* உண்மைதான். அது விஷயமாக என்னால் முடிந்த உதவிகளைச் செய்வேன். குழந்தைகளை என்னிடம் அனுப்பு. (ஒரு புத்தகத்தைக் கொடுத்து) இதோ, மன நிம்மதியில்லா வேளையில் இதைப் படியுங்கள். நான் வருகிறேன்.

*மூவரும்:* நன்றி தாயே! எங்கள் கவலையைத் தீர்த்து விட்டீர்கள். (கரங்கூப்பி) வணக்கம்.

(காருண்ய அம்மாள் போதல்)

[ திரை ]

***

## காட்சி 44

(பணகுடிச் சந்தை)

மாறுவேடத்தில் ஜெம்பு, காசி, துரை, மற்றும் ஓ. பி. எம். முதலாளி, அவர் கடை பையன், இன்ஸ்பெக்டர், போலீஸ் 103, அப்பாவு.

(ஜெம்புவின் பெயரை, பும்ஜே என்றும், துரையின் பெயரை ரைது என்றும், காசியின் பெயரை சீகா என்றும் மாற்றி வைத்து மூவரும் பேசியவாறு வருதல்)

*ஓ. பி. எம்:* (இன்ஸ்பெக்டரைப் பார்த்து) மூன்று பேரில் ஒருவன்கூட அகப்படவில்லையே!

*அப்:* என்ன செய்யலாம். போலீஸ் மட்டும் முயற்சித்தால் போதுமா? திருடர்களைப் பிடிக்கவேண்டுமென்றால் பொதுமக்களும் உதவவேண்டும். பொதுமக்கள்தான் கோழைகளாகிவிட்டார்களே!

*இன்:* நீங்கள் பெரிய வீரர்!

*ஓ. பி. எம்:* (சிரித்து) மக்கள் கோழைகள் அல்ல, திருடர்களின் ஆதரவாளர்களாகிவிட்டார்கள்!

*அப்:* நீங்கள் கூட அப்படித்தானா?

(மூவரும் அருகில் நின்று கவனித்தல்)

*ஓ.பி.எம்:* நானு? என் கையில் சிக்கினுல் விடுவேனு? கசாப்புக் கடைக்காரனிடம் சிக்கிய ஆட்டின் கதிதான்! என் நூல் கட்டுகளைக் கொள்ளையடித்தவர்களல்லவா? நேரில் வந்து பார்க்கவேண்டும்!

*இன்:* ஏதாவது துப்புக் கிடைத்தால் உடனே தெரிவியுங்கள்?

*ஓ. பி. எம்:* நானே கட்டிப் போட்டுவிட்டு ஆள் அனுப்புவேன்.

*இன்:* அது போதும். நாங்கள் வரட்டுமா?

*ஓ. பி. எம்:* போய்வாங்க. வியாபார சமயம்...

(இன்ஸ்பெக்டர், அப்பாவு, போலீஸ் 103 முதலியோர் போதல்)

*ஜெம்பு:* (துரைவாப்பாவைப் பார்த்து) ரைது, நம்ம நூல் கடை முதலாளி பெரிய தைரியசாலி!

*துரை:* தெரியுதே! யாரையோ கட்டிப் போட்டுவிடுவேன் என்று சொன்னுரே!

*ஓ. பி. எம்:* யாரய்யா நீங்க? என்ன வேண்டும்? தெரிஞ்சவங்க மாதிரி பேசுறீங்களே!

*ஜெம்பு:* எங்களுக்கு கொஞ்சம் நூல் கட்டுகள் வேண்டும்!

*ஓ. பி. எம்:* அப்படியா? உட்காருங்கள். உங்க பேரு, ஊரு......?

*ஜெம்பு:* என் பெயர் பும்ஜே. (துரையைக் காட்டி) இவன் பெயர் ரைது, (காசியைக் காட்டி) இவன் பெயர் சீகா... நாங்கள் பம்பாயிலிருந்து நேற்றுத்தான் வந்தோம். திருநெல்வேலியில் தறி வைத்திருக்கிறேம். உங்களிடம் நூல் மலிவாகக் கிடைக்குமென்று அறிந்து வந்தோம்!...

*ஓ. பி. எம்:* (பெருமகிழ்ச்சியில்) ஓகோ! திருநெல்வேலி என்னுங்க. பம்பாய் வரைக்கும் நம்ப பேரு கொடி கட்டிப் பறக்குமே! எத்தனை கட்டுகள் வேண்டும்?

*துரை:* நாற்பதில் ஐந்து கட்டுகள், (காசியைக் காட்டி) அவனிடம் கொடுத்தனுப்புங்கள். (காசியிடம்) சீகா, நம் வண்டியில் கொண்டு வைத்துவிட்டு உடனே வந்துவிடு. அடுத்து 100-ஆம் எண்ணில் பத்து கட்டுகள்!

*ஓ.பி.எம்:* (சிறு பையனை கடை வேலையாளைப் பார்த்து) டேய்! எடுத்துவை. (வேலையாள் நூற்கட்டுகளை எடுத்து வைக்க காசி கொண்டுபோதல்)

*ஜெம்பு:* குடிப்பதற்கு ஏதாவது கிடைக்குமா?

*ஓ.பி.எம்:* ஓ! சர்பத் வாங்கி வரச் சொல்லுகிறேன். (வேலையாளிடம்) டேய்! மூன்று சர்பத் வாங்கி வா! சீக்கிரம்.
(வேலையாள் வெளியே போதல்)

*துரை:* பும்ஜே, நம் வேலையைத் தொடங்கலாமா?

*ஜெம்பு:* தொடங்குவோம்! நேரமாகிறது. ஓய் முதலாளி, உம்மிடம் ஜெம்புலிங்கமும், துரைவாப்பாவும், காசியும் அகப்பட்டால், கசாப்புக் கடை ஆடுகளை வெட்டுவது போல வெட்டிவிடுவீரா?

*ஓ.பி.எம்:* (பயந்து) நீங்கள்......... நீங்கள்!.........

*ஜெம்பு:* நாங்கள் ஆட்டுக்குட்டிகள்தான் (துப்பாக்கியை எடுத்து அவர் முன்பு மட்டும் காண்பித்து மெதுவான குரலில்) சப்தம் போட்டால் சமாதிதான்! மூச்சுவிடக் கூடாது! ஓய், கசாப்புக்கடை வீரரே! அரசாங்கத்தின் ஆதரவைத் தேடுவதற்காக எங்களைக் காட்டிக்கொடுக்கப் போகிறீரா?

*ஓ.பி.எம்:* (பயந்து நடுங்கி) ஜெ... ஜெம்புலிங்கம்... துரை... வாப்பா... என்னை விட்டுவிடுங்கள்! உங்களையாவது, நான் காட்டிக்கொடுப்பதாவது! போலீசாரை ஏமாற்றச் சும்மா கதை அளந்தேன். இல்லாவிட்டால் என்னல் வாழமுடியுமா?

*துரை:* நீ வாழவேண்டுமென்று எத்தனை பேர்களின் வயிற்றில் அடிக்கிருய்! சர்க்காருக்குச் சேரவேண்டிய பணத்தை ஏப்பமிட்டுவிட்டு நாங்கள் கொள்ளையடித்ததாகக் கூறினுயே! உன்னைக் கொள்ளையடிக்காமல் விட்டது தவறல்லவா?

*ஓ.பி.எம்:* துரைவாப்பா!...... இதெல்லாம் உங்களுக்கு.........?

*ஜெம்பு:* எங்களுக்கு எப்படித் தெரிந்தது என்று திகைக்கிருயா? உன் அருகிலேயே எங்கள் ஆள் இருக்கிறது!

*துரை:* ஏன் பேசிக்கொண்டிருக்கிருய்? சுட்டுத் தள்ளி விட்டு அகப்பட்டதை சுருட்டிக்கொண்டு போவோம்!

*ஓ.பி.எம்:* ஐயோ!........... கொன்றுவிடாதீர்கள். எவ்வளவு பணம் வேண்டுமாஞலும் தருகிறேன். இனிமேல் உங்கள் வழிக்கே வரமாட்டேன்!

*ஜெம்பு:* எவ்வளவு பணம் வேண்டுமாஞலும் தரு வாயா? வேண்டாம், எங்களுக்குப் பேராசையில்லே! உன் னிடம் இருக்கிற பணத்தை மட்டும் கொடுத்துவிடு, போதும்!

*ஓ.பி.எம்:* முழுவதையுமா?

*துரை:* பின்னே பாதியை வைத்துவிட்டா போவோம்! உன்னேக் கொன்ருல் அத்தனே பணமும் எடுத்துவிடு வோமே! சீக்கிரம் கொடுத்துவிடு. உயிராவது மிச்ச மாகட்டும்! உம்! (ஓ. பி. எம். நடுங்கியவாறே ரூபாய் நோட்டுக்களே எடுத்துக் கொடுக்க துரை பெற்றுக் கொள்ளுதல்)

*ஜெம்பு:* நன்றி. வருகிருேம்! இந்த விஷயத்தை யாரிடமாவது சொன்ஞல் (துப்பாக்கியைக் காட்டி) ஒரே குண்டு. ஞாபகம் இருக்கட்டும்! (இருவரும் போதல்; ஓ. பி. எம். தலேயில் கை வைத்து, கவலேயுடன் இருக்க வேலேயாள் சர்பத்துடன் வருதல்)

*வேலேயாள்:* முதலாளி, முதலாளி! சர்பத் வாங்கி வந்திருக்கிறேன். ஐஸ் போட்ட சர்பத்! (சுற்றிலும் பார்த்து) அவங்க எங்கே?

*ஓ.பி.எம்:* (தலே கவிழ்ந்தவாறே கோபத்தில்) உங்க பாட்டன் வீட்டிற்குப் போயிருக்காங்க!

*வேலே:* ஓகோ. சர்பத்தை என்ன செய்ய......?

*ஓ.பி.எம்:* (எரிச்சலுடன்) என் தலேயிலே ஊற்று!

*வேலை:* சரி'ங்க... (சர்பத்தை முதலாளியின் தலையில் விடுதல்)

*ஓ.பி.எம்:* (பதட்டமடைந்து கோபத்தில்) டேய், டேய்! அயோக்கியப் பயலே!

*வேலை:* நீங்கதானே விடச் சொன்னீங்க?

*ஓ.பி.எம்:* (சாந்தமடைந்து, வடிந்த சர்பத்தை நக்கியவாறு) விடுடா! தாராளமாக விடு! உன்னிடம் கோபத்தைக் காட்டி என்ன பயன்? சூடேறிய மண்டைக்கு ஐஸ் சர்பத் குளிர்ச்சியையூட்டுகிறதே! அடுத்த கிளாஸ் எங்கே? அதையும் விடு! (வேலையாள் பயந்து ஒதுங்க, ஓ. பி. எம். கோபத்தில்) விட்டுத் தொலையேன்'டா! (வேலையாள் அத்தனை சர்பத்தையும் தலையில் கொட்ட ஓ. பி. எம்., தன்னிலை இழந்து அசையாமல் இருக்கிறார்)

[ திரை ]

★★★

## காட்சி 44 - A

(கோரியூர்)

ஜெம்பு, துரை, காசி, பொன்னி, சிங்காரம் மற்றும் இருவர். அரிசி, துணி, பணம் முதலியவைகளை ஏழைகளுக்குத் தானம் வழங்குதல்.

*ஏழை ஒருவர்:* (தானம் வாங்கி வருபவரிடம்) ஐயா, எங்கே தானம் கொடுக்கிறார்கள்?

*மற்:* கொஞ்சம் நிதானமாக போங்கள். சமாதானமாக வாங்கிக்கொண்டு போகலாம். அதோ அந்த சத்திரத்தில் போய்க் கேளும்.

*ஏழை:* யார் கொடுக்கிறார்கள்?

*மற்:* யாரோ... புரட்சி வீரர் மூவராம்! பெயர் தெரியவில்லை. யாராக இருந்தால் என்ன? நல்லவர்கள் கொடுக்கிறார்கள். இல்லாதார் வாங்கிக்கொண்டு போகவேண்டியதுதானே! விளம்பரச் சுவரொட்டிகளும் ஒட்டுகிறார்கள்!

ஏழை: அப்படியா!...... மூவரின் தானமா? எனக்குத் தெரிந்துவிட்டது!........... சரி, நீங்கள் போங்கள்.
(விரைந்து போதல்)

ஜெம்பு: (எல்லோருக்கும் தானம் வழங்கியவாறு, துரையைப் பார்த்து) அந்த விளம்பரத்தைப் படித்துக் காட்டு!

துரை: (விளம்பரத் தாளை விரித்தபடி) வளங்கொழிக்கும் செந்தமிழ் நாட்டு மக்களே! அண்டிப் பிழைக்க வந்து ஆளும் உரிமை பெற்ற அரசாங்கத்திற்கு நமது எச்சரிக்கை இது:- ஏகாதிபத்திய அன்னிய அரசாங்கமே! அவர்களின் கைப்பொம்மைகளாக இருந்து பிறந்த மண்ணிற்கே துரோகம் செய்யும் செல்வச் சீமான்களே! மக்கள் மத்தியில் எங்களைக் கொள்ளைக்காரர்கள் என்று நீங்கள் தூற்றினாலும் உங்கள் பொய்யுரையை மக்கள் நம்பமாட்டார்கள். நாங்கள் கொள்ளையடித்த பொருட்கள் அத்தனையும் கோரியூர், நம்பி கோவில், வள்ளியூர், பணகுடி வாழ் மக்களுக்கும் சுற்றுப்புற கிராம மக்களுக்குமாகப் பகிர்ந்தளித்துவிட்டோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம்! ஒரு சில வியாபாரிகள், எங்கள் பெயர் கூறி மக்களையும், ஆங்கில அரசாங்கத்தையும் ஏமாற்றுகிறார்கள். அந்த எத்தர்கள் விஷயத்தில் கவனமாக இருங்கள்! எங்களிடம் இருந்தவைகள் தற்பொழுது தீர்ந்துவிட்டதால், விரைவியேயே சில பகற் கொள்ளைப் பணக்காரர்களையும் ஜமீன்தார்களையும் பதம் பார்ப்போம்! உறுதியிருப்பின் பாதுகாத்துக்கொள்ளுங்கள்! சுதந்திரத்திற்காகப் பாடுபடும் தியாகிகளுக்கு எங்கள் மனமார்ந்த வணக்கங்கள்! சூழ்ச்சிக்காரர்களுக்கு எங்கள் எச்சரிக்கை அறிவிப்பு!

இப்படிக்கு,
புரட்சி வீரர் மூவர்!......

ஜொரபு! இதை எங்கே ஒட்டுவது?

ஜெம்பு: போலீஸ் ஸ்டேஷன் சுவரிலேயே ஒட்டி விடுவோம்!

*காசி:* பொருத்தமான இடம். அந்தப் பணியை நான் நிறைவேற்றுகிறேன். (சுவரொட்டியை வாங்கிக்கொள்ளுதல்)

*ஜெம்பு:* இரவில் நடக்கட்டும்! வாருங்கள் போகலாம்.

*மக்கள்:* புரட்சி வீரர் மூவர்!

*மக்கள்:* வாழ்க!

[ திரை ]

***

## காட்சி 45

(வள்ளியூர் போலீஸ் ஸ்டேஷன்)

இன்ஸ்பெக்டர், போலீஸ் 103, (இராமலிங்கம் பிறகு வருதல்; இன்ஸ்பெக்டர் எழுதிக்கொண்டிருக்க போலீஸ் 103 வருதல்)

*போ-103:* சார்! நீங்க பார்த்தீங்களா? நம் ஸ்டேஷன் சுவரிலேயே படுபாவிப் பயல்கள் விளம்பர நோட்டீஸ் ஒட்டியிருக்காங்க.

*இன்:* (கோபத்தில்) இதைக் கூட என்னிடம் வந்து சொல்லவேண்டுமா? கிழித்துக்கொண்டு வா! இந்த நாடகக் காரர்களின் தொல்லை பெரிய தொல்லை! விளம்பரத்தில் நாடகத்தின் பெயரும், நடத்துகிறவரின் பெயரும் இருக்குமே! குறித்துவை. பிறகு கவனிக்கலாம்!

*போ-103:* இது நாடக விளம்பரமில்லைங்க. அந்த ஜெம்புலிங்கத்தின் விளம்பரம்!

*இன்:* (பதட்டத்துடன்) ஜெம்புலிங்கமா?... விளம்பர நோட்டீசா? சீக்கிரம் கிழித்து எடுடா! சர்க்கிளோ சூப்ரெண்டோ வந்தால் நம் பாடு தீர்ந்தது. அதைக் கண்டவுடனே கிழிக்காமல் என்னிடம் வந்து சொல்கிறாயா?

*போ-103:* உங்க அனுமதியில்லாமல்.........

*இன்:* (கோபத்தில்) மண்ணுங்கட்டி. சீக்கிரம் போ! (போலீஸ் 103 கிழித்து எடுத்து வர, இன்ஸ்பெக்டர் படிக்கிருர்)

*இன்:* அளவு மீறிவிட்டது! பெருத்த அவமானம்! நேற்று இரவு இங்கு யார் யார் இருந்தார்கள்?

(இராமலிங்கம் வருதல்)

*இரா:* (வந்துகொண்டே) என்ன, என்ன சார் பதட்டம்?

*இன்:* வாருங்கள். ஜெம்புலிங்கத்தின் அட்டகாசம் அளவு மீறிவிட்டது! போலீஸ் ஸ்டேஷன் சுவரிலேயே சர்க்காரைத் தாக்கி போஸ்டர் ஒட்டியிருக்கிருன்!

*இரா:* (வியப்புடன்) அப்படியா! எங்கே? நான் பார்க்கவில்லையே!

*இன்:* (கோபத்துடன்) கர்மம்! நீங்கள் பார்க்கும் வரைக்கும் அதை அப்படியே வைத்திருக்கவேண்டுமா? இந்த மாதிரி சி. ஐ. டி. போலீசுகள் இருக்கிறதுனலேதான் அவன் இவ்வளவு தூரத்திற்கு வந்துவிட்டான்!

*இரா:* கோபப்படாதீங்க. என்ன எழுதி ஒட்டி யிருக்கிருன் என்று தெரிந்துகொள்ளவேண்டாமா? அதனுல் கேட்டேன்!

*இன்:* என்ன எழுதிவிடுவான்? பொதுவுடமைத் திட்டம் கொண்டுவருகிருன். அரசாங்கத்தையே கவிழ்க்க அடித்தளம் அமைக்கிருன்!

*இரா:* ரொம்ப நல்லதாப் போச்சு! எந்த அரசாங்கம் வந்தால் நமக்கென்ன? வருகிற அரசாங்கத்தின் கீழ் வேலை பார்க்கவேண்டுவதுதானே நம் கடமை! நீங்கள் கோபப்படுவதைப் பார்த்தால் இந்தியா முழுவதும் உங்கள் பெயருக்கு இருப்பதுபோலல்லவா தெரிகிறது! என்ன ராஜ பக்தி!

இன்: மிஸ்டர் இராமலிங்கம். ஊரிலே உமக்கு சற்று செல்வாக்கு இருக்கிறதென்று அரசாங்கத்தைத் தாக்கிப் பேசுவது சரியல்ல! என்னை உங்களுக்கு சரியாகத் தெரியாது. என் வேதனையை விரிவாக்காதீர்கள்!

இரா: உங்களுக்கென்ன அவ்வளவு வேதனை?

இன்: கேட்கமாட்டீர்களா? மேலிடத்தார் என்னைச் சித்ரவதை செய்கிறார்களய்யா! அந்தப் பயல்கள் மூவரையும் பிடித்துப் போடாவிட்டால் என்னை உள்ளே தள்ளி விடுவார்கள் போலிருக்கிறது. (போலீஸ்காரர்களைக் காட்டி) இவர்கள் வெறும் சோற்றால் அடித்த பிண்டங்களாக இருக்கிறார்கள்! ஜெம்புலிங்கத்தின் பெயரைக் கேட்டாலே பேய் பிசாசைக் கண்டவர்போல் பயந்து சாகிறார்கள். துப்பாக்கியைக் கூட கீழே போட்டுவிட்டு ஓடி விடுவார்கள் போலிருக்கிறது.

இரா: மேலிடத்தாரும் தங்களை இப்படித்தான் தாக்குகிறார்கள் போலிருக்கிறது! ஜெம்புலிங்கம் உங்களைக் கண்டு பயந்து, ஒளிந்து இருக்கிறான். நீங்கள் மேலிடத்தாருக்குப் பயந்து நடுங்குகிறீர்கள்! துணிந்து எழுத வேண்டும்.

இன்: என்ன எழுதவேண்டும்?

இரா: போலீஸ் போதுமானதாக இல்லை. இராணுவத்தை அனுப்பிவையுங்கள் என்று எழுதுங்கள்!

இன்: இது சரியான ஐடியா! இப்படியல்லவா சொல்லவேண்டும்! (அப்பாவு வருதல்)

இரா: நான் வருகிறேன், வணக்கம்.

இன்: போய்வாருங்கள், பிறகு சந்திக்கலாம். (இராமலிங்கம் போதல்)

அப்: (இன்ஸ்பெக்டரிடம்) வணக்கம்!

இன்: வணக்கம். என்ன விஷயம்?

அப்: (கிண்டலாக) என்ன பிரமாதமான ஐடியா சொல்லிட்டுப் போகிறீர்?

இன்: அது இருக்கட்டும். நீங்கள் வந்த விஷயத்தைச் சொல்லுங்கள்.

அப்: பெரிய விஷயம். ஏ. ஒன் ஐடியாவோடு வந்திருக்கிறேன்!

இன்: (சலிப்புடன்) உங்க ஐடியாவும், நீங்களும்...

அப்: பழைய ஐடியாவைப்போல நினைக்கவேண்டாம். இதில் தோல்வியடைந்தால்.........

இன்: உயிரையே விட்டுவிடுவீர்!

அப்: ஓ, எஸ்! உண்மை!

இன்: சரிதான், சீக்கிரம் சொல்லுங்கள்! கேட்டுத் தொலைக்கிறேன்.

அப்: தொலைக்கத்தான் வழி சொல்லுகிறேன் ஊரில் ஜெம்புலிங்கத்தின் கையாட்கள் சிலரை வசப்படுத்தியிருக்கிறேன். அவர்களிடம் கொஞ்சம் பணத்தைக் காட்டி... அப்படியே......

இன்: (வெறுப்புடன்) நீங்கள் வந்த உடனேயே நினைத்தேன். எப்பொழுதும் பணம், பணம், பணம்தான்! எனக்குப் பைத்தியமே வந்துவிடும் போலிருக்கிறது.

அப்: அது வராமல் எதுவுமே நடக்காதே!

இன்: (கோபத்தில்) மிஸ்டர்! எனக்குப் பைத்தியம் வந்தால்தான் எல்லாம் நடக்குமா?

அப்: செ, செ, நீங்க என்னுங்க! நான் பணத்தைச் சொல்கிறேன். பணம் வராமல் எதுவுமே நடக்காதே! என்று சொன்னேன்!

இன்: சரி, சரி, எழுந்திருங்கள். முதலில் அந்த ஆட்களைப் பார்த்து வருவோம்!

அப்: ஆகட்டும்......... (இருவரும் போதல்)

[ திரை ]

## காட்சி 46

(புலியூர்க்குறிச்சி)

பல திருட்டு வழக்குகளில் சம்பந்தப்பட்ட உடையநாதர் வீடு, உடையநாதர், அவர் நண்பர் மூவர், இன்ஸ்பெக்டர், அப்பாவு,

(உடையநாதர் மது போதையில் நண்பர்களுடன் சீட்டு விளையாட்டில் ஈடுபட்டிருக்க, இன்ஸ்பெக்டரும், அப்பாவும் வருதல்)

இன்- (வந்துகொண்டே) சீட்டுக்கச்சேரியா?

உடை- (போதையில் திரும்பிப் பார்த்தவாறே) ஆ...... யார்...... அது?......

அப்- சீட்டுக் கச்சேரி மட்டுமில்லை போலிருக்கிறது... நான்தான் அப்பாவு. கூட இன்ஸ்பெக்டரும் வந்திருக்கிறார்.

உடை- (பணிவுடன் எழுந்து தள்ளாடியவாறே) அப்படியா! இன்ஸ்பெக்டர்... ஐயா, வாங்க... உட்காருங்க. என்ன விசேடம்?

இன்- நான் உட்காருகிறேன். முதலில் நீங்கள் உட்காருங்கள்.

உடை- அதுவும் சரிதான்... (உட்கார்ந்து) என்னை ...... தேடி வந்துவிட்டீங்களே... சொல்லியனுப்பினால் நானே அங்கு வந்திருப்பேனே......

அப்- என்ன விசேடம் என்று கேட்கிறீங்களே!...... நான் சொன்ன விஷயம்தான்.

இன்- நம் உடையநாதர் முன்பு ஒரு முறை ஒரு பெரிய கொலை வழக்கில் சம்பந்தப்பட்டிருந்தார். நான்தான்.

உடை: ஆமாம். நான் மறக்கவில்லை. ஐயா தயவிலே தான் நான் தப்பிவந்தேன். இல்லையென்றால்... இப்பொ... சிறையிலே இருப்பேன்.........

அப்- நம் திட்டத்தைத் தொடங்குவோமா?

உடை- காத்திருக்கிறேன்...... ஒரு யோசனை......

இன்- என்ன?

உடை- சில போலீஸ்காரர்களைத் துப்பாக்கியோடு... நாளைக்கு உருமான்குளத்திற்கு அனுப்பி வையுங்கள்...... மீதி வேலைகளை நான் பார்த்துக்கொள்கிறேன். எப்படியும் மூன்று பேர்களையும் நாளையே உங்களிடம் ஒப்புவித்து விடுவேன். போதுமா?...

இன்- (பெருமகிழ்ச்சியில்) போதுமா என்று கேட்கி றீர்கள்?...... அந்த ஒரு உதவியும் செய்தால் போதும். உங்களுக்கு என்ன பரிசு வேண்டுமானாலும் தருவேன்...

உடை- அது ஒன்றும் வேண்டாமுங்க. நம்ப பசங் களுக்கு கொஞ்சம் செலவாகும்......

இன்: (ரூபாயை எடுத்து) இதோ, இதை முன்பண மாக வைத்துக்கொள்ளுங்கள்.

அப்- (ரூபாயை வாங்கி) நான் கொடுக்கிறேன்!

இன்: நடக்கட்டும் யார் கொடுத்தால் என்ன?

அப்- நீங்க போங்க. மேல் விஷயங்களை நாங்கள் கவனிக்கிறோம்!

இன்: சரி, நீங்கள் இருந்து பேசி முடித்துவிட்டு வாருங்கள். உடையநாதர், நான் வரட்டுமா?

உடை- தைரியமா போங்க! காரியம் முடிஞ்சதாகவே தீர்மானிச்சுடுங்க. (இன்ஸ்பெக்டர் போதல்)

அப்- (பாதிப் பணத்தை எடுத்து மறைத்தவாறே) உடையநாதரே! பணம் இதோ இருக்கிறது. வாங்கி வையுங்கள். மறதியில் காரியம் கெட்டுவிடக்கூடாது.

உடை- எவ்வளவு குடித்தாலும் குறி தவறமாட்டேன். நீங்க எடுத்த பணம் உங்களிடமே இருக்கட்டும்!

அப்- (திகைத்து) என்ன!...... நீங்கள்......

உடை- பார்த்துவிட்டேன். பதட்டம் வேண்டாம். உங்களுக்கும் பங்கு தரவேண்டியதுதானே!...

*அப்-* (அவமானத்தால் விழித்தவாறு) வேண்டு மென்ருல் கொடுத்துவிடுகிறேன்...... தற்சமயம் கொஞ் சம் பணமுடை, அதனுல்தான்......

*உடை-* அதைத்தான் வேண்டாம் என்றேனே......

*அப்-* அப்போ...... நான்......

*உடை-* போயிட்டு வாங்க. நாளை பார்க்கலாம்......
(அப்பாவு போதல்)

[ திரை ]

★★★

## காட்சி 46 - A

(காட்டுப் பாதை)

ஜெம்பு, காசி, துரை, பொன்னி, (உடையநாதர் பிறகு வருதல்)

ஜெம்பு, காசி, துரை மூவரும் பேசிக்கொண்டு வர, எதிரே பொன்னி விரைந்து வருதல்.

*துரை-* (பொன்னியின் வருகை கண்டு) பொன்னி, என்ன இவ்வளவு வேகம்? ஏதாவது புதுச் செய்தியா?

*பொன்-* ஆமா, நம்ம சீனியக்காளை போலீஸ்காரங்க பிடிச்சுகிட்டுப் போயிட்டாங்க!

*மூவரும்:* (திகைத்து) ஆ!

*ஜெம்பு-* எப்போது?

*பொன்-* இன்று காலையில்தான். அவள் உங்கள் குழந்தைகளைக் காப்பாற்றி ஒளித்து வைத்திருக்கிருளாம்; நமக்கு உதவி செய்கிருளாம். அதனுல்......

*துரை-* புலிகள் பிடிச்சுட்டுப் போயிட்டுதாக்கும்?

*ஜெம்பு:* பேடிகள். ஆண்களைப் பிடிக்க தைரிய மில்லை. ஒரு பெண்ணைப் பிடித்துப் போயிருக்கிருர்கள்! இருக்கட்டும்.

*துரை-* ஒரு நொடியில் வெளியே கொண்டுவந்து விடுகிறேம்!

*காசி:* அந்தப் பொறுப்பை என்னிடம் விட்டு விடுங்கள்!

*ஜெம்பு:* கூடாது. சீனியம்மாளை அவர்கள் கைது செய்த நோக்கமே அதுதான்! காப்பாற்ற நாம் செல்லு வோம்! அந்த வேளையில் நம்மை உள்ளே அமுக்கிவிட லாம் என்று முடிவு கட்டியிருப்பார்கள்! அவர்களுக்கு வேண்டியவர்கள் நாம்தான். சீனியம்மாள் அல்ல! ஆகவே சீனியம்மாவுக்கு ஒரு துன்பமும் இருக்காது!

*துரை-* உண்மைதான் (பொன்னியைப் பார்த்து) வேறு ஏதாவது?......

*பொன்-* நம் சிங்காரம் அண்ணு நேற்று இரவு திடீ ரென்று இறந்துவிட்டார்!

*மூவரும்:* (அதிர்ச்சியில்) சிங்காரம்......... இறந்து விட்டாளு?

*பொன்-* ஆமாம்! மாரடைப்பு என்று சொல்கிருர்கள். பாவம், அவன் மனைவி காளியம்மாள் கதறிக் கதறி அழுகி ருள். பரிதாபமாக இருக்கிறது.

*ஜெம்பு:* செ, செ...... என்ன இது...... கழிந்த வாரம்தானே சிங்காரத்தின் வீட்டில் சாப்பிட்டோம்! காளியம்மாள்தானே பரிமாறினுள்!...... பாவம், அவள் கதி!......

*காசி:* அவளுக்கு என்ன? எப்படியும் பிழைத்துக் கொள்வாள். சிங்காரத்தைக் கொன்றதே அவளாகத்தான் இருக்கும்! அவள் ஒரு மாதிரி!

*ஜெம்பு:* (சற்றுக் கோபத்தில்)காசி, திடீரென்று ஒரு பெண்ணைப் பற்றி இழிவாகக் கூருதே! தீர ஆராய வேண்டும்!

*துரை-* காசி சொல்வதிலும் உண்மை இருக்கவேண்டும்! நாம் சாப்பிடச் சென்ற அன்று ஏதோ கணவனும் மனைவியும் ஒற்றுமையாக இருப்பதுபோல் நடித்தாங்களே தவிர உண்மையில் அவர்களுக்குள் ஒற்றுமை கிடையாது! சிங்காரத்தின் முதலாளிக்கும் அவளுக்கும்......

*ஜெம்பு:* போதும்! வேறு ஏதாவது கூறு! காசி ஒரு நூறு ரூபாய் கொடுத்தனுப்பு. ஒரு நேரமாவது உணவருந்திய வீடல்லவா? பாவம் கஷ்டப்படக்கூடாது. (காசி நூறு ரூபாய் பொன்னியிடம் கொடுத்தல்; பொன்னியைப் பார்த்து) கேட்கவேண்டியதைக் கேட்கவில்லையே...... பொன்னி, நம் குழந்தைகளை காருண்ய அம்மாளிடம் சேர்த்துவிட்டாயா? எப்படி இருக்கிறார்கள்?

*பொன்-* ஆனந்தமாக இருக்கிறார்கள். நான் இரண்டு நாளும் அவர்களுடன் தங்கிவிட்டு நேற்றுத்தானே வந்தேன். அன்பாக வளர்க்கிறார்கள்! காருண்ய அம்மாளின் தாயுள்ளம் இருக்கிறதே!...... அடடா! பெற்ற தாய்கள் கூட அந்த கன்னித் தாயிடம் சிட்சைப்படவேண்டும்!

*ஜெம்பு:* ரொம்ப மகிழ்ச்சி.

*பொன்-* நான் வரட்டுமா?

*துரை-* எங்கே போகிறாய்?

*பொன்-* சீனியக்காளைப் பார்க்கவேண்டாமா? விபரம் அறியவேண்டாமா?

*ஜெம்பு:* ஆகா! என்ன கடமையுணர்ச்சி! பொன்னி எங்களுக்காக இவ்வளவு உழைக்கிறாயே, உனக்கென்று ஒரு ஆசையும் இல்லையா? (பொன்னி துரையைப் பார்க்க) உம்...... புரிகிறது. வருகிற தை மாதத்திலேயே உங்கள் கல்யாணத்தை முடித்துவிடுகிறேன்.

*பொன்-* என்ன அண்ணா! அண்ணி இறந்து இன்னும் ஒரு வருடம் ஆகவில்லை!......

*துரை-* ஆமாம்... அதற்குள் என்ன கல்யாணம்? கல்யாணம் நடந்தால்தான் நாங்கள்......

*காசி:* இல்லே. நடக்காமலே நீங்கள் காதலர்கள் தான்!......

*ஜெம்பு:* எது எப்படியாளுலும் சரி, இன்னும் இரு பது நாட்கள்தான்! இருபத்திஒன்ரும் நாள் உங்களுக்குக் கல்யாணம். பொன்னி, நீ போய்வா!

*பொன்-* (மகிழ்ச்சியில் துரையைக் கடைக்கண்ணுல் பார்த்தவாறு) வருகிறேனுங்க! நாளே சந்திக்கலாம்!

(பொன்னி போக, உடையநாதர் வருதல்)

*உடை:* அடடே... தேடிய மூலிகை காலில் சிக்கியது போலாயிற்றே......!

*ஜெம்பு:* நல்ல காலம். கழுத்தில் சிக்கவில்லேயே...! என்ன... நண்பர் திடீரென்று (மூவரையும் காட்டி) இந்த மூலிகைகளேத் தேடிவரவேண்டியதாயிற்ரு?...... என்ன வியாதியோ?

*உடை:* (கபடச் சிரிப்புடன்) எல்லாம் ஆசை வியாதிதான்.

*துரை-* அது பெரிய வியாதியாயிற்றே!

*காசி:* அதற்கு மூலிகையே கிடையாதே!

*ஜெம்பு:* உண்டு! (நால்வரும் கேள்விக் குறியுடன் ஜெம்புவின் முகம் நோக்க) சுடுகாட்டில் கிடைக்கும்.

*துரை-* ஓகோ! அது சரி.

*உடை:* நான் வந்த காரியத்தை விசாரிக்காமல் விளேயாட்டுப் பேசுகிறீர்களே!

*ஜெம்பு;* காரணமின்றி நீங்கள் காட்சி கொடுக்க மாட்டீர்களே!

*உடை:* உண்மை. உருமான்குளத்தில் ஒரு பெரும் புதையல் இருக்கிறது. வழியையும், இடத்தையும் நான் சொல்லுவேன். ஒரு பங்கு எனக்குக் கிடைத்தால் போதும்!

*ஜெம்பு:* புதையல் இருந்தால் எங்களிடம் ஏன் கூறப்போகிறீர்கள்? உங்களுக்கு எடுத்துக்கொள்ளத் தெரியாதா?

*உடை:* பழைய காலமானுல் எடுத்துக்கொள்வேன். இப்பொழுது வயது ஆகிவிட்டது. கூட்டாளிகளும் குறைவு! இருப்பவர்களிடமும் நேர்மை இல்லை. அதனுல் தான்......

*ஜெம்பு:* துரை, காசி, உங்கள் முடிவு?

*துரை-* உடையநாதர் பொய் சொல்லமாட்டார் என எண்ணுகிறேன்.

*காசி:* பொய் சொல்லிவிட்டு உடையநாதர் உலகத்தில் வாழமுடியுமா?

*உடை:* (கபடச் சிரிப்புடன்) அதுதானே கேட்டேன்!

*ஜெம்பு:* அப்படியென்ருல் உங்களுக்கு விருப்பம் தான் என்று......

*துரை-* போய்வருவோம்! நிதியிருப்பும் பெருமளவில் குறைந்துவிட்டது!... (நால்வரும் போதல்)

[ திரை ]

★★★

## காட்சி 47

### (பெரிய மாடி வீடு ஒன்று)

ஜெம்பு, துரை, காசி, உடையநாதர் வீட்டிற்குள் போலீஸ் சூப்பரின்டெண்ட் (ஆங்கிலேயர்) மற்றும் இராணுவம்

*உடை:* (மூவரிடமும் ஒரு பெரிய மாடி வீட்டைச் சுட்டிக் காட்டி) நான் பின்புறமாக வருகிறேன். நீங்கள் மூவரும் முன்புறமாக வருகிறீர்களா?

*ஜெம்பு:* வேண்டாம். நால்வரும் சேர்ந்தே போகலாம்! (நால்வரும் சேர்ந்து மாடி வீட்டுக்குள் பிரவேசிக்க உள்ளே துப்பாக்கியேந்திய இராணுவம், மூவரையும் வளைத்துப் பிடித்துக்கொள்ளுதல்)

*சூப்:* மிஸ்டர் உடை...ய் நாத்தர், ரெம்ப தாங்க்ஸ்... (இன்ஸ்பெக்டரைப் பார்த்து) உடை நாத்தர் பிரசன்ட் எங்கே?... அவர்க்கு கொடுங்கள்!

*ஜெம்பு:* பிரித்தாளும் நரிகளே!... (ஆவேசத்தோடு) பிடித்துவிட்டோம் என்று கோட்டை கட்டாதீர்கள்! நீங்கள் பிடித்திருப்பது ஜெம்புவையையோ துரையையோ காசியையோ அல்ல! எரிமலைகளைப் பிடித்திருக்கிறீர்கள்! அவை உங்களை சாம்பலாக்கிவிடும்! சதிகாரர்களே! உங்கள் சூழ்ச்சியை மக்கள் புரிந்துகொண்டார்கள்! (உடைய நாதரைப் பார்த்து) குலத்தை கெடுக்கும் பரத்தை மகனே! உன் அழிவு நெருங்கிவிட்டதடா!

*சூப்:* வாட் மிஸ்டர்... என்ன பேச் பேசுறுன்?

*இன்:* (சிரித்தவாறு பணத்தை எடுத்து உடைய நாதரிடம் கொடுத்து) அகப்பட்ட வேங்கை அநியாயமாகக் கத்துகிறது!

*ஜெம்பு:* சீ, மானங்கெட்டவனே! அன்னியரின் பாராட்டுப் பெற இனத்தையே அவதிக்குள்ளாக்கும் அற்பனே!

*இன்:* குரைக்காதே! (கோபத்தில் லத்தியால் ஜெம்புவை அடிக்க, ஜெம்புவின் கால் எலும்பு முறிந்து விடுகிறது.)

*துரை:* அடியடா! நன்ருக அடி! என்னையும் ஏன் விட்டுவைத்திருக்கிருய்? (இன்ஸ்பெக்டர் துரையையும் அடிக்க, சூப்பிரின்டெண்டு தடுத்துவிடுதல்)

*உடை:* இங்கு வைத்து அடிக்காதீர்கள்; ஊரார் கூடிவிடுவார்கள்!

*காசி:* ஊரார் கூடிவிடுவார்கள் என்று நடுங்குகிருயா? கேவலம், பிச்சைக் காசுக்காகப் பிறந்த மண்ணையே காட்டிக்கொடுத்த எட்டப்பன் பரம்பரையே! என் உயிர் நிலைத்தால் உன் உயிர் நிலைக்காது... நம்பிக்கைத் துரோகி! (இன்ஸ்பெக்டரும், சூப்பிரின்டெண்டும், உடைய நாதரும் சிரிக்க)

*ஜெம்பு:* சிரியுங்கள், பாரிதாபத்திற்குரிய பாவிகளே! நன்ருகச் சிரியுங்கள்! இதுதான் உங்கள் கடைசிச் சிரிப்பு! நாளை இந்த நாடு உங்களைப் பார்த்துச் சிரிக்கப் போகிறது!

*உடை:* நான் வருகிறேன். உங்கள் கடமையை நிறைவேற்றுங்கள்! (உடையநாதர் போதல்)

*இன்:* நீங்கள் கூண்டில் அடைபட்ட புலிகள்! வீணுகக் குரைத்து தண்டனையை அதிகமாக்கிக்கொள்ளாமல் புறப்படுங்கள்!

*ஜெம்பு:* சபாஷ்! கோபத்தில் உளறினுலும் எங்களைப் புலிகள் என்றுதானே கூறினுய்! பூனை என்று கூறவில்லையே! உன்னைப்போல், உடையநாதரைப் போல் குள்ளநரிகள் என்று கூறவில்லையே, நன்றி!

*தூப்:* கொண்டு போங்கள்! வேஸ்ட் அப் டைம்!

(இராணுவம் சூழ, மூவரையும் இழுத்துப் போதல்)

[ திரை ]

★★★

## காட்சி 48

(இராமலிங்கத்தின் வீடு)

இராமலிங்கம், பொன்னி. (இராமலிங்கம் குறள் படித்துக்கொண்டிருக்க பொன்னி அழுதவாறே விரைந்து வருதல்)

*இரா:* "உள்ளம் வுடமை பொருளுடைமை நில்லாது நீங்கிவிடும்" உண்மைதான்! எத்தனைதான் செல்வமிருந்தும் ஊக்கமின்றேல் பயனில்லைதான்...ஆக்கம் இழந்தோம் என்று......

*பொன்:* (வந்தவாறே) ஐயா, ஐயா!...... அவங்களையெல்லாம் பிடிச்சுட்டாங்க ஐயா......

*இரா:* (வியப்புடன்) என்ன பொன்னி? மூவரையுமா?... எப்போது பிடித்தார்கள்? அழாமல் சொல்லு...

*பொன்-* நேற்று இராத்திரி... பாவி மகன் உடைய நாதன் உதவியோடு பிடிச்சுக்கொண்டு போயிட்டாங்க.

*இரா:* இவர்களால் தப்பமுடியவில்லையா?

*பொன்-* எப்படிங்க முடியும்? நூற்றுக்கணக்கிலே பட்டாளம். சூப்ரெண்டு துரையே நேரில் வந்தாராம். ஜெம்பு அண்ணு காலை அடித்தே முறித்துவிட்டார்களாம்! டாக்டரிடம் சொல்லி காலையே எடுத்தாலும் எடுத்துவிடு வார்கள் போலிருக்கிறதே!

*இரா:* (யோசித்து) இந்த நிலைமையில் நான் என்ன'ம்மா செய்யமுடியும்? (யோசித்து) சர்க்காரில் கூட என்னை இப்பொழுது அதிகமாக நம்புவதில்லை!

*பொன்-* ஐயா, நீங்களே இப்படிச் சொன்னுல் வேறு யார் உதவி செய்வார்கள்? உங்களுக்குத் தெரியாதது எதுவுமில்லையே! ...

*இரா:* ஜெம்புவின் காலைக் குணப்படுத்த மட்டும் என்னுல் முடியும்... சர்க்கார் ஆஸ்பத்திரி டாக்டர் எனக்கு மிகவும் வேண்டியவர். மிகவும் நல்லவர்! போலீஸ் இலாகா மட்டுமல்ல! ஆங்கில அரசாங்கமே கூறினுலும், அவர் டாக்டருக்குரிய கடமையைச் செய்தே தீருவார்! ஆகவே ஜெம்புவின் காலைப்பற்றி நீ கவலைப்படாதே! மற்ற விஷயங்களை நான் நேரில் சென்று பார்த்துச் செய்வேன்!... நீ அதற்குள் ஒரு வேலை செய்யவேண்டும்.

*பொன்-* சொல்லுங்கள். எது வேண்டுமானுலும் செய்கிறேன்.

*இரா:* வள்ளியூர், கோரியூர், ஏறுவாடி போன்ற சுற்றுப்புற கிராமங்களுக்குப் போய், மூவரையும் கைது செய்த விபரத்தையும், சிறையில் சித்ரவதை செய்யப்படுகிருர்கள் என்றும் கூறவேண்டும்! தனித்தனியாக ஒவ்வொருவரிடமும் சென்று கூறவேண்டும்! ஆங்கில அரசின் எதிர்ப்புக் குரல் ஊருக்குள் முழங்கவேண்டும்!

ஏற்கெனவே பாரதம் முழுவதும் கொந்தளிக்கிறது! நீயும் இந்தப் பணியைச் செய்துவிட்டால், மூவருக்கும் சிறையில் கொடுமையிருக்காது. செய்யமுடியுமா?

*பொன்*- ஏன் முடியாது? புரட்சித் தீயைக் கொழுந்து விட்டெரியச் செய்கிறேன். பிறகு நீங்களே பாருங்கள்! என் உயிரே போனாலும் கவலையில்லை!

*இரா:* (பெருமிதத்துடன்) வீரப் பெண்! உனக்குக் கண்ணகி என்று பெயர் வைத்திருக்கவேண்டும்! போய் வா! இரகசியமாகச் செய்யவேண்டும்! அடுத்த வாரம் என்னை இங்கு வந்து பார்!

*பொன்:* (வணங்கி) சரி'ங்க! நான் வருகிறேன்! (இராமலிங்கம் தலையை அசைக்க, பொன்னி போதல்)

[ திரை ]

★★★

## காட்சி 48 - A

(பாதை)

இராமலிங்கம், பொன்னி. (மக்கள் ஊர்வலமாகப்போக, இராம லிங்கமும், பொன்னியும் பாதை அருகில் நின்று பார்க்கிருர்கள்)

*மக்கள்:* ஆங்கில அடக்குமுறை

*மக்:* ஒழிக!

*மக்:* ஏழைகளின் தோழர் — புரட்சிவீரர்களை

*மக்:* துன்புறுத்தாதே!

*மக்:* போலீஸ் அடக்குமுறை

*மக்:* ஒழிக!

*மக்:* ஜெம்புலிங்கம் தோழர்கள்

*மக்:* வாழ்க! (ஊர்வலம் போதல்)

*இரா:* (பெருமிதத்துடன்) பொன்னி, மக்கள் விழிப் படைந்துவிட்டார்கள். அன்னிய ஆட்சி இனி அதிக நாட்கள் நடக்காது. உன் சேவை மகத்தானது!

*பொன்:* நான் என்னுங்க பிரமாத சேவை செய்து விட்டேன்? எத்தனையோ தேசத்த லைவர்கள் தங்கள் உயிரையே நாட்டின் சுதந்திரத்திற்காக அர்ப்பணம் செய்கிருர்களே!

*இரா:* உண்மைதான். வ. உ. சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவா, பாரதியார், வாஞ்சிநாதர் போன்றவர்கள் பெரிய தேச பக்தர்கள்! என்றாலும் உன் அளவில் நீ செய்யும் பணி சிறியதல்ல!

*பொன்:* கேட்க வந்ததைக் கேட்கவில்லையே!

*இரா:* என்ன? தாராளமாகக் கேள்!

*பொன்:* ஜெம்பு அண்ணு கால் எப்படி இருக்கிறது?

*இரா:* கவலையே வேண்டாம். நன்ருகக் குணமாகி விட்டது. மூவரையும் நாளை இங்கிருந்து பாளையங் கோட்டைச் சிறைக்குக் கொண்டுபோகிருர்கள்!

*பொன்:* அப்படியா? எத்தனை மணிக்கு?

*இரா:* காலையில்தான். ஒன்பது மணிக்கு!

*பொன்:* சீனியக்காள் கூட......

*இரா:* அங்குதான் இருக்கிருள்! ஏன் நீயும் கூடவே போகலாம் என்று எண்ணுகிருயா?

*பொன்:* அல்ல; போகிறவர்களைத் தடுக்கலாம் என்று நினைக்கிறேன். லாரியில்தானே கொண்டுபோவார்கள்?

*இரா:* ஆமாம். உன்னுல் தடுக்கமுடியுமா?

*பொன்:* எப்படியோ முயற்சித்துப் பார்க்கிறது.

*இரா:* உம். நீ எதை வேண்டுமானுலும் நடத்தி விடுவாயே!

*பொன்:* எல்லாம் உங்க ஆசீர்வாதம்தான். நான் வரட்டுமா?

*இரா:* போய்வா! (பிரிதல்)

[ திரை ]

***

## காட்சி 49

(போலீஸ் ஸ்டேஷன்)

இன்ஸ்பெக்டர், போலீஸ் 103, போலீஸ் 106. (இன்ஸ்பெக்டர் எழுதிக்கொண்டிருக்க, 103 அருகில் நிற்க, 106 விரைந்து வருதல்)

*போ-106:* (வணக்கம் செய்து, ஆத்திரமுடன்) ஸார், ஸார். அவங்க தப்பி ஓடிட்டாங்க ஸார்!

*இன்:* (வியப்புடன் எழுந்து) ஆ!... யார்... யார் தப்பிட்டாங்க?... ஜெம்புலிங்கம்...

*போ-103:* ஆமாங்க, அவங்க மூன்று பேரும்தான்!

*இன்:* (ஆத்திரத்துடன்) எப்படி...... எப்படி தப்பிட்டாங்க?... நீங்க எல்லாரும் என்ன செய்தீங்க?

*போ-106:* எவ்வளவோ முயற்சித்தோம். நம்ம 101 பாண்டியன் இருக்கானே துரத்திக்கிட்டு ஓடிஞன். பாவம்! மண்டையில் அடிபட்டு மண்டை பிளந்து போச்சுங்க.

இன்- என்ன உளறுகிருய்? பாண்டியன் மண்டையில் எப்படி அடிபட்டுது? அவங்களைத்தான் விலங்கு போட்டுக்கொண்டு போனுங்களே!

*போ-106:* விலங்காலேயே மண்டையில் அடித்து விட்டாங்க! இப்பத்தான் ஆஸ்பத்திரியிலே சேர்த்துக்கிட்டு வரேன்!

*போ-103:* அடிபட்டவனை ஆஸ்பத்திரியிலே சேர்க்காமல் அனுதை விடுதியிலா சேர்ப்பாங்க? விஷயத்தை விபரமாகச் சொல்லாமல்......

*இன்-* (*103*-ஐ கோபமாகப் பார்த்தபடி 106 பக்கமாகத் திரும்பி) லாரியில் இருந்து குதிச்சிட்டாங்களா?

*போ-106:* போகிற வழியிலே ஒரு பெரிய மரம் சாலையின் குறுக்கே கிடந்தது. லாரியை நிறுத்தி மரத்தை அப்புறப்படுத்த நாங்கள் இறங்கினேம். அந்த வேளையைப் பார்த்து மூன்று பேரும் குதிச்சிட்டாங்க!

*இன்-* உங்களிடம் துப்பாக்கியிருந்ததே! சுட்டுத்தள்ளுவதுதானே?

*போ-106:* துப்பாக்கிகளை லாரியில் வைத்துவிட்டுத்தானே கீழே இறங்கினேம். ஓடுகிறவர்களைச் சுட்டுத்தள்ளிடலாம்னு...... உள்ளே சென்று துப்பாக்கியைப் பார்த்தோம். அதற்குள்ளாக ஒரு இளம் பெண்ணும், மற்றும் இரண்டு பேருமாகச் சேர்ந்து, இருந்த துப்பாக்கிகளையெல்லாம் தூக்கிட்டு ஓடினுங்க. நாங்க ஐந்து பேர் அவங்களைத் துரத்திக்கிட்டுப் போனேம். பாண்டியனும் கூட இரண்டு பேரும் அந்தப் பயல்களைத் துரத்திக்கிட்டுப் போனுங்க. அவங்க மூன்று பேரும் மூன்று திசைகளிலுமாகப் பிரிந்து ஓடிட்டாங்க. பாண்டியன் ஜெம்புலிங்கத்தைத் துரத்திக்கிட்டுப் போனுன்.

*போ-103:* அதனுல்தான் மண்டையில் அடி வாங்கினுன். நானுக இருந்தால்...

*இன்:* (கோபத்தில்) கிழித்து எறிந்துவிடுவாய்! சும்மா இருடா, சோம்பேறி! (106-ஐ பார்த்து) நீங்கள் அந்தப் பெண்ணையாவது பிடித்து வந்திருக்கக்கூடாதா?

*போ-106:* ஐயா! பெண்ணு அவள்! பெரிய மாயப் பிசாசு! திடீர்னு காட்டுக்குள்ளே மறைந்து துப்பாக்கி எடுத்து சுடத் தொடங்கி விட்டாள்! எங்களிடம்தான் துப்பாக்கியில்லையே!

இன்: உயிர் பிழைத்தால் போதும் என்று ஓடிவந்து விட்டீர்கள். வெளியில் சொல்லாதீர்கள்! மானம் போய் விடும்! (103 சிரிக்க, இன்ஸ்பெக்டர் முறைக்க, வேறு புறம் திரும்பிக்கொள்ளுதல்)

இன்: (யோசித்து) ...இளம் பெண், கூட இருவர்... எதிரிகள் பக்கம் இன்னும் ஆட்கள் இருக்கிறது!......... பாண்டியன் உங்களை விடத் தைரியசாலி! அவனுக்குப் பதவி உயர்வு கிடைக்கும்!...... சரி, எதிர்பாராதது...... நடந்துவிட்டது. மேலால் செய்யவேண்டியதைப் பார்ப் போம். நீங்கள் இங்கேயே இருங்கள். நான் பாண்டி யனைப் பார்த்துவிட்டு வருகிறேன். கவனமாக இருங்கள்! (இன்ஸ்பெக்டர் போதல்)

போ-103: (106-ஐ பார்த்து) டேய், இளம் பெண் என்று சொன்னுயே. அழகாக இருக்கிருளா?

போ-106: போடா, பைத்தியம்! எனக்கு வயிறு எரி கிறது. நீ விளையாடுகிருய்!

போ-103: ஏமாந்த சோணகிரியாக இருந்தால் வயிறு எரியத்தான் செய்யும். நாஞக இருந்தால் அவளை நைசாகக் காதலித்தே கைது செய்திருப்பேன்! உனக்கு சர்வீஸ் போதாது!

போ-106: துப்பாக்கி ஒலி கேட்டாலே சுருண்டு விழும் சுண்டெலி நீ! உன்னை எனக்குத் தெரியாதா? பெரிய சர்வீஸ் புலி. போடா! உன் வேலையைப் பாரு! வயிறு பசிக்கு ஏதாவது போட்டுவிட்டு வருகிறேன். (106 போதல்)

[ திரை ]

***

## காட்சி 49 - A

(காட்டுப் பாதை)

அப்பாவு, கூட இருவர், (ஜெம்பு, துரை, காசி, காருண்யம்மாளும் அடுத்து பொன்னி, மாணிக்கம் வருதல்)

(அப்பாவும் கூட இருவரும் பேசியவாறு நடந்து வர, பின்னல் மறைவாக ஜெம்பு, துரை, காசி மூவரும் ஒரு கரத்தில் விலங்கு உடைந்து தொங்க வருதல்)

*அப்-* (கூட வருபவர்களைப் பார்த்து) கேடிகள் மூன்றுபேரும் வசமாய் மாட்டிக்கிட்டாங்க. இப்பொ நீங்க செய்யவேண்டியது, அவங்க கூட இருந்த பொன்னியை எப்படியாவது கண்டுபிடித்து இழுத்துக்கிட்டு வரவேண்டும். அவ்வளவுதான்!

*ஒருவன்:* அது பெரிய காரியம் இல்லை'ங்க. அந்தப் பெண் யாரென்றே எங்களுக்குத் தெரியாதே!

*அப்-* அடையாளம் நான் சொல்கிறேன். அவள் நடமாடும் இடங்களையும் சொல்கிறேன்.

*மற்றவன்:* சொல்லுங்க.

*அப்-* பெயர் பொன்னி. நல்ல சிகப்பா, செண்டு மாதிரி இருப்பாள். கன்னிப் பெண்தான்!

*ஒருவன்:* (ஆசையோடு) அப்படியா? (வாயைப் பிளத்தல்)

*அப்-* (கிண்டலாக) ஆமா! வாயைப் பாரு! நீங்க அவளைப் பிடிக்கிறதுக்குப் பதிலாக அவள் உங்களைப் பிடித்துத் தீர்த்துவிடுவாள் போலிருக்கிறதே! கன்னியென்றதும் காதல் வருகிறதா?

*ஒருவன்:* செ, செ, அப்படி ஒன்றுமில்லை'ங்க. என்ன இருந்தாலும் பெண்தானே! பிடித்து இழுத்து வந்துவிடுவோம்!

*அப்-* அதுதான் இல்லை. அவள் பெண் புலி! ஜெம்பு லியின் ஆள்! நினைவிருக்கட்டும்! அவள் அடிக்கடி ஜெம்பு லிங்கத்தின் வீட்டிற்கு வருவாள்! இந்த மலைப் பக்கமும் சுற்றுவாள்!

*ஒருவன்:* ஜெம்புலிங்கம் இப்பொ இல்லையே!

*அப்-* சிறைக்குள் இருக்கிறுன். அனேகமாக அவன் பாடு தீர்ந்தது மாதிரிதான். நீங்க பயப்படாதீங்க!

*காசி:* (பின்னுல் வந்தவாறு) தீரவில்லையடா! (அப்பாவுவும் கூட வந்தவர்களும் திரும்பிப் பார்க்க)

*ஜெம்பு:* உன்னைத் தீர்த்துவிட்டுத்தான் (மார்பில் தட்டியவாறு) இந்த ஜெம்புலிங்கம் தீருவான்! அயோக்கியப் பயலே!

*கூட வந்தவர்கள்:* (பயந்து நடுங்கி) ஆ!... ஜெம்புலிங்கம்! (கரங் கூப்பியவாறு ஓடுதல்)

*அப்-* (நடுங்கியவாறு) ஜெம்பு... ஜெம்பு... துரை... காசி!......

*துரை:* நடுங்காதேடா நரிக்குட்டியே! எங்களைத் தீர்த்துக் கட்டுவதில் உனக்கு அவ்வளவு அக்கரையா? ஏன்'டா நாங்கள் உனக்கு என்ன கெடுதல் செய்தோம்? சொல்! கேவலம் பிச்சைக் காசுக்கு ஆசைப்பட்டுத்தானே இத்தனை நாடகம் ஆடுகிறுய்! (அப்பாவுவின் கன்னத்தில் ஓங்கி அறைதல்)

*அப்:* (ஜெம்புவின் காலில் விழுந்தவாறு) ஜெம்புலிங்கம்...... நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும்...... நான் பிள்ளைக்குட்டிக்காரன்... (கதறியபடியே கைத்துப்பாக்கியை இடுப்பிலிருந்து எடுக்க, அதை ஜெம்பு கவனிக்கிறுன்)

*ஜெம்பு:* (அப்பாவுவின் கரத்தை மிதித்தவாறு) அயோக்கியனே, காலில் விழுந்தவாறே கைத்துப்பாக்கியை எடுக்கிறுயா? (துப்பாக்கியைத் தட்டிவிட்டு அப்பாவுவை உதைத்துத் தள்ள)

*அப்:* (அழுதவாறே) இல்லை! ஜெம்புலிங்கம், இல்லை, துப்பாக்கியை உன் காலடியில் வைக்கவே எடுத்தேன். உங்களைச் சுடக்கூடிய அளவுக்கு எனக்கு துணிவு வருமா?

*துரை*- முதலைக் கண்ணீர்! இவனை இப்போதே ஒழித்துவிடவேண்டும்! (அருகில் நெருங்கி கழுத்தை அமுக்க, அப்பாவு பயந்து கூச்சல் போடுதல்)

*ஜெம்பு:* (துரையின் தோளில் தட்டியவாறு) வேண்டாம்! துரை, எத்தனைதான் நம் விரோதியாயினும் உயிர்ப் பிச்சை கேட்டு மன்ருடும்பொழுது நாம் மன்னித்தே ஆக வேண்டும். மேலும் இவன் நம் விரோதி அல்ல! இவனை ஒழித்தால் நம் ஆபத்து நீங்கிவிடுமா? எண்ணம் ஈடேறி விடுமா? பாவம் குழந்தை குட்டிக்காரன். இவன் குடும்பத்தைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பும் கூட நம் தலையில் விழும்! விட்டுவிடு!

*அப்:* நீங்க நல்லா இருக்கணும்!...

*துரை*- உன் வாழ்த்து ஒன்றும் தேவையில்லை! ஓடிப் போ! மானத்தோடு வாழக் கற்றுக்கொள்! எத்தனை சலுகைகள் வழங்கினாலும் அன்னியன்என்றும் அன்னியன் தான்! அவனுக்கு அடிமைப்பட்டு தாய்நாட்டிற்குத் துரோகம் செய்யாதே!

*அப்:* சத்தியமாக இனிமேல் திருந்திவிடுவேன்! உங்க வழிக்கே வரமாட்டேன்!

*ஜெம்பு:* வந்தாலும் கவலையில்லை. ஓடு! (அப்பாவு ஓடிப் போதல்)

*துரை*- இப்படியே நம் விரோதிகளையெல்லாம் மன்னித்து விட்டுவிடுவோம்!

*காசி:* அதாவது நம் ஆபத்தை — இடையூறை நாமே அதிகப்படுத்திக்கொள்வோம்!......

*ஜெம்பு:* அப்பாவு நம் விரோதிதான்! ஆனல் அவன் ஒரு கோழை. கூலிக் காசுக்காக அரசாங்கம் இட்ட கட்டளையை நிறைவேற்றுகிருன். அவன் குடும்பம் அதனல் வாழ்கிறது! அது நம் குடும்பம் மாதிரிதானே! ஒரு தமிழ்க் குடும்பத்தின் வாழ்வை நாம் ஏன் சிதைக்கவேண்டும்?... அதை எண்ணித்தான் விட்டுவிடச் சொன்னேன்,

(பல்லக்கு வரும் ஒலி கேட்க)

*துரை-* ஜெம்பு, கா்ருண்ய அம்மாள் பல்லக்கு வருகிறது. நல்ல தருணம், அம்மையாரை சந்திக்கலாம்!

*ஜெம்பு:* உண்மைதான்! கருணையே வடிவான அவர்களின் தரிசனம் நம் மனதில் சாந்தியை நிலவச் செய்யும்! (பல்லக்கு அருகில் வருதல்)

*ஜெம்பு, துரை, காசி:* (காருண்ய அம்மாள் அருகில் வந்ததும்) வணக்கம் தாயே!

*காருண்ய அம்மாள்:* வணக்கம். ஏதாவது விசேஷம்?

*ஜெம்பு:* உங்கள் ஆசியைப் பெறவே காத்து நிற்கிறோம்.

*கா-அ:* மனிதரை மனிதர் ஆசீர்வதிப்பதில் என்ன இருக்கிறது? கருணையே வடிவான இறைவனருளால் நீங்கள் நலமடைவீர்கள்.

*ஜெம்பு:* துன்பம் எங்களைத் துரத்துகிறது தாயே!

*கா-அ:* (புன்முறுவலுடன்) அப்படி எதுவுமே உலகில் இல்லை. துன்பம், இன்பம் என்பதெல்லாம் நாம் கற்பனை செய்து வெளியிடும் சொற்கள். இதயத்தை இறைவனிடம் கொடுத்துவிட்டால் எல்லாம் இன்பம்தான்!

*ஜெம்பு:* எங்களுக்கு அந்தப் பக்குவம் இல்லை தாயே!

*கா-அ:* முயன்றால் முடியும்! நான் வரட்டுமா?

*ஜெம்பு:* தாயே, என் குழந்தைகள்......?

*கா-அ:* குதுகலமாக வளருகின்றன. ஜெம்புலிக்குப் பிறந்த புலிக்குட்டிகள் என் பாதுகாப்பில் வீரத்தோடு விவேகமும் பெற்று வளரும். அந்தக் கவலையே இனி உனக்குத் தேவையில்லை. வருகிறேன். வேளை வாய்க்கும் போது டோணூர் வாருங்கள்.

*மூவரும்:* (வணங்கியவாறு) வருகிறோம் தாயே!

(காருண்ய அம்மாள் போதல்)

*ஜெம்பு:* நாம் குகைக்குப் போய்ச் சிறிது ஓய்வு எடுக்கலாம்!

*துரை, காசி.* சரி. (மூவரும் போக, பொன்னி விறகுச் சுள்ளிக் கட்டுடன் வருதல். அவள் பின்னால், வீரலிங்கம் வருதல்)

*பொன்-* (திடீரென்று பின்னால் திரும்பியவாறு) யாரய்யா? இத்தனை நேரம் என் பின்னால் தான் வருகிறியா?

*வீர:* ஆமா, நீ சுள்ளி பொறுக்குகிற அழகை ரசித்த படியே உனக்குத் தெரியாமல் ரசித்து அனுபவித்துக் கொண்டுவருகிறேன். ஆகா, உன் நடையழகும், ஒவ்வொரு சுள்ளியாக நீ பொறுக்கி வைக்கும்பொழுது உன் இடை ஒடியும் அழகும்......

*பொன்-* (கோபத்தோடு) நிறுத்தய்யா! பெரிய கவிஞன்'னு எண்ணிக்கிட்டு உளருதே! மரியாதையாகப் போயிடு! நான் யார் தெரியுமா?

*வீர:* சும்மா மிரட்டாதே, புள்ளே! நான் யார் தெரியுமா?

*பொன்-* யாரப்பா நீ?

*வீர:* அப்படிக் கேளு! (மீசையை முறுக்கியவாறு) நான்தான் ஜெம்புலிங்கம்!

*பொன்-* (நகைத்து) அப்படியா? இத்தனை நாள் எங்கிருந்தே ராசா?

*வீர:* இந்தா குட்டி, விளையாடாதே! என் பெயரைக் கேட்டால் இந்த வட்டாரமே நடுங்கும்!

*பொன்-* நான் நடுங்கமாட்டேன்!

*வீர:* (பொன்னியின் கையைப் பிடித்தவாறு) சும்மா மிரட்டாதே!

*பொன்-* (கோபத்தில் கையைத் தட்டியவாறு) சீ! நீ ஒரு ஆண்மகனா? (கன்னத்தில் அறைந்து) பெண் என்றால் பூமாதேவி மாதிரி பொறுமையாகவும் இருப்பாள்! தேவை ஏற்பட்டால் காளி மாதிரி பொங்கியும் எழுவாள்! இதோ பாரு! (அடையாளக் குரல் கொடுத்து) அத்தான்! ...... ஓ...... அத்தான்...... கூட்டமாக வாருங்கள்!

*வீர:* (பயந்து, சமாளித்து) ... உம்... வரட்டும்.
(துரை விரைந்து வருதல்)

*துரை-* (வீரலிங்கத்தைக் கண்டு ஆவேசத்துடன்) டேய், அயோக்கியப் பயலே!... (பொன்னியைப் பார்த்து) என்ன!...... என்ன நடந்தது?......

*பொன்-* இவருதான் ஜெம்புலிங்கமாம். என்னை தூக்கிட்டுப் போயிடுவாராம்......கன்னத்திலே கணக்கா ஒன்று கொடுத்தேன்!

*துரை-* (வீரலிங்கத்தைப் பிடித்தவாறு) அடிபட்ட பின்பும் புத்தி வரவில்லையா? பொன்னி, எப்பொழுதும் நீ எங்களுக்கு உதவியே செய்கிறாய்! இவன் யார் தெரியுமா? வீரப்புலி வீரலிங்கம்!

*பொன்-* (வியப்புடன்) கோபாலபிள்ளை பண்ணை யார் வீட்டில்......

*துரை-* கொள்ளையடித்துவிட்டு ஓடி, ஒளித்தவன்! என் ஜெம்புவைத் திருடனாக்கியவன்! பாவிப் பயலே!...... (ஓங்கிக் குத்துகிறான்; துரைக்கும் வீரலிங்கத்திற்கும் பலத்த சண்டை நடந்து, முடிவில் வீரலிங்கம் ஓடிவிடுதல்)

*பொன்:* (பின்னால் ஓடும் துரையைப் பார்த்து) போகட்டும்! கோழைகளைத் துரத்தி அடிக்கக்கூடாது! மானம் இருந்தால் அவன் இனி உயிருடன் இருக்கமாட்டான். நீங்கள் வாருங்கள்!

*துரை:* (பொன்னியின் அருகில் வந்து அவள் விழிகளை உற்றுப் பார்த்தவாறு) பொன்னி,...... பொன்னி... ஏன் அழைத்தாய்?... இன்று... (விழி மூடாது பொன்னியைப் பார்த்துக்கொண்டிருத்தல்)

*பொன்:* (கொஞ்சலாக) இது என்ன பார்வை?... அப்படியே விழுங்கிவிடுவீர்கள் போலிருக்கிறதே!

*துரை:* உன்னை விழுங்க யாரால் முடியும்? நிலவை ரசிக்கமுடியுமே தவிர விழுங்க முடியுமா?

*பொன்:* ஏன் முடியாது? அனுமார் விழுங்கினாராமே!

*துரை:* நான் அனுமாரா?

*பொன்-* அப்படித்தான் இருக்கட்டுமே!

*துரை:* பொன்னி, அனுமார் பிரம்மச்சாரி. என்னையும் அப்படியே இருக்கச் சொல்கிருயா? (அருகில் நெருங்கி அணைக்க பொன்னி நழுவி ஓடுதல்) போகிருயா? நானும் போகிறேன். (பொய்க் கோபத்தில் திரும்பி நடக்க, பொன்னியும் திரும்பி நடக்க, திடீரென்று இருவரும் திரும்பிப் பார்த்து சிரித்தல்)

*பொன்:* (துரையின் பின்புறம் வந்து பாடுதல்)

காணைத்தேடி மான் வருது கள்ளமாமா — மாமா!
கருவண்டைத் தேடி மலர் வருது செல்ல மாமா
தேனைத் தேடும் ஈயைக் காணும் தங்க மாமா—உன்
தேன் மொழியைக் கேட்க வாரேன் தென்றல் மாமா!

*துரை:* (பொன்னியை அணைத்து)

கன்னி உன்னைத் தேடி எந்தன் கண்கள் வாடுது-கண்ணே
காணக் காண மனமும் உன்னை நாடி வருகுது
பொன்னி உனை அணைத்தால் எந்தன் உள்ளம்
மகிழுது — நீ
போகப் போக உந்தன்பின் என் உயிரும் வருகுது —

*இருவரும்:* (காணைத் தேடி......)

*துரை:* (பொன்னி பாடுவதை நிறுத்தியதும்) என்ன நிறுத்திவிட்டாய்! (குழைவாக) உன் இனிய கானம் கேட்டுக் காட்டுக் குயில்கள்கூட வாயடைத்துவிட்டன!

*பொன்:* ஏன் நீங்கள் மட்டும் சும்மா இருந்தீர்களா?
(ஜெம்பு வருதல்)

*ஜெம்பு:* என்ன துரை, பொன்னியிடம் அகப்பட்டுத் திணறுகிருயா?

*பொன்:* இல்லை, அண்ணு! அவர்தான் திணறடிக்கிருர்!

*துரை:* ஜெம்பு, சற்றுமுன் வீரலிங்கத்தைக் கண்டேன்!

*ஜெம்பு:* (வியப்பும், ஆத்திரமும் மிளிர) என்ன! வீரலிங்கமா? அவனை விட்டுவிட்டாயா?

*பொன்-* நல்லா விட்டாங்களே! வீட்டிற்குப் போனதும் அவன் உயிரை விட்டுவிடுவான்! தூக்கி எறிந்து பந்தாடிவிட்டார் இந்த துரை சிங்கம்!

*ஜெம்பு;* பிடித்து வைத்திருந்தால்!......

*துரை:* தேவையில்லை. நான் கொடுத்ததையே அவனல் தாங்கமுடியாமல் அலறிக்கொண்டு ஓடினன்.

(காசியும், மாணிக்கமும் வருதல்)

*மாணிக்கம்:* வணக்கமுங்க!......

*துரை, ஜெம்பு:* வணக்கம்... மாணிக்கமா? வா, என்ன விசேடம்!...

*காசி:* அவர் மகளுக்குத் திருமணம் நிச்சயம் செய்திருக்கிருராம்.

*ஜெம்பு-* மங்களமாக நடக்கட்டும்!

*பொன்:* ஏழை விவசாயியின் மகளுக்குத் திருமணம்! வெறும் வாழ்த்து மட்டும் போதுமா?

*ஜெம்பு-* போதாதென்ருல் பொன்னியின் கட்டளைப் படி நடக்கட்டும்!

*காசி:* நம் உதவி வேண்டியே மாணிக்கம் வந்தார். நான்தான் அழைத்துவந்தேன்! எவ்வளவு கொடுக்க வேண்டும்?

*ஜெம்பு-* என்னைக் கேட்கவேண்டுமா காசி? நம்மிடம் இருக்கும் தங்கம், பணம், மற்றும் எல்லாமே நம் எல்லோருக்கும் உரிமையானதுதான்! உன் விருப்பம்போல், பொன்னியின் விருப்பம்போல் கொடுத்தனுப்பு!

*பொன்-* அண்ணவென்ருல் அண்ணுதான். நானும், காசி அண்ணுவும் சென்று அவருக்குத் தேவையானதைக் கொடுக்கிறேம்!

*ஜெம்பு:* தாராளமாக நடக்கட்டும்! (காசி, பொன்னி மாணிக்கம் போதல்; துரையிடம்) துரை, நாம் டோணு ஆர் சென்று குழந்தைகளைப் பார்த்துவிட்டு, சீனியம்மாளைப் பற்றி இராமலிங்கத்திடம் விசாரித்து வருவோம்!

*துரை:* நான் நினைத்தேன். நீ சொல்கிருய்! போகலாம்! (இருவரும் போதல்)

[ திரை ]

***

## காட்சி 50

### (குகை, இருள் கவியும் நேரம்)

**காசி, கூட இருவர். காசி சிந்தனையிலிருக்க, ஜெம்பு வருதல். (துரையும், வீரலிங்கமும் பிறகு வருதல்)**

*ஜெம்பு:* என்ன காசி, நாங்கள் வந்தது கூடத் தெரியாமல் பெரிய சிந்தனையில் ஈடுபட்டிருக்கிருயே!...

*காசி:* வாருங்கள். உண்மையில் சிந்தனையில்தான் இருந்தேன். ஊருக்குள் கொடுமை செய்கிறவர்களெல்லோரும், நம் பெயரைக் கூறிச் செய்கிருர்கள்!

*ஜெம்பு:* செல்வந்தர் கூட்டங்களில் நல்லோரும் இருப்பதுபோல், ஏழைகள் கூட்டத்தில் கெட்டவர்களும் இருக்கின்ருர்கள்! ஏழைகளிடம் களவு செய்து துன்புறுத்தும் சோம்பேறிகள் கூட முடிவில் நம் பெயரை உபயோகப்படுத்துகிருர்கள்! ஒருபுறம் நமக்குக் கெட்ட பெயர் வளர்கிறது! என்ன செய்யலாம்! இதுதான் உலகம்! கொலை செய்கிறவர்களும் நம் பெயரையே விளம்பரப் படுத்துகிருர்கள்!

*காசி-* நாம் ஏழைகளைக் காப்பாற்றுவதற்கு முயற்சிக்கும்பொழுதே இம்மாதிரி மட்டரகப் பேர்வழிகளையும் மட்டம் தட்டவேண்டும்! (வீரலிங்கம் தலையில் கட்டுகளுடன் வேதனையில் அவதிப்படுகிறவன்போல் நடித்தல்; துரை அவனை அழைத்துக்கொண்டு வருதல்)

*துரை:* ஜெம்பு, காசி, இதோ நீங்கள் எதிர்பார்த்த வீரலிங்கம்!

*காசி:* (ஆத்திரத்துடன் எழுந்து வந்து) துரோகிப் பயலே! உன்னை இப்பொழுதே ஒழித்துவிடுகிறேன். (துப்பாக்கியை எடுத்தல்)

*துரை:* வேண்டாம். அவன் ஏற்கெனவே அரை உயிருடன்தான் இருக்கிருன்!

*ஜெம்பு:* துரை, உதைத்து விரட்டப்பட்டவன் உன்னிடம் மறுபடியும் எப்படிச் சிக்கினுன்?

*வீர:* ஜெம்பு, என்னை மன்னித்துவிடு. விருப்பமில்லை என்ருல் கொன்றுவிடு. ஒன்று உனக்கு உதவியாக இருந்து உயிர் விடவேண்டும். இல்லையேல் உன் கையால் உயிர் பிரியவேண்டும். இந்த இரண்டு முடிவுக்கும் தயாராகவே நான் உன்னை சரணடைந்திருக்கிறேன். துரையிடமும் இதைத்தான் கூறி மன்ருடினேன்!

*துரை:* ஆம்! ஜெம்பு, வரும் வழியில், என் கால்களைப் பிடித்துக் கதறினுன். ஊருக்குள் வாழ முடியவில்லையாம். போலீசுக்கு விரோதியாகிவிட்டானும். நாம் கைவிட்டால் தற்கொலை செய்துகொள்வதைத் தவிர வேறு வழியில்லையாம்!.........

*ஜெம்பு:* இரக்கப்பட்டு அழைத்து வந்துவிட்டாய்! பழைய விரோதி புது நண்பனுகியிருக்கிருன். உன்னுல் தாக்கப்பட்டு ஓடியவன் தைரியமாக நம் இருப்பிடம் நுழைந்துவிட்டான்!......... சரி, உன் விருப்பமே என் விருப்பம்! (சாப்பாடு வருகிறது. எல்லோரும் சாப்பிடுதல்)

*வீர:* ஜெம்பு, என்னைச் சந்தேகப்படாதே! நீ திருடன் என்ருலும் சீர்திருத்தவாதி! கொள்ளைக்காரன் என்ருலும், வெள்ளையரின் விரோதி! செல்வந்தர் தூற்றினுலும் ஏழைகள் எல்லோரும் உன்னை வாழ்த்துகிருர்கள்! நானும் கொள்ளைக்காரன்தான். என்ன பயன்? உன்னுடன் சேர்ந்தால் உன் நற்பெயரில் எனக்கும் பங்கு கிடைக்கு

மல்லவா? அந்த விருப்பத்தினுலேயே உன்னை நாடி வந்தேன். நீ இட்ட கட்டளையை உயிரைக் கொடுத்தும் நிறைவேற்றுவேன்.

*ஜெம்பு:* சரி, பார்க்கலாம். தூக்கம் வருகிறது...! தூங்குவோம்! (எல்லோரும் தூங்கும்பொழுது, வீரலிங்கம் எழுந்து, அருகிலிருந்த கத்தியை எடுத்து, துரையைக் குறி வைத்துக் குத்த முயற்சிக்க, ஜெம்பு எழுந்து தடுத்து, வீரலிங்கத்தைப் பலமாகத் தாக்குகிருன். அந்த ஒலி கேட்டு மற்றவர் எழுகின்றனர்!)

*துரை-* என்ன? என்ன நடந்தது?

*ஜெம்பு:* (வீரலிங்கத்தைத் தூக்கி நிறுத்தி) நான் எண்ணியது நடந்தது! சிங்கத்தின் குகைக்குள்ளேயே வந்து விளையாடத் துணிந்துவிட்டது நீ அழைத்து வந்த சிறுநரி! முதலில் உன் உயிருக்கே உலைவைக்கத் துணிந்தான்! நாம் உறங்கும் முறை இவனுக்குத் தெரியாது! உண்மையிலேயே எல்லோரும் உறங்குவதாக முடிவு செய்து முதலில் உன்னை ஒழித்துவிட்டு பிறகு என்னையும், காசியையும் தீர்த்துவிட முடிவு கட்டி, நாடகமாடி உன்னை ஏமாற்றி உள்ளே நுழைந்துவிட்டான் துரோகி!

*துரை:* (தலை குனிந்து நிற்கும் வீரலிங்கத்தின் நாடியைப் பிடித்து உயர்த்தி, காறி உமிழ்ந்து) உண்மையைக் கூறு. யாருடைய சூழ்ச்சியில் நீ இங்கு நுழைந்தாய்! உண்மையைக் கூறிவிட்டு உயிருடன் ஓடிப் போய்விடு! இல்லையேல் இப்பொழுதே உன்னைத் தீர்த்துக் கட்டிவிடுவோம்! (துப்பாக்கி எடுத்து நீட்டுதல்)

*ஜெம்பு:* துப்பாக்கியால் சுட்டுவிடாதே! வெளியில் கண்டிப்பாக போலீஸ் நிற்கும்! இவன் அடையாளமே துப்பாக்கி ஒலியாகத்தான் இருக்கும்! போலீசுக்கு குகையைத் தெரிவிக்கத்தான் இவன் உள்ளே நுழைந்திருக்கிருன்! ஆகவே வேறு வழியில் தீர்த்துக் கட்டு!

*வீர:* (ஜெம்புவின் காலில் விழுந்து) ஜெம்பு, நீ வெறும் திருடன் இல்லை! பெரிய மேதை! கூட இருந்து திட்டம் வகுத்தவன் மாதிரி அத்தனை விஷயங்களையும் அப்

படியே சொல்லிவிட்டாயே! துரையிடம் உதை வாங்கிய நான், நேராகப் போலீசில் சரணடைந்து முறையிட்டேன்! அவர்கள் நீ கூறிய திட்டத்தையே எனக்கு உபதேசித்து, எப்படியும் உள்ளே சென்று ஒருவனைக் கத்தியால் கொன்றுவிட்டு, அடுத்தவனைத் துப்பாக்கியால் சுடு. அந்த சப்தம் கேட்டு நாங்கள் குகை இருக்குமிடத்தைத் தெரிந்து கொள்வோம். இல்லையேல் இருவரை மட்டும் தீர்த்து விட்டு உடனே வெளியேறு பாதையைத் தெரிந்துகொள் என்றெல்லாம்......

*ஜெம்பு:* கூறி உன்னைத் தள்ளிவிட்டார்கள்! இப் பொழுது அவர்கள் வெளியில் நிற்பார்கள். அப்படித் தானே?

*வீர-* ஆமாம்...... என்னை......

*துரை:* கண்டிப்பாக இப்பொழுது வெளியே அனுப்பு மாட்டேன். காசி!

*காசி:* இதோ கயிறு.

*ஜெம்பு:* நன்ருகக் கட்டிப்போடு! இரண்டு நாட்கள் இங்கு கிடக்கட்டும்! பிறகு பார்த்துக்கொள்ளலாம்!

*காசி:* பட்டினி போட்டே கொல்லவேண்டும்!

*ஜெம்பு:* கூடாது! வயிராற உணவு கொடு!

*துரை:* பிறகு கழுத்தை மட்டும் வெட்டிவிடலாம்!

*ஜெம்பு:* இனிமேல் நிம்மதியாகத் தூங்குவோம்!

*காசி:* நீங்கள் தூங்குங்கள். என் முறை வந்து விட்டது. ஆகவே நான் காவல் இருக்கிறேன்.

*துரை:* (வீரலிங்கத்தைப் பார்த்து) முட்டாளே! இங்குள்ள சட்டம் உனக்குத் தெரியாது. இரவில் எல்லோ ரும் படுத்துக்கொள்வர்! ஆனுல் மணிக்கு ஒரு முறை மாறி மாறி விழித்தவாறே ஒவ்வொருவரும் பிறருக்குக் காவலாக இருப்பார்கள்! நாங்கள் அப்படியே பழகிவிட் டோம்! நீ இரவு முழுவதும் நின்றவாறே தூங்கு!

[ திரை ]

***

# காட்சி 51

(நாகர்கோவில் வடசேரி சந்தை)

மாறுவேடத்தில் ஜெம்பு, துரை, காசி, பொன்னி, இன்ஸ்பெக்டர், போலீஸ் 103, மற்றும் சில போலீஸ்காரர்கள், அப்பாவு.

(மூவரும், ஏழைகளுக்கு இரகசியமாகக் காய்கறிகளை வாங்கிக் கொடுக்க, போலீஸ் சந்தைக்குள் சுற்றுதல்)

*வியா:* (கத்தரிக்காய் வாங்க வந்த கிழவியிடம்) இந்தாம்மா, * சக்கரத்திற்கு நான்குதான் கிடைக்கும். விருப்ப மிருந்தால் வாங்கு.

*கிழவி:* ஆறு போட்டுக் கொடுப்பா!

*ஜெம்பு:* ஏன் பாட்டி, உங்களுக்குக் கத்தரிக்காய் தானே வேண்டும்! வேண்டியதை எடுத்துக்குங்க! (ஜெம்புவே கத்தரிக்காய்களை எடுத்து கிழவியிடம் கொடுத்து விட்டு, பணத்தை வியாபாரியிடம் கொடுத்தல். இப்படியே பல ஏழைகளுக்கும் கொடுக்கிறார்கள்)

*துரை:* (போலீசைக் கவனித்தவாறு) ஜெம்பு, போலீஸ் புலிகள் வலைவீசிச் சுற்றுகிறார்கள்!

*காசி:* அப்பாவு என்னைக் கவனித்துவிட்டாற்போலத் தெரிகிறது!

*ஜெம்பு:* போலீஸ் காவல் நமக்குப் புதிதல்லவே, நெருக்கடியாகிவிட்டால் மூவரும் பிரிந்துவிடவேண்டும்! அவ்வளவுதான்! (போலீஸ் 103, மூவரையும் கவனித்து இன்ஸ்பெக்டரிடம் இரகசியம் பேசுதல்)

*ஜெம்பு:* (அப்பாவுவும், இன்ஸ்பெக்டரும் இரகசியத் திட்டமிடுதலைக் கவனித்து) துரை, காசி! நீங்கள் இரண்டு வைக்கோல் கட்டுகளைத் தூக்கி தலையில் வைத்தவாறே வெளியேறிவிடுங்கள். நான் எப்படியாவது வந்துவிடு

---

* அன்றைய நாகர்கோவில் நாணயம் காசு, சக்கரம், பணம் ரூபாய் என்றிருந்தது. (பதினாறு காசு ஒரு சக்கரம், நான்கு சக்கரம் ஒரு பணம், ஏழு பணம் ஒரு ரூபாய்)

வேன். உம் சீக்கிரம்! திட்டம் பலமாக நடக்கிறது! (துரையும், காசியும் வைக்கோல் கட்டுகளை வாங்கித் தலைமீது வைத்தவாறு வெளியேற, ஜெம்பு வேருெரு புறமாகப் போதல்)

*அப்:* (இன்ஸ்பெக்டரிடம்) அதோ வைக்கோல் கட்டுடன் போகிருர்கள். விடாதீர்கள்.

*இன்:* (விசில் ஊதியவாறு) போலீஸ்! போலீஸ்! (இன்ஸ்பெக்டரும், போலீஸ் 103-ம் துரையையும், காசியையும் நெருங்க, வைக்கோல் கட்டுகளை அவர்கள் மீது வீசிவிட்டு துரையும், காசியும் ஓட, போலீஸ் 103, கட்டுக்குள் அகப்பட்டு கூச்சல் இட, இன்ஸ்பெக்டரும் பிற போலீஸ்காரர்களும் பின்ஞல் துரத்துகிருர்கள்)

*பொன்:* (துரையின் எதிரில் விரைந்து வந்து) வெளியில் இராணுவமே நிற்கிறது. நீங்கள் அந்தப் பக்கமாக ஓடிவிடுங்கள்.

*துரை:* (அவசரமாக) நீயேன் இங்கு வந்தாய்? வா, பேசுவதற்கு நேரமில்லை. சந்தையின் பின்புறமுள்ள குளத்தில் குதித்தாவது தப்பிவிடுவோம். நீ என்னை அங்கு வந்து பார், சீக்கிரம் ஓடிவிடு! (நால்வரும் நான்கு திசைகளில் ஓடுகிருர்கள்! துப்பாக்கியோடு இராணுவம் துரத்துகிறது. ஜெம்புவும், காசியும் ஒழுகினசேரி ஆற்றில் குதித்து, மடை வழியாகத் தப்பி ஓடுகிருர்கள். துரையும், பொன்னியும் வேறு வழியாக ஓடுகிருர்கள். இராணுவம் இவர்களைத் துரத்துகிறது! ஜெம்புவும், காசியும் தப்பிவிடுகிருர்கள். துரை ஒரு பள்ளத்தில் விழுந்து, கால் முறிந்து எழமுடியாமல் கிடக்க, பொன்னி தூக்கி எடுக்க முயற்சிக்கிருள். அதற்குள் இராணுவம் சூழ்ந்துகொண்டு, துப்பாக்கிப் பிரயோகம் செய்தல்)

*பொன்:* (துரையிடமிருந்து துப்பாக்கியை எடுத்து) கூலிப் பட்டாளங்களே! துணிவு இருந்தால் சுடுங்கள்! கால் தவறி விழுந்தவரை கொலை செய்ய கழுகு மாதிரி சுற்றி நிற்கிறீர்களே! மானமில்லையா? மதியில்லையா? ஏன் நடுங்கு

கிறீர்கள். நெஞ்சில் வீரமிருந்தால் (துப்பாக்கியை உயர்த்தி)உம், சுடுங்கள்! வீரத்தின் இலக்கணம் தெரியாத வெள்ளையரின் கைக் கூலிகளே! வீரத்தின் விளக்கத்தை நான் கற்றுத் தருகிறேன்! இந்தக் கைத்துப்பாக்கியால் கற்றுத் தருகிறேன்! தமிழ்த் தெய்வம் வீரக் கண்ணகி கற்றுக்கொடுத்ததைப்போல் கற்றுத்தருகிறேன்! அன்னியர் ஆட்சியின் அடிவருடிகளே! என் முன்னே அடி எடுத்து வையுங்கள்!

*அப்*- பைத்தியக்காரியே! வீணுகப் பேசாதே! (துப் பாக்கி எடுத்து பொன்னியைச் சுட முனைகிருன்)

*பொன்:* உன் போன்ற எட்டப்பர்களைத்தான் முதலில் ஒழிக்கவேண்டும்! (துப்பாக்கியால் சுட, அப்பாவு கீழே விழுதல்!)

*ஆ. அதி:* (கோபத்துடன்) சூட்! (போலீஸ் சுட, பொன்னியும், தன் கைத்துப்பாக்கியால் சிரித்தவாறு சுட்டுக்கொண்டே கீழே விழுதல்)

*துரை:* பொன்னி!... பொன்னி!... என் உயிரே!... தமிழகத்தின் தங்கமே! தரணியின் திலகமே!... உன்னை இழந்து நான் எதற்காக வாழவேண்டும்? (பொன்னியின் கையிலிருந்த துப்பாக்கியைப் பிடுங்கி தற்கொலை செய்ய முயற்சிக்க துப்பாக்கியில் குண்டுகள் தீர்ந்துவிட்டதால் கோபத்துடன் தூக்கி எறிந்தவாறு) பொன்னி! உன்னேடு வாழத்தான் கொடுத்துவைக்கவில்லை! இந்தப் பாவிக்கு சாகவும் கொடுத்துவைக்கவில்லையே! உன் ஆசைகளை நிறைவேற்றவில்லையே, பொன்னி!

*பொன்*- (உயிர் பிரியும் தறுவாயில்) அத்தான்! என் ஆசைகள் வருங்காலத்தில் நிறைவேறும்! இப்போதுள்ள ஆசை......நான்......நான் உங்கள் மனைவியாக இறக்க விரும்புகிறேன். அத்தான்!... (தன் மடியிலிருந்த மஞ்சளை எடுத்துகொடுத்து) அத்தான்! உங்கள் வேஷ்டியிலிருந்து ஒரு துண்டைக் கிழித்தாவது அதில் இந்த மஞ்சளை முடிந்து என் கழுத்தில் கட்டி விடுங்கள், சீக்கிரம் — அத்தான் — சீக்கிரமாக.............. கட்டுங்கள்

(துரை அந்த மஞ்சளை வாங்கி, தன் வேஷ்டியின் விளிம்பைக் கீறி அதன் நடுவில் மஞ்சளைக் கட்டி பொன்னி யின் கழுத்தில் கட்டுதல்)

*பொன்:* (சிரித்த முகத்துடன்) ஏ! தமிழகமே! பரந்து விரிந்த பாரதமே! நீ விரைவில் விடுதலை பெறுவாய்! அன்னியர் ஆட்சி ஆதவன் கண்ட பனிபோல் ஒழிந்து மறையும்!... அந்த ஒளியில் ஏற்றத் தாழ்வு இல்லா சமுதா யம் மலரும்!...... அத்தான்...... (பொன்னியின் உயிர் பிரிகிறது)

*துரை:* ஐயோ! பொன்னி!......

*இன்-* (துரையைக் காட்டி) தூக்கி லாரியில் போடுங்கள்! (துரையைத் தூக்கி லாரியில் போடுதல், பொன்னியையும், அப்பாவையும், தனித்தனியாக போலீஸ் தூக்கிப் போடுதல்.)

[ திரை ]

★★★

## காட்சி 51 - A

(கோரியூர் தெரு)

ஜெம்பு, காசி, சிங்காரத்தின் மனைவி காளியம்மாள்

*ஜெம்பு:* (வருத்தத்துடன்) உலகில் யாரையெல் லாமோ தியாகின்னு புகழுறுங்க... அதைச் செய்தார், இதைச் செய்தார்'னு பேசுறுங்க. உலகத்துத் தியாக மணி கள் அத்தனை பேரும் ஒன்று திரண்டாலும் நம் பொன்னி யின் தியாகத்திற்கு ஈடாவார்களா?... போயிற்று! எல்லாமே போயிற்று! என் கரங்களில் ஒன்று துண்டானது. மற் றொன்று முறிந்து தொங்குகிறது... தியாகச் சுடர் பொன்னி மறைந்தாள் — உயிர்த் தோழன் துரைவாப்பா சிறைக்குள் ஆகிவிட்டான். இனி நான் வாழ்ந்து என்ன பயன்?...

*காசி:* வருந்தாதீர்கள். விதி நம் விஷயத்தில் சதி தான் செய்கிறது. உலகம் என்ருல் இருளும் ஒளியும் இருக்கும். வாழ்க்கையென்ருல் இன்பமும் துன்பமும் இருக்கும் என்றெல்லாம் சான்ருேர் கூறுவார்கள். ஆனல் நம் விஷயம் வேறு. நமக்கு இருளுக்கு மேல் இருள். துன் பத்திற்கு மேல் துன்பம்.

*ஜெம்பு:* சான்ருேர்கள் அதை மட்டும் கூறவில்லை காசி. பட்ட காலிலே படும். கெட்ட குடியே கெடும் என்றும் கூறியிருக்கிருர்கள். அந்தக் கருத்துரை நம் வாழ்க் கையில் உண்மையாயிற்றே! ஒட்டி உறவாடி உதவிய இராமசாமியை இழந்தோம்; என் அன்புத் தெய்வம் சுந்தரி இறந்தாள். உதவி செய்த சீனியம்மாள் சிறையில் அடைக்கப்பட்டாள் அடுத்து பொன்னி. அடுத்து துரை.. என் தலை சுற்றுகிறது காசி... (ஜெம்பு மயங்கிக் கீழே விழ, காசி பதறியவாறு, தாங்கி, தன் மடியில் கிடத்த, காளியம் மாள் தண்ணீர்க் குடத்துடன் வருதல்)

*காளி:* (பதட்டத்துடன்) என்ன?... என்ன நடந் தது?... யார் நீங்கள்... ஆ!... காசி... ஜெம்பு...

*காசி:* காளியம்மாளா!... குடத்தில்...

*காளி-* தண்ணீர் இருக்கிறது. (தண்ணீர் தெளித்து ஜெம்புவின் மூர்ச்சைத் தெளிவித்தல்)

*ஜெம்பு:* (கண் விழித்தவாறு)... யார்... நீ?... காளி யம்மா...!

*காளி:* ஆ... ஆமா!... நானேதான்... என்னுங்க, ... இப்படி...

*ஜெம்பு:* (எழுந்து) ஒன்றுமில்லை. உன் உதவிக்கு நன்றி... வெறும் மயக்கம்தான்!

*காளி:* இல்லை, பசி மயக்கம்தான்! வாருங்கள் வீட் டிற்குப் போகலாம்!... நீங்கள் செய்த உதவிக்கு...

*ஜெம்பு:* அப்படியெல்லாம் சொல்லாதே! நாங்கள் என்ன பெரிய உதவி செய்துவிட்டோம்?...

*காளி*: என் வேண்டுகோளைத் தட்டாதீர்கள்......... வீட்டிற்கு வந்து சாப்பிட்டு இளைப்பாறி நிதானமாகப் போகலாம்!... உங்கள் நண்பர் அழைத்தால் வரமாட்டீர் களா? அவர் (தன் கணவரை) இருந்தால் நீங்கள் வர மறுப்பீர்களா?... (அழுதல்)

*ஜெம்பு*: வருத்தப்படாதே!...வருகிறோம்!...உன்னை அன்றும் என் சகோதரியாகத்தான் எண்ணினேன். இன்றும் அப்படியேதான் எண்ணுகிறோம்! உன் கணவன் சிங்காரத்தின் அன்பிற்காகவேனும் வரவேண்டுமே!

*காளி*: அப்பாடா! இப்பத்தான் என் மனம் குளிர்ந் தது!... வந்து... துரை அண்ணு...

*காசி*: ஆமாம்! போலீஸ் பிடித்துவிட்டது! பொன்னி யும் எங்களை விட்டுப் பிரிந்துவிட்டாள்!

*காளி*- அறிந்தேன். எனக்கு நேற்றுத்தான் தெரியும்! ...பாவம், தங்கமான பொண்ணு!...என்ன செய்யலாம்?... வாருங்கள். (மூவரும் போதல்)

[ திரை ]

***

## காட்சி 52

(காளியம்மாளின் வீடு)

**(ஜெம்பு, காசி, காளியம்மாள், சிங்காரத்தின் முதலாளி, ராவ் பகதூர், க. மா.)**

*காளி*- (ஜெம்புவையும், காசியையும் பார்த்து) நீங்கள் மாடிக்குச் சென்று நிம்மதியாகப் படுத்துத் தூங்குங் கள். நான் ஒரு நொடியில் சமையல் செய்துவிடுவேன்!

*ஜெம்பு*: உன் அன்பிற்கு ரொம்ப நன்றி!... இன்று மட்டும் உன் விருப்பப்படியே நடப்போம்...

*காளி*- அது போதும். போய் படுத்துக்கொள்ளுங்கள். சமையல் முடிந்ததும் அழைக்கிறேன்! (ஜெம்புவும், காசியும் மாடிக்குச் செல்ல, காளியம்மாள் வெளியே வர, எதிரில் ராவ்பகதூர் வருதல்)

*ராவ்*- (சிரித்தவாறு) என்ன, காளியம்மா!... எங்கே அவசரமா?...

*காளி*- (வாயை அடைத்தவாறு) சப்தமிடாதீர்கள்!

*ராவ்*- (வியப்புடன், மெதுவாக) என்ன!... என்ன விசேடம்? நான் உன்னோடு ஜாலியாக இருக்கலாம்'னு வந்தால் வருமுன் வாயை அடைக்கிறயே! நமக்கு இருந்த ஒரே தடை சிங்காரம்தான். அவனை ஒழித்துவிட்டோம்! இப்பொ என்ன வந்தது?

*காளி*- (தெம்புடன்) உங்களால் முடியாததை— போலீசால் முடியாததை— ஏன்? நம் சர்க்காரால் கூட செய்யமுடியாத சாதனையை நான் செய்திருக்கிறேன். (ராவ்பகதூர் வினக் குறி எழுப்ப) ஜெம்புலிங்கத்தையும், காசியையும் உள்ளே அடைத்து வைத்திருக்கிறேன்!

*ராவ்*- (பயந்து நடுங்கி) அடப் பாவி!... உண்மையாகவா?

*காளி*- சும்மா வாயைப் பிளக்காதீங்க! செத்துத் தொலைந்தானே, அந்த அப்பாவு, என்னிடம் சொன்னான்; ஜெம்புலிங்கத்தின் இருப்பிடத்தை மட்டும் தெரிந்து வந்தாலே ஏராளமான பணம் கிடைக்குமென்று! இப்பொ காசியையும் கூடச் சேர்த்து அடைத்து வைத்திருக்கிறேன்! சர்க்காரிடமிருந்து குறைந்தது லட்ச ரூபாயாவது கிடைக்கும். சீக்கிரமாய்ப் போலீசுக்குத் தகவல் கொடுங்கள்!

*ராவ்:* ஆகா, உன் அறிவே அறிவு! காளியம்மா நீ சாதாரணப் பெண் அல்ல! உலகத்தையே உன்னால் ஆட்சி செய்யமுடியும்!

*காளி*- புகழ் மொழியெல்லாம் பிறகு வைத்துக் கொள்ளுங்கள். இப்பொழுது வேகமாக ஓடுங்கள்!... உம்!

*ராவ்*- இதோ ஒரு விஞடியில் பாரேன்!...(விரைந்து போதல்; காளியம்மாள் சற்று நேரம் சமையல் வேலையில் ஈடுபட்டிருப்பதுபோல் நடிக்கிருள். அதே நேரத்திற்குள் போலீஸ் அவள் வீட்டை முற்றுகையிடு கிறது. சூப்பிரண்டன்ட் (ஆங்கில அதிகாரி) மாடி ஜன்னலே நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்யக் கட்டளே யிட, போலீஸ் சுடுகிறது. ஜெம்புவும், காசியும் பதட்டத் துடன் எழுந்து, ஜன்னல் வழி பார்த்து திகைத்தல்)

*ஜெம்பு*: (கோபத்தில்) காசி! காட்டிக் கொடுத்து விட்டாள் கிராதகி! பெண்ணினத்திற்கே பெரும் பழி தேடி விட்டாள் விபசாரி! எடு துப்பாக்கியை! இந்த விஞடி வரை எவர் உயிரையும் குடிக்காத நம் துப்பாக்கிக் குண்டுகள் (ஆங்கிலேய அதிகாரியைச் சுட்டிக்காட்டி) முதலில் அந்த சூப்பிரண்டன்டின் உயிரைக் குடிக்கட்டும்!

*காசி*: வேறு குண்டுகள் இல்லேயே!

*ஜெம்பு*: பாதகமில்லே. இருக்கிற குண்டுகளே வைத்து சுட்டபடியே பின்புறமாகக் குதித்துத் தப்பி விடுவோம்! (இருவரும் துப்பாக்கியால் சுட, அதில் ஒரு குண்டு போலீசார் அருகில் நின்ற காளியம்மாளேச் சாகடிக்கிறது).

*காசி*: (உரக்கச் சிரித்து, ஆவேசத்தோடு) சபாஷ்! ஆங்கிலேயனே அழிப்பதற்கு முன் உங்கள் துப்பாக்கி ஐந்தாம் படையை ஒழித்துவிட்டது! உங்கள் துப்பாக் கிக்குக் கூடக் கடமை உணர்ச்சி இருக்கிறது!...

*ஜெம்பு*; பாராட்டுரை இருக்கட்டும். நீ முதலில் பின்புறமாகக் குதித்துவிடு!

*காசி*: என் துப்பாக்கியில் இன்னும் ஒரு குண்டு தான் இருக்கிறது!

*ஜெம்பு:* அதனுல்தான் சொல்கிறேன். சீக்கிரமாச் சன்னல் கம்பியை வளைத்துக் குதித்துவிடு என்று. (காசி சன்னல்கம்பிகளை வளைத்துக்கீழே போட்டுவிட்டுக் குதிக்க, நிமிர்ந்து நின்ற கம்பி ஒன்று காசியின் மார்பில் குத்தி முதுகுப்புறமாக வர, காசி மடிதல். அந்த வேளையில் வீட்டைத் தீ வைக்க உத்தரவிடுகிருர் சூப்பிரண்டன்ட். வீட்டில் தீ வைக்கப்படுகிறது. வீடு பற்றி எரிகிறது!)

*ஜெம்பு:* தீயோர்களின் கடைசி ஆயுதம்!..... தீ வைத்துவிட்டீர்களா? (துப்பாக்கியில் இரு குண்டுகள் இருக்கும்பொழுது ஜெம்புவும் சன்னல் வழியாகக் குதிக்க, காசி குருதி வெள்ளத்தின் நடுவில் இறந்து கிடப்பது கண்டு திகைத்துப் புலம்புகிருன்) ஐயோ, காசி!... நீயும் போய்விட்டாயா! (காசியைத் தூக்கி மடி மீது வைத்து) காசி... காசி!... வீரத்தின் பிறப்பிடமே! நட்பின் இலக்கணமே! எல்லோரும் என்னை அனுதையாக்கிவிட்டுப் போய்விட்டீர்களே! காசி!

*சூப்-* அதோ..... ஜெம்பு..... உம், பிடியுங்கள்... (போலீஸ் ஜெம்புவைச் சூழ்தல்)

*ஜெம்பு-* நில்லுங்கள்! கூலிப் பட்டாளங்களே நில்லுங்கள்! ஆருயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து வந்த ஐந்தாறு பேர்கள் நம்மை ஆட்டிவைக்கிருர்களென்ற உண்மை தெரியாத உலுத்தர்களே, நில்லுங்கள்! இதோ நூற்றுக்கணக்கில் சூழ்ந்து நிற்கிறீர்களே! உங்களை ஆட்டிப்படைப்பது யார்? (ஆங்கில அதிகாரியைச் சுட்டி) இந்த ஒரே ஒரு வெள்ளையன்! உங்கள் இனத்தவனை அழிக்க உங்களுக்கே கட்டளையிடுகிருனே! உணர்வில்லையா? (போலீஸ் நெருங்குதல்) நெருங்காதீர்கள். என் துப்பாக்கியில் குண்டுகள் இருக்கின்றன! (காசியின் துப்பாக்கியையும் எடுத்து)இதோ, இரண்டு இருக்கின்றன! உங்களை நான் சாகடிக்க விரும்பவில்லை! ஆனல் என்னை உயிருடன் பிடிக்க உங்களால் முடியாது! வருங்காலத் தமிழகச் சரித்திரத்தில் நீங்கள் திருடர்கள் என்று தீட்டிஞ

லும் தன்மானத் தமிழகம் எங்களுக்கு அந்தப் பட்டத்தை ஒருக்காலும் வழங்காது! நாங்கள் வீரர்கள். புரட்சி வீரர் கள்! எங்கள் குழந்தைகள் சுதந்திர பாரதத்தில்தான் வாழ்வார்கள் — வளருவார்கள்!

*சூப்:* வேஸ்ட் அப் டைம்! பிடியுங்கள்! (துப்பாக்கி நீட்டியபடி ஜெம்புவை நெருங்க, ஜெம்பு அவரைச் சுட, கூடி நின்ற அத்தனை போலீஸ்காரர்களும் ஜெம்புவின் மீது சுட, உரக்கச் சிரித்தவாறு கீழே விழுகிருன் ஜெம்பு)

*ஜெம்பு:* (தன் உடலிலிருந்து கொட்டும் குருதி யைக் கையில் ஏந்தி) ஏ அடிமைத் தமிழகமே! என் அருமைத் தமிழ்த் தாயே! உன் மீது என் குருதியைத் தெளிக்கிறேன்! என் குருதியிலிருந்து ஆயிரமாயிரம் கடமை வீரர்கள் தோன்றட்டும்! அவர்கள் உன் அடிமை விலங்கை நொறுக்கி அன்னிய ஆட்சியை ஒழிக்கட்டும்!
(ஜெம்புவின் உயிர் பிரிதல்)

*அசரீரி பாடல்:*

***சூழ் நிலையால் திருடஞகி சூழ்ச்சிகளால் துன்பமுற்று***
***பாழ் நிலையை மாற்றிடவே பதவியின்றி நீ உழைத்தாய்***
***வாழ் நாளில் உன் கொள்கை வெற்றியிலே என்ருலும்***
***வீழ்ந்திட்ட வீரா உன் இலட்சியமும் விரைவிலே நிறைவேறும்.***

[ திரை ]

★★★

## காட்சி 53

(நீதிமன்றம்)

(துரையைக் கொண்டு வருதல்)

*சர்க். வழக்:* கனம் கோர்ட்டார் அவர்களே! இதோ நிற்கும் துரைவாப்பா பற்றிய குற்றச்சாட்டுகள் ஏற்கெனவே தக்க ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டுள்ளன! இவன் பல கொள்ளைகள் நடத்தி, ஜெம்பு, காசி என்ற பகற்கொள் ளைக்காரர்களுடன் சேர்ந்து சர்க்காரையே மதிக்காமல்,

சர்க்கார் அதிகாரிகளையும், குறிப்பாகப் போலீஸ் இலாகா வையும் பெருமளவில் குழப்பியவன்! — இவனுக்குச் சரியான தண்டனை வழங்க வேண்டுகிறேன்.

*நீதி:* (துரையை நோக்கி) குற்றங்களுக்கு என்ன பதில் சொல்லுகிறாய்? குற்றச்சாட்டுகள் உண்மைதானே?

*துரை:* இல்லை! உண்மை கலந்த பொய்! கொள்ளை யடித்தோமோ, களவு செய்தோமோ! எதையுமே நான் மறுக்கவோ மறைக்கவோ விரும்பவில்லை! எனவே என் மீது சுமத்திய குற்றச்சாட்டுகளைப் பற்றி நான் கவலைப்பட வில்லை. ஏனென்றால் நான் உண்மையைக் கூறப் போகிறேன். நீதிபதி அவர்களே, உயிர் நண்பனின் மரணச் செய்தி கேட்டு உளம் நொறுங்கி நிற்கிறேன். என்றாலும் உலகத்திற்காக நாங்கள் செய்த பணியைத் தெரி விக்கிறேன் — சந்தர்ப்பவசத்தால் சதிகாரர்களின் சூழ்ச்சி யால் நாங்கள் திருடர்களாக்கப்பட்டாலும், நாளடைவில் எங்களுக்கு அந்தத் தொழில் பழகிவிட்டது. எங்களைக் குற்றவாளிகளாக்கிய குதர்க்கவாதிகளுக்கு சட்டமும், சர்க் காரும் தண்டனையளிக்காவிட்டாலும், நாங்கள் இயன்ற வரை தண்டனையளித்தோம். அதோடு தாய் நாட்டிற்கு எங்களால் முடிந்த பணி செய்தோம்! கொள்ளையடித்தோம்! யாரை? ஊரில் வாழும் ஏழைகளைக் கொள்ளையடித்து அவர்தம் உழைப்பை உறிஞ்சி வாழும் பகற்கொள்ளைக் காரர்களிடம் நாங்கள் கொள்ளையடித்தோம்; ஏழைகளை வாழ்வித்தோம்! நாங்கள் கொள்ளையடித்தது சுயநலத்திற் காக அல்ல! மாடி வீடு கட்டி மாதர்களை மானபங்கப்படுத் துவதற்காக அல்ல! கையில் காசு இன்றி கண் கலங்கிய எண்ணற்ற கன்னியர்கள் நாங்கள் கொள்ளையடித்த பணத் தால் வாழ்வு பெற்றார்கள்! எங்கள் இலட்சியம் இரண்டு! ஒன்று ஏழைகளின் கண்ணீர் துடைப்பது, — இரண்டு, அன்னிய ஆட்சியை அறவே ஒழிக்க அயராது உழைக்கும் தியாகசீலர்களுக்கு உதவியாக அரசாங்கத்திற்கு இடை யூறு கொடுப்பது! ஆக இரண்டு இலட்சியங்களையும் நிறை வேற்றினோம். இலட்சிய வீரர்களுக்கு இடையூறு செய்ப

வர்களை எதிர்த்துப் போராடினேம். போலீசும் சர்க்காரும் அதற்கு விதிவிலக்கல்லவே, அவர்களையும் நாங்கள் பொருட்படுத்தாது இயன்ற மட்டும் தொந்தரவு கொடுத் தோம். இத்தனைப் போராட்டங்களுக்கிடையேயும் நாங்கள் எங்களை இழந்தோமே தவிர இறக்கும் நாள் வரை எதிரிக ளாகக் கருதப்பட்டவர்களில் ஒருவரைக்கூடக் கொலை செய் யவில்லை! நாங்கள் நினைத்திருந்தால் ஒரு சில பணக் காரர்களைப் பரலோகம் அனுப்பியிருக்கலாம்! எத்தனையோ போலீஸ்காரர்களை எங்கள் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியாக்கியிருக்கலாம்! ஆனல் எங்கள் இலட்சியம் மனிதர்களைக் கொலைசெய்யவேண்டுமென்பதல்ல! மனித உருவில் திரியும் உலுத்தர்களை மனிதர்களாக மாற்ற வேண்டும் என்பதேயாம்! எனவே எங்களைக் கொள்ளைக் காரர்கள் என்று குறிப்பிடாதீர்கள்! வெள்ளையுள்ளம் படைத்த வீரர்கள் என்று எழுதிவையுங்கள். நீங்கள் எழுதாவிட்டாலும், உண்மை உணரும் உத்தமர்கள் எங்களை வீரர்கள் என்றும், தியாகிகள் என்றும்தான் போற்றிப் புகழ்வார்கள்! அது போதும். ஏழைகளின் உள் ளங்களில் ஜெம்புலிங்கம் குடியிருப்பான்! அவனைச் சுற்றி இந்தத் துரைவாப்பாவும், தியாகக்கொடி [illegible]னியும், நட்பின் இலக்கணமான [illegible]ாசி, இராமசாமி, சீ[illegible]ள் இன்னும் ஒரு சிலபெரும் முதலாளிகள்கூட எங்களுக்கு ஆதரவு கொடுத்ததுண்டு. வேண்டாம்; அந்த உத்தமர் களின் பெயரை நான் இங்கு கூற விரும்பவில்லை! நாங்கள் நடத்தியது சுயநலக்காரர்களுக்கு ஒரு பாடம்! வருங்கால சமுதாயத்திற்கு ஒரு வழி வகுப்பு. அதன் பெயர் கொள்ளை யல்ல! சமரச ஆட்சிக்கு அடிக்கல் நாட்டுவிழா! அந்த ஆட்சி பாரதத் திருநாட்டில் வந்தே தீரும்! எங்கள் இலட் சியம் மலரும் நாள் விரைவில் வருகிறது!

*நீதி:* நிறுத்து. குற்றச்சாட்டிற்குப் பதில் கேட்டால் சொற்பொழிவு நடத்துகிருய்! (பிற நடுவர்களைப் பார்த்து) உங்கள் முடிவு என்ன?

*நடு:* கொள்ளையடித்தது உண்மையென்று குற்ற வாளி ஒப்புக்கொள்கிருன்!

*நீதி:* இறக்கும் தறுவாய் வரைக்கும் ஒரு கொலை கூட செய்யவில்லை என்று சொல்வது...!

*நடு:* அதுவும் உண்மைதான். போலீஸ் குற்றப் பத்திரிகைகளில் மூவரும் கொலை செய்ததாக ஒரு சான்று கூட இல்லை!

*நீதி:* வியப்பிற்குரிய உண்மை ...... (யோசித்து) கொள்ளையடித்து, திருடி, போலீஸ் ஸ்டேஷனில் களவு செய்து இன்னும் இவைபோன்ற பலக் குற்றங்களைச் செய்தும் இறுதி வரை ஒரு கொலைகூடச் செய்யாமலிருந்தது, மூவரின் மனிதப் பண்பைக் காட்டுகிறது. என்றாலும் செய்த குற்றங்கள் மிகப் பெரியவை! அரசாங்கத்தையே அவமதித்ததும் மன்னிக்க முடியாத குற்றம். முன்பு சிறையிலிருந்து தப்பி ஓடியதும் பெரிய குற்றம். எனவே, துரைவாப்பாவிற்கு பதினைந்து ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்கிறேன்!

*துரை:* தயவு செய்து என்னை தூக்கிலிடுங்களேன். என் நண்பனின் ஆத்மாவோடு என் ஆத்துமாவும் கலந்து விடும்!

(எழுந்து) நீதிமன்றம் கலையலாம்!

(துரைவாப்பாவை போலீஸ் கொண்டு போதல்)

[ திரை ]

முற்றும்

MADURAI UNIVERSITY LIBRARY
25 MAY 19..
MADURAI.

